அஷ்டப் பிரபந்தம்

பதிப்பு-ஆசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வேளியிடுவோர்

எஸ். ராஜம்

5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

1957 1.00

முதற்-பதிப்பு—1957

விலை ரூபாய் ஒன்று
(வியாபாரிகளிடம் விற்பனை விலை ரூபாய் 1·25)

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

4-1

பதிப்புரை

அஷ்டப் பிரபந்தம் பிற்காலத்து எழுந்த சிற்றிலக்கியத் தொகுதிகளில் சிறந்து விளங்குகிறது. தமிழ்-இலக்கியப் பயிற்சியில் புகும் முதற்படியினராலும், புலவர்களாலும், இப் பிரபந்தத் தொகுதி போற்றிக் கற்கப்படுவது. இதன் பயிற்சி தமிழ்ப் புலமைக்கு ஓர் அளவுகோலாகவும் கருதப்படுகிறது. இது பற்றியே 'அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்ற உலக வசனமும் நமது நாட்டில் நிலவி வருகிறது. அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை, முதலிய சொல்லணிகளும், இதில் பொதிந்துள்ளன. ஆகலின், இப் பிரபந்தத் தொகுதி 'சொல்-தொடர்நிலைச் செய்யுள்' என்னும் பாகுபாட்டைச் சாரும்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தோன்றிய பின்னர் வைணவச் சார்பாக எழுந்த பிரபந்தத் தொகுதி இந்த அஷ்டப் பிரபந்தம். இயற்பாவில் போல அந்தாதிப் பிரபந்தங்களே இதில் பெரும்பாலன. இதில் ஆழ்வார்களின் பிரபந்தக் கருத்துக்களும், சொற்களும், சொற்றொடர்களும், மிகப் பலவாக உள்ளன. அதனால், இது ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் சாரமாகவும், ஆசாரியர்கள் அருளிய ரஹஸ்ய கிரந்தங்களின் பொருள் பொதிந்ததாகவும் விளங்குகிறது.

'சொல் நோக்கும், பொருள் நோக்கும்,
தொடை நோக்கும், நடை நோக்கும், துறையின் நோக்கோடு,
எந்நோக்கும், காண இலக்கியம் ஆவது'

என்று திரு அரங்கக் கலம்பகத்தைக் குறித்து எழுந்த பாராட்டு இத் தொகுதியில் உள்ள ஏனைய பிரபந்தங்களுக்கும் பொருந்தும்.

இதன் ஆசிரியராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திவ்விய கவி' எனப் போற்றப்படுபவர். அழகிய மணவாள தாசர் என்பது இவருக்கு உரிய மற்றொரு பெயர். இவர் திருமங்கையில் தோன்றியவர் என்றும், கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியரின் குமாரரும் சீடருமான பட்டரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றவர்

என்றும், பட்டரது அருளால் அருங்கலை பயின்றவர் என்றும் கூறுவர். இவற்றால் இவரது காலம் ஸ்ரீ பராசரபட்டர் காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். திருமலை நாயக்கரது அரசாங்கத்தில் முக்கிய அலுவலாளராக இவர் இருந்தார் என்பது கர்ண பரம்பரைக் கதையேயாம்.

இவர் தென்மொழி வடமொழிகளில் வல்ல பெரும் புலவர். தமது வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருவரங்கத்திலே கழித்தவர்; திருமாலிடம் தீவிர பக்தி பூண்டவர்.

'மனிதக் கவி மொழியா மங்கை வாழ்
மணவாள வள்ளல்',

என்றும்,

'குணவாள பட்டர் இரு கோகனகத் தாள் சேர்
மணவாளதாசன்'

என்றும், இவர் சிறப்பித்துக் கூறப்படுகிறார். அஷ்டப் பிரபந்தத்தைத் தவிர, 'திருநறையூர் நம்பி மேக விடுதூது' என்ற பிரபந்தமும், 'பரப்பிரம்ம விவேகம்' என்ற நூலும், இவர் செய்தவை எனப் பலரும் கருதுகின்றனர். ஸ்ரீ கோபாலாசாரியர் தமது பதிப்புரையில், 'பரப்பிரம்ம விவேகம்' இவர் செய்தது அன்று என்று குறித்துள்ளார். ஆகவே, அந் நூல் பற்றிய செய்திமட்டும் ஆராய்ச்சிக்கு இடமாயுள்ளது. இவர் இயற்றியனவாக வழங்கும் தனிப் பாடல்களும் அத்தகையனவே.

அஷ்டப் பிரபந்தம் என்ற பெயர் நூலாசிரியரால் சூட்டப்படவில்லை; அஷ்டப் பிரபந்தம் என்று ஒரு தொகுதியாக ஏடுகளில் சேர்த்து எழுதப் பெறவும் இல்லை. ஏட்டுப் பிரதிகளில் ஒவ்வொரு பிரபந்தமும் தனித்தனியாகவே உள்ளது. பதிப்பாசிரியர்கள் தாம் 'அஷ்டப் பிரபந்தம்' என்ற பெயரை வழங்கியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இவர்கள் பொதுவாக நாட்டில் வழங்கி வந்த மரபை ஒட்டி இவ்வாறு கொண்டிருக்கவேண்டும்.

அஷ்டப் பிரபந்தத்தின் செய்யுள்-தொகை 751. நூலுக்குப் புறம்பாக உள்ளவை சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் 8; காப்புச் செய்யுட்களாகவும், அவையடக்கம் முதலியனவாகவும், அமைந்தவை 22; பிற்சேர்க்கைப் பாடல்கள் 9. நூலுக்குப் புறம்பான இந்த 39 செய்யுட்களையும் உடன் சேர்த்தால் செய்யுள்-தொகை 790 ஆகும்.

சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் பிறர் பாடியவை என்பது தெளிவு. பிற்சேர்க்கைப் பாடல்களைத் தற்சிறப்புப் பாயிரம்—

அதாவது நூலாசிரியராகிய மணவாளதாசரே தம்மைப் பிறர் போல வைத்துப் பாடிய நாந்திச் செய்யுட்கள்—என்று கூறுகின்றனர். இச் செய்யுட்களின் போக்கைக் கவனித்தால், இவையும் பிறர் பாடியனவாதல் வேண்டும் என்பது எளிதில் புலனாகும். காப்புச் செய்யுட்கள் பல ஏடுகளில் இல்லாததுமன்றி, சில பிரபந்தங்களில் அவற்றின் வைப்புமுறை பிறழ்ந்தும் காண்கிறது. இக் காப்புச் செய்யுட்கள் ஆசிரியர் வாக்காக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இவை பிரபந்தங்களில் நூலுக்குப் புறம்பாகவே அமைந்துள்ளன. ஆதலின், சிறப்புப் பாயிரம், காப்புச் செய்யுட்கள், பிற்சேர்க்கைப் பாடல்கள் யாவும் நூல் முகப்பில் ஒரு சேரத் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

திரு அரங்கத்து அந்தாதிப் பாடல்கள் முற்றும் யமகம் என்னும் சொல்லணி பொருந்த அமைந்துள்ளவை; சொற்பிரிப்புப் பயிற்சிக்கு இந் நூல் சிறந்ததொரு கருவியாகப் போற்றிக் கொள்ளப்படுவது. இப் பதிப்பில் இப் பிரபந்தத்திற்கு மட்டும் சந்தி பிரித்த வடிவத்தோடு, சந்திபிரிக்காத நிலையில் ஒவ்வொரு பாடலும் எதிர்ப் பக்கத்தில் தரப்பட்டிருக்கின்றது.

சென்னை அரசாங்கச் சுவடி நிலையத்திலும், அடையாற்றிலுள்ள பிரம்ம ஞான சபை நூல்நிலையத்திலும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையத்திலும் கிடைத்த ஏடுகள் யாவும் ஒப்புநோக்கப் பெற்றன. 'திரு அரங்கத்து மாலை', 'சீரங்க நாயகர் ஊசல்', என்ற இரண்டிற்கும் பல பிரதிகள் கிடைக்கவில்லை. இவற்றிற்குரிய ஏட்டுப் பிரதிகள் வைத்திருப்பவர்கள் தந்து உதவினால், அடுத்த பதிப்பில் அவையும் ஒப்பு நோக்கிப் பயன்படுத்தப்பெறும். சுவடிகளின் பரிசோதனையால் பல பாட ரூப பேதங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில இப்பொழுது வழங்கி வரும் பாடங்களிலும் சிறப்புடையன எனப் பதிப்பாசிரியக் குழுவினர் கருதினர். குழுவினர் தேர்ந்த பாடங்கள் மூல பாடத்தில் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

அஷ்டப் பிரபந்தத்தில் அடங்கிய கதைக் குறிப்புக்கள் நூலின் இறுதியில் தொகுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. கதைக் குறிப்புக்களை அடுத்து, திரு வேங்கடமாலையின் பின்ஐம்பது பாடல்களில் வரும் சிலேடைத் தொடர்களுக்கு உரிய விளக்கம் தனி அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்பின் அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் பொருள் விளக்கமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந் நூலின் பதிப்புக் குழுவில் திருவாளர்கள் பி.ஸ்ரீ., பெ.நா. அப்புஸ்வாமி, வே.வேங்கடராஜுலு ரெட்டியார், பு.ரா.புருஷோத்தம நாயடு, வி.மு. சுப்பிரமணியம், மு.சண்முகம், ஆகிய அறுவரும் இருந்து, தக்க வண்ணம் பதிப்பித்து உதவினர். இவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இப் பிரபந்தத் தொகுதியைத் தமிழன்பர்கள் ஏற்று, மேலும், பல சிற்றிலக்கியத் தொகுதிகளை வெளியிட ஊக்கம் அளிப்பார்கள் என நம்புகிறோம்.

மர்ரே அண்டு கம்பெனி,
சென்னை 15-8-57.

வெளியிடுவோர்

உள்ளுறை

சிறப்புப் பாயிரம்

திரு அரங்கக் கலம்பகம்

ஆழ்வார், முன், பின்னவர்க்கும் ஆம் மறை தந்தார், தமிழால்;
வாழ்வார் மணவாளர் மாண்பவருள், தாழ்வு ஆரும்
எம்போலியர்க்கும் இரங்கி, அரங்கக் கலம்ப-
கம் போதம் நல்க வைத்தார் காண். 1

சொல் நோக்கும், பொருள் நோக்கும், தொடை நோக்கும், நடை நோக்கும்,
துறையின் நோக்கோடு,
எந் நோக்கும், காண இலக்கியம் ஆவது அன்றி,
இதில் ஈடுபட்டோர்
நல் நோக்கும் புத்தியும் பத்தியும் பெறுவர்; முத்தி உண்டாம்;
நான் என் சொல்கேன்!—
பல் நோக்கு மணவாளர் பகர் அரங்கக் கலம்பகத்தைப்
பாரீர், பாரீர்! 2

திரு அரங்கத்து மாலை

மறைப் பொருளோ, அச் சிரப் பொருளோ, மனுவே முதலாம்
முறைப் பொருளோ, இதிகாச புராண முதுப் பொருளோ,
இறைப் பொருள் ஆம் நம்பெருமாளுடைத் திரு எட்டெழுத்துள்
உறைப் பொருளோ—மணவாளர் தம் மாலையின் உட்பொருளே? 3

திரு அரங்கத்து அந்தாதி

மண வாள் அரவிந்தைமார் நோக்க, இம்மை; மறுமையில் மா
மணவாளர்தம் பதம் வாய்த்திடும்—கோயிலில் வந்த அந்த
மணவாளர் பொன் திருப் பாதாம்புயங்கட்கு மாலை என
மணவாளர் சூடும் யமக அந்தாதியை வாசிமினே. 4

சீரங்க நாயகர் ஊசல்

அண்டப் பந்தரில், பற்று, கால்கள் ஆக;
அறிவு விட்டம், கரணம் சங்கிலிகள், ஆக;
கொண்ட பிறப்பே பலகை; வினை அசைப்போர்;
கொடு நரகம், சுவர்க்கம், பூ வெளிகள்தம்மில்
தண்டல் இல் ஏற்றம், இறக்கம், தங்கல், ஆக;
தடுமாறி இடர் உழக்கும் ஊசல் மாற,
தொண்டர்க்கு ஆம் மணவாளர், பேரர், கூடித்
தொகுத்திட்டார், திருவரங்கத்து ஊசல்தானே. 5

திருவேங்கடத்து அந்தாதி

இக்கு அரை யந்திரத்துள் பட்டதென்ன இரு வினையுள்
புக்கு, அரை மா நொடியும் தரியாது, உழல் புன் பிறப்பு ஆம்
எக்கரை நீக்கி, படித்தாரை அந்த இரு விரசைக்கு
அக்கரை சேர்க்கும்—மணவாள தாசன் அருங் கவியே. 6

அழகர் அந்தாதி

திருகு அவி மங்கை மணவாள வள்ளல், செந் தேன் துளித்து
முருகு அவிழ் தென் திருமாலிருஞ்சோலைமலை முகுந்தற்கு,
இரு கவின் தாள்களில் சூடும் அந்தாதியின் ஈர்-ஐம்பதில்
ஒரு கவி கற்கினும், ஞானமும் வீடும் உதவிடுமே. 7

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

ஏற்ற மணவாளர் இசைத்தார், அந்தாதி வெண்பா,
தோற்றம் கேடு இல்லாத தொல் மாலைப் போற்ற—
திருப்பதி ஆம் நூற்றெட்டினையும் சேவிப்போர்
கருப் பதியாவண்ணம் உண்டாக. 8

காப்புச் செய்யுட்கள்

திரு அரங்கக் கலம்பகம்

வேதம் தொகுத்துத் தமிழ்ப் பாடல் செய்த விமலன், பொய்கை,
பூதன், மயிலையர்கோன், புகழ்ச் சேரன், புத்தூரன், தொண்டர்
பாதம் தரும் துகள், மா மழிசைக்கு மன், பாணன், மங்கை-
நாதன், மதுரகவி, கோதை—பாதங்கள் நண்ணுதுமே.* 1

மறைப் பாற்கடலை, திரு நாவின் மந்தரத்தால், கடைந்து;
துறைப்பால் படுத்தி; தமிழ் ஆயிரத்தின் சுவை அமிர்தம்
கறைப் பாம்பு அணைப் பள்ளியான் அன்பர் ஈட்டம் களித்து அருந்த
நிறைப்பான் கழல் அன்றி, சன்ம விடாய்க்கு நிழல் இல்லையே. 2

பிடிக்கும் பரசமயக் குல வேழம் பிளிற வெகுண்டு
இடிக்கும் குரல் சிங்க ஏறு அனையான், எழு பாரும் உய்யப்
படிக்கும் புகழ் எம் இராமாநுசமுனி, பல் குணமும்
வடிக்கும் கருத்தினர்க்கே—திரு மாமணி மண்டபமே. 3

வான் இட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழ வந்த
தேன் இட்ட தார் நம்பெருமாள்-குமாரர், சிவனை அயன்-
தான் இட்ட சாபம் துடைத்து ஆள் அரங்கர் சங்கு, ஆழி, புயம்,
நான் இட்டன் என்று, அருள் பட்டர் பொற்றாள் கதி நந்தமக்கே.

திரு அரங்கத்து மாலை

நாளும், பெரிய பெருமாள் அரங்கர் நகை முகமும்;
தோளும்; தொடர்ந்து என்னை ஆளும் விழியும்; துழாய் மணக்கும்
தாளும்; கரமும்; கரத்தில் சங்கு, ஆழியும், தண்டும், வில்லும்,
வாளும்—துணைவருமே, தமியேனை வளைந்துகொண்டே. 5

திரு அரங்கத்து அந்தாதி

ஓர் ஆழி வெய்யவன் சூழ் உலகு ஏழ் உவந்து ஏத்து அரங்கர்
கார் ஆழி வண்ணப் பெருமாள் அந்தாதிக்குக் காப்பு உரைக்கின்,
சீர் ஆழி அம் கையில் பொன் பிரம்பு ஏந்திய சேனையர்கோன்,
கூர் ஆழி, சங்கம், திருக் கதை, நாந்தகம், கோதண்டமே. 6

வையம் புகழ் பொய்கை, பேய், பூதன், மாறன், மதுரகவி,
ஐயன் மழிசைமன், கோழியர்கோன், அருள் பாண்பெருமாள்,
மெய் அன்பர் கால்பொடி, விண்டுசித்தன், வியன் கோதை, வெற்றி
நெய் அங்கை வேல் கலியன்—தமிழ் வேதம் நிலைநிற்கவே. 7

---

*இப் பாடல் இரண்டாவதாகவும், அடுத்துவரும் 'மறைப் பாற்கடலை' எனத் தொடங்கும் பாடல் முதலாவதாகவும் ஐந்து ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், அச்சுப் பிரதிகள் எல்லாம் இங்கு அமைந்துள்ள முறையிலேயே உள்ளன.

சீதரன், பூமகள், சேனையர்கோன், தென் குருகைப் பிரான்,
நாதமுனி, உய்யக்கொண்டார், இராமர், நல் ஆளவந்தார்,
ஏதம் இல் வண்மைப் பராங்குசதாசர், எதித்தலைவர்,
பாதம் அடைந்து உய்ந்த ஆழ்வான், எம்பார், பட்டர்—பற்று எமக்கே.

திருமாலையாண்டான், திருக்கோட்டி நம்பி, திருவரங்கப்
பெருமாள் அரையர், திருமலைநம்பி, பெரியநம்பி,
அரு மால் கழல் சேர் எதிராசர் தாளில் சிங்காதனராய்
வரும் ஆரியர்கள் எழுபத்து நால்வர்—என் வான் துணையே. 9

மால்தன் பராங்கதி தந்து, அடியேனை மருள் பிறவி
மாறு அன்பரான குழாத்துள் வைப்பான், தொல்லை வல் வினைக்கு
மாறன், பராமுகம் செய்யாமல் என்கண் மலர்க்கண் வைத்த
மாறன், பராங்குசன், வாழ்க—என் நெஞ்சினும், வாக்கினுமே. 10

சீரங்க நாயகர் ஊசல்

புதுவை நகர்ப் பட்டர்பிரான் சரண்கள் போற்றி!
பொய்கை, பூதன், பேயார், பாதம் போற்றி!
சது மறைச் சொற் சடகோபன் சரணம் போற்றி!
தமிழ்ப் பாணன், தொண்டரடிப்பொடி, தாள் போற்றி!
முது புகழ் சேர் மழிசையர்கோன் பதங்கள் போற்றி!
முடிக் குலசேகரன், கலியன், கழல்கள் போற்றி!
மதுரகவி, எதிராசன், கூரத்தாழ்வான்,
வாழ்வான பட்டர், திருவடிகள் போற்றி! 11

திருவேங்கட மாலை

திண் பார் புகழும் திருவேங்கட மாலை
வெண்பாவால் நூறும் விளம்புதற்குக் கண்பாராய்—
நாராயணன் அடியே நாடும் தமிழ் வேத
பாராயண! சடகோபா! 12

'மூலமே' என்ற கரிமுன் வந்து, இடர் தொலைத்து,
நீல மேகம் போல நின்றானை; பால் ஆய
வேலை நடுவில் துயிலும் வித்தகனை; வேங்கடத்து
மாலை; அன்றிப் பாடாது, என் வாய். 13

ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடம் என்
தாழ்வு ஆன புன்சொல்லும் தாங்குமால்—ஏழ் பாரும்
வெல்லும் கதிர் மணியும், வெம் பரலும், செஞ் சாந்தும்,
புல்லும், பொறுத்தமையே போல். 14

திருவேங்கடத்து அந்தாதி

நல்ல அந்தாதி திருவேங்கடவற்கு நான் விளம்ப,
சொல் அவம், தாதின் வழு, பொருட் சோர்வு அறச் சொல்வித்தருள்
பல்லவம் தாது இசை வண்டு ஆர் குருகைப் பரசமயம்
வெல்ல வந்து ஆதி மறை தமிழால் செய்த வித்தகனே! 15

அழகர் அந்தாதி

அங்கத் தமிழ் மறை ஆயிரம் பாடி அளித்து, உலகோர்-
தங்கட்கு வீடு அருளும் புருடோத்தமன், தண் வகுளத்
தொங்கல்-பராங்குசன், தாள் இணை மாலிருஞ்சோலைமலைச்
சங்கத்து அழகர் அந்தாதி நடாத்தத் தலைக் கொள்வனே. 16

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

பொய்கை, பூதன், பேயார், பொன்மழிசைக் கோன், மாறன்,
செய்ய மதுரகவி, சேரர்பிரான், வையகம் எண்
பட்டர்பிரான், கோதை, தொண்டர்பாதப்பொடி, பாணன்,
கட்டு அவிழ்தார் வாட்கலியன்—காப்பு. 17

பிறவாத பேறு பெறுதற்கு எஞ்ஞான்றும்
மறவாது இறைஞ்சு, என் மனனே!—துறவாளன்,
வண் குருகு ஊர் வாவி வழுதி வளநாடு உடைய
தண் குருகூர் நம்பி, திருத் தாள். 18

முன்னே பிறந்து, இறந்து, மூது உலகில் பட்ட எல்லாம்
என்னே மறந்தனையோ, என் நெஞ்சே? சொன்னேன்,
இனி எதிரா சன்மங்கள்; இன்றுமுதல் பூதூர்
முனி எதிராசன் பேர் மொழி. 19

முக்காலம் இல்லா முகில் வண்ணன் வைகுந்தத்து
எக்காலம் செல்வான் இருக்கின்றேன்—தக்கார் எண்
கூரத்தாழ்வான் அடியைக் கூடுதற்கு, நாய்-அடியேன்
போரத் தாழ்வு ஆன சடம் போட்டு? 20

நான் கூட்டில் வந்த அன்றே நான் அறியா நன்மை எல்லாம்
தான் கூட்டி வைத்த நலம்தான் கண்டீர்—ஆம் கூட்டம்
சிட்டருக்கு வாய்த்த திரு அரங்கன் இன் அருளால்
பட்டருக்கு ஆட்பட்ட பயன். 21

ஈர்-இருபதாம் சோழம்; ஈர்-ஒன்பதாம் பாண்டி;
ஓர் பதின்மூன்றும் மலைநாடு; ஓர் இரண்டாம், சீர் நடுநாடு;
ஆறோடு ஈர்-எட்டு தொண்டை; அவ் வட நாடு ஆறு-இரண்டு;
கூறு திருநாடு ஒன்றாக் கொள். 22

பிற்சேர்க்கைப் பாடல்கள்

திரு அரங்கக் கலம்பகம்

மழை முகில் எனவே பணை முகம் திகழ்
வரி அரவு-அணை ஏறி வாழ் அரங்கர்தம்
எழில் பெறும் இரு தாளிலே கலம்பகம்
எனும் ஒரு தமிழ்மாலைதான் அணிந்தனன்—
குழல் இசை அளி மேவு கூரம் வந்தருள்
குருபரன் இரு பாத போது அடைந்தவன்
அழகிய மணவாளதாசன் என்பவன்
அடியவர் அடி சூடி வாழும் அன்பனே. 1

திரு அரங்கத்து மாலை

மனிதக் கவி மொழியா, மங்கை வாழ், மணவாள வள்ளல்
புனிதக் கவி கொண்டு மாலை செய்தான்—புயல் போல் முழங்கும்
தொனி தக்க சங்கம், திருச் சக்கரம், சுடர் வாள், முசலம்,
குனி தக்க சார்ங்கம், தரித்தார் அரங்கர் பொற் கோயிலுக்கே. 2

திரு அரங்கத்து அந்தாதி

பண வாள் அரவின் அரங்கேசர் தாளில்—பருதி, வளை
நிண வாள், அம் சார்ங்கம், கதை, தோளில் சார்த்தினன்; நீள்நில மேல்
குணவாளர்ஆம் பட்டர்க்கு ஏழ்-ஏழ் பிறப்பும் குடி அடியான்,
மணவாளதாசன்—யமக அந்தாதி வனைந்தனனே. 3

சீரங்க நாயகர் ஊசல்

போது ஆரும் நான்முகனே முதலாயுள்ள
புத்தேளிர் தொழும் நாதன், புவனிக்கு எல்லாம்
ஆதாரம்ஆம் தெய்வமான நாதன்,
அனைத்து உயிர்க்கும் நாதன், அணி அரங்கநாதன்,
சீதாரவிந்த மலர்த் திருவின் நாதன்,
திரு ஊசல் திருநாமம் ஒரு நால்-எட்டும்
வேதாசாரிய பட்டர்க்கு அடிமை ஆன
வெண்மணிப் பிள்ளைப்பெருமாள் விளம்பினனே. 4

திருவேங்கட மாலை

ஆதி திருவேங்கடம் என்று, ஆயிரம் பேரான் இடம் என்று,
ஓதிய வெண்பா ஒரு நூறும் கோது இல்
குணவாள பட்டர் இரு கோகனகத் தாள் சேர்
மணவாளதாசன்தன் வாக்கு. 5

திருவேங்கடத்து அந்தாதி

மட்டு அளை தண்டலை சூழ் வட வேங்கடவாணனுக்கு,
தொட்டு அளை உண்ட பிரானுக்கு, அன்பு ஆம்—பட்டர் தூய பொற்று-
ளுள் தளையுண்ட மணவாள தாசன் உகந்து உரைத்த
கட்டளை சேர் திரு அந்தாதி நூறு கலித்துறையே. 6

அழகர் அந்தாதி

அலங்காரருக்கு, பரமச் சுவாமிக்கு, அழகருக்கு,
கலங்காப் பெரு நகரம் காட்டுவார்க்கு, கருத்து அன்பினல்,
நலங்காத சொல்-தொடை அந்தாதியை, பற்பநாபப்பட்டன்
விலங்காத கீர்த்தி மணவாளதாசன் விளம்பினனே. 7

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

மண்ணில் அரங்கம் முதல் வைகுந்தநாடு அளவும்
எண்ணு திருப்பதி நூற்றெட்டினையும் நண்ணியே,
கற்பார், துதிப்பார், கருதுவார், கேட்டிருப்பார்,
பொற்பாதம் என் தலைமேல் பூ. 8

பதின்மர் உரைத்த பதி ஒரு நூற்றெட்டும்
துதிசெய்ய அந்தாதி சொன்னன்—அதிக
குணவாள பட்டர் இரு கோகனகத் தாள் சேர்
மணவாளதாசன் வகுத்து. 9

தமிழ் இலக்கியச் செல்வம்

(புது முறைப் பதிப்புக்கள்*)

1. முதலாயிரம்
2. பெரிய திருமொழி
3. இயற்பா
4. திருவாய்மொழி
5. திருவாசகம்
6. சிலப்பதிகாரம்
7. மணிமேகலை
8. அஷ்டப் பிரபந்தம்
9. கல்லாடம்

அச்சில் இருப்பவை :

(சங்க இலக்கியம்)

10. பத்துப் பாட்டு
11. நற்றிணை
12. குறுந்தொகை
13. ஐங்குறுநூறு
14. பதிற்றுப்பத்து
15. பரிபாடல்
16. கலித்தொகை
17. அகநானூறு
18. புறநானூறு
19. பாட்டும் தொகையும் (பத்துப் பாட்டிலும் எட்டுத் தொகைகளிலும் வரும் பாடினோர் பாடப்பட்டோர், கதைக் குறிப்புக்கள், வரலாற்றுக் குறிப்புக்கள், முதலிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களும், சொல்-தொடர் விளக்கமும்)
20. பதினெண் கீழ்க்கணக்கு (முதல்-தொகுதி)
21. பதினெண் கீழ்க்கணக்கு (இரண்டாம்-தொகுதி)

* வெளியிடுவோரிடம் ஒவ்வொன்றும் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும்; வியாபாரிகளிடம் விற்பனை விலை ஒரு ரூபாய் இருபத்தைந்து நயே பைசே. (அச்சில் இருக்கும் நூல்கள் யாவும் ஒருசேர, ஒரே சமயத்தில் வெளியிடப் பெறும்.)

1. திரு அரங்கக் கலம்பகம்

புகழ் மாலை

சீர் பூத்த செழுங் கமலத் திருத் தவிசில் வீற்றிருக்கும்
நீர் பூத்த திருமகளும், நிலமகளும், அடி வருட;
சிறைப் பறவை புறம் காப்ப; சேனையர்கோன் பணி கேட்ப;
நறைப் படலைத் துழாய் மார்பில், நாயிறு போல், மணி விளங்க;
அரிய தானவர்க் கடிந்த ஐம் படையும் புடை தயங்க;
கரிய மால் வரை முளரிக்காடு ஈன்று கிடந்தாங்கு,
பாயிர நான்மறை பரவ, பாற்கடலில், பரு மணிச் சூட்டு
ஆயிர வாய்ப் பாம்பு-அணைமேல், அறிதுயிலின் இனிது அமர்ந்தோய்!

மண்ணகம் துயர் நீங்க, வானகம் தொழுது ஏத்த,
கண் அகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்து,
பம்பு கதிர் விசும்பு இரவி பசும் புரவி வழி விலங்கு
செம் பொன் மதில் ஏழ் உடுத்த திரு அரங்கப் பெருங் கோயில்,
ஆணிப் பொன்-தகடு உரிஞ்சும் அணிக் கதவ நீள் வாயில்,
மாணிக்க வெயில் பரப்பும் வயிர மணி விமானத்துள்,
மின் இலங்கு தொடி வலய வியன் வலக்கை கீழ் கொடுத்து,
தென் இலங்கைத் திசை நோக்கி, திரு நயனம் துயில்வோய்! கேள்:

தேவர்ஆய், தேவர்க்கும் தெரியாத ஒளிஉருஆய்,
மூவர்ஆய், மூவர்க்குள் முதல்வன்ஆய், நின்றாய், நீ!

போற்றுவார் போற்றுவது உன் புகழ்ப் பொருளே; ஆதலினால்
வேற்று வாசகம் அடியேன் விளம்புமாறு அறியேனால்!

பணித் தடங் காது இறையவற்கும், பங்கயத்தோன் முதலோர்க்கும்,
பணித்து அடங்காப் புகழ் அடியேன் பணித்து, அடங்கற்பாலதோ?

'யாம் கடவுள்' என்று இருக்கும் எவ் உலகில் கடவுளர்க்கும்
ஆம் கடவுள் நீ என்றால், அஃது உனக்கு வியப்புஆமோ?

அனைத்து உலகும், அனைத்து உயிரும், அமைத்து, அளித்து, துடைப்பது நீ
நினைத்த விளையாட்டு என்றால், நின் பெருமைக்கு அளவுஆமோ?

கருது அரிய உயிர்க்கு உயிராய்க் கலந்து, எங்கும் பரந்து, உறையும்
ஒரு தனி நாயகம் என்றால், உன் புகழ்க்கு வரம்புஆமோ?

உரு என அரு என, உளன் என இலன் என,
அரு மறை இறுதியும், அறிவு அரு நிலைமையை!

இவர்இவர் இறையவர் என, மன உறுதியொடு
அவர்அவர் தொழ, அறு சமயமும் அருளினை!

கடு வளி, கனல், புனல், ககனமொடு, அகலிடம்,
உடுபதி, கதிரவன், உருவமும் அருளினை!

கடி மலர் அடி இணை கருதினர் பெறுகென;
அடி,நடு,முடிவு, அற; அருள் பர-கதியினை!

ஒரு நாலு முகத்தவனோடு உலகு ஈன்றாய் என்பர் ; அது உன்
திரு நாபி மலர்ந்தது அல்லால், திரு உளத்தில் உணராயால்.

மேருகிரி உடல் அவுணன் மிடல் கெடுத்தாய் என்பர்; அது உன்
கூர் உகிரே அறிந்தது அல்லால், கோவே! நீ அறியாயால்.

பன்றிஆய்ப் படி எடுத்த பாழியாய் என்பர்; அது
வென்றி ஆர் உனது எயிற்றில் மென் துகள் போன்று இருந்ததால்.

அண்டம் எலாம் உண்டை என்பர், அறியாதார்; ஆங்கு அவை நீ
உண்டருளும் காலத்தில் ஒரு துற்றுக்கு ஆற்றாவால்.

நஞ்சமும் அமுதமும், நரகும் வீடும் ஆய்,
வஞ்சமும், ஞானமும், மறப்பும், ஆயினை.

இரு வினைப் பகுதியும், இன்ப துன்பமும்,
கருணையும் வெகுளியும், கருத்தும், ஆயினை.

அலை கடல் வயிறு கலக்கினை;
அவுணரை மதுகை அடக்கினை.

மலை கட களிறு வதைத்தனை;
மலை தலைகவிழ எடுத்தனை.

மண்ணை விண்டனை;
வெண்ணெய் உண்டனை.
மருது இடந்தனை;
எருது அடர்ந்தனை.
உள் நிறைந்தனை;
எண் இறந்தனை.
ஒருமை ஆயினை;
பெருமை மேயினை.

என ஆங்கு—
மலர் தலை உலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடல்-ஓதையொடு,
முது மறை கறங்க, முரசம் ஆர்ப்ப,

வலம்புரி பிளிறும் பொலம் புரி கோயில்
ஆழிஅம் செல்வ! ஆதிஅம் பரம!
வாழி, வாழி! மாயோய், வாழி!
நெடியோய் வாழி! நின்மாட்டு ஒன்றே
அடியேன் வேண்டுவது: அது நீ மறுக்கேல்—
பூ வரும் அயன் முதல் யாவரும் போற்ற
மூஉலகு அளந்த நின் சேவடி வாழ்த்தித்
தொழுத கைத் தொண்டர்தம் தொண்டருள் சேர்க்காது,
எழு வகைத் தோற்றத்து இன்னுப் பிறப்பில்
என்பு ஒழி யாக்கையுள் சேர்ப்பினும், அவர்பால்
அன்பு ஒழியாமை அருண்மதி எனக்கே. 1

எனக்கே திரு அரங்கனே பிரான்; எம்மான்-
தனக்கே அடிமை தமியேன்; புனக் கேழ்
மருத் துளவோன்மேல் அன்றி, மற்ருெருவர்மேல் என்
கருத்து உளவோ—ஆராயுங்கால்? 2

கால் ஆயிரம், முடி ஆயிரம், ஆயிரம் கை பரப்பி;
மேல் ஆயிரம் தலை நாகம் கவிப்ப; விண் பூத்த கஞ்சம்-
போல் ஆயிரம் கண் வளரும் பிரான் பொன்-அரங்கம் என்றே
மால்ஆய், இரங்க வல்லார்க்கு எய்தலாம்—திரு வைகுந்தமே. 3

வை கலந்த மூஇலை வேல் ஈசற்கும்,
வாசவற்கும், வாசப் பூமேல்
மெய் கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும்,
மேலா வீற்றிருப்பர் மாதோ—
பை கலந்த பாம்பு-அணைமேல் திரு அரங்கப்
பெருங் கோயில் பள்ளிகொள்ளும்,
கைகலந்த நேமியான் திருநாமத்து
ஒரு நாமம் கற்ருர்தாமே. 4

கற்ருர்எனினும், பதினல் உலகும்
கண்டார்எனினும், தண்டா மிகு பற்று
அற்ருர்எனினும், திருமால் அடியார்
அல்லாதவர் வீடு இல்லாதவரே:
பொற்ருமரையாள் கணவன் துயிலும்
பொற்கோயிலையே புகழ்வார், பணிவார்,
மற்று ஆர்எனினும், பெற்ருர் அவரே
வானேர் திரு மா மணி மண்டபமே. 5

மண்தலமும், விண்தலமும், நின்ற வடகுன்றமும்,
வளைந்த மலையும், கடலும், மூ-
தண்டமும், அகண்டமும், அயின்றவர் துயின்றருள்
அரும் பதி விரும்பி வினவின்,
கொண்டல் குமுறும் குடகு இழிந்து, மதகு உந்தி, அகில்
கொண்டு, நுரை மண்டி, வரு நீர்
தெண் திரைதொறும் தரளமும் கனகமும் சிதறு
தென் திரு அரங்க நகரே. 6

புய வகுப்பு

நகு கதிர் வழங்கு, தகடு படு செம் பொன்,
நவ மணி குயின்ற, தொடி அணி அணிந்து,
ககன வில் இடு நீல வெற்பு ஒத்து இருந்தன;

நறிய புது மன்றல் திசை முழுதும் மண்ட,
நறவு குதிகொண்ட துளவு அணி அலங்கல்
மதுகரம் ஒரு கோடி சுற்றப் புனைந்தன;

நளின மட மங்கை, குவலய மடந்தை,
சனகனது அணங்கு, பொதுவர் மகள், என்றிவ்
வனிதையர் தனபாரம் மொத்தக் குழைந்தன;

நதிபதி சுழன்று, கதறி, நுரை சிந்த;
அரவு அகடு உரிஞ்சி, அல்ற; அலமந்து,
வடவரை உடல் தேய நட்டுக் கடைந்தன ;

இகலி இரு குன்றில் இரு சுடர் எழுந்து,
பொருவது என விம்ப மதிமுகம் இலங்க,
இரு குழை இரு பாடு அலைப்பச் சிறந்தன;

இணை அற நிமிர்ந்து, வலியொடு திரண்டு,
புகழொடு பரந்து, புழுகொடும் அளைந்து,
கலவையின் அணி சேறு துற்றுக் கமழ்ந்தன;

எதிர் ஒருவர் இன்றி, அகில உலகும் தன்
அடி தொழ இருந்த இரணியன் மடங்க,
முரணிய வரைமார்பம் எற்றிப் பிளந்தன;

எறி கடல் கலங்கி, முறையிட வெகுண்டு,
நிசிசரர் இலங்கை அரசொடு மலங்க,
ஒரு சிலை இரு கால் வளைத்துச் சிவந்தன;

மிகு களவின் நின்ற விளவு கனி சிந்தி
மடிய, விடு கன்று குணில் என எறிந்து,
பறவையின் அகல் வாய் கிழித்துப் பகிர்ந்தன;

வெறி படு குருந்தை முறிபட அடர்ந்து,
குட நடம் மகிழ்ந்து, குரவைகள் பிணைந்து,
பொரு தொழில் எருது ஏழு செற்றுத் தணிந்தன;

வெடிபட முழங்கி எழு முகிலும் அண்ட-
ரொடு, நிரை, தியங்க எறி திவலை கண்டு,
தட வரை குடையா எடுத்துச் சுமந்தன;

விழி வடவை பொங்க, எதிர் பொர, நடந்த
களிறு உளம் வெகுண்டு பிளிறிட, முனிந்து,
புகர்முக இரு கோடு பற்றிப் பிடுங்கின;

அகலிடமும், உம்பர் உலகமும், நடுங்கி;
'அபயம் அடியெங்கள் அபயம்' என வந்து,
விழுதொறும் இடையூறு அகற்றிப் புரந்தன;

அருகு உற விளங்கும் எறி திகிரி, சங்கம்,
வெயில் ஒரு மருங்கும், நிலவு ஒரு மருங்கும்,
எதிர்எதிர் கதிர் வீச, விட்டுப் பொலிந்தன;

அரு மறை துணிந்த பொருள் முடிவை இன் சொல்
அமுது ஒழுகுகின்ற தமிழினில் விளம்பி-
அருளிய சடகோபர் சொல் பெற்று உயர்ந்தன—

அரவணை விரும்பி, அறிதுயில் அமர்ந்த
அணி திரு அரங்கர், மணி திகழ் முகுந்தர்,
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே. 7

புயம் நான்கு உடையானை, பொன்-அரங்கத்தானை,
அயன்ஆம் திரு உந்தியானை, வியன்ஆம்
பர கதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்—
நரக திக்குக் காணாமல் நான். 8

நான் அந்த வைகுந்த நாடு எய்தி வாழில் என்? ஞாலத்து இன்றி,
ஈனம் தவாத நிரயத்து வீழில் என்?—யான் அடைந்தேன்—
கோன் நந்தன் மைந்தனை, நான்முகன் தந்தையை, கோயில் அச்சு-
தானந்தனை, எனக்கு ஆரா அமுதை, அரங்கனையே. 9

அரவில் நடித்தானும், உர வில் ஒடித்தானும்,
அடவி கடந்தானும், புடவி இடந்தானும்,
குரவை பிணைத்தானும், பரவை அணைத்தானும்,
கோசலை பெற்றானும், வீசு அலை உற்றானும்,
முரனை அறுத்தானும், கரனை ஒறுத்தானும்,
முத்தி அளித்தானும், அத்தி விளித்தானும்,
பரமபதத்தானும், சரம விதத்தானும்,
பாயல் வடத்தானும்—கோயில் இடத்தானே. 10

தானே தனக்கு ஒத்த தாள்-தாமரைக்குச் சரண்புகுந்து, ஆள்
ஆனேன்; இனி, உன் அருள் அறியேன்—எனது ஆருயிரே!
தேனே! என் தீவினைக்கு ஓர் மருந்தே! பெருந் தேவர்க்கு எல்லாம்
கோனே! அரங்கத்து, அரவணைமேல், பள்ளிகொண்டவனே! 11

மேக விடு தூது

கொண்டல்காள்! உம்மைக் குறித்தே தொழுகின்றேன்;
அண்டர் காணா அரங்கத்து அம்மானைக் கண்டு,
மனத்துள் அவத்தைப்படும் என் மையல் எல்லாம் சொல்லி,
புனத் துளவத்தைக் கொணரீர், போய். 12

போய் அவனியில் சில புறச் சமயம் நாடும்
பேய் அறிவை விட்டு, எழு பிறப்பையும் அறுப்பீர்!
ஆயனை, அனந்தனை, அனந்தசயனத்து எம்
மாயனை, அரங்கனை வணங்கி, மருவீரே. 13

மருவு தந்தையும், குருவும், எந்தையும்,
மருள் கெடுப்பதும், அருள் கொடுப்பதும்,
உருகு நெஞ்சமும், பெருகு தஞ்சமும்,
உரிய ஞானமும், பெரிய வானமும்—
திரு அரங்கனார், இருவர் அங்கனார்,
செங் கண் மாயனார், எங்கள் ஆயனார்,
அருள் முகுந்தனார், திரு வைகுந்தனார்,
அமல நாதனார், கமல பாதமே. 14

பாதியாய் அழுகிய கால், கையர்ஏனும்,
பழிதொழிலும், இழி குலமும் படைத்தார்ஏனும்;
'ஆதியாய்! அரவணையாய்!' என்பர் ஆகில்,
அவர் அன்றோ, யாம் வணங்கும் அடிகள் ஆவார்:
சாதியால், ஒழுக்கத்தால், மிக்கோர்ஏனும்;
சதுர் மறையால், வேள்வியால், தக்கோர்ஏனும்;
போதில் நான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்-அரங்கம் போற்றாதார் புலையர்தாமே. 15

புலைஆம் பிறவி பிறந்து என் செய்தோம்! பொன்னி பொன் கொழிக்கும்
அலை ஆர் திரு அரங்கத்து எம்பிரான் நமது அன்னையொடும்
தொலையாத கானம் கடந்த அந்நாள், தடம்தோறும் புல்ஆய்,
சிலைஆய், கிடந்திலமே, நெஞ்சமே! கழல் தீண்டுகைக்கே. 16

தீண்டா வழும்பும், செந்நீரும்,
சீயும், நிணமும், செறி தசையும்
வேண்டா நாற்றம் மிகும் உடலை
வீணே சுமந்து மெலிவேனோ?
நீண்டாய்! தூண்டா விளக்கு ஒளிஆய்
நின்றாய்! ஒன்றாய்! அடியாரை
ஆண்டாய்! காண்டா வனம் எரித்த
அரங்கா! அடியேற்கு இரங்காயே! 17

தவம்

காய், இலை தின்றும், கானில் உறைந்தும், கதி தேடித்
தீ இடை நின்றும், பூ வலம் வந்தும், திரிவீர்காள்!
தாயினும் அன்பன், பூமகள் நண்பன், தட நாகப்
பாயல் முகுந்தன், கோயில் அரங்கம் பணிவீரே. 18

தவம்

வீரர் அங்கு-ஆகிய ஐவரை மாற்றி, விட அரவு இன்
போர் அரங்கு ஆக நடித்த பொற்றாள் பற்றி, 'பொன்னி நல் நீர்ச்
சீர் அரங்கா! நின் தொழும்பன்' என்றே சிந்தை செய்கில், அது
கூர் அரம்காண், நெஞ்சமே!—வஞ்ச மாயக் கொடுவினைக்கே. 19

கேசவனையே செவிகள் கேட்க; திரு அரங்கத்து
ஈசனையே சென்னி இறைஞ்சிடுக; நேசமுடன்
கண்ணனையே காண்க இரு கண்; இணர் கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துக என் வாய். 20

தலைவனைப் பிரிந்த தலைவி கடலை நோக்கி இரங்கிக் கூறல்

வாயின் இரங்கினை; ஆரம் எறிந்தனை;
வால் வளை சிந்தினை; தண்
பாயலை உந்தினை; மாலை அடைந்தனை;
பாரில் உறங்கிலையால்—
கோயில் அரங்கனை, மா கனகம் திகழ்
கோகனகம் பொலியும்
ஆயிழை நண்பனை, நீயும் விரும்பினை-
ஆகும், நெடுங் கடலே! 21

பிரிவு ஆற்ருமையால் வருந்திய தலைமகள் இரங்கல்

கடல் வழி விட, நிசிசரர் பொடிபட, இரு கண் சீறி
வட கயிலையின் எழு விடை தழுவியதும் மறந்தாரோ?
அடல் அரவு-அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர்
இடர் கெட வருகிலர்; முருகு அலர் துளவும் இரங்காரே! 22

இரங்கத் தனித்தனியே எய்துகின்ற துன்பத்
தரங்கத்தை ஏதால் தடுப்பீர்—'அரங்கர்க்குக்
கஞ்சம், திருப் பாதம்; கார், மேனி' என்று, அவர்பால்
நெஞ்சம் திருப்பாத நீர்? 23

தான் தூதுவிட்ட நெஞ்சு திரும்பி வாராமைக்குத் தலைமகள் இரங்குதல்

நீர் இருக்க, மட மங்கைமீர்! கிளிகள்-
தாம் இருக்க, மதுகரம் எலாம்
நிறைந்திருக்க, மட அன்னம் முன்னம் நிரை-
யாய் இருக்க, உரையாமல் யான்,
'ஆர் இருக்கினும் என் நெஞ்சம் அல்லது, ஒரு
வஞ்சம் அற்ற துணை இல்லை' என்று,
ஆதரத்தினெடு தூதுவிட்ட பிழை
ஆரிடத்து உரைசெய்து ஆறுவேன்?
சீர் இருக்கும் மறை முடிவு தேடு அரிய
திரு அரங்கரை வணங்கியே
திருத் துழாய் தரில், விரும்பியே கொடு
திரும்பியே வருதல் இன்றியே,
வார் இருக்கும் முலை மலர்மடந்தை உறை
மார்பிலே, பெரிய தோளிலே,
மயங்கி, இன்புற முயங்கி, என்னையும்
மறந்து, தன்னையும் மறந்ததே. 24

வண்டு விடு தூது

மறக்குமோ? காவில் மது அருந்தி, அப்பால்
பறக்குமோ? சந்நிதி முன்புஆமோ? சிறக்கத்
தரு வரங்கள் கேட்குமோ? தாழ்க்குமோ?—நெஞ்சே!
திரு அரங்கர்பால் போன தேன். 25

அம்மானை

தேன் அமரும் சோலைத் திரு அரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம்; ஆண், பெண், அலி, அலர்காண், அம்மானை!
ஆனவர்தாம் ஆண், பெண், அலி, அலரே ஆமாகில்,
சானகியைக் கொள்வாரோ தாரமாய்? அம்மானை!
தாரமாய்க் கொண்டதும் ஓர் சாபத்தால், அம்மானை! 26

தலைவியின் நிலை கண்டு நற்றாய் இரங்கல்

மானை எய்தவர் இன்னம் என் மட
மானை எய்திலர்; நேமியால்
மாலை தந்தவர் பைந் துழாய் மலர்
மாலை தந்திலர்; இந்திரன்
சோனைமாரி விலக்கி விட்டவர்
சொரி கண்மாரி விலக்கிலார்;
சுரர்தமக்கு அமுதம் கொடுத்தவர்
சோதி வாய் அமுதம் கொடார்;
தானை ஐவர் கொடிக்கு அளித்தவர்
தானை கொண்டது அளிக்கிலார்;
சங்கரற்கு இரவைத் தடுத்தவர்
தையலுக்கு இரவைத் தடார்;
ஆனை முன் வரும் அன்புளார் முலை-
ஆனை முன் வரும் அன்பிலார்;
அணி அரங்கர் நடத்தும் நீதி
அநீதியாக இருந்ததே! 27

இருளினும் வெளியினும், மருளினும் தெருளினும்,
இன்பமே அடையினும், துன்பமே மிடையினும்,
ஒருவர் முன் புகழினும், இருவர் பின்பு இகழினும்,
ஊன் இறந்து அழியினும், யான் மறந்து ஒழிவனோ—
சுருதி நின்று ஒலிடும் கரதலம் நாலொடும்,
துவளும் நூல் மார்பமும், பவளவாய் மூரலும்,
திரு அரங்கேசர்தம் சுருள் கருங் கேசமும்,
செய்ய நீள் முடியும், அத் துய்ய சேவடியுமே? 28

சேவடியால் மூஅடி மண், தென் அரங்கத்து அம்மான்! நீ
மாவலிபால் வாங்கிய நாள், மண் உலகோ—மூஉலகும்
வீசும் காலோ—வலிய வெவ் வினையேன் நெஞ்சமோ—
பேசுங்கால், ஏதோ பெரிது? 29

நாரை விடு தூது

பெரு வரம் கேசவன் அல்லாது, அருள்செயும் பேர் இலை; வேறு
ஒருவர் அங்கே, சற்றும் ஓதார், என் காதலை; ஓடி எங்கும்
கரு அரங்கே சலிக்கத் திரிவோர்க்குக் கருணைசெய்யும்
திரு அரங்கேசற்கு நீ சொலல் வேண்டும், செழுங் குருகே! 30

தலைவனது பிரிவினால் வருந்தும் தலைவி கழிக்கரைப் பொருள்களை நோக்கிப் புலம்பல்

குருகு உறங்கு கானலே! கரு நிறம் கொள் பானலே!
கொடி இருண்ட ஞாழலே! நெடிய கண்டல் நீழலே!
பொரு தரங்க வேலையே! நிருதர் அங்க மாலையே!
போது அயின்ற கம்புளே!—ஏதை என்று இயம்புகேன்?—
திரு அரங்கர் இணை இலா ஒரு புயங்க-அணையிலே,
திகழ் வலக் கை கீழதா, முகிழ் மலர்க் கண் வளர்வது ஓர்
கருணை நம்பு வதனமும், அருண விம்ப அதரமும்,
காவி கொண்ட மேனியும், ஆவி கொண்டு போனவே! 31

எம்பெருமானது அளவிடற்கு அரிய பெருமை

போனகம் பதினாலு புவனம்; திருப் பள்ளி
பொறி அரவணைப் பாற்கடல்;
பூமடந்தையும் நிலமடந்தையும் தேவியர்;
புராதன மறைக்கும் எட்டா
வானகம் பேரின்பமுடன் வீற்றிருக்கும் இடம்;
வாகனம் வயினதேயன்;
மலர் வந்த நான்முகன் திரு மைந்தன்; அவன் மைந்தன்
மதிசூடி; வாசவன் முதல்
தேன் நறுந் தொடை மௌலி முப்பத்து முக் கோடி
தேவர் உனது ஏவல் செய்வோர்;
திங்களும் பரிதியும், சங்கமும் திகிரியும்;
திரிவனவும் நிற்பனவும்ஆம்
ஏனை மன் உயிர் முழுதும் விளையாட நீ வகுத்-
திட்ட பல மாயை; அதனால்,
எழில் அரங்கம் துயிலும் எம்பிரான்! நின் பெருமை
யாவரே வாழ்த்துவாரே? 32

தலைவனது அவயவம் எழுத அரிது எனத் தலைவி கூறி இரங்குதல்

வாழும் மௌலித் துழாய் மணமும்,
மகரக் குழை தோய் விழி அருளும்,
மலர்ந்த பவளத் திரு நகையும்,
மார்பில் அணிந்த மணிச் சுடரும்,
தாழும் முளரித் திரு நாபித்
தடத்துள் அடங்கும் அனைத்து உயிரும்,
சரணகமலத்து உமை கேள்வன்
சடையில் புனலும் காணேனால்—

ஆழம் உடைய கருங் கடலின்
அகடு கிழியச் சுழித்து ஓடி,
அலைக்கும் குட காவிரி நாப்பண்
ஐவாய் அரவில் துயில் அமுதை
ஏழு பிறப்பில் அடியவரை
எழுதாப் பெரிய பெருமானை,
எழுத அரிய பெருமான் என்று
எண்ணுது, எழுதியிருந்தேனே! 33

தலைவி மாலையை வேண்டி இரங்குதல்

இருங் குங்குமத் தோள் அரங்கேசர்; முன்நாள்,
இலங்காபுரம் காவலன், காலினுல் வீழ்
கருங் குன்று போல், மண் முகம் குத்தி வீழக்
கண்டார்; எனக்கு இன்று தண் தார் அளித்தால்—
மருங்கு எங்கும் வம்பு ஓதுவார் வாய் அடங்கும்;
வாடைக்கும், நிலமங்கை ஆடைக்கும், நோகேன்;
நெருங்கும் தனம் சந்தனம் பூசல் ஆகும்;
நீளாது இரா; மையல் மீளாது இராதே. 34

நெஞ்சிற்கு அறிவுறுத்தல்

தேடுகின்றனை, ஐம்பொறிகளுக்கு இரை;
தேடியும் கிடையாமல்,
வாடுகின்றனை; வீடு சென்று, என்று, இனி,
மருவுவை?—மட நெஞ்சே!
ஆடுகின்றிலை, அழுகிலை, தொழுகிலை
அரங்கனைக் கரம் கூப்பி;
பாடுகின்றிலை, நினைகிலை—பதின்மர் தம்
பாடலின் படியாயே. 35

உலகிற்கு அறிவுறுத்தல்

ஆயினை, மனையை, சேயினை, பிதாவை,
அனத்தினை, தனத்தினை, விரும்பும்
பேயினை மறந்து; நோயினை, மூப்பை,
பிறப்பினை, இறப்பினை, துடைப்பீர்—
ஆயனை, முளரி வாயனை, எங்கள்
அமலனை, கமலனைப் பயந்த
தாயனை, நெடிய மாயனை, வட பால்-
தரங்கனை, அரங்கனை—தொழுமே. 36

இறுதி மடக்கு

தொழப்பெறுது அந்த ஆரணத்து அந்தமே;
  தொட்டு இறுத்ததும் வாரணத் தந்தமே;
வழுத்து தாள் முன்பு வனம் கடந்ததே;
  மலர்ந்த உந்தி முன் புவனங்கள் தந்ததே;
ஒழித்ததும் குழைச் சங்கரன் சாபமே;
  ஒசித்ததும் குழைச்சு அங்கு அரன் சாபமே;
அழித்ததும் பொரு தானவர் அங்கமே;
  அரிதன் ஊர் இனிது ஆன அரங்கமே. 37

உயிர் வருக்க மோனை

அரங்க மாளிகைக் கருங் கடல் வண்ணனை;
ஆலி மா முகிலை; வாலி காலனை;
இந்தளூர் உறை எந்தை பெம்மானை;
ஈசன், நான்முகன், வாசவன், தலைவனை;
உள்ளுவார் உள்ளத்துள் உறை சோதியை;
ஊரகம், நின்றருள், நீரகத்து, அடிகளை;
எவ்வுள் மாயனை; தெய்வ நாயகனை;
ஏர் மலி சிகரத்து நீர்மலை ஆதியை;
ஐவாய் அரவில் அறிதுயில் அமலனை;
ஒரு கால் மொழியினும், ஒழிகுவை—நெஞ்சே!
ஓத நீர் ஞாலத்து உழலும்
ஔவியப் பிறப்பில் அழுந்தி வாடுவதே. 38

செவிலி இரங்கல்

வாடி ஓட வனசம் அன்ன
    இருகண், வெள்ளம் அருவி போல்
  மருவி ஓட, மதனன் வாளி
    உருவி ஓட, வாடை ஊடு
ஆடி ஓட, அன்றில் ஓசை
    செவியில் ஓட, வண் துழாய்
  ஆசையோடும் எங்கள் பேதை
    ஆவி ஓடல் நீதியோ?—
மோடி ஓட, அங்கி வெப்பு
    மங்கி ஓட, ஐங்கரன்
  முடுகி ஓட, முருகன் ஓட,
    முக்கண் ஈசன் மக்களைத்
தேடி ஓட, வாணன் ஆயி-
    ரம் புயங்கள் குருதிநீர்
  சிந்தி ஓட, நேமி தொட்ட
    திரு அரங்க ராசரே! 39

ஊர்

சருகு அருந்தி ஐம் பொறி வருந்து அருந்
  தவர்கள், அண்டர், குஞ்சரமுகன், குகன்,
பருதி, சந்திரன், சிவன், அயன், புரந்-
  தரன் நிரந்தரம் பரவும் எந்தை ஊர்—
குருகை, தஞ்சை, தென் கணபுரம், குறுங்-
  குடி, குடந்தை, வண் துவரை, இந்தளூர்,
திரு வைகுந்தம், அஞ்சன சிலம்பு, அயிந்-
  திரபுரம், செழுந் திரு அரங்கமே. 40

இறுதி மடக்கு

திரு அரங்கந் திருக் கோயில்
    சேர்ந்து, உமது திருக்கு ஓயில்,
தருவர், என்றும் வைகும் தம்
    தயங்கு ஒளி சேர் வைகுந்தம்;
ஒரு மருங்கில் நந்து உடையார்;
    ஒழிந்தொர் சனனம் துடையார்;
மருவ மறம் திருப்பீரே—
    வணங்க மறந்து இருப்பீரே! 41

சித்து

திருப் பொற்பாவைக்குக் கஞ்சம் பொன் ஆக்கிய
  சித்தரேம்—சுத்தக் காயா மலர் என,
உருப் பொற்பு ஆன திரு அரங்கேசனார்
  ஊரகத்து நின்றார்; சென்று இறைஞ்சினோம்;
இருப்புப் பாடகம் காட்டினர்; யாம் அவர்க்கு
  இரும்பை ஆடகம் ஆக்கினெம்; ஈயத்தை
நருக்கி வெள்ளியது ஆக உருக்குவோம்;
  நமது வித்தைக்கு அமுதே அருமையே? 42

சித்து

அரும்பித் தளை அவிழ் நாள்மாலை மார்பன், அரங்கன், எங்கள்
பெரும் பித்து அளையும் பிறப்பு அறுத்து ஆண்ட பிரான், சித்தரேம்;
தரும் பித்தளையும் தராவும் பொன் ஆக்கித் தருவெம்; அப்பா!
திரும்பித்து—அளையினும், நெய், பால் அமுதினும்—சிந்தனையே. 43

அறு சுவைப் பெயரும் மாலையாய் அமைந்த பாடல்

சிந்திக்கத் தித்திக்கும்; செவ் வாய் துவர்த் துப்பு ஆம்;
புந்திக்குள்ளே இன்புளி மேவும்; நம்தம்
கரு அரங்கம் கைத்து அழலும்—காவிரியின் ஊடே
திரு அரங்கத்தே வளரும் தேன். 44

தேன் நந்து சோலை அரங்கேசர் சேவடிமேல் விசயன்-
தான் அந்த நாளையில் சாத்திய மாலையும், தாள் விளக்கும்
வானம் தரு கங்கை நல் நீரும், சென்னியில் வைக்கப் பெற்ற
ஆனந்தம்தான் அல்லவோ—முக்கணன் மன்றுள் ஆடுவதே? 45

தலைமகளது உருவெளிப்பாடு கண்ட தலைமகன் இரங்குதல்

ஆடும் பட நாகணைமேல் அணையும்
அமலன், கமலத்தவனும் சிவனும்
நாடும் திருமால், துயில் கோயிலின்வாய்
நறை வார் பொழிலூடு உறைவார் அளகக்
காடும், குழையைச் சாடும் குவளைக்
கண்ணும், குதலைப் பண்ணும், கரியின்
கோடும், தரளத் தோடும், புருவக்
கோதண்டமுமே—மூதண்டமுமே. 46

கைக்கிளை

அண்டம் முழுது உண்டவர், உமிழ்ந்தவர், இடந்தவர்,
அளந்தவர், வளர்ந்தருளும் மா
சண்ட பண ஐந் தலை அனந்த சயனம் திகழ்-
தரும் திரு அரங்கர் வரைமேல்
கண்டது ஒரு கொம்பு ; அதில் இரண்டு மகரங்கள், ஒரு
கஞ்சம், இரு வெஞ் சிலை, மணம்
கொண்டது ஒரு கொண்டல், இரு கெண்டை, ஒரு தொண்டை, இரு
கும்பம், ஒரு செம் பணிலமே. 47

தலைவி இரங்கல்

செம் பொன்-அரங்கத் தரங்க நீர்ச்
சீதள சந்திர வாவி சூழ்
கம்புளுடன் பயில் நாரைகாள்!
காதலை என் சொலி ஆறுவேன்?
வெம் பனி வந்தது; வந்தபின்,
வேனிலும் வந்தது; வேனில் போய்,
பைம் புயல் வந்தது; சென்ற நம்
பாதகர் வந்திலர்காணுமே! 48

சம்பிரதம்

காணாத புதுமை பல காட்டுவன்; கட்செவிகள்
எட்டையும் எடுத்து ஆட்டுவன்;
கடல் பருகுவன்; பெரிய ககன வரையைச் சிறிய
கடுகினில் அடைத்து வைப்பன்;

வீண் ஆரவாரம் மூதண்டம் உற விளைவிப்பன்;
இரவு பகல் மாறுடுவன்;
விண்ணையும் மறைப்பன்; எழு மண்ணையும் எடுப்பன்; இவை
விளையாடும் வித்தை அன்றால்—
நீள் நாகணைப் பள்ளியில் திரு அரங்கத்து
நெடிது ஊழி துயிலும் பிரான்
நெற்றிக் கண் ஆனவனை, நான்முகனை, வாசவனை,
நிமிரும் இரு சுடரை முதலாச்
சேண் நாடர் யாவரையும் அடிமைகொண்டு, அவர்அவர்
சிரத்தில் பொறித்து விட்ட
திருச் சக்கரப் பொறி இலாத ஒரு கடவுளைத்
தேடி இனி முன் விடுவனே. 49

இடம் அணித்து என்றல்

முன்னம் ஏழ் புரவி ஆர் இரவி காய் வெயிலினால்
முத்து அரும்பிய கலா முழுமதித் திருமுகத்து
அன்னமே! இன்னம் ஓர் காவதம் போதுமேல்,
அகலும் இப் பாலை; அப்பால் அரைக் காவதம்—
என்னை ஆளுடையவன் துயில் அரா-அமளியும்,
இலகு பொற்கோயிலும், இந்துவின் பொய்கையும்,
புன்னைவாய் நீழலும், புரிசையும், மதுகரம்
பூ விரித்து உறையும் அக் காவிரித் துறையுமே. 50

தோழி தலைமகனது இரவுக்குறி விலக்கல்

துறை மதியாமல், இக் கான்யாறு நீந்தி, சுரம் கடத்தல்
நிறை மதியாளர்க்கு ஒழுக்கம் அன்றால்; நெடுமால், அரங்கத்து
இறை, மதியா வரும் ஆரா அமிர்து அன்ன இந்த நுதல்
குறை மதியாள் பொருட்டால் கங்குல் வாரல், எம் கொற்றவனே!

மறம்

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறை உடலுக்கோ மறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர் சேர் திரு அரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக் குலம் என்று அறியாய்போலும்;
மற்றதுதான் திருமுகமே ஆனால், அந்த
வாய், செவி, கண், மூக்கு, எங்கே? மன்னர் மன்னன்
பெற்ற இள அரசு ஆனால், ஆலின் கொம்பைப்
பிறந்த குலத்தினுக்கு ஏற்கப் பேசுவாயே! 52

மறம்

பேச வந்த தூத! செல் அரித்த ஓலை செல்லுமோ?
பெரு வரங்கள் அருள் அரங்கர், பின்னை கேள்வர், தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து, முன்னமே,
பட்டம் மன்னர் பட்டது எங்கள் பதி புகுந்து பார், அடா!—
வாசலுக்கு இடும் படல் கவித்து வந்த கவிகையே;
மகுட கோடி தினை அளக்க வைத்த காலும், நாழியும்;
வீசு சாமரம் குடில் தொடுத்த கற்றை; சுற்றிலும்
வேலி இட்டது, அவர்கள் இட்ட வில்லும், வாளும், வேலுமே. 53

வேலை உலகில் பிறக்கும் வேலை ஒழித்தோம் இல்லை;
மாலை அரங்கேசனை நாம், மாலையினும், காலையினும்,
உன்னி நைந்தோம் இல்லை; உடல் எடுத்த அன்று முதல்
என் நினைந்தோம், நெஞ்சே! இருந்து? 54

இயலிடம் கூறல்

இரும் புவனம் விரும்பு வனம் அணி அரங்கர், பணி அரங்கர்,
இமய நண்ப!
வரும் கொடியின் மருங்கு ஒடியின் மனம் குழைக்கும், கனங்குழைக்கும்;
அனங்கன் சாபக்
கரும்பு உருவம் பொரும் புருவம்; முத்தம் நகை ஒத்தன; கை
காந்தள்; பூந் தேன்
மருங்கு உழலும் கருங் குழலும்; முருகு வளை இரு குவளை
மழைக்கண் தாமே. 55

இயலிடம் கூறல்

மழை, பிறை, சிலை, வேல், வள்ளை, எள், இலவின்
மலர், முல்லை, மதி, வளை, கழை, யாழ்,
வாரிசம், களிறு, தத்தை வாய், கலசம்,
மணி, வட பத்திரம், எறும்பு ஊர்
அழகு, நீர்த் தரங்கம், துடி, சுழி, அரவம்,
அரம்பை, ஞெண்டு, இள வரால், ஆமை,
அணி தராசு இணை, கந்துகம், துகிர், தரளம்,
அம்புயம்—அரங்க நாடு அனையார்
குழல், நுதல், புருவம், விலோசனம், காது,
நாசி, வாய், நகை, முகம், கண்டம்,
குலவு தோள், முன்கை, அங்கை, மெல் விரல்கள்,
கூர் உகிர், கொங்கை, கண், வயிறு,
விழைதரும் உரோமம், வரை, இடை, உந்தி,
விரும்பும் அல்குல், தொடை, முழந்தாள்,
மிளிர் கணைக் கால்கள், புறவடி, பரடு,
மென் குதி, விரல், நகம், தாளே. 56

கைக்கிளை

தாள் இரண்டும் பார் ஒன்றும்; தார் வாடும்; வேர்வு ஆடும்;
வாள் இரண்டும் காது இரண்டில் வந்து இமைக்கும்; கோள் இரண்டும்
ஐவகைப் பூதம் அமைத்தருள் அரங்கர்
மை வளர் சோலைமலையில்
தெய்வம் அல்லள், இத் திரு உருவினளே. 57

ஊசல்

உரு மாறிப் பல பிறப்பும் பிறந்தும், செத்தும்,
ஊசலாடுவது அடியேன் ஒழியும்வண்ணம்,
கரு மாயத்து என் நெஞ்சைப் பலகை ஆக்கி,
கருணை எனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி,
மரு மாலைத் துளவு அசைய, ஆடிர் ஊசல்!
மணி மகரக் குழை அசைய, ஆடிர் ஊசல்!
திருமாது புவிமாதோடு, ஆடிர் ஊசல்!
திரு அரங்க ராசரே, ஆடிர் ஊசல்! 58

ஊசல் வடம்போல், ஊர் சகடம்போல், ஒழியாமே,
நாச உடம்போடு ஆவி சுழன்றே நலிவேனோ?—
வாசவனும், போது-ஆசனனும், கூர் மழுவோனும்,
நேசமுடன் சூழ் கோயில் அரங்கா! நெடியோனே! 59

கையுறை—தழை

நேசத்து அழைக்கும் மத யானை முன்பு நின்றோன் அரங்கம்
பேசத் தழைக்கும் என் அன்பு அனையாய்! பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கும் நறுந் தழை காண், இது; மந்தத் தென்றல்
வீசத் தழைக்கும் தழைபோல் கெடாது; விலை இல்லையே. 60

கையுறை—முத்தம்

'விலையானது இலை' என்று, நீ தந்த முத்தம்
வேய் தந்த முத்து ஆகில், வெற்பா! வியப்பு; ஆல்-
இலை ஆர் புனல் பள்ளி நாராயணன்பால்,
'எந்தாய்! அரங்கா! இரங்காய்' எனப் போய்,
தலையால் இரக்கும்; பணிப் பாய் சுமக்கும்;
தன் தாதை அவர் தாமரைத் தாள் விளக்கும்
அலை ஆறு சூடும்; புராணங்கள் பாடும்;
ஆடும், பொடிப் பூசி, ஆனந்தமாயே. 61

தவம்

ஆனந்தமாய், 'அரங்கற்கே உயிர்கள் அடிமை' என்னும்
ஞானந்தனால் ஐம் பொறி வாயில் சாத்தி, நல் தாளைப் பற்றி,
ஈனம் தரும் பற்றும் அற்று, என்றும், யான் எனது என்னும் அபி-
மானம் தவிர்ந்து இருப்பார்க்கு—இது போல் இல்லை மா தவமே. 62

தவம்

மா தவங்கள் என்று ஓது அவங்களின்
மருவு சீவன் என்றொருவன் நீ! பெரும்
பூதம் அல்லை, இந்திரியம் அல்லை, ஐம்
புலனும் அல்லை, நல் புந்தி அல்லை காண்;
சீதரன், பரந்தாமன், வாமனன்,
திரு அரங்கனுக்கு, அடிமை நீ; உனக்கு
ஏதும் இல்லை என்று அறி; அறிந்த பின்,
ஈதின் மா தவம் இல்லை எங்குமே. 63

தலைவி இரங்கல்

எம் காந்தள்-அங்கை நல்லீர்! என் செய்கேன்? இரண்டு ஏந்திழையார்-
தம் காந்தன் என்று அறிந்தாலும் நில்லாது; தரைக்கும் நெய்க்கும்
அங்காந்த செம் பவளத்து எம்பிரான், அரங்கன், புயங்கள்
செங் காந்த மால் வரையோ? இரும்போ, என்தன் சிந்தனையே? 64

களி

சிந்தையில் குடிகொண்டிருந்து,
திருக்கு அறுத்து, அடிமைக்கொளும்
திரு அரங்கர் பொருப்பு உயர்ந்த
திருப் புயம் புகழ் களியரேம்,
புந்தி மிக்கது வந்து புக்கது,
போத; மாதர்கள் எழுவர் தம்
பூசையே மக பூசை என்றது,
புதுமை அன்று, இது—புத்தர்காள்!
அந்தரத்து இமையோர் அருந்தும்
மருந்தும் வெள்ளையது; அன்றியே
அரிய சாதி கொளாத மானிடர்
அகலிடத்தினில் இல்லையே;
மந்திரத்தில் நிலாத தேவதை
வானகத்தினில் இல்லையே;
வடிவு இலாதவை அண்டகோளம்
வளைந்த வைப்பு-அதில் இல்லையே. 65

'இல்லறம் எனத் துறவறம் எனச்
சொல் அறம், பிற, துணை அன்று' என,
பவக் கடலுள் துவக்கு அறுப்பான்,
காவிரி இடைப் பூ விரி பொழில்
சில மந்திகள் சினை தாவ,
பல தெங்கின் பழக் குலை உதிர,
அடர் கமுகின் மிடறு ஒடிதர,

தேமாங்கனி சிதறுபு விழ,
முடப் பலவின் குடக் கனி உக,
அரம்பைக் கனி வரம்பில் புக,
வயல் மருங்கின் மலர்ப் பொய்கையுள்
துயில் வலம்புரி துண்ணனவு உற,
தாஅள்-தாமரைத் தவிசு உறைதரு
சூஉட்டு ஓதிமம் பேஎட்டுடன் எழ;
மயிற் சேவல் மனம் களிப்ப;
குயிற் பேடைக் குலம் ஒளிப்ப;
மழை முகில் என முழவு அதிர்தரு
திரு அரங்கப் பெரு நகருள்
அரவணைமிசை அறிதுயில் அமர்ந்து,
அருள்புரி
திரு நாரணனைச் சேர்ந்தனம்—
சரணாரவிந்தம் தஞ்சம் என்று இரந்தே. 66

இரவியை, இரவின் மதியினை, மதியுள்
இறையினை, இறையும் எண் அரிய
கரவனை, கரவு இல் முனிவனை, முனிவர்
கருத்தனை, கருத்-தனைத் துடைத்து ஆள்
பரமனை, பரமபதத்தனை, பதத்துள்
பாரனை, பார நத்து ஊதும்,
அரவனை, அரவின் அரங்கனை, அரங்கத்து
அடிகளை—அடிகள் சேவியுமே. 67

தலைவி இரங்கல்

சேவிக்க வாழ்விக்கும் எம் கோன் அரங்கன் திருக் கோயில் சூழ்
காவில் கலந்து, ஆசை தந்து, ஏகினர் நெஞ்சு கல்நெஞ்சமோ?
வாவிப்புறத்து அன்னமே! இன்னம் ஏதோ வரக் கண்டிலேன்;
பாவிக்கு அநேகம் தனிக் காலம் இந்தப் பனிக்காலமே. 68

குறம்

காலம் உணர்ந்த குறத்தி நான்
கருதியது ஒன்று; அது சொல்லுவேன்;
பாலகன் உச்சியில் எண்ணெய் வார்;
பழகியதூ ஓர் கலை கொண்டு வா:
கோல மலர்க் குழல் மங்கை! நின்
கொங்கை முகக் குறி நன்று காண்;
ஞாலம் உவந்திட, நாளையே,
நண்ணுவை, நம்பெருமாளையே. 69

மேக விடு தூது

பெரு மாலை யார்க்கு உரைப்பேன், உமக்கே விண்டு பேசின் அல்லால்?
கரு மாலையாய் எழும் கார்க் குலங்காள்! தொண்டர்காற்பொடிதன்
திருமாலை கொண்ட திருமால் அரங்கர்தம் தெய்வத் துழாய்
மரு மாலை வாங்கி வம்மின், அந்தி மாலை வரும் முன்னமே. 70

முன்னம் பிறந்த பிறப்போ முடிவு இல்லை;
இன்னம் பிறப்பிக்க எண்ணுதே—தென் அரங்கம்
மேவிக் கிடந்தானே!—வீற்றிருக்கும் நின் பதத்து என்
ஆவிக்கு இடம்தான் அருள். 71

தலைவி இரங்கல்—மடக்கு

அரும் புன்னுகத் தடங் காவே!
அவா என் ஆகத்து அடங்காவே;
அம்போருகக்கண் பொரும் தேனே!
அழு நீர் உகக் கண் பொருந்தேனே;
பரம்பும் கடல் ஊர் நாவாயே!
பாவிக்கு, அடல், ஊர் நா வாயே;
பார்மீது உயர மறி அலையே!
படும் என் துயரம் அறியலையே;
கருங் கண் கயலே! மா சுறவே!
கரைவேற்கு அயலே, மாசு உறவே;
கண்டல் போது உகு வாலுகமே!
கங்குல்போது குவால் உகமே;
குரும்பை தழைக்கும் கரும் பனையே!
குயில் வந்து அழைக்கும் கரும்பனையே;
குருகீர்! நந்து அமர் அம் கரையே!
கொணரீர், நம்தம் அரங்கரையே. 72

கரை பொருது ஒழுகும், காவிரி ஆறே;
ஆற்றிடைக் கிடப்பது ஓர் ஐந் தலை அரவே;
அரவம் சுமப்பது ஓர் அஞ்சன மலையே;
அம் மலை பூத்தது ஓர் அரவிந்த வனமே;
அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே—
கடல் விளிம்பு உடுத்த கண் அகல் ஞாலம்
உடன்முழுது அளந்தது, ஒரு தாமரையே;
வகிர் இளம் பிறையான் வார் சடை தேங்கப்
பகிரதி கான்றது, ஓர் பங்கேருகமே;
யாவையும் யாரையும் படைக்க, நான்முகக்
கோவை ஈன்றது, ஓர் கோகனகமே;

திருமகட்கு இனிய திரு மனை ஆகி,
பரு மணி இமைப்பது, ஓர் பதும மலரே;
சடைத் தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப,
முடைத் தலை தவிர்த்தது, ஓர் முளரி மா மலரே;
ஆங்கு, மண்டோதரி அணிந்த மங்கல நாண்
வாங்க, வில் வாங்கிய வனசம் ஒன்றே;
விரிந்த புகழ் இலங்கை வேந்தற்கு, தென் திசை
புரிந்து, அருள் மலர்ந்தது ஓர் புண்டரீகமே;
மண் திணி ஞாலமும் வானமும் உட்பட,
அண்டம் உண்டு, உமிழ்ந்தது, ஓர் அம்போருகமே;
கடை சிவந்து அகன்று, கரு மணி விளங்கி,
இடை சில அரி பரந்து, இனியஆய், நெடியஆய்,
இன்பம் தழீஇய இரு பெருங் கமலம்
துன்பம் தழீஇய தொண்டனேனையும்
உவப்புடன் ஒரு கால் நோக்கி,
பவக் கடல் கடக்கும் பரிசு பண்ணினவே. 73

தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் கண்டு,
வண்டுகளை நோக்கி, இரங்கிக் கூறுதல்

பண் கொண்ட வேய் ஊது செவ் வாய் அரங்கேசர்
பைம் பொன்னி நாட்டு
எண் கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொல்—
இசை வண்டுகாள்?
விண் கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற
விசை போல, என்
கண் கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற
கார் காலமே! 74

கைக்கிளை

ஐயம்

காரகமோ? நம் வட திருவேங்கடக் கார் வரையோ?
நீரகமோ? நெடு வானகமோ? துயில் நீடு பணிப்
பேர் அகமோ? தென் திரு அரங்கப் பெருங் கோயில் என்னும்
ஊரகமோ?—இடம், தண் காவில் நின்ற ஒருவருக்கே. 75

ஒரு நயம் பேசுவன்;
திரு அரங்கேசர் தாள்
மருவுமின்; நாசம் ஆம்,
கரும வன் பாசமே. 76

தலைவி இரங்கல்

பாசம்ஆம் அடியர்பால் நேசம்ஆம் அடிகளும்,
பைம் பொன் ஆர் ஆடையும் செம் பொன் மா மேனியும்,
ஆசைஆம் மலர் உளாள் வாசம் ஆர் அகலமும்,
'அஞ்சல்' என்று அருள்செயும் கஞ்சமும், கருணையின்
தேசு உலா வதனமும், மாசு இலா முறுவலும்,
சிரிதாய் எழுது கத்தூரி நாமமும்—எனக்கு
ஈசனார், திரு அரங்கேசனார்—திகிரியும்,
இலகு வெண் சங்குமே, உலகம் எங்கெங்குமே. 77

தலைவன் இடம் அணித்து என்றல்

எங்கணும் நிறைந்து உறையும் எம்பிரான்,
கொங்கு அணுகி வண்டு முரல், கோயில் சூழ்
உங்கள் வரை எங்கள் வரை ஒன்றியே,
மங்கை! உன கொங்கைகளை மானுமே. 78

நாரையை நோக்கித் தலைவி இரங்கிக் கூறல்

மான் ஆர் கேசன், மேலார், மால்ஆய், வாழ் கோயில்
தேன் ஆர் காவில் பூ ஆராயும் தேனே போல்,
நானா போகத்து, இன்பம் கண்டார், நான் வாடப்
போனார், வாராது ஏதோ? ஓதாய், போதாவே! 79

மதங்கு

போத எனக்கு எளிது ஆனார்; போதவனுக்கு அரிது ஆனார்;
நாதர் அரங்கர் திருத் தாள் நாடி, அரங்கில் நடக்கின்,
ஓதும் மதங்கி நடித்தால் உள்ளம்-அது அங்கி அரக்கு ஆம்;
வேதம் அறைந்திட வல்லீர்! விரைய மறைந்துவிடீரே. 80

பாண்

விடாது பூமடந்தைமார் விரும்ப, ஆயர்மாதர் தோள்
வியந்து, முன், நயந்தவர்க்கு, விற்கும் எங்கள் கொங்கைதான்
அடாதது அன்று; பாண! இன்னம் அங்ஙன் அன்றி, இங்ஙனம்—
அரங்கர் அன்பு கூர, இன்பமாகவல்ல அல்லவே—
எடாது இருக்கின், வாய் திறக்கும் எங்கள் ஐயன் உச்சிதோய்
எண்ணெய் பட்ட மெய்யும், மெய்யில் இட்ட உத்தரீயமும்,
படாமுகம் திறந்து அசைந்து மழலை வாயின் மணம் அருப்
பசு நரம்பு புடை பரந்து பால் சுரந்த முலையுமே. 81

தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்கல்

முலை கொண்ட பால்மணம் வாய் மாறிற்றில்லை; அம் மொய் குழலோ
அலைகொண்டது; இன்னம் என் கை அணையே; அலை ஆழி வற்றச்
சிலை கொண்ட செங் கை அரங்கேசர் தாள் கொண்ட தேசம் எல்லாம்
விலை கொண்ட வாள் விழியாள் சென்றவாறு எங்ஙன், வெஞ் சுரமே?

தலைமகன் தலைமகளது இயல் கூறல்

வெஞ் சமம் கருதும் கஞ்சனும், எருதும்,
வேழமும் பரியும் வீழ, முன் பொருதார்;
தஞ்சம் என்றவருக்கு அஞ்சல் என்று அருளும்
தாயில் அன்பு உடையார்; கோயிலின் புடை ஆர்
மஞ்சும், வண்டினமும், துஞ்சு தண்டலைவாய்,
வல்லி ஒன்று; அதிலே எல்லியும் திகழும்
கஞ்சம் உண்டு; அதிலே நஞ்சம் உண்டு; அதிலே
கள்ளம் உண்டு; அது என் உள்ளம் உண்டதுவே. 83

தலைவி இரங்கல்

உண்டு உமிழ் வாசமுடன், தண்டலை மாருதம் வந்து,
உலவிய சாளரமும், குலவிய வாள்நிலவும்,
விண்டு அலர் பூஅணையும், மென் பனிநீர், புழுகும்,
மேனிலமும், முதிரா வேனிலும் ஆகியவால்!
அண்டர் தொழும் பெருமாள், அம்புய மின் பெருமாள்,
அரு மறையின் பெருமாள், அழகிய நம்பெருமாள்—
புண்டரிகம் கமழும் தண் துறை ஓதிமமே!
புன்னைகள் சிந்து அலரே!—இன்னமும் வந்திலரே! 84

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி உரைத்தல்

இன் இசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார்போல்,
பொன் நினைவால் அவர் போன இடத்தினில் போகாதோ—
மின்னிய முகில் துளி என்று என் மேல்எலாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே? 85

கால மயக்கு

'வாடைஆய், இரு பனியும்ஆய், வேனில்ஆய்,
வந்தது கார்' என்றே
பேடை மா மயிற் சாயலாய்! அன்பர்மேல்
பிழை கூருதிடல்—செம் பொன்
ஆடை நாயகன், திருமகள் நாயகன்,
அரங்க நாயகன் ஏறும்
ஓடை மா இது; மதம் இது; பிளிறிய
ஒலி இது; மழை அன்றே. 86

தழை

மழை போல், மரகதம் போல், எம்பிரான் வளர் கோயில் அன்னீர்!
பிழைபோம் இவர்க்கு இதை யார் உரைப்பார்? இவர் பின்வந்து எய்த
தழை போய் உறைத்த வருத்தம் பொருமைகொல்—சங்கரன்பால்
உழை போய் ஒதுங்க, முயல் போய் மதி புக்கு ஒளித்ததுவே? 87

கார் காலம்

ஒளிக்கும் இரு சுடர்க் கவளம் விழுங்கும் பேழ் வாய்,
உரும் முழக்கத்து, இந்திரவில் ஓடை நெற்றி,
துளிக்கும் மழை மதக் கொண்மூக் களிற்றை மின்னல்
தோட்டி மாருதப் பாகர் துரக்கும் காலம்;
அளிக் குலங்கள் இசை பாட, களித்த மஞ்ஞை
ஆடு பொழில் திரு அரங்கர் அணையாக் காலம்;
விளிக்கும் அலைக் கருங் கடலும் ஒறுக்கும் காலம்;
வினையேற்கு விழி துயிலை மேவாக் காலம். 88

இளவேனிற் காலம்

மேவலர் வாழ் தென் இலங்கை மலங்க, ஒரு
கால், இரு கால் வில் குனித்து எய்
ஏ வலர் வாழ் திரு அரங்கத்து எமை இருத்திப்
போனவர் நாட்டு இல்லை போலும்—
கோவலர் வாய்க் குழல்-ஓசைக்கு ஆநிரைகள்
செவி ஏற்கும் குறும் புன் மாலை;
பூ அலரின் மணம் பரப்பி இளவேனில்
வர, வந்த பொதியத் தென்றல்! 89

தோழி இரங்கல்

தென்றலை, குங்குமச் சேற்றை, பொருள், சிறியாள்; பெரிய
துன்று அலைக்கும் துடிக்கும் என் செய்வாள்?—துயரால் அழைத்த
வன் தலைக் குஞ்சரம் காத்தாய்! இலங்கை மலங்க வளைத்து,
அன்று அலைக்கும் சரத்தாய்! அரங்கா! அண்டர் ஆதிபனே! 90

தலைவி கூற்று

அண்டர் போற்றும் திரு அரங்கேசனார்
அணி அரங்கத் திரு முற்றம் எய்தினால்,
பண்டு போன வளை, ஆழி, வாங்குவேன்;
பாலியாது பராமுகம் பண்ணினால்,
'தண்டும் வாளும் சிலையும் இருக்கவே,
சங்கும் ஆழியும் தாரும்' என்பேன்; 'அவை
தொண்டருக்கு ஒற்றிவைத்தோம்' என்று ஓதினால்,
துளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே! 91

தொட்டு உண்ட தயிர் வெண்ணெய்க்கு, அன்று, ஆய்ச்சி உரலோடு
சூழ்ந்து கட்ட,
கட்டுண்டு, கழல விரகு அறியாமல் இருந்து, அழுத
கள்வன் யாரே?
'கட்டுண்டான் அரங்கன்' எனக் கட்டுரைப்பார் ஆனாலும்,
கங்கை சூடி
மட்டு உண்ட கொன்றையான், மலர் மேலான், அறிவு அரிய
வடிவன் அன்றே. 92

வடியாத பவக் கடலும் வடிந்து, மூல
மாயை கடந்து, அப்பால் போய், வைகுந்தம் சேர்ந்து,
அடியார்கள் குழாம் கூடி, உனது அடிக்கீழ்
அடிமைசெயும் அக் காலம் எக்காலம்தான்?—
கொடி ஆடு மணி மாட அயோத்தி மூதூர்
குடி துறந்து, திரு அரங்கம் கோயில் கொண்ட
நெடியோனே! அடியேன் நான் முயற்சி இன்றி,
நின் அருளே பார்த்திருப்பன் நீசனேனே. 93

நீசச் சமணர்க்கும், சூனிய வாதர்க்கும், நீதி அற்ற
பூசற் பவுத்தர்க்கும், சைவர்க்கும், யார்க்கும் புகலுகின்றேன்—
நாசப் படா உயிர் எல்லாம் முதல் தந்த நாதன் கண்டீர்,
ஆசு அற்ற சீர் அரங்கத்து, ஆதி மூலத்து, அரும் பொருளே. 94

அரும் புண்டரீகத்து அடி இணைக்கே நெஞ்சு
இரும்பு உண்ட நீர் ஆவது என்றோ—விரும்பி
அறம் திருந்தும் கோயில் அரங்கா! உனை நான்
மறந்திருந்தும் மேல் பிறவாமல்? 95

பிறவி எனும் கடல் அழுந்தி, பிணி பசியோடு, இந்திரியச்
சுறவம் நுங்க, கொடு வினையின் சுழல் அகப்பட்டு, உழல்வேனோ?—
அறம் உடையாய்! என் அப்பா! அரங்கா! என் ஆர் உயிருக்கு
உறவு உடையாய்!—அடியேனை உயக் கொள்வது ஒரு நாளே? 96

ஒரு பொருள் அல்லேன், இரு வினை உடையேன்,
உனது தொண்டு எனும் துறை குளித்து, உன்
பெருகு தண்ணளியின் பாசம் தொட்டு இழிந்து,
பெரியது ஓர் முத்தியான் பெற்றேன்—
திருவும், மா மணியும், சங்கமும், ஏந்தி;
செய்ய தாமரை பல பூத்து;
கரு நிறம் உடைத்தாய்; நதி பொரு தரங்கம்
கலந்தது ஓர் கருணை வாரிதியே! 97

வாரி அரங்கம் வரு திருப்பாவைக்கும், மண்மகட்கும்,
சீரியர் அம் கண் வளர் திருக் கோலமும், தென் திருக் கா-
வேரி அரங்க விமானமும், கோயிலும், மேவித் தொழார்
பூரியர்; அங்கு அவர் கண் இரண்டாவன புண் இரண்டே. 98

புண் ஆர் உடற் பிறவி போதும் எனக்கும்; உனக்கும்
எண்ணுது இருந்தது இனிப் போதும்—கண்ணு!
குழற் காளாய்! தென் அரங்கக் கோயிலாய்! —நின் பொற்
கழற்கு ஆளாய் நின்றேனைக் கா. 99

காவிரிவாய்ப் பாம்பு-அணைமேல், கரு முகில் போல்,
கண்வளரும் கருணை வள்ளல்,
பூ விரியும் துழாய் அரங்கர், பொன்-அடியே
தஞ்சம் எனப் பொருந்தி வாழ்வார்,
யாவரினும் இழி குலத்தோர் ஆனாலும்,
அவர்கண்டீர் இமையா நாட்டத்
தேவரினும், முனிவரினும், சிவன் அயன் என்று
இருவரினும், சீரியோரே. 100

திரு அரங்கக் கலம்பகம் முற்றும்

2. திரு அரங்கத்து மாலை

திரு வாழி! சங்கு, திரு ஆழி, வாழி! சிறந்த கொண்டல்
உரு வாழி! யோகத் திருத் துயில் வாழி! உலகு அளந்த
மரு ஆர் மது மலர்த் தாள் வாழி! வாழி, வணங்கும் அன்பர்
பெரு வாழ்வு அனைய பெருமாள் அரங்கப் பெருஞ் செல்வமே! 1

படுப்பவரை, பணி மெல் அணையாக; பரு வரையால்
தடுப்பவரை, பண்டு, மண்டு கல்மாரி; தரணி இடந்து
எடுப்பவரை; தம் அடியார் இடும் பச்சிலைக்கு முத்தி
கொடுப்பவரை—செம் பொற் கோயிலுள்ளே கண்டு கொண்டனனே. 2

ஆள் ஆனவர் கண் களி கூர் அரங்கத்து, அரவணைமேல்
காளாசலம் எனக் கண்டுகொண்டேன்—மறை காண ஒண்ணாத்
தாள் ஆயிரம், செம் பொன் மா முடி ஆயிரம், தாம நெடுந்
தோள் ஆயிரம், திருக் கண் ஆயிரம், கொண்ட சோதியையே. 3

பூங் காவிரிப் புனற் கோயிலுள்ளே, மிக்க போகம் எல்லாம்
யாம் காண, யோகத்துயில் கொண்டவாறு—எள்ளும் எண்ணெயும்போல்
நீங்காது, உலகத்து உயிர்க்கு உயிர் ஆகி, நியாமகன்ஆய்,
ஓங்காரம்ஆய், அதன் உட்பொருள்ஆய், நின்ற ஒண் சுடரே! 4

கறங்கு ஆழி நால்-எட்டு இலக்கம் இயோசனை; கட்செவியின்
பிறங்கு ஆகம் மும்மை இலக்கம் இயோசனை; பேர் உலகில்
இறங்கு ஆழி மேகம் எனவே, அரங்கத்தில் எந்தை அதில்
உறங்கு ஆகம் நீளம் ஐந்து ஐம்பதினாயிரம் ஓசனையே. 5

பாற்கடல் நால்-எட்டு இலக்கம் இயோசனை; பாற்கடலுள்,
மால் கவி கோயில் அகலமும் ஈர்-ஐந்து; வான் அளவும்
தீர்கம் ஓர் ஏழு; திகழ் பணி மூன்று; சிறந்த அகலம்
ஏல் கவின் ஒன்றரை; உத்தமர் நீளம் இரண்டரையே. 6

அடித் தலம் அந்த அதலம்; பொரு திரை ஆழி வையம்
கடித் தலம்; நேமிக்கிரி, உடை ஆடை—கபாலி முன்நாள்
மிடித்து அலமந்தது ஒழித்தான், அரங்கன்—விழி இரு கோள்;
முடித் தலம் அண்ட முகடு: இனி, யாம் என் மொழிவதுவே! 7

திண் சுடர் ஆழி அரங்கேசர், திக்கு, திருச் செவியில்;
மண், கழலில்; சத்யலோகம், சிரத்தில்; மருத்து, உயிரில்;
தண்கதிர், உள்ளத்தில்; வான், உந்தியில்; செந் தரணி, கண்ணில்;
ஒண் கனல், இந்திரன், வாழ் முகப் போதில்—உதித்தனரே. 8

புரம் ஆயிரம், திருக் கண்மலர் ஆயிரம், புண்டரிகக்
கரம் ஆயிரம், கழற் கால்மலர் ஆயிரம், கண்ணி முடிச்
சிரம் ஆயிரம், திரு நாமமும் ஆயிரம்—செய்ய கையில்
அரம் ஆயிரம் கொண்ட திண் திறல் ஆழி அரங்கருக்கே. 9

'முன்நாள் விசும்பும், புவியும், திசையும், முறை வகுத்த
அந் நான்முகன்தனது ஆவி எல்லாம், மலர் ஆசனை ஆம்
மின் ஆர் மழை முகில் நல் நாகம்மீதில் விழி துயில் கூர்
எம் நாதனுக்கு ஒரு மூச்சு' என்று, வேதம் இசைக்கின்றதே. 10

எண்ணில், திகிரிப் பிறப்பிடம் ஆனதும், எண்ணுமவர்
நண்ணிச் சிறக்க இருப்பிடம் ஆனதும், நாசம் இல்லா
விண்ணின் பதிக்குக் கடைத்தலை ஆனதும், விண்ணவர்தம்
கண்ணில் சிறந்ததும்—மா நீர் அரங்கர்தம் கண்ணில் ஒன்றே. 11

புறக் குன்று புல் இதழ்; முந்நீர் பிரசம்; பொரு இல் செம் பொன்
நிறக் குன்று கன்னிகை; எண் கிரி தாது; நிலம் அதனுள்
பிறக்கும் துகள்; முது மாசுணம் நாளம்; பிரமன் வண்டு—
சிறக்கும் திகிரி அரங்கேசர் உந்திச் செழு மலர்க்கே. 12

இரு கூலமும் பொரு மா நீர் அரங்கத்தில் எந்தை, அம் தண்
முருகு ஊர் கமல முனிஆய், வகுக்கும்; முறைமையினால்,
புருகூதனுக்குத் திருத் தம்பி ஆகி, புரக்கும்; உமை
ஒரு கூறு கொண்ட அரன்ஆய், அழிக்கும், உகாந்தத்திலே. 13

வாரித் தலமும், குல பூதரங்களும், வானும், உள்ளே
பாரித்து வைத்த இவ் அண்டங்கள் யாவும் படைக்க, முன்நாள்
வேரிப் பசுந் தண் துழாய் அரங்கேசர் விபூதியிலே,
மூரிப் புனலில், குமிழிகள் போல, முளைத்தனவே. 14

நெடுங் கடல் நிற்பதும்; ஞாயிறு காய்வதும்; நித்தலும் கால்
ஒடுங்கி நடப்பதும்; தண் கார் பொழிவதும்; ஊழிதனில்
சுடும் கனல் பற்றிச் சுடாதே இருப்பதும்—தும்பை புனைந்து,
அடும் கனல் ஆழி அரங்கேசர்தம் திரு ஆணையினே. 15

ஓலப் புனற் பொன்னி நல் நீர் அரங்கர், உகம் திரியும்
காலத்தினில், கொள்ளை அண்டம் எல்லாம் உண்டு, காமர் பசுங்
கோலக் குழவி உருஆய், அகண்டமும் கோத்த வெள்ளத்து
ஆலத்து இலையின்புடைக்கே துயில்வர், அகம் மகிழ்ந்தே. 16

தாற்றுக் கமுக வனம் சூழ் அரங்கர் சயன முகக்
காற்றுப் புலரும்படி முதல் வீசும்; கறைக் களத்தன்
நீற்றுச் சிவந்து எழும்; கார் ஆழித் தீச் சுடும்; நீள் கழலின்
ஆற்றுப் பெரும் பெருக்கு அண்டம் எல்லாம் கொள்ளும், அந்தத்திலே. 17

சில் நூல் பலபல வாயால் இழைத்து, சிலம்பி பின்னும்
அந் நூல் அருந்தி விடுவது போல, அரங்கர் அண்டம்
பல் நூறு கோடி படைத்து, அவை யாவும் பழம்படியே
மன் ஊழிதன்னில் விழுங்குவர், போத மனம் மகிழ்ந்தே. 18

பந்திக் கமலத் தடம் சூழ் அரங்கர் படைப்பு, அழிப்பு,
சிந்தித்திடுவதும் இல்லை கண்டீர்; அத் திசைமுகனோடு
உந்திக் கமலம் விரிந்தால், விரியும்; உகக் கடையில்
முந்திக் குவியில், உடனே குவியும்—இம் மூதண்டமே. 19

அடந்தை நடந்தை வனம் சூழ் அரங்கத்து, அரவணைமேல்
கிடந்தனர்; துங்கக் கிரிமிசை நின்றனர்; கேழல் ஒன்றுஆய்
இடந்தனர்; மீள விழுங்கினர்; கான்றனர்; ஈர் அடியால்
கடந்தனர்; கைவழி மண் ஆனது இந்த மண், காரணர்க்கே. 20

பின்னைக்கு இனிய பெருமாள் அரங்கர் பெருது பெற்ற
முன்னைப் பிரமனை வாழ்விக்க வேண்டி, முன்நாள் கவர்ந்த
அன்னத் திரு உரு உள்ளே வளர்ந்ததற்கு ஓர் அண்டம்ஆம்
என்னச் சிறந்தது, மூதண்டம்; யாம் என் இயம்புவதே? 21

சூழிக் களிறு உய்ய, வெவ் வாய் முதலை துணித்த உக்ர
பாழித் திகிரிப் படை அரங்கேசர் படைப்பவன்தன்
ஊழிப் பொழுது, ஒரு சேல்ஆய், ஒரு செலுவுள் கரந்த
ஆழிப் பெரும் புனல், காணது, தேடுவர், அவ் இடத்தே. 22

பாட்டுக்கும், முத்தமிழ் வில்லிபுத்தூர் வரும் பாவை, குழற்
சூட்டுக்கும், நல்லவர்; தென் அரங்கேசர்; தொடு கடல்வாய்
மோட்டுக் கமடத் திரு உரு ஆகி, முது முதுகில்
கோட்டுச் சயிலம் உழுவது என்னத் துயில் கொண்டனரே. 23

திரிக்கின்ற பொற்குன்று அழுந்தாமல், ஆமைத் திரு உருஆய்,
பரிக்கின்றதில் பெரும் பாரம் உண்டே?—பண்டு நான்மறை நூல்
விரிக்கின்ற உந்தி அரங்கேசர்தம் திரு மேனியின்மேல்
தரிக்கின்றது, மகரக் கடல் ஆடைத் தராதலமே. 24

ஓர் உரு வெற்பைத் தரித்தது; தானவர் உம்பர் உள்ளாய்,
ஈர் உரு நின்று கடைந்தது வேலை; இதனிடை ஓர்
பேர் உரு இன் அமுதோடே பிறந்தது; பெண்மை கொண்டு ஓர்
நார் உரு நின்றது; அரங்கா! இது என்ன நல் தவமே! 25

ஆருக்கு இவரை அளவிடல்ஆம்?—தென் அரங்கர் இந்தப்
பாருக்கு அரந்தை தவிர்ப்பதற்காக, பழிப்பு இல் பெருஞ்
சீர் உற்ற செங் கட் கரும் பன்றி ஆகி, திருக் குளம்பின்
மேரு கணகணமா, தலை நாளில், விளைதிப்பரே. 26

மரு மலர்க் கோயில் மட மான் விரும்பும் மதில் அரங்கர்
பெருமையைப் பேசுவது எப்படி நாம்—பிறை வாள் எயிற்றுக்
கரு முகிற் கோலப் பெரும் பன்றிஆய களேபரத்தின்
ஒரு மயிர்க் காலடியூடே, கடல் புக்கு ஒளித்தனவே? 27

நிறக்கும் செழுஞ் சுடர்க் கோடும், இப் பாரும், நிசாமுகத்துச்
சிறக்கும் பிறையும் களங்கமும் போலும் எனில், சிறு கண்
மறக் குஞ்சரம் செற்ற மாயோன், அரங்கன் வராகம்-அதுஆய்ப்
பிறக்கும் பிறப்பின் பெருமை எவ்வாறு, இனிப் பேசுவதே? 28

ஆடும் அரவில் துயில் அரங்கேசன் அரு மகற்கா
நீடும் தறியில் உதித்திலனேல், நிகிலப் பொருள்கள்
ஊடும், புறத்தினும், உண்மை எவ்வாறு, இவ் உலகு, அறியும்—
ஈடும் எடுப்பும் இல்லா ஒரு தெய்வம் இவன் எனவே? 29

மறந்த மறையும், மழுங்கிய மந்திரமும், மகமும்,
இறந்த தெய்வங்களும், எல்லாம் முன் எங்கு உறைந்து, எங்கு இயன்ற?
அறம் தரும் கோயில் அரங்கன் அவ் ஆள் அரிக்கு ஆளரியாய்ப்
பிறந்த பின் அன்றோ, பிறந்து பெருகிப் பிறங்கியதே! 30

அடி கண்டிலர், அதலத்தவர்; ஐம்முகனோடு, அமரர்,
கடி கண்டிலர், மலை, வான் இவர்ந்தும்; கமலத்து அயனார்
முடி கண்டிலர், அண்ட மா முகடு ஏறியும்; மூதுணர்ந்தோர்
படி கண்டிலர்—அரங்கேசர் கொள் சிங்கப் படிதனக்கே. 31

அறியின் அரங்கர், முன், ஆளரி ஆகிய அப்பொழுது,
கொறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியும் கொன்றதிலோ—
தறியின் வயிற்றின், தகுவன் நெஞ்சும், சரபத்து உடலும்
நெறியின், வகிர்ந்த பின், அன்றோ—தணிந்தது நீள் சினமே? 32

தார் ஏற்ற வெண்குடை மாவலி வார்க்கவும், தாமரைமேல்
சீர் ஏற்ற தொல் நான்முகத்தோன் விளக்கவும், செம் பொன் முடிக்
கார் ஏற்ற மேனி அரங்கேசர் கையும் கழலும் ஒக்க
நீர் ஏற்றன—வண் திருக் குறள் ஆகி நிமிர்ந்த அன்றே. 33

தே மிக்க பச்சைத் துழாய் அரங்கேசர் திருக் குறள்ஆய்த்
தாம் இப் புவனம் கடந்த அந் நாள், மணற் சாகரம் சூழ்
பூமிப் புடை அளவிட்ட பொற்றாமரைப் பூங் கழற்கு,
நேமிச் சிலம்பு திருச் சிலம்பு ஆகி, நிலைபெற்றதே. 34

பூ மரு பொங்கர் புடைசூழ் அரங்கர் பொலங் கழலால்
பா மரு மூவுலகும் கொண்ட போது, பழிப்பு இல் பெருங்
கா மரு மோலிச் சிகாமணி ஆகி, கவுத்துவம்ஆய்,
தே மரு நாபிஅம் தாமரை ஆனது—செஞ்சுடரே. 35

ஓதப் புனற் பொன்னி நல் நீர் அரங்கர் உலகு அளந்த
பாதத்து நீர் விண், படி, பிலம் மூன்றிலும்—பால் புரை வெண்
சீதத் தரங்க மந்தாகினி ஆகி, செழுங் கங்கைஆய்,
மேதக்க போகவதி ஆகி—நாளும் விழுகின்றதே. 36

ஓலப் புனல் அரங்கேசர் பொற்றுள் பட்டு உடைந்த அண்ட
மேலக் கடாகத் தொளை வழியாக விழும் புனல் போய்,
கோலத் திரு உருக் கொண்ட அந் நாள், குரம் பட்டு உடைந்த
மூலக் கடாகத் தொளையால் விழுந்தது, முன் புனற்கே. 37

மறிக்கும் கயற் கண்ணி பங்காளன் வாழ் வெள்ளி மால் வரையைப்
பறிக்கும் கபடன் பணைப் புயமோ—அவன் பைங் கடகம்
செறிக்கும் புயம் செற்ற ஆயிரம் திண் புயமோ—அவற்றைத்
தறிக்கும் திறல் மழுவோ—அரங்கா! சயத் தார் உடைத்தே? 38

மா தண்டம் மேவும் கரத்தார், அரங்கர், வட மிதிலைக்
கோதண்டம் வேகம் பிறப்பித்த போது—குவட்டு வெள்ளி
வேதண்டம் மேய மழுவாளி நாணினன்; வென்றி கண்டு
மூதண்டம் அஞ்சும் மழுவாளி கோபம் முதிர்ந்ததுவே. 39

மாகம், பிலம், திக்கு, இமையோர் உலகம், மழுவுடையோன்
நாகம், நல் நாடு அளவாக—பல் நாகம் நடுங்க, அம்பு
வேகம் கொடு தொடர—பறந்து ஒடியும், மீண்டு வந்து,
காகம், 'சரண்' என்ன, நம்பெருமாள் உயிர் காத்தனரே. 40

மாதவர், உம்பர் பெருமாள், அரங்கர், வலி உணராது;
ஆதவன் மைந்தன் அயிர்த்த அந் நாள், இலக்குஆய நெடும்
பாதவம் ஏழும் உடனே நெடுங் கணை பட்டு உருவ,
பூதலம் ஏழும், எழு பாதலங்களும், புண்பட்டவே. 41

ஒற்றைச் சரம் சுட்ட உட்கடல் போல், புறத்து, ஓலம் இட,
மற்றைக் கடல் வெந்தது எவ் வண்ணமோ?—மதமா அழைக்க
அற்றைக்கு உதவும் அரங்கர் வெங் கோபத்தை அஞ்சி, அரன்,
கற்றைச் சடையின் இடையே வெதும்பினள், கங்கையுமே. 42

கொங்கு உண்டு வண்டு அமர் தண் தார் அரங்கர் வெங் கோபமுடன்
பொங்கும் சரம் செய்த மாயம் என்னே—தன் புகழ் அடைய
மங்கும்படிக்கு மறம் செய் இராவணன் வாகினி கண்டு,
'எங்கும் குரங்கு! எங்கும் ராமன்!' என்று ஏங்கி இரிந்திடவே? 43

பேர் ஒத்த ஆயிரம் பேர் மடிந்தால், பிறங்கும் கவந்தம்
நேர் ஒத்த ஆடும்; அது ஆயிரம் ஆடின், நெடுஞ் சிலையின்
ஏர் ஒத்த கிண்கிணி சற்று ஒலிடும், அது ஓர் யாமம் நின்று
கார் ஒத்த மேனி அரங்கர்தம் போரில் கறங்கியதே. 44

சற்பத்து உறங்கும் அரங்கா! உன் பாதம்தனை அடைந்த
நல் பத்தருக்கு ஒரு நாசம் உண்டோ—நல மா மருத்தின்
வெற்பைக் கொணர்ந்த விறல் அனுமானும், அவ் வீடணனும்,
கற்பத்து அளவும் அழியாது இருக்கவும் கற்பித்தையே? 45

ஆவும், பயமும், அமுதும், ஒப்பு ஆன அரங்கருக்கு
மேவும் புகழ் இன்னும் மேவும்கொலோ—அவர் மெய் அருளால்
தாவும் தரங்கத் தடம் சூழ் அயோத்திச் சராசரங்கள்
யாவும் கிளையுடன் வைகுந்த லோகத்தில் ஆர்ந்திட்டவே? 46

ஒரு தாய் இருந்து வருந்த, வைதேகியுடன் சுரத்தில்
ஒரு தாய்சொலச் சென்றதென் அரங்கா! வையம் உய்யும் வண்ணம்
ஒரு தாய் உதரத்தில் ஓர் அறு திங்கள் உறைந்த பின்னை,
ஒரு தாய் வயிற்றில் வந்து உற்றது எம் மாயம்? உரைத்தருளே. 47

கதி பட்ட பொன்னி அரங்கேசர் ஆடு கருந் திரை நீர்
நதி பட்ட பாடு நவின்றிடல் ஆகும்? நலம் கெழு கூர்
நுதி பட்ட நெட்டலத்தாலே இழித்திட, நூற்றுவர்தம்
பதி பட்ட கண் கலக்கம் தெரியாது, பகருதற்கே. 48

பண்டு விழுங்கிய பாரும், திசையும், பனிக் கடலும்,
சண்ட நெடுங் கிரித் தானம், எல்லாம்—சண்பகாடவிமேல்
மண்டு பெரும் புனல் சூழ் அரங்கேசர்தம் வாய்மலருள்
கண்டு, மருவினள் சீர், நந்தகோபர்தம் காதலியே. 49

உன்னைக் களவில் உரலோடு கட்டிவைத்து, உன்னுடைய
அன்னைக்கு ஒருத்தி அறிவித்த போது, அலை ஆழி மங்கை-
தன்னைப் புணர்ந்தருள் தார் அரங்கா! அவள்தன் மருங்கில்
பின்னைக் கொடு சென்ற பிள்ளை மற்று ஆர் என்று பேசுகவே? 50

கடிக்கும் கரளப் பிறை வாள் எயிற்று வெங் காளியன்மேல்
நடிக்கும் பெரிய பெருமாள், அரங்கர், நறை கமழ் பால்
குடிக்கும் களவுக்கு மாறுகொண்டே, ஒரு கோபி பற்றி,
அடிக்கும் பொழுதில், பதினல் உலகும் அடிபட்டவே! 51

ஆரம் தரும் பொன்னி சூழ் அரங்கா! உன்தன் ஆய்ச்சி வெகு
தூர நெடுங் கயிறு எல்லாம் மிசை சேர்த்துவைத்தும், அவை
ஈர மருங்கின் குறைந்திட, கண் பிசைந்து ஏங்கும் அவள்
வேர் அம்புய முகம் கண்டு, அளவு ஆன விநோதம் என்னே! 52

சிந்திக்க நெஞ்சு இல்லை; நா இல்லை, நாமங்கள் செப்ப; நின்னை
வந்திக்கமெய் இல்லை, வந்து இரு போதும்; மொய்ம் மா மலர்ப் பூம்
பந்தித் தடம் புடைசூழ் அரங்கா! ததிபாண்டன் உன்னைச்
சந்தித்த நாள், முத்தி பெற்றது என்னோ, தயிர்த் தாழியுமே? 53

குன்று விளைவுடன், வண்மை, பருவம், குணங்கள்: இவை
பொன்றாது இருந்த கண்மாயம் என்னே—பொன்னி சூழ் அரங்கா!
அன்று ஆயர்தம் குல மைந்தர்களாயும், அலகு இல் இளங்
கன்றாயும், நாள்தொறும், சென்று, வந்து, ஆடிய காலத்திலே? 54

நெடுங் கான் நிலத்து, உடன் கோவலர்தாம் மிக நின்று, 'நெஞ்சம்
நடுங்காது, இமைத்திடும் கண்கள் எல்லாம்' என்று—நண்ணலர்மேல்
விடும் கால நேமி அம் கை அரங்கா! —கண் விழிக்கும் முன்னே
சுடும் கான நல் அனல் துற்ற அம் மாயம் என் சொல்லுகவே? 55

வானாடரில் சிலர் சென்று கண்டாரில்லை; மற்று அதனில்
போனாரில் மீளப் புவியில் வந்தாரில்லை—பூவின் மங்கை
ஆனாத செல்வத் திரு அரங்கா! —கொச்சை ஆயர் எல்லாம்
மேனாள் பரமபதத்தினில் போய் எங்ஙன் மீண்டதுவே? 56

கூன் நந்து உலா வயற் கோயிலுள்ளே பள்ளிகொள்ளும் எங்கள்
ஆனந்தவாரி திருக் குழல் ஊத—அறத் தடிந்த
கானம் தழைத்தன; கால் வரை நெக்கன; கார் முகில் தோய்
வானம் அயர்த்தன; வையம் எல்லாம் மெய்ம்மறந்தனவே. 57

ஊரும் திரைப் பொன்னி நல் நீர் அரங்க! உருப் பலஆய்,
காரும் தடித்தும் கலந்தது போல், இடைக் கன்னியர்கள்
யாரும் களிக்க, இடைஇடையே கலந்து, இன்ப நலம்
கூரும் திரு நடம் ஆடிய மாயம் என் கூறுகவே? 58

மின் போல் இடை இடைமாதர் எல்லாம் உன்தன் மெய் தழுவி,
நன் போக சாகரத்துள்ளே முழுகவும்—நாள்மலராள்-
தன் போகமே மகிழ் தார் அரங்கா!—அண்டர்தாம் அவரை
அன்போடு அணைத்துத் துயின்றது எம் மாயம்? அறிந்திலமே. 59

நீரில் புகும்; கண்டு, தேரினைப் பார்க்கும்; நிறுத்திய பொன்-
தேரில் தொழும்; பின்னை, நீரினில் காணும்—சிறந்த பச்சைக்
காரின் திற மெய் அரங்கனும், சேடனும், கஞ்ச வஞ்சன்
ஊரில் செல, உடன் போம் அக்குரூரன்—தன் உள் மகிழ்ந்தே. 60

நாமம் மிகு புகழ் யாதவர் வாழும் நகரில், உம்பர்-
தாம் மருவும் சவை தத்தமஆய—தளை அவிழும்
தே மரு பொங்கர் அரங்கேசர், 'உக்கிரசேனனுக்கு
மா முடி வைக்கும்படி, படிமேல் கொடு வா' எனவே. 61

மறியா எழும் திரை மா நீர் மதுரையில் மன்னவரைக்
குறியாதவன் படை வந்த அந்நாள், செழுங் கோகனகப்
பொறி ஆடு அரவணைத் தென் அரங்கா! ஒரு பூதரும் அங்கு
அறியாவகைத் துவராபதிக்கே எங்ஙன் ஆக்கினையே? 62

நறைத் துளவம் புனை நம்பெருமாள் விறல் நாம் சொல்வதோ?
மறைப் பரி பூட்டிய மா நிலத் தேர் இல்லை; வாள் எயிற்றின்
கறைப் பணி நாண்உடை மேருவில் இல்லை; கடும் பவனச்
சிறைத் தழல் அம்பு இல்லை—ஒன்னார் அறு புரம் செற்றதற்கே. 63

அருட் கொண்டல் அன்ன அரங்கர் சங்கு ஓசையில் அண்டம் எல்லாம்
வெருள்கொண்டு, இடர்பட, மோகித்து வீழ்ந்தனர்—வேகமுடன்
தருக் கொண்டு போகப் பொறாதே தொடரும் சதமகனும்,
செருக் கொண்ட முப்பத்து முக் கோடி தேவரும், சேனையுமே. 64

நிணக் கோல நேமித் திரு அரங்கேச! நினக்கு இனிய
குணக் கோகனகையும் கண்டனளோ—மணிக் குன்றில் வைகும்
கணக் கோதையர் பதினாறுயிரவரைக் கைப்பிடிக்க
மணக்கோலமும் பதினாறுயிரம் கொண்டு வாழ்ந்த அன்றே? 65

விடம் தோய் அரவில் துயில் அரங்கேச!—விசும்பு முட்ட
நடந்து, ஓகைதன்னுடன், நாரதன் காண—நகைக்கும் முத்து-
வடம் தோய் வன முலை எண்-இரண்டாயிரம் மாதர் தங்கள்
இடம்தோறும் நின்று, எழில் வேறாய் இருந்தது, அங்கு, எவ் வண்ணமே? 66

பாவிக்க ஒண்ணாத பெருமாள் விநோதம் பகருமதோ?—
வாவிக்குள் நாரதன் நாரதிஆய், ஒரு மன்னவன்தன்
ஆவிக் குலக்கொடிஆய், நெடுங் காலத்து அழிவு இல் இன்பம்
மேவி, குடும்பத்து இடும்பை எல்லாம் எய்திவிட்டனனே! 67

தண் துளவம் புனை தார் அரங்கா! ஐவர் தையலுக்கு;
வண் துகில் ஒன்று, அவைக்கண் உற்றபோது—தன் மன்னர் முன்னே
கண் துளி சோரத் தொழுது, நின் பேர் கட்டுரைத்த பின்னை
ஒண் துகில் கோடி குவிந்தது எம் மாயம், உரிந்து உரிந்தே? 68

இசை அளவிட்ட அரங்கேசர் ஐவர்தம் ஏவலின் போய்,
வசை அளவிட்ட மகிபன் முன்னே—வளரும் திரள் தோள்
திசை அளவிட்டன; பார் அளவிட்டன, சேவடி; வான்-
மிசை அளவிட்டன, பொன்முடி; மேல் என் விளம்புவதே? 69

மா இரு ஞாயிறு பாரதப் போரில் மறைய, அங்ஙன்,
பாய் இருள் நீ தந்தது என்ன கண்மாயம்—பவள நெற்றிச்
சேய் உயர் மா மதில் சூழ் அரங்கேச! திரண்டு உதித்த
ஆயிர கோடி திவாகரன்போல் ஒளிர் ஆழிகொண்டே? 70

நெட்டரவின் பெரு மூச்சு எழ, வீசு நெருப்பில் வெந்து,
பட்ட கடம்பும் தழைத்தது, மீள; பசுந் துளவின்
மட்டு அவிழ் தொங்கல் அரங்கர் பொற்றாள் பட, வாளி வெந்திச்
சுட்ட கருங் கட்டையும் பெற்றது, ஆர் உயிர்; சொல்வது என்னே? 71

தாளால் சகம் கொண்ட தார் அரங்கா! பண்டு சாந்திபன் சொல்
கேளா, கடல் புக்க சேயினை மீட்டதும், கேதமுடன்
மாளாப் பதம் புக்க மைந்தரை மீட்டதும், மாறு அலவே—
மீளாப் பதம் புக்க பாலரை நீ, அன்று, மீட்டதற்கே. 72

பொரும் கேதனப் படை மன்னரை மாய்த்து, புவிமடந்தை
பெருங் கேதம் நீக்கி, நடந்தது, மீள—பிறங்கு புள்ளின்
வரும் கேசவன், சக்ர மாயோன், அரங்கன், வரவிடுத்த
கருங் கேசம் ஒன்று தன் இச்சையிலே செய்த காரியமே. 73

அராவணையில் துயில் தென் அரங்கா! மறை ஆயும் வண்ணம்
பராசரன் மா மகன் ஆகிய நீ பண்டு பாரதப் போர்
பொரா விழும் நூற்றுவர் சேனை எல்லாம் புனற் கங்கை வெள்ளத்
தராதலமேல் வரக் காட்டியவா—தந்தை சந்திக்கவே! 74

தருமம் தவிர்ந்து, பொறை கெட்டு, சத்தியம் சாய்ந்து, தயை
தெருமந்து, தன் பூசனை முழுதும் சிதைய, கலியே
பொரும் அந்தக் காலக் கடையினில், எம் பொன்-அரங்கன் அல்லால்,
அருமந்த கற்கி என்று ஆரே, அவை நிலை ஆக்குவரே? 75

தெள்ளும் புனற் பொன்னி நல் நீர் அரங்கர் சிலாகிக்குமாறு,
எள்ளும் கரந்து உறை எண்ணெயும் போல், எண் இல் கோடி அண்டத்து
உள்ளும் புறம்பும் ஒழியாது நின்றும், உகங்கள்தொறும்
கொள்ளும் திரு உரு எல்லாம்—அவர் அறி கோலங்களே. 76

உம்பர்க்கு அரிய பெருமாள் அரங்கர்தம் உண்மை எல்லாம்
இம்பர்க்கு உலகில் வெளியிட்டவே—'சரண் இல்லை' என்று, ஓர்
கும்பக் கட கயம் கூப்பிடச் சென்றதும், கோளரியாய்த்
தம்பத்து உதித்ததும், தாழிக்கு வீட்டினைத் தந்ததுமே. 77

பொங்கு அரவு என்பது மெல் அணை; ஊர்தி வெம் புள்-அரசு;
பங்கய மின்னொடு, பார்மகள், தேவி; படைப்பவன் சேய்;
கிங்கரர், விண்ணவர்; சாதகநாடு இறை—கேழல் ஒன்றுஆய்,
அம் கண் நெடும் புவி எல்லாம் இடந்த அரங்கருக்கே. 78

சிங்காதனம், பொற்கிரி; திருமஞ்சனம், தெய்வ விண்-நீர்;
கொங்கு ஆர் தொடை, உடுத் தாமம்; சுடர்உடைக் கோள், விளக்கம்;
பொங்கு ஆழி மண், திருப் போனகம்; ஆக்கினர்—புண்டரிகை-
தம் காதலர், நம்பெருமாள், அரங்கர், தமக்கு, முன்னே. 79

தே மா மலர்க் கயம் சூழ் கோயில் மேவும் திரு அரங்கர்
தாம் ஆதரித்த திருத் தேவிமாரில்—தரங்க உடைப்
பூமாது நாளும் புரத்தே சுமந்து புரக்கும்; மலர்
மா மாது செல்வம் கொடுத்தே உயிர்களை வாழ்விக்குமே. 80

நம்பெருமாள் எழுத்து எட்டின் பெருமை நவிலுமதோ—
சம்பரன் மாயம், புரோகிதர் சூழ்வினை, தார் அணி வாள்
வெம் படை, மாசுணம், மா மத வேழம், விடம், தழல், கால்,
அம்பரமே முதலானவை பாலனுக்கு அஞ்சினவே! 81

அத்தா! அரங்கத்து அமர்ந்தவனே! எழுத்து ஆறு-இரண்டின்
வித்துஆய நின் அருள்கொண்டு அல்லவோ—விளைவு ஒன்று அறியா
உத்தானபாதன் மகன் சலியாது, உலகு உள்ளளவும்,
எத்தாரகைக்கும் முனிவர்க்கும் மேல் சென்று, இருக்கின்றதே? 82

புடைக்கும் குடமுலைப் பூமகளார்தம் பொருட்டு முந்நீர்
அடைக்கும் பெரிய பெருமாள், அரங்கர், அவர் கரத்துப்
படைக்கும் கமலம் அளிக்கும்; மின் ஆழிப் படை படைக்கும்;
துடைக்கும், கதை; முத்தி மாற்றுது நல்கும், சுரி சங்கமே. 83

ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி, நடாத்தும் இந்தக்
காலத் திகிரி, முதலான யாவும்—கடல் கடைந்த
நீலத் திகிரி அனையார் அரங்கர் நிறைந்த செங்கைக்
கோலத் திகிரி தலைநாளினில் கொண்ட கோலங்களே. 84

மோதித் திரை தவழ் நல் நீர் அரங்கர், முடி முதலாம்
சாதிக் கதிர் மணிப் பேர் அணி ஆகி, தனஞ்சயன் போர்
பேதித்து, இரவு, பகல், ஆக; விண்ணில் பிறழ்ந்து—செங் கேழ்ச்
சோதித் திகிரி—திரு மேனி எங்கும் சுடர்விடுமே. 85

ஒல் ஆழி சூழ் புவி உச்சியில் ஏந்தும்; உகக் கடையில்
கால் ஆன நற்குண மூர்த்தியைக் காலும்; அக் காலம் எல்லாம்
மேலா விளங்கும், புவிமீதில்—என்தன் விழுத் துணைஆம்,
மால்ஆம், அரங்க மணவாளர் கண்துயில் மாசுணமே. 86

சென்றால் குடை ஆம்; கடற்புணை ஆம்; திருத் தீவிகை ஆம்;
நின்றால், இரு திருப் பாதுகை ஆம்; நித்திரைக்கு அணை ஆம்;
குன்றா மணி ஒளி ஆசனம் ஆம்; புனை கோசிகை ஆம்—
அன்று ஆலிலையில் துயில் அரங்கேசர்க்கு, அரவு-அரசே. 87

சிரம், சேதனன், விழி, தேகம், சிறை, பின் சினை, பதம், கந்-
தரம், தோள்கள், ஊரு, வடிவம், பெயர், எசுர் சாமமும் ஆம்—
பரந்தே தமது அடியார்க்கு உள்ள பாவங்கள் பாற்றி, அருள்
சுரந்தே அளிக்கும் அரங்கர்தம் ஊர்திச் சுவணனுக்கே. 88

ஆளில் அமரர், அரங்கேசர் சேவைக்கு அணுகும்தொறும்
கோளின் திரளை விலக்கும் பிரம்பின் கொனை படலால்,
தோளில் அடித் தழும்பு உண்டு அச் சுரர்க்கு; அச் சுரர் தொழலால்,
தாளில் முடித் தழும்பு உண்டு, நம் சேனைத் தலைவருக்கே. 89

ஆதித் திரு எழுத்து ஐந்து உடைத்தாயும், அரா அணிந்தும்,
சோதித் திருக் கண்கள் மூன்றுடன் தோன்றும்—சுருதி சொன்ன
நீதிக்கு இசைய நடவா மனிதரை நேமிகொண்டு
வாதித்தருளும் பெருமாள் அரங்கர்தம் வாகனமே. 90

வல்ஆம் மூலைத் திருவின் பெருமான் விட்ட வாகனம் போய்—
தொல் ஆழி நீரைக் கடந்தது, தாளின்; சுடர் இரண்டும்
செல்லாத ஊரைத் திரிபுரம் கண்டது; சேனை வெள்ளம்
எல்லாம் உயக்கொண்டது, மருந்து ஆர் கிரி ஏந்தி வந்தே. 91

தொல்லைக் கமடத் தலம், நவ கண்டம், தொடு கடல் நீர்,
எல்லைக்கிரி, தனக்கு இப் புறத்து எண் கிரி, அப் புறத்தின்
மல்லைப் பரிதியின் மண்டலம், நாகம், அவ் வான் முகட்டு ஊர்;
அல், அப்புறத்து வைகுந்தம்—பொற்கோயில் அரிக்கு இடமே. 92

எந்த உலகத்தும் மேலது; நித்திய இன்பத்தது;
பந்தம் நசிப்பது; நித்தரும் முத்தரும் பாரிப்பது;
முந்தை மறையின் நின்று அல்லாது, எத் தேவர்க்கும் முன்ன அரிது;
அந்தம் இலது—அரங்கன் மேவு வைகுந்தமானதுவே. 93

காவும், சுரபியும், சிந்தாமணியும், கடிக் கமலப்
பூவும், பணிலமும், பொங்கு இள மாவும், புகர்த் தடக் கைம்-
மாவும், பிறையும், அமுதமும், எங்ஙன்—மதில் அரங்கர்
மேவும் தரங்கக் கடல் இல்லையாகில், இவ் விண்ணவர்க்கே? 94

அரு மறை ஓதிய ஓர் எட்டெழுத்தும்—அயன் படைத்த
இரு நிலமீதினில் யாவரும் காண, இலங்கு துத்திக்
குரு மணி நாகத்தில் எம் கோன் விழி துயில் கொண்டருள—
திரு மதில் ஏழும், விமானமும், ஆகிச் சிறக்கின்றவே. 95

தாழாது, இபம் சொல்ல, வந்தார் அரங்கர் தயங்கு செம் பொற்
கேழா விமானம் கிளர் செம் பொன் மேருகிரி—நிகர்த்த—
ஏழ் ஆவரணத்து இடை இடைத்தீவுகள்; இவ் அனைத்தும்
சூழ் ஆறு மா கடல்: எவ்வாறு நாம் இனிச் சொல்லுவதே? 96

ஞாலத் திகிரி பகல் இரவு ஆக நடத்தும் இந்தக்
காலத் திகிரி நடக்கவற்றோ—வெங் கனல் உமிழ் வாய்
ஆலப் பணி-அணை மீதே, அரங்கத்து அமர்ந்து, உறையும்
நீலக்கடல் கண் விழித்து உறங்காவிடின், நிச்சமுமே. 97

தாம் அக் கடையுகத்துள்ளே விழுங்கி, தரித்த பழஞ்-
சேமப் புவனம் செரிக்கும் என்றே—சிவன் மா முடிக்கு
நாமப் புனல் தந்த பொற்றாள் அரங்கர் நலம் சிறந்த
வாமத் திருக் கரம் மேலாகவே கண்வளர்வதுவே. 98

கதிர் ஆரும் நீள் முடி சேர்ந்த கைப்போது, 'எக் கடவுளர்க்கும்
அதிராசன் ஆனமை காண்மின்' என்றே சொல்லும்; ஆய பொன் மா
மதில் ஆர் அரங்கர் பொற்றாள் ஆர் திருக் கரம், 'மற்று இதுவே
சதுரானன் முதல் எல்லா உயிர்க்கும் சரண்' என்னுமே. 99

மோகத் துயில் புரி மெய் போலக் கண்ட முறையினுக்கு, இங்கு
ஏகத் திரு உரு என்று அறிந்தேன்—இந்திரையை அன்போடு
ஆகத்து வைத்தருள் தென் அரங்கா! அங்கும் இங்கும் ஒக்கப்
போகத்துக் கொண்ட பண நாகம் ஒன்று பொறுத்த பின்னே. 100

சோதித் திரு உரு ஆகாயம் ஆக, சுருதி நன்னூல்
சாதித்து நின்று, தெளிந்துவிட்டேன்—மிக்க தானவரைச்
சேதித்த நேமித் திரு அரங்கா! சங்கை தீர, உன்தன்
ஆதித் திரு உருவின் பேர் அணி நிறம் ஆன பின்னே. 101

ஓங்கார வட்டத்து, மாசுணப் பாயில் உலோகம் உண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்டதால்—எப்பொழுதும், என்னை
நீங்காது, இடர் செய்யும் தீவினைகாள்!—இனி நின்றுநின்று
தேங்காது, நீர் உமக்கு ஆன இடத்தே சென்று சேர்மின்களே. 102

விண் இட்ட சோலை அரங்கத்து மேவிய மெய்ப்பொருளை,
கண் இட்ட பார்வையின் கட்டி, என்கண் வரக்கண்டு, உடல்ஆம்
புண் இட்ட வண்ணக் கிழியுள் பொதிந்து, புறத்து வெள்ளை
மண் இட்டு, இலச்சினை இட்டு, விள்ளாது உள்ளம் வைத்தனனே. 103

கைத்து, பழவினை; தித்திக்க, என்தன் கருத்தினுள்ளே;
பைத் துத்தி மெத்தையின்மீதே துயிலும்—பைங் கேழ் எறிந்து,
மைத்து, குளிர்ந்து, மதுரித்து, மெத்தென்று, மா மணத்து,
நெய்த்து, புகர்த்து, நிகர்க்கும் பொன்மேனி நெடுங்கடலே. 104

தெள்ளா வரும் பொன்னி சூழ் அரங்கா! ஒரு தேவரையும்
உள்ளாது, எனது உள்ளம்; யான் என் செய்வேன்?—விண்ணில் ஓர் உவணப்
புள் ஆகி, வேதப் பொருள் ஆகி, உன்னைத் தன் பொற்கழுத்தில்
கொள்ளா வருகின்ற கோலம் உள்ளே கண்டுகொண்ட பின்னே. 105

முன்பு, ஆலிலை மகவு ஆகிய போது, இந்த மூதண்டங்கள்
உன்பால் ஒடுங்கி இருந்ததுபோலும்—உததி மங்கைக்கு
அன்பா! அரங்கத்து என் ஆர் அமுதே! அணு ஆய் இருந்தும்
என்பால் அகண்டமும் ஆகிய நீ வந்து இருக்கின்றதே! 106

வலைப்பால் விடம் பிணைக் கண்ணியர் போகத்தில் மாலுறும் என்
தலைப்பால் கழல் அருள்—தார் அரங்கா! பல தாயர் தந்த
முலைப் பாற்கடல், உன் திருக் கழல் ஆணி வெண் முத்து எறியும்
அலைப் பாற்கடலின் அளவு ஆம் எனின், மற்று அதுவும் அன்றே. 107

தொடை மாறனும், தமிழ் சொல் மாறனும், தொழ, துத்தி வெள்ளைக்
குடை மாசுணத்தில் துயில் அரங்கேச! குலவு வை வேல்-
படை மாறு கொண்ட மைக் கண்ணியர்பால் வைத்த பாச நெஞ்சை
மடைமாறி, உன் தன் திருவடிக்கே வர, வைத்தருளே. 108

கரணம் தவிர்ந்து, விழி போய்ச் சுழன்று, கலங்கும் என் தன்
மரணம்தனில் வந்து உதவுகண்டாய்—கொற்ற வாளி ஒன்றால்
அரணம் கடந்தவன் காண் அரங்க! என் ஆர் உயிர்க்கு உன்
சரணம், சரணம்; ஒழிந்து இல்லை வேறு, இத் தராதலத்தே. 109

நீடும் திகிரிப் படையாய்! உனைக் கற்று, நின்னை என்றும்
பாடும்படித் தமிழ்ப் பாடல் தந்தாய்; பழ நான்மறை நூல்
தேடும் திரு அரங்கா! அடியேன் உயிர் செல்லும் அந்நாள்,
வீடும் தர இருந்தாய்; எனக்கு ஏது இனி வேண்டுவதே? 110

'ஆவைக் கல்-ஆவை எதிர்' என்று சொல்லி, அழுக்கு அடைந்த
நாவைப் பரிசுத்தம் பண்ணியவே—கஞ்ச நஞ்சன் விட்ட
கோவை, சகட்டை, பகட்டை, பொருதிய கோயிலில் வாழ்
தேவைப் பகர்ந்த செஞ்சொல்-திருநாமங்கள் சிற்சிலவே. 111

திரு அரங்கத்து மாலை முற்றும்

3. திருவரங்கத்தந்தாதி

[திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே. 1

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே. 2

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தண் ணனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி தந்தருளே. 3

தந்தம லைக்குமுன் னின்ற பிரானெதிர் தாக்கிவெம்போர்
தந்தம லைக்குமைத் தானரங் கேசன்றண் பூவினிடைத்
தந்தம லைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென்றுய்யார்
தந்தம லைக்கும் வினையினை வார்பலர் தாரணிக்கே. 4

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் றமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே. 5

தருக்காவ லாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே. 6

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பநிற் பீர்புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே. 7

தலையிலங் காபுரஞ் செற்று னரங்கனென் றூழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்தபி ரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே. 8

3. திரு அரங்கத்து அந்தாதி

திரு அரங்கா உறை மார்பா! திசைமுகன் சேவிப்ப, கந்-
திருவர் அங்கு ஆதரித்து இன் இசை பாட, திருக் கண்வளர்
திரு அரங்கா!—உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்-
திரு—வரம் காதலித்தேன், உனக்கே தொண்டு செய்வதற்கே. 1

செய்யவளேக் குருவின் அருளால் திருத் தாள் வணங்கி,
செய்ய வளேக் குலம் சூழ் அரங்கேசன்; சிறிது, அமுது
செய்ய அளேக்கும் புவிக்கும், அங்காந்த செவ் வாய் முகுந்தன்;
செய்ய வளேக்கும் சிலம்பு அணி பாதங்கள் சேர்ந்தனமே. 2

தன மாதர், அம் சொற் குதலேப் புதல்வர், தரணி, இல்லம்,
தனம், ஆதரம் செயும் வாழ்வு அஞ்சியே, தஞ்சம் நீ எனப் போந்-
தனம்: ஆ தரங்கிக்க வெற்பு எடுத்தாய், தண் அனந்த சிங்கா-
தன, மா தரங்கம் உள்ளாய், அரங்கா! முத்தி தந்தருளே. 3

தந்தமலேக்கு முன் நின்ற பிரான், எதிர் தாக்கி வெம் போர்
தந்த மலேக் குமைத்தான், அரங்கேசன், தண் பூவின் இடைத்
தந்து அமலேக்குத் தலேவன், பொற்பாதம் சரண் என்று உய்யார்,
தம்தம் அலேக்கும் விஜனயின் நைவார், பலர், தாரணிக்கே. 4

தாரணி தானவன்பால் இரந்தான், சங்கம் வாய்வைத்து ஒன்னர்
தார் அணிதான் அவம் செய்தான், அரங்கன் தமர்கள் பொருந்-
தார்—அணிது ஆன அமராவதியும், தரு நிழலும்,
தார் அணி தான அயிராவதமும், தருகினுமே. 5

'தருக் காவலா' என்று புல்லரைப் பாடி, தன விலேமா-
தருக்கு ஆவலாய், 'மயிலே, குயிலே' என்று தாமதர்ஆய்,
தருக்கா அலாநெறிக்கே திரிவீர்! கவி சாற்றுமின்—பத்-
தருக்கா அலாயுதன் பின் தோன்று அரங்கர் பொற்ருள் இணேக்கே. 6

தாளத் தனத் தத்தைச் சொல்லியரால் வரும் தாழ் மல பா-
தாளத்து அனத்தத்தைத் தப்ப நிற்பீர்! புடை தங்கிய வே-
தாளத்தன் அத் தத்தைத் தீர்த்தான், அரங்கன், சகடு உதைத்த
தாள் அத்தன், அத்தத்து ஐயாயுதன், பாதம் தலேக் கொண்மினே. 7

தலே இலங்காபுரம் செற்ருன், அரங்கன், என் தாழ் சொல் புன் கு-
தலேயில் அங்கு ஆதரம் செய்த பிரான் சரண் அன்றி, மற்று ஓர்
தலே, இலங்கா நின்ற கண் இலம், காண்கைக்கு; தாழுகைக்குத்
தலே இலம்; காது இலம், கேட்கைக்கு; வாய் இலம், சாற்றுகைக்கே. 8

கைக்குஞ் சரமன் றளித்தா யரங்கமண் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சரம சரம்படைத் தாய்கட னீறெழத்து
கைக்குஞ் சரமக ரக்குழை யாயெனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே. 9

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தானெத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தா யரங்கத்து மாதவனே. 10

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பான்
மாதங்கத் தானைவைத் தானைவைத் தேனென் மதியகத்தே. 11

மதிக்கவ லைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்கவ லைப்புண் டணிகின்றி லேன்மண்ணும் வானகமு
மதிக்கவ லைப்புனல் சூழரங் காநின் மனத்தருடா
மதிக்கவ லைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே. 12

வருந்துவ ரைப்பட்ட மங்கைய ரெண்மர் மனங்களைக்க
வருந்துவ ரைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்துவ ரைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோர்
வருந்துவ ரைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால்வலைக்கே. 13

மாலைக்கல் லார மடவார்புண் ணுக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குநை யாநிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தாளில் வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென் னேசில மானிடரே. 14

மானிட ராக லரிதரி தேமண் டலத்துநெறி
மானிட ராக மிலாதவ ராதன் மலரயனுர்
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே. 15

அரிதா மரைக்கணந் தோலுடுத் தாரய னுர்க்கரியான்
அரிதா மரைக்கணம் மான்றிருப் பாத மடைமின்சன்மம்
அரிதா மரைக்கணந் தங்கா துயிரவ னூர்வினவில்
அரிதா மரைக்கண மீர்த்தோடும் பொன்னி யரங்கமன்றே. 16

அரங்காது வார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்காது வார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்கா துவார மிலாமணி யேயணி யார்மதில்சூழ்
அரங்கா துவாரகை யாயடி யேனுன் னடைக்கலமே. 17

கைக் குஞ்சரம் அன்று அளித்தாய், அரங்க, மண் காக்கைக்கும் மாய்க்-
கைக்கும் சரம் அசரம் படைத்தாய், கடல் நீறு எழத் து-
கைக்கும் சர, மகரக் குழையாய்! எனைக் கைக்கொள்—உடல்
கைக்கும் சரமதசையில், 'அஞ்சேல்' என்று என் கண்முன் வந்தே. 9

வந்தனை ஏற்றனை; என் புன் சொல் கொண்டனை; வன் மனத்தே
வந்தனை ஏற்று, அனை யாவையுழ் ஆயினை; வான் தர உ-
வந்தனையேல், தனைத் தான் ஒத்த தாளில் வைப்பாய்—பலித்து-
வம்தனை ஏற்றனைத் தீர்த்தாய்! அரங்கத்து மாதவனே! 10

மா தங்கத் தானை அரங்கனை; வஞ்சன் இலங்கையிலே
மா தங்க, தான் ஐ-இரு திங்கள் தாழ்த்து, பின் வாம் பரி, தேர்,
மாதங்கம், தானை, வலத்தானை முன் வதைத்தானை; தன்பால்
மாது அங்கத்தானை வைத்தானை—வைத்தேன் என் மதியகத்தே. 11

மதிக்க அலைப்புண்ட வெண் தயிர் போல மறுகுறும் என்
மதிக் கவலைப்புண் தணிகின்றிலேன்—மண்ணும் வானகமும்
மதிக்க, அலைப் புனல் சூழ் அரங்கா! 'நின் மனத்து அருள் தா-
மதிக்க, வலைப் புன் பிறப்பு இனிமேலும் வரும்கொல்' என்றே. 12

வரும் துவரைப் பட்ட மங்கையர் எண்மர் மனங்களைக் க-
வரும் துவர் ஐப் பட்ட வாய் அரங்கேசனை; வஞ்சப் பகை-
வர் உந்து வரைப் பட்ட வேழம் அட்டானை; மறந்து உலகோர்
வருந்துவர்—ஐப் பட்ட ஈப்போல் மடந்தையர் மால்வலைக்கே. 13

மாலைக் கல்லார மடவார் புண்-ஆக்கையில் வாஞ்சை வைத்து,
மாலைக்கு, அல் ஆர் அம்புலிக்கு, நையா நிற்பர்; மாய்விப்பது ஓர்
மாலைக் கல்லார்; அம்புயத் தாளில் வைக்கும் மதில் அரங்க-
மாலைக் கல்லார்; அஞ்சலியார்; என்னே—சில மானிடரே! 14

மானிடர் ஆகல் அரிது; அரிதே, மண்டலத்து நெறி-
மான், இடர் ஆகம் இலாதவர், ஆதல்; மலர் அயனுர்,
மான் இடர், ஆகமத்தால் அன்பர்ஆய அரங்கத்துள் எம்-
மான் இட ராக மலர்அடிக்கு ஆட்படும் வாழ்வு அரிதே. 15

அரி, தாம் அரைக்கண் அம் தோல் உடுத்தார், அயனுர்க்கு அரியான்;
அரி; தாமரைக் கண் அம்மான்; திருப் பாதம் அடைமின்—சன்மம்
அரிதுஆம்; அரைக் கணம் தங்காது உயிர்: அவன் ஊர் வினவில்,
அரி, தாம் மரைக் கணம், ஈர்த்து ஓடும் பொன்னி அரங்கம் அன்றே? 16

'அரம் காது வார் கணை கண்; வள்ளை, கோங்கின் அரும்பு, மங்கை-
அர் அம் காது, வார் முலை' என்று ஐவர் வீழ்ந்தனர்: ஆடு அரவு இன்
அரங்கா! துவாரம் இலா மணியே! அணி ஆர் மதில் சூழ்
அரங்கா! துவாரகையாய்! அடியேன் உன் அடைக்கலமே. 17

அடைக்கலந் தாயத் தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டால்
அடைக்கலந் தாயரங் காவாயர் பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட வழுமையனே. 18

ஐய மருந்திவை யுண்ணென்று மாதரட் டூட்டுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே யவரின்பு மாதலினல்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கர்க்கன்பாய்
ஐய மருந்தியும் வாழ்மின்கண் மேலுமக் காநந்தமே. 19

நந்த மரங்களை மாகட லேழு நடுங்கவெய்த
நந்த மரங்களைப் பற்றுநெஞ் சேவினை நையுமுன்கை
நந்த மரங்களை யார்மயல் போம்வரு நற்கதிவா
நந்த மரங்களை வர்க்குமெஞ் ஞான்று நரகில்லையே. 20

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவு
நரகந் தரங்கித்து வெங்காலற் கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரே றரங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்கமுற் ருரடி யார்க்கு நமனஞ்சுமே. 21

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றலு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மண்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித் தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்ருள லான்மற் றரணிலமே. 22

இலங்கையி லாதர னெங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான வீச னிரியவெம்போர்
இலங்கையி லாத படிவாண னைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே. 23

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனைத் தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலரைத்தே. 24

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபற்றல்
அரைக்கலை வேலை யுடைவேந்தர் வாழ்வெண்ணை லவரையும்
அரைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் ருலுநெஞ்சே
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே. 25

ஆதவ னந்தரந் தோன்ருமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழைபார்
ஆதவ னந்தரங் கத்தா னரங்க னடியனென்றுள்
ஆதவ னந்தரங் கண்டீர் வினைவந் தடைவதுவே. 26

அடைக்கலம், தாயத்தவர் போல் உடல் உறை ஐவரையும்;
அடைக்கலம், தாய் உலகம் கொண்ட தாள்களுக்கு; அண்டம் உண்டு, ஆல்-
அடைக் கலந்தாய்! அரங்கா! ஆயர் பாடியில், அன்று, நெய் பால்-
அடைக் கலம் தாய் வைத்து வாய் நெரித்து ஊட்ட, அழும் ஐயனே!

'ஐய! மருந்து இவை, உண்' என்று மாதர் அட்டு, ஊட்டும் செல்வம்
ஐயம்; அருந் தினைப் போதே அவர் இன்பம்; ஆதலினுல்,
ஐ அமரும் தியக்கம் குறுகாமுன், அரங்கற்கு அன்புஆய்,
ஐயம் அருந்தியும் வாழ்மின்கள்; மேல், உமக்கு ஆனந்தமே. 19

நந்த மரம், கனே மா கடல் ஏழும் நடுங்க, எய்த
நம்தம் அரங்கனேப் பற்று, நெஞ்சே! வினே நையும்; முன்கை
நந்து அமர் அங்கனேயார் மயல் போம்; வரும், நற்கதி வா-
நம்; தமர் அங்கு அனேவர்க்கும் எஞ்ஞான்றும் நரகு இல்லேயே. 20

நரகு, அந்தரம், புவி: இம் மூன்றிடத்தும் நனி மருவு-
நர் அகம் தரங்கித்து, வெங் காலற்கு அஞ்சுவர்: நாயக வா-
நர கந்தரம், புட் பிடர், ஏறு அரங்கர்; நல் ஆய்க்குலத்து இ-
நர்; அகம் தரங்கம் உற்ருர்; அடியார்க்கு நமன் அஞ்சுமே. 21

அஞ்சு அக்கரத் தலேக் கங்கையன் ஏற்றலும், அம் சிறைய
அஞ்சம், கரத்தலேக் குண்டிகையான் மண்டை அங்கை விட்டே
அஞ்சக் கரத்தலேச் செய்து, பித்து ஏக அருள் அரங்கன்,
அம் சக்கரத் தலேவன், தாள் அலால், மற்று அரண் இலமே. 22

இலங்கு ஐயில் ஆதரன், ஐங்கரன், மோடி, எரி, சுரத்தோன்,
இலம் கையிலாத மலே ஆன ஈசன், இரிய, வெம் போர்-
இல் அம் கை இலாதபடி வாணனேச் செற்ற என் அரங்கன்,
இலங்கையில் ஆதவன் போகக் கண்டான், என் இதயத்தனே. 23

அத்தனே, வேதனே ஈன்ற அரங்கனே, ஐம் படை சேர்
அத்தனே, வே-தனே வாய்வைத்த மாயனே, ஆர் அணங்கு ஓர்
அத்தனே வேதனே தீர்த்தானே, சேர்க்கிலள்; ஆயிரம் சால்
அத்தனே வேது அனே அப்புவள், சாந்து என்று—அனல் அரைத்தே.

அரைக்கு அலே வேலே உடுத்த மண் பல் பகல் ஆண்டு, பற்றல்-
அரைக் கலே வேலேஉடை வேந்தர் வாழ்வு எண்ணல்; ஐவரையும்
அரைக்கலே, வேலே அவர்க்கே புரிவை, என்ருலும், நெஞ்சே!
அரைக் கலே வேலே அரங்கனுக்கு ஆட்பட ஆதரியே. 25

ஆதவன் அந்தரம் தோன்ருமல், கல்மழை ஆர்த்து, எழு நாள்
ஆ தவனம் தர, வெற்பு எடுத்தான்; அடியார் பிழை பார்-
ஆதவன்; அம் தரங்கத்தான்; அரங்கன்; அடியன் என்று உள்-
ஆத அனந்தரம்கண்டீர்—வினே வந்து அடைவதுவே. 26

அடையப்பன் ஞகங் கடிவா யமுதுக வங்கிகுளிர்
அடையப்பன் ஞக மருப்பா யுதமிற வன்றுகுன்ருல்
அடையப்பன் ஞக மிசைதாங்கப் பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் ஞகங் கரியா னரங்கனெட் டக்கரமே. 27

அக்கர வம்புனைந் தாரய ஞரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் ருன்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே. 28

ஆக்குவித் தார்குழ லாலரங் கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாரறி வற்றேனைத் தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே. 29

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவென் ருலடி யேன்புகழ்கைக்கு
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாகபல்பூண்
ஆரா தனஞ்செயன் பாகா வரங்கத் தமர்ந்தவனே. 30

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையில் வேல்வேந்தர் சூழமண் ணுண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீடு
அமர வரம்பையின் மஞ்சா ரரங்கருக் காட்படுமே. 31

ஆளாக வந்த வடியேற் கருள்பரி யானைதிண்டேர்
ஆளாக வந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளாக வந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆளாக வந்தமி லுன்னடி யார்க்கன்ப னுவதற்கே. 32

ஆவா கனத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற் ருளுக் கடிமைப்படார்
ஆவா கனத்த வழுக்குடல் பேணி யறிவழிந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென் னிராமலென் னம்புவிக்கே. 33

அம்பு விலங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்பு விலங்கைகொண் டாயரங் காவன் றிடங்கர்பற்றும்
அம்பு விலங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிய்
அம்பு விலங்கையிட் டேசஞ் சிறையி லடைத்திடலே. 34

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவ மலைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க
இடவ மலைக்கும் புனலரங் காவெய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே. 35

அடையப் பல் நாகம் கடி வாய் அமுது உக, அங்கி குளிர்
அடைய், பல் நாக மருப்பு ஆயுதம் இற, அன்று, குன்றால்
அடை அப்பு அந் நாகமிசை தாங்க,பாலற்கு அருள் செய்தது—ஆல்-
அடை அப்பன், ஆகம் கரியான், அரங்கன், எட்டு அக்கரமே. 27

அக்கு அரவம் புனைந்தார், அயனார், இடை ஆய்—இரு நால்
அக்கர வம்பு மலராள் கொழுநன், அரங்கன், செங்கோல்-
அக் கர அம்புயன்—தான் மூலம் என்பது அறிவித்திடான்:
அக் கரவு அம் புவிமேல் வேழமே வெளியாக்கியதே. 28

ஆக் குவித்தார் குழலால், அரங்கேசர்; அன்பால் விதுரன்
ஆக்கு வித்தார அடிசில் உண்டார்; கடல் ஆடை அகல்-
ஆக் கு வித்தார்; அறிவு அற்றேனைத் தம் அடியார்க்கு அடிமை
ஆக்குவித்தார்—அடியே அடியேன் துய்க்கும் ஆர் அமுதே. 29

ஆராத நஞ்சு எய்து கண்டன் நின் கீர்த்தி அறைவன்; திரு
ஆராதனம் செய்வன் வேதா; என்றால், அடியேன் புகழ்கைக்கு
ஆர்?—ஆதனம் செய்ய போதுஆம் திருமகள் ஆக! பல் பூண்
ஆரா! தனஞ்செயன் பாகா! அரங்கத்து அமர்ந்தவனே! 30

அமர அரம்பையின் நல்லார் பலர் அந்திக்காப்பு எடுப்ப,
அமர அரம் பையில் வேல் வேந்தர் சூழ மண் ஆண்டிருந்தோர்
அமர வரம்பை இல் கான் போய் இறந்தனர்; ஆதலில், வீடு
அமர அரம்பையில் மஞ்சு ஆர் அரங்கருக்கு ஆட்படுமே. 31

ஆளாக வந்த அடியேற்கு அருள்—பரி, யானை, திண் தேர்,
ஆள், ஆகவம்தனில் செற்று, இலங்கேசனை அட்ட வல் வில்-
ஆளா! கவந்தன் புயம் துணித்தாய்! அரங்கா! முளரி-
ஆள் ஆக!—அந்தம் இல் உன் அடியார்க்கு அன்பன் ஆவதற்கே. 32

ஆவாகனத்தர், அடியார் மனத்துள்; புள் ஆன ஒப்பு இல்-
ஆ வாகனத்தர்; அரங்கர்; பொற்றாளுக்கு அடிமைப்படார்:
ஆ! ஆ! கனத்த அழுக்கு-உடல் பேணி, அறிவு அழிந்து, அவ்-
ஆ ஆகு அனத்தர் இருந்து என், இராமல் என், அம் புவிக்கே? 33

அம் புவி லங்கை நகர் பாழ்பட, சங்கும் ஆழியும் விட்டு
அம்பு, வில் அம் கை கொண்டாய்! அரங்கா! அன்று இடங்கர் பற்றும்
அம்பு விலங்கை அளித்தாய்! இனி என்னை ஆசை என்று இய்-
அம்பு விலங்கை இட்டே சம் சிறையில் அடைத்திடலே. 34

இடவ மலைக்கும், புயங்க மலைக்கும், இலங்கும் அகல்-
இட அமலைக்கும், இருங் கமலைக்கும், இறைவ! சங்க
இடவ! மலைக்கும் புனல் அரங்கா! எய்த்த மார்க்கண்டன் கண்டு-
இட, அம் அலைக்கும் உலகு அழியாது, உள் இருந்தது என்னே! 35

இருந்தை யிலங்க வெளிறுப டாதென்செய் தாலுநிம்பத்து
இருந்தை யிலந்தித்தி யாதவை போற்புல்லர் யாவுங்கற்ருய்ந்து
இருந்தை யிலம்பன்ன கண்ணுர்க்கல் லால்வெண்ணெ யில்லிலொளித்து
இருந்தை யிலங்கை யரங்கற்கன் பாகி யிருக்கிலரே. 36

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுக்குந்தய்
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்த்துநல் வீடெய்த லாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் டுமேன்முந் நீர்கடந் தேறுமன்றே. 37

ஏறுங் கரியும் பரியுஞ்செற் ருன்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யா தலி ஞலேயம் யாதுமக்கீடு
ஏறுங் கரிய வரங்கற்கன் பாய்வினை யென்னுமிடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே. 38

இடராக வந்தெனைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்
இடராக வன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும்வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே. 39

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத் தியிற்பெரி தானரை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயந் திரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் காவடி யேனுன் னடைக்கலமே. 40

கலக்கூழைக் கைக்குங் கருத்துடை யீரரங் கத்துளிலேக்
கலக்கூழைக் கைக்குங் கறியிட்டுத் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூழைக் கைக்குள் வருவா ணனைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூழைக் கைக்குப்பை கண்டானை வீதியிற்கண்டுவந்தே. 41

கண்ட கனுவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்ட கனுவி கவர்வது வேமெய் கதிநல்கெனக்
கண்ட கனுவிப் பொழுதேசெல் கென்றருள் காரரங்கற்
கண்ட கனுவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே. 42

கடிக்கும் பணிநஞ் சமுதாகுந் தீங்குநன் காகும்பராக்
கடிக்கும் பணியலர் தாழ்வார்கல் லாமையுங் கற்றமையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குந்நல்ல பாதங் கருதினர்க்கே. 43

தினகர ஞர்கலி தீகாற் ஞெடுங்குஞ் செயலும்விண்மீ
தினகர ஞர்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர னுருயிர் செற்ரு ரரங்கர் திகிரிசங்கேந்
தினகர ஞர்நம் பெருமா ளமைத்த திருக்கைகண்டே. 44

இருந்தை இலங்க வெளிறுபடாது, என் செய்தாலும்; நிம்பத்து
இருந் தையிலம் தித்தியாது; அவைபோல், புல்லர் யாவும் கற்று, ஆய்ந்து-
இருந்து, ஐயில் அம்பு அன்ன கண்ணூர்க்கு அல்லால், வெண்ணெய் இல்லில் ஒளித்து-
இருந்து ஐயில் அம் கை அரங்கர்க்கு அன்பு ஆகி இருக்கிலரே. 36

இருக்கும் அந்தத்தில் அறியா அநங்கன், மண் ஏழுக்கும், தய்-
இருக்கும் அந்தத் திருவாய் மலர்ந்தான், எட்டு எழுத்தைக் குறி-
இருக்கும் மந்தப் புத்தி ஈர்த்து நல் வீடு எய்தலாகும்; கை போய்-
இருக்கும் அந்தச் செவிட்டு ஊமன் முந்நீர் கடந்து ஏறும் அன்றே. 37

ஏறும் கரியும் பரியும் செற்றுன் பரன் என்று, மன்றுள்
ஏறும் கரி மறை; ஆதலினுல், ஐயம் யாது உமக்கு? ஈடு-
ஏறும், கரிய அரங்கர்க்கு அன்புஆய்; வினை என்னும் இடி-
ஏறும் கரியும்; இனிமேல், பிறவி-இடர் இல்லையே. 38

இடராக வந்து எனைப் புன் சிறு தெய்வங்கள் என் செயும்? மான்-
இடர் ஆக வன் பிணி மா நாகம் என் செயும்? யான் வெருவி-
இட, ராக வன்னி, புனல், இடி, கோள், மற்றும் என் செயும்? வில்
இட ராகவன், அரங்கன், திருத் தாள் என் இதயத்ததே. 39

அத்திரம் காயம் என உணரேன்; எனது ஆசை உன் கை
அத்திரம் காய் அத்தியின் பெரிதால்; நரை ஆகி, பல் வீழ்-
அ(த்), திரங்கா, யந்திரம் போல் பொறி ஐந்து அழியும் அக் கால்-
அத்து இரங்காய், அரங்கா! அடியேன் உன் அடைக்கலமே. 40

கலக்கு ஊழைக் கைக்கும் கருத்து உடையீர்! அரங்கத்துள் இலைக்
கலக் கூழைக் கைக்கும் கறி இட்டுத் துய்த்திரும்—காது படைக்-
கலக் கூழைக் கைக்குள்வரு வாணனைக் கண்ணுதலும் விட்ட-
கல(க்), கூழைக் கைக் குப்பை கண்டானை வீதியில் கண்டு உவந்தே. 41

கண்ட கனவின் பொருள் போல, யாவும் பொய்; காலன் என்னும்
கண்டகன் ஆவி கவர்வதுவே மெய்; 'கதி நல்கெ'ன,
'கண்டகனு! இப்பொழுதே செல்கெ'ன்று அருள் கார் அரங்கன்,
கண் தக, நா இன்புற; கண்டு, வாழ்த்தி, கடிது உய்ம்மினே. 42

கடிக்கும் பணி நஞ்சு அமுது ஆகும்; தீங்கு நன்கு ஆகும்; பராக்கு-
அடிக்கும் பணியலர் தாழ்வார்; கல்லாமையும் கற்றமை ஆம்;
கடிக்கும், பணி அறம் எல்லாம்—அரங்கர் பைங் கன்னித் துழாய்க்
கடிக்கும், பணி ஒளிக்கும், நல்ல பாதம் கருதினர்க்கே. 43

தினகரன், ஆர்கலி, தீ, காற்று, ஒடுங்கும் செயலும்; விண் மீ-
தின் நகரனுர் கொண்டல் ஏழ் செருக்காமையும்—சென்று எதிர் மோ-
தின கரன் ஆர் உயிர் செற்றுர், அரங்கர், திகிரி சங்கு ஏந்-
தின கரனுர், நம்பெருமாள், அமைத்த திருக் கை கண்டே. 44

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க்குத் தீமெழு காவிரன்புய்த்
திருக்கா விரிக்கும தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே. 45

சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்துண் மாரிதிண் சூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்கரை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றேளா ரரங்கர் திருப்பதமே. 46

பதக்கம லங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்கம லங்க ளறுசீ ரரங்க பகட்டயிரா
பதக்கம லங்கரித் தூர்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்கம லங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே. 47

பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்பதி லையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பையில்கைநன்றே. 48

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்விளை பாண்டமென் னுமற்புன் பாவையர்தோற்
பையிலத்தி செய்து நரகெய்து வீருய்யப் பற்றுமினோ
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கற்பொற் பாதத்தையே. 49

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண் டிராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள் விழுமுன்ன மேபங் கயன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந்த தீசன் படர்சடைக்கே. 50

படநாகத் தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநாகத் தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்க
படநாகத் தந்தக் கரணம்பொல் லான்சிசு பாலன்முற்பல்
படநாகத் தந்த வசைக்குந்தந் தான்றேல் பரகதியே. 51

பரவையி லன்னகட் பாஞ்சாலி நின்பர மென்னநிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழுற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பல கோடி பகிரண்டமே. 52

அண்ட மடங்கலை யுந்தந்து காத்தவை யந்தந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமம்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோடும் பொன்னி யரங்கன்புட்கார்
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே. 53

திருக் கா விரிக்கும் யமுனைக்கும், கங்கைக்கும், தெள் அமுது ஆம்
திருக் காவிரிக்கும், கடற்கும், பிரான் தென் அரங்கம் என்னத்
திருக்கு ஆவிர்; இக்கு மொழியார்க்குத் தீ மெழுகுஆவிர்; அன்பு உய்த்-
திருக்கா, இரிக்குமது எவ்வாறு, அவன் உங்கள் சென்மத்தையே? 45

சென்மம் தரங்கம்; கருமம் சுழி; பிணி சேல்; இனம்—கு-
சென், மந்தர், அம் கதிர், பொன், கோள்கள், மாரி, திண் கூற்று, அசனி:
செல் மந்தர் அங்கு அவற்றுள் விழுவோர் கரை சேர்க்கும் வங்கம்
செல் மந்தரக் கவின் தோளார் அரங்கர் திருப் பதமே. 46

பதக்கம் அலங்கல் அணி மார்ப! பொன்னி படிந்து, இமையோர்
பதக் கம் மலங்கள் அறு சீர் அரங்க! பகட்டு அயிரா-
பதக் கம் அலங்கரித்து ஊர்வோன், சிவன், அயன், பார்க்க; வந்து, உன்
பதக் கமலங்கள் அடியேன் தலைக்கு என்று பாலிப்பதே? 47

பால் அனம் செய் அமர் நாடு ஆண்டு, பூணொடு பட்டு அணிந்து,
பால் அனம் செய்ய கலத்து உண்டு, மாதர் பல் போகத்தையும்
பாலனம் செய்ய இருப்பதில், ஐயம் பருகி, நந்தன்
பாலன், நம் செய்யவள் கோமான், அரங்கம் பையில்கை நன்றே. 48

பையில் அத்தி, மூளை, நரம்பு, ஊன், உதிரம், பரந்த குரம்-
பை; இலத்தி உள் விளை பாண்டம் என்னுமல், புன் பாவையர் தோல்-
பையில் அத்திசெய்து, நரகு எய்துவீர்! உய்யப் பற்றுமினோ—
பையில் அத்தி மேவித் துயில் கூர் அரங்கர் பொற்பாதத்தையே. 49

பாதகம் கைக்கும் அரங்கர்; பல் பேய், பண்டு, இராவணன் உற்-
பாத கம் கைக்கும் என்று எள்ளக் கொய்தார்; படிக்கு, ஏற்ற திருப்
பாத கம் கைக்குள் விழு முன்னமே, பங்கயன் விளக்கும்
பாத கங்கைக் குளிர் நீர் வீழ்ந்தது, ஈசன் படர் சடைக்கே. 50

பட நாகத்து, அந்தரமீது, இருப்பான்; எம் பரன்; அரங்கன்;
பட, நாகத் தந்தம் பறித்தோன்; புகழைப் பரவுமின்: க-
படன் ஆகத்து அந்தக்கரணம் பொல்லான் சிசுபாலன், முன், பல்-
பட நா கத்து அந்த வசைக்கும் தந்தான், தொல் பரகதியே. 51

பரவு ஐயில் அன்ன கண் பாஞ்சாலி, 'நின் பரம்' என்ன, நிரு-
பர் அவையில், மே கலை ஈந்தான், அரங்கன், பணிந்து இமையோர்
பரவு ஐயில் ஆழிப் பிரான், அடிக்கீழ் உற்பவித்து அழியும்—
பரவையில் மொக்குளைப் போல், பல கோடி பகிரண்டமே. 52

அண்டம் அடங்கலையும் தந்து, காத்து, அவை அந்தம் தன்பால்
அண்ட, மடங்கலைச் செய் காரணம்—அம் பொன் முத்து அலை வான்
அண்ட, மடங்கலை ஈர்த்து ஓடும் பொன்னி அரங்கன்—புள் கார்-
அண்டம் அடங்கு அலை முந்நீர்-மகள் உகப்பாக என்றே. 53

ஆக மதிக்கு முகமேன் முகமுடை யானயன்வாழ்
ஆக மதிக்கு நவநீதக் கள்வ வவனிகொள்வார்
ஆக மதிக்குளஞ் சேரரங் காவுன்னை யன்றித்தெய்வம்
ஆக மதிக்குளெண் ணேனடி யேன்பிற ராரையுமே. 54

ஆரத் தநந்தருந் தாய்தந்தை யாநந்த மாவரிகழ்
ஆரத் தநந்தனன் றிமைகண் டாலவ் கவுத்துவபூண்
ஆரத் தநந்த சயனு வணியரங் காதிகிரி
ஆரத் தநந்தன் மதலாயென் றீங்குனக் கத்தன்மைத்தே. 55

அத்தனு மன்புள வன்னையும் பேரு மனந்தமதாம்
அத்தனு மன்புல னுதலி னுண்டரு ளம்புயைவீர்
அத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயிர்
அத்தனு மன்புகல் பேரிரு வீர்க்கு மடியனென்றே. 56

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்கு
அடியவ ராகம் படைத்தமை யாலக மேபெரிய
அடியவ ராக வரங்கருக் காட்செ யருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செயு மைவரையே. 57

வரையாழி வண்ண ரரங்கேச ரீசர்முன் வாணன்றிண்டோள்
வரையாழி யார்புள்ளின் வாகனத் தேவந்த நாடொடிற்றை
வரையா ழியதுய ராய்த்தூசு நாணு மதியுஞ்செங்கை
வரையா ழியும்வளை யும்மிழந் தாளென் மடமகளே. 58

மகரந்த காதலை வாழ்வென்ன வாரிசுட் டாய்திதிதன்
மகரந்த காதலை வானிலுள் ளோர்க்குமண் ணோர்க்குவட்டா
மகரந்த காதலை வார்குழை யாய்வளர் சீரங்கதா
மகரந்த காதலை வாக்கிற் சொல்லேன்மட வாரெதிரே. 59

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றுலுய்யும் வண்ணமெங்கே
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே. 60

மாதம்பத் துக்கொங் கையுமல்குற் றேரும் வயிறுமில்லை
மாதம்பத் துக்குறி யுங்கண்டி லேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் துக்கெதிர் மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம்பத் துக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே. 61

வைகுந்தர் தாமரை போற்பாதர் நாகத்து மாதர்புடை
வைகுந்த மேற்கொண் டிருந்தார் வடிவைந்தின் வாழுமிடம்
வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரை
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே. 62

ஆகம திக்கு முகமேல் முகம் உடையான், அயன், வாழ்
ஆக! மதிக்கும் நவநீதக் கள்வ! அவனி கொள் வார்-
ஆக! மதிக்குளம் சேர் அரங்கா! உன்னை அன்றி, தெய்வம்
ஆக மதிக்குள் எண்ணேன் அடியேன், பிறர் ஆரையுமே. 54

ஆரத் தநம் தரும் தாய், தந்தை, ஆநந்தமாவர்; இகழ்-
ஆர்—அத்த! நந்தனன் தீமை கண்டால்: அம் கவுத்துவ! பூண்-
ஆரத்து அநந்த சயனு! அணி அரங்கா! திகிரி
ஆர் அத்த! நந்தன் மதலாய்!—என் தீங்கு உனக்கு அத்தன்மைத்தே. 55

அத்தனும், அன்பு உள அன்னையும், பேரும் அனந்தமதாம்
அத் தனு மன் புலன்; ஆதலின், ஆண்டருள்—அம்புயை, வீர்-
அத்து அனுமன் புயமீது ஏறு அரங்கன், அம் சார்ங்க வயிர்-
அத் தனு மன், புகல் பேர் இருவீர்க்கும் அடியன் என்றே. 56

அடியவர் ஆகவும் ஆட்கொள்ளவும் எண்ணி, ஆர் உயிர்கட்கு,
அடி, அவர் ஆகம் படைத்தமையால், அகமே! பெரிய
அடிய வராக அரங்கருக்கு ஆட்செய்; அருட்கதையால்
அடி, அவ ராகம் செய் மாரனுக்கு ஆட்செயும் ஐவரையே. 57

வரை ஆழி வண்ணர், அரங்கேசர், ஈசன்முன் வாணன் திண் தோள்
வரை ஆழியார், புள்ளின் வாகனத்தே வந்த நாள் தொடு, இற்றை-
வரை, ஆழிய துயர்ஆய், தூசும், நாணும், மதியும், செங்கை
வரை ஆழியும், வளையும், இழந்தாள்—என் மட மகளே. 58

மகரம் தகாது அலை வாழ்வு என்ன, வாரி சுட்டாய்! திதிதன்
மகர் அந்தகா! தலை வானில் உள்ளோர்க்கு, மண்ணோர்க்கு, உவட்டா
மகரந்த! காது அலை வார் குழையாய்! வளர் சீரங்க தா-
ம! கரந்த காதலை வாக்கின் சொல்லேன் மடவார் எதிரே. 59

வாராக! வாமனனே! அரங்கா! வட்ட நேமி வல-
வா! ராகவா! உன் வடிவு கண்டால், மன்மதனும் மட-
வார் ஆக ஆதரம் செய்வன் என்றால், உய்யும் வண்ணம் எங்கே—
வார் ஆக வாச முலையேனைப் போல் உள்ள மாதருக்கே? 60

மா தம்பத்துக் கொங்கையும், அல்குல்-தேரும், வயிறும் இல்லை;
மாதம் பத்துக் குறியும் கண்டிலேம்; வந்து தோன்றினை: பூ-
மாது அம்பத்துக்கு எதிர் மார்பா! அரங்கத்து வாழ் பரந்தா-
மா! தம் பத்துக் கருத்து இல்லார் பிறப்பு என்பர் வையகத்தே. 61

வை குந்தர்; தாமரை போல் பாதர்; நாகத்து, மாதர் புடை-
வை, குந்தமேல் கொண்டிருந்தார்; வடிவு ஐந்தின் வாழும் இடம்—
வைகுந்தம், பாற்கடல், மா நீர் அயோத்தி, வண் பூந் துவரை,
வைகும் தம் அன்பர் மனம், சீர் அரங்கம், வடமலையே. 62

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே. 63

அந்தக ராசலம் வந்தா லுனையழை யாதிருப்பார்
அந்தக ராசலங் காபுரி யார்க்கரங் காமறையின்
அந்தக ராசலக் கூக்குர லோயுமுன் ஞூழ்தடங்கல்
அந்தக ராசலத் தேதுஞ்ச நேமி யறுக்கக்கண்டே. 64

அறுகு தலைப்பெய் பனிபோன்ற தாதுரு வாய்ப்பிறந்தல்
அறுகு தலைப்பிள்ளை யாய்க்காளை யாய்க்கிழ மாகியையள்
அறுகு தலைச்செய்து வீழ்காய நானென்னு மாரிருளை
அறுகு தலைக்கொள் பணியரங் காநின்க ணுசைதந்தே. 65

ஆசுக விக்கு நிகரெனக் கில்லையென் றற்பரைப்பூ
ஆசுக விக்குவில் வேள்வடி வாவறி வாலகத்திய்
ஆசுக விக்கு வலயமன் ஞுவென் றரற்றியிரந்து
ஆசுக விக்கும் புலவீர் புகழ்மி னரங்கனையே. 66

கனகவி மானமற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா
கனகவி மானற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனகவி மானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே. 67

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணுவரங் காசெங் கமலற்குமே. 68

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகாகி யுங்கரை வீர்புனற்கா
கமலங் குவளை விளையா டரங்கன்விண் காற்றுக்கனல்
கமலங் குவளையுண் டான்றெண்ட ராயும்மின் காமமற்றே. 69

காமனத் தால்விழ வூதியக் காவைக் கவரரங்கன்
காமனத் தாவென்று நைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்
காமனத் தானளக் குங்கடற் பார்கலம் போன்றதுமீ
காமனத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரே. 70

மலருந்தி மேல்விழ மெய்நெறித் தான்வைய மேழுந்துஞ்சா
மலருந்தி ஞனரங் கன்குற ளாய்மண் ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே. 71

வடமலை, தென்மலை, கச்சி, குறுங்குடி, மால் நிற்பது;
வடம், அலை வேலை, அரங்கம், குடந்தை, வளரும் இடம்;
வடம் அலை கொங்கைத் திருவோடு இருப்பு வைகுந்தம்; கர-
வடம் மலை அன்பர் உளம், நடை; ஆட்டம் மறை அந்தமே. 63

அந்தகர், ஆசலம் வந்தால், உனை அழையாது இருப்பார்—
அந்தக, ராச லங்காபுரியார்க்கு! அரங்கா! மறையின்
அந்த! கராசலக் கூக்குரல் ஒயுமுன், ஆழ் தடம் கல்-
அந்த கரா சலத்தே துஞ்ச, நேமி அறுக்கக் கண்டே. 64

அறுகு தலைப் பெய் பனி போன்ற தாது உருஆய், பிறந்து, அல்-
அறு குதலைப் பிள்ளைஆய், காளைஆய், கிழம் ஆகி, ஐ அள்-
அறு உகுதலைச் செய்து, வீழ் காயம் நான் என்னும் ஆர் இருளை
அறு—கு தலைக்கொள் பணி அரங்கா! நின்கண் ஆசை தந்தே. 65

'ஆசுகவிக்கு நிகர் எனக்கு இல்லை' என்று, அற்பரை, 'பூ
ஆசுக இக்கு வில் வேள் வடிவா! அறிவால் அகத்திய-
ஆ! சுக! இக் குவலய மன்னு!' என்று அரற்றி, இரந்து,
ஆசு கவிக்கும் புலவீர்! புகழ்மின், அரங்கனையே. 66

கன கவி மானம் அற்று, ஈனர்க்கு உரைக்கிலென்—கால் பெற்ற வா-
கன கவி, மால் நல் கருடப் புள், ஊர்தியை; கால்மலர், கோ-
கனக வி மான், அம் புவிமான் தடவரக் கண்வளரும்
கனக விமானத்து அரங்கனை; நாச் சொல்லக் கற்ற பின்னே. 67

கற்றினம் ஆயவை, காளையர், வான் கண்டு, மீள் நினைவு அ-
கற்றின மாயமும்; நீ கன்று காளையர் ஆகி, பல் ப-
கல் தினம், ஆயர் பரிவுறச் சேரி கலந்தமையும்;
கற்று இனம் ஆய ஒண்ணு—அரங்கா! செங்கமலற்குமே. 68

'கமலம், குவளை; மடவார் தனம், கண்கள்' என்று உரைத்து; அ-
கம், மலங்கு வளை முதுகு ஆகியும், கரைவீர்! புனல் கா-
கம், மலங்கு, வளை, விளையாடு அரங்கன்; விண், காற்று, கனல்,
கமலம், கு, அளை, உண்டான்; தொண்டர்ஆய் உய்ம்மின்—காமம் அற்றே. 69

கா மன் நத்தால் விழ ஊதி, அக் காவைக் கவர் அரங்கன்;
'காமன் அத்தா!' என்று, நைவார்க்கு அமுதன்; கல்நெஞ்சர்க்கு இரங்-
கா மனத்தான்—அளக்கும் கடற் பார் கலம் போன்றது; மீ-
காமன் அத் தாமரையோன்; கங்கை பாய்; மரம் கால்மலரே. 70

மலர் உந்தி மேல் விழ, மெய் நெரித்தான்; வையம் ஏழும், துஞ்சா-
மல், அருந்தினன்; அரங்கன்; குறள்ஆய், மண் அளந்த அந் நாள்
மலரும் திவாக் கதிர்—வண் குடைஆய், முடி மா மணிஆய்,
மலர் உந்திஆய், திருத் தாள் விரல் ஆழி மணி ஒத்ததே. 71

மணிவாசற் றூங்க வொருகுடைக் கீழ்வையங் காத்துச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் பார்பின்னை மாதிருக்கு
மணிவாச மார்பரங் காகேச வாவென்று வாழ்த்தித்திரு
மணிவாச கங்கொண் டணிவா ரடியை வணங்கினரே. 72

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பாரில் லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண் டாகனன் மார்க்கண்டனே. 73

கண்டலங் காரள கங்கெண்டை மேகங் கவிரிதழ்சொல்
கண்டலங் கார முலேயிள நீரென்று கன்னியர்சீர்
கண்டலங் காரங்க ளான்மரு ளேன்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலரரங் கேசர்க்குக் காதலனே. 74

காதலே வாரிமண் வெண்கோட்டில் வைத்துண்டு காட்டியரங்
காதலே வாகழற் குள்ளாக்கி ஞய்கரப் பெங்கெனவே
காதலே வார்குழை வைதே கியைநின் கருத்துருக்குங்
காதலே வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே. 75

தவராக வக்கணே யொன்ருற் கடற்றெய்வந் தானென்றிருந்
தவராகந் தீர்த்துத் தொழக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவராகப் பாவித்தென் ஞேதொழு தாய்தண் ணரங்கத்துமா
தவராக வாகண் ணனேயெண் ஞெணுவவ தாரத்தனே. 76

தாரா கணமண் ணளந்தவந் நாளன்பர் சாத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாகாற்றிற் சூழ்வனந் தாஞெக்குமே. 77

தானந் தியாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலிலவி
தானந் தியாகந் தருமிழி பாயின தண்ணரங்கத்
தானந் தியாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந் தியாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே. 78

தாமரை மாத்திரை மூப்பற்ற வானவர் தண்ணறுஞ்செந்
தாமரை மாத்திரை வந்தா டலேவரைத் தண்ணரங்க
தாமரை மாத்திரை போல்வளேந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைக் கேசங்கி ஞேசையிற் சாய்ந்தனரே. 79

சாகைக்குந் தத்துத் துகிறூக்கி மாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்தண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் படையாழி யேந்த றமர்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்துத் தவிர்க்கைக்கும் போலுமுன் சங்கற்பமே. 80

மணி வாசல் தூங்க, ஒரு குடைக்கீழ் வையம் காத்து, சிந்தா-
மணி வாசவன் என வாழ்ந்திருப்பார்—'பின்னை மாது இருக்கும்
மணி வாச மார்பு அரங்கா! கேசவா!' என்று வாழ்த்தி, திரு-
மண், இ வாசகம் கொண்டு, அணிவார்அடியை வணங்கினரே. 72

வணம் கரியான்; அரங்கன்; அடியார் தொழ, வாள் அரவு, உ-
வணம், கரி, ஆடற் பரி, தேர், நடத்து எந்தை; வானவர்க்கும்
வணங்கரியான்; அன்றிக் காப்பார் இல்லாமை, விண் மண் அறியும்
வணம் கரியானவர்—வாணன், கண்டாகனன், மார்க்கண்டனே. 73

'கண்-தலம், கார் அளகம்; கெண்டை, மேகம்: கவிர், இதழ்: சொல்
கண்டு: அலங்கு ஆர முலை இளநீர்' என்று, கன்னியர் சீர்
கண்டு, அலங்காரங்களால் மருளேன்—கயல், 'கொக்கு' என்று அஞ்ச,
கண்டல் அங்கு ஆர மலர் அரங்கேசர்க்குக் காதலனே. 74

காது அலை வாரி மண் வெண் கோட்டில் வைத்து, உண்டு, காட்டி, அரங்-
கா! தலைவா! கழற்குள் ஆக்கினுய்: 'கரப்பு எங்கு?' எனவே,
காது அலை வார் குழை வைதேகியை, நின் கருத்து உருக்கும்
காதலை, வானரர்த் தேட விட்டாய்—இது கைதவமே. 75

தவர் ஆகவக் கணை ஒன்றால், கடல்-தெய்வம் 'தான்' என்று, இருந்-
த அராகம் தீர்த்துத் தொழக் கண்ட நீ தர்ப்பைமேல் கிடந்து,
தவர் ஆகப் பாவித்து, என்னே தொழுதாய்?—தண் அரங்கத்து மா-
தவ! ராகவா! கண்ணனே! எண்-ஒணு அவதாரத்தனே! 76

தாராகணம், மண் அளந்த அந்நாள்—அன்பர் சாத்தும் துழாய்த்
தாரா! கண் அம்புயம்போல் அரங்கா! தலம் ஏழுக்கும் ஆ-
தாரா! கணமங்கையாய்!—உம்பர் தூவிய தண் மலர் வீழ்-
தாரா, கணமும் நில்லா, காற்றில் சூழ் வனம்தான் ஒக்குமே. 77

தானம், தியாகம், தவம், கல்வி, தீர்த்தம், தழலில் அவி-
தான் நந்து யாகம், தரும், இழிபு ஆயின; தண் அரங்கத்-
தான், அந்தி ஆகப் பகல் மறைத்தான், பெயர் தந்திடும்—வே-
தா, நந்தி, ஆகண்டலன், அறியாப் பரந்தாமத்தையே. 78

தாமரை மாத்திரை மூப்பு அற்ற வானவர்—தண் நறுஞ் செந்-
தாமரை மாத் திரை வந்தாள் தலைவரை, தண் அரங்க-
தாமரை—மாத் திரை போல் வளைந்து, ஏற்று, தருப்பொருட்டால்,
தாம் அரை மாத்திரைக்கே சங்கின் ஓசையின் சாய்ந்தனரே. 79

சாகைக் குந்தத்து, துகில் தூக்கி, மாதர்தமை நகைத்தாய்!
சாகைக்கும் தத்துவங்கட்கும் எட்டாய்! தண் புனல் அரங்கே-
சா! கைக் குந்தத்து, படை ஆழி, ஏந்தல்—தமர்கள், வெய்யோர்,
சாகைக்கும், தத்துத் தவிர்க்கைக்கும் போலும், உன் சங்கற்பமே. 80

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலங்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கட ருனவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே. 81

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நேரிக்கி யெதிர்பொருங்கேள்
இருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யாமத்தொளித்து
இருந்தே னுகரரங் காகாணு நாளினி யென்றருளே. 82

அரும்பா கவதரிக் கும்பெய ராய்புள் ளரசினுக்கோர்
அரும்பா கவதரந் துப்பனே யாயரங் காவெனவுண்
அரும்பா கவதர் பததீர்த்தங் கொள்ளா தடிகள்கொப்புள்
அரும்பா கவதர் தொலைப்பார்கல் லார்கங்கை யாடுதற்கே. 83

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னுலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னுலண்ட ராயுடன்மாறு
ஆடுமுன் னீரது மாயையி னுலென் றரங்கனைக்கொண்ட்
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே. 84

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தா ளெனக்கென்று மாநிதியே. 85

மாணு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னு
மாணு கவரு மணியைமுன் னீங்கினன் மாயனென்பார்
மாணு கவரும் பலர்சோலை சூழு மதிலரங்கா
மாணு கவரு மமுதே யதுவுநின் மாயமன்றே. 86

மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தான்மமு வாளிபிர
மாயா தவர்செய்வர் முந்நூல்செந் நூல்கொண்ட வண்ணமொப்ப
மாயா தவரத் தனைக்குடர் கோத்ததுன் வாணகமே. 87

நகமுண் டகுந்தரித் தாற்கருண் மாயற்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தாற்கடி யேமென்மி னற்கதிவா
நகமுண் டகம்பர னென்னு தரங்கனை நாடிலயன்
நகமுண் டகமலர் தான்குவி யாது நடுக்குளத்தே. 88

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல மாயவன்றுன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே. 89

சங்கத்து அமரர் குழாத்தொடும், ஊழ்வினை தான் விலங்க,
சங்கத்து அமர் அன்பராய் இருப்பீர்—கடல், தானவர் தே-
சம், கத்த; மரம் பட; எய்த சார்ங்கத் தனு அரங்கன்,
சங்கத் தமரன், சரணே சரண் என்று தாழ்ந்திருமே. 81

இருந் தேன் உக, முடவன் வரை நோக்கி இருப்பதுபோல்,
இருந்தேன், உகந்து உனை, வைகுந்தம் நோக்கி—எதிர் பொரும் கேள்-
இரும் தேனுகனும் பட வதைத்தாய்! வெண்ணெய், யாமத்து, ஒளித்து-
இருந்தே நுகர் அரங்கா!—காணும் நாள், இனி, என்று? அருளே. 82

அரும் பாகு அவதரிக்கும் பெயராய்! புள்-அரசினுக்கு ஓர்
அரும் பாக! அதரம் துப்பு அனையாய்! அரங்கா! என உண்-
அரும் பாகவதர் பததீர்த்தம் கொள்ளாது, அடிகள் கொப்புள்
அரும்பு ஆக அதர் தொலைப்பார், கல்லார், கங்கை ஆடுதற்கே. 83

ஆடும் முந்நீர் முதல் தீர்த்தத்தினுல், அரு மாதவத்தால்,
ஆடு முன் ஈர் மறை வேள்வியினுல், அண்டராய் உடல் மாறு-
ஆடும்; முன்னீர், அது மாயையினுல் என்று; அரங்கனைக் கொண்ட்-
ஆடும்—முன் நீர் செய்த பாவமும் போய், முத்தர் ஆம் வண்ணமே. 84

வண்ணங் கலி, வஞ்சி, வெண்பா, அகவல் வகை தொடுத்து, ஓர்
வண்ணம் கலி கெட வேண்டும் என்றே, மக்கள் மாட்டு, உரையேன்;
வண்ணம் கலி கடல் போல்வான், அரங்கன்—வகுளச் செல்வன்,
வள் நம் கலியன், புகழ்—தாள் எனக்கு என்றும் மா நிதியே. 85

'மான் ஆக வரும் நிருதன் புன் மாயையின், மங்கை என்னும்
மால் நாக அரு மணியை முன் நீங்கினன் மாயன்' என்பார்—
மால் நாக அரும்பு அலர் சோலை சூழும் மதில் அரங்கா!
மால் நா கவரும் அமுதே!—அதுவும் நின் மாயம் அன்றே? 86

மா யாதவர் தலைவா! அரங்கா! வட மா மதுரை
மாயா! தவர், அண்டர், வந்து அடைந்தால், மழுவாளி, பிர-
மா, யாது அவர் செய்வர்? முந்நூல் செந்நூல் கொண்ட வண்ணம் ஒப்ப,
மாயாத வரத்தனைக் குடர் கோத்தது, உன் வாள் நகமே. 87

நக, முண்ட கம் தரித்தாற்கு அருள் மாயற்கு; ஞாலம், முந்நீர்,
நகம், உண்டு, அகம் மகிழ்ந்தாற்கு; அடியேம் என்மின்; நற்கதி வா-
நகம் உண்டு; 'அகம் பரன்' என்னுது, அரங்கனை நாடில், அயன்
நக முண்டக மலர்தான் குவியாது உம் நடுக் குளத்தே. 88

குளம் படி நெய் அடிசிற்கு ஒத்ததோ, கொள்ளப் பற்றியதோ—
குளப் படியில் திங்கள் சேர் அரங்கா! கோலம் ஆய அன்று, உன்
குளப் படி காட்டும் பிறை மறுப்போல், ஒரு கோட்டு இருந்து,
குளம்பு அடியின் அகத்துள், பரல் போன்ற குவலயமே? 89

குவலையஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலையங் கண்டன்பர் நைவரென் றாற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணிலென் னாங்கொல் குறிப்பவர்க்கே. 90

குறியானைச் செங்க ணெடியானை வானவர் கோனைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானை காத்தவனைப்பாடி னேன்கொடி கூப்பிடினுங்
குறியானை யப்பவர் போற்கொடியேன்சொலுங் கொள்வனென்றே.

வனத்திற் சிலம்பி விடுநூலுட் பட்டு மசகமெய்த்த
வனத்திற் சிலம்பின போற்பிணி வாய்ப்பட்டென் வாய்புலம்பின்
வனத்திற் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு
வனத்திற் சிலம்பினின் றான்கேட்கு மோவும்பர் வாழ்த்தைவிட்டே.

விடத்தேரை மன்னும் வனப்பாழ்ங் கிணற்றுள்வெம் பாம்புபற்றும்
விடத்தேரை வாய்வண்டுதேன் வேட்டல்போல் விசித்துக்கொடுபோய்
விடத்தேரை யில்வெங்கட் கூற்றையெண் ணாதென்னும் வேட்கையெல்லாம்
விடத்தேரை யூரரங் கன்றிருத் தாளில் விழுநெஞ்சமே. 93

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க
விழுங்கூ னரம்புறி யென்பேணி தோற்சட்டை வீழ்ந்துநொந்த
விழுங்கூந்த லாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூன நோய்க்குடில் வேண்டே னரங்க விமானத்தனே. 94

மானத் துவண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத் துவண்ட வினையாள ராயினு மால்வளர்வி
மானத் துவண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத் துவண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே. 95

அங்காக்கைக் கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக்கைக் கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துயர்
அங்காக்கைக் கேசிலர் வேறே தொழுவ ரருந்திரவிய்
அங்காக்கைக் கேதனத் தாடரு மோதிரு வன்றியிலே. 96

அன்றே யடைய வுனக்கே யடிமையென் றாய்ந்துணர்ந்தார்
அன்றே யடையப் படுவா றானையரங் காவனத்திய்
அன்றே யடையை யயில்வோரு மீதறி யாரறிஞர்
அன்றே யடையைம் புலனாலு நன்கில்லை யாங்கவர்க்கே. 97

ஆங்கார மாமின்னைத் தோய்மார் பரங்க னளைவெண்ணெயுண்டு
ஆங்கார மாநில முண்டாற்குத் தொண்டனிவ் வண்டத்தப்பால்
ஆங்கார மான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்து
ஆங்கார மானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே. 98

குவலயம் சூழ் கடல், காயா, மரகதம், கொண்டல், நெய்தல்
குவலயம், கண்டு; அன்பர் நைவர் என்றால்—கொற்ற வாணற்கு வா-
கு அலைய நேமி தொட்டாய்! அரங்கா!—கொடும் பல் பிறப்பு ஆ-
கு வலை அங்கு அற்று, உனைக் காணில், என் ஆம்கொல் குறிப்பு, அவர்க்கே? 90

குறியானை, செங் கண் நெடியானை, வானவர் கோனைச் சங்கக்
குறியால் நைவித்த திரு அரங்கேசனை, கூவி நின்று
குறி யானை காத்தவனை, பாடினேன்—கொடி கூப்பிடினும்
குறியா நயப்பவர் போல், கொடியேன் சொலும் கொள்வன் என்றே. 91

வனத்தில் சிலம்பி விடும் நூலுள் பட்டு, மசகம் மெய்த் த-
வனத்தின் சிலம்பினபோல், பிணிவாய்ப் பட்டு, என் வாய் புலம்பின்,
வனத்தில் சிலம்பின் குரல் அன்னம் வாழும் அரங்கன், இப் பு-
வனத்தில் சிலம்பில் நின்றான், கேட்குமோ—உம்பர் வாழ்த்தை விட்டே? 92

விடத்தேரை மன்னும் வனப் பாழ்ங் கிணற்றுள், வெம் பாம்பு பற்றும்
விடத் தேரை வாய் வண்டு தேன் வேட்டல் போல், விசித்துக் கொடுபோய்-
விடத் தேர் ஐயில் வெங் கட் கூற்றை எண்ணாது, எண்ணும் வேட்கை எல்லாம்
விட, தேரை ஊர் அரங்கன் திருத் தாளில் விழு, நெஞ்சமே! 93

விழும் கூன் தசைச் சுவர், நீர், மலம், கோழை, வெம் பித்தொடும் க-
விழும் கூன்; நரம்பு உறி; என்பு ஏணி; தோல்-சட்டை வீழ்ந்து, நொந்து, அ-
விழும் கூந்தலார் அழ, பாடையில் போய்ச் சுடும் வெய்ய செந் தீ
விழுங்கு ஊன நோய்க் குடில் வேண்டேன், அரங்க விமானத்தனே!

மால் நத்து வண்டல் உழ, ஓர் எழுத்தின் வடிவு உற்ற சீர்
மான, துவண்ட வினையாளர் ஆயினும், மால் வளர் வி-
மானத்து வண் தலம் ஆம் அரங்கம் வழியா வரினும்,
மானத்து வண்டு அமர் தார் அண்டர் ஆம் பதம் வாய்க்கும் அங்கே. 95

அம் கா, கைக்கே, மங்கைக்கு ஈந்தான்; அரங்கன் அவனிக்கு வாய்
அங்காக்கைக்கே பசித்தான்; நிற்கவே, முத்தி ஆக்கி, துயர்-
அம் காக்கைக்கே சிலர் வேறே தொழுவர்—அருந் திரவிய-
அம் காக்கைக் கேதனத்தாள் தருமோ, திரு அன்றியிலே? 96

'அன்றே, அடைய, உனக்கே அடிமை' என்று ஆய்ந்து உணர்ந்தார்
அன்றே; அடையப்படுவார் உனை? அரங்கா! வனத்து இய்-
அன்றே அடையை அயில்வோரும் ஈது அறியார்; அறிஞர்
அன்றே; அடை ஐம்புலனாலும் நன்கு இல்லை, ஆங்கு, அவர்க்கே. 97

ஆம் கார் அம் மா மின்னைத் தோய் மார்பு அரங்கன்; அளை வெண்ணெய் உண்டு-
ஆங்கு, ஆர மா நிலம் உண்டாற்கு; தொண்டன்—இவ் அண்டத்து அப்பால்,
ஆங்காரம், மான், பகுதிப் புறம் போய் அமுதாற்றில் படிந்து,
ஆங்கு ஆர் அமான் அடி காண்பேன்—அவன் தன் அருள் சிந்தித்தே. 98

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்தென் னரங்கசுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே. 99

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்தீ செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் ஞர்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே.] 100

திருவரங்கத்தந்தாதி முற்றும்

சிந்து ஆ-குலம் உய்யக் குன்று எடுத்தாய்! தென் அரங்க! சுற்றும்
சிந்து ஆகு உலகம் படைத்து அளித்தாய்! நிலம் சென்று இரந்த
சிந்தா! குலவு செல்வம், தந்தை, தாய், குரு, தெய்வமும், நீ;
சிந்தாகுலம் அடைந்தேன்; அடியேன் சென்மம் தீர்த்தருளே. 99

தீர, தரங்கப் பவநோய், துடைத்து; என்னைத் தேவரொடும்,
தீரத்தர், அங்கு அப் பணி காப்பு வைத்த செயல் என்பது ஓர்-
தீர்—'அத்தர் அங்க! அபயம்' என்று ஆர்க்கும் திரைப் பொன்னி சூழ்
தீரத்து அரங்கன் சிலம்பு ஆர்ந்த செய்ய திருவடியே. 100

திரு அரங்கத்து அந்தாதி முற்றும்

4. சீரங்க நாயகர் ஊசல்

திரு வாழ; திரு ஆழி, சங்கம், வாழ;
திரு அனந்தன், கருடன், சேனையர்கோன், வாழ;
அருள் மாறன் முதலாம் ஆழ்வார்கள் வாழ;
அளவு இல் குணத்து எதிராசன் அடியார் வாழ;
இரு-நாலு திரு எழுத்தின் ஏற்றம் வாழ;
ஏழ் உலகும், நான்மறையும், இனிது வாழ—
பெரு வாழ்வு தந்தருள் நம்பெருமாள், எங்கள்
பெரியபெருமாள், அரங்கர், ஆடிர் ஊசல். 1

உயர இட்ட கற்பகப் பூம் பந்தர் நீழல்,
ஒண் பவளக் கால் நிறுவி, ஊடு போட்ட
வயிர விட்டத்து, ஆடகச் சங்கிலிகள் நாற்றி,
மரகதத்தால் பலகை தைத்த ஊசல்மீதே—
தயிரில் இட்ட மத்து உழக்கும் வெண்ணெய்க்கு ஆடி,
தட மறுகில் குடம் ஆடி, தழல் வாய் நாகம்
அயரவிட்டு அன்று ஆடிய நீர்—ஆடிர் ஊசல்;
அணி அரங்க நம்பெருமாள், ஆடிர் ஊசல். 2

மீன் பூத்த விசும்பு-அது போல், தரளம் கோத்து,
விரித்த நீலப் பட்டு விதானம் தோன்ற;
வான் பூத்த கலை மதி போல், கவிகை ஓங்க;
மதிக் கதிர் போல், கவரி இரு மருங்கும் வீச;
கான் பூத்த தனிச் செல்வன் சிலையுள் மின்னற்
கரு முகில் போல், கண மணி வாசிகையின் நாப்பண்
தேன் பூத்த தாமரையாள் மார்பில் ஆட—
தென் அரங்க மணவாளர், ஆடிர் ஊசல். 3

பூசுரரும், புரவலரும், வான நாட்டுப்
புத்தேளிர் குழுவும், அவர் பூவைமாரும்,
வாசவனும், மலரவனும், மழுவலானும்,
வணங்குவான், அவசரம் பார்த்து இணங்குகின்றார்;
தூசுஉடைய கொடித் தடந் தேர், மானம், தோன்று அச்
சுடர் இரண்டும் பகல் விளக்காத் தோன்ற, தோன்றும்
தேசுஉடைய திரு அரங்கர், ஆடிர் ஊசல்;
சீரங்க நாயகியோடு, ஆடிர் ஊசல். 4

மலைமகளும் அரனும் ஒரு வடம் தொட்டு ஆட்ட,
வாசவனும் சசியும் ஒரு வடம் தொட்டு ஆட்ட,
கலைமகளும் அயனும் ஒரு வடம் தொட்டு ஆட்ட,
கந்தனும் வள்ளியும் கலந்து ஓர் வடம் தொட்டு ஆட்ட;
அலை மகரப் பாற்கடலுள் அவதரித்த
அலர்மகளும், நிலமகளும், ஆயர் காதல்-
தலைமகளும், இரு மருங்கில் ஆட; எங்கள்
தண் அரங்க மணவாளர், ஆடிர் ஊசல். 5

திரு வழுதி வள நாடன், பொருநைச் சேர்ப்பன்,
சீபராங்குச முனிவன், வகுளச் செல்வன்,
தரு வளரும் குருகையர் கோன், காரி மாறன்,
சடகோபன், தமிழ் வேதம் ததியர் பாட—
கருணை பொழி முக மதியம் குறு வேர்வு ஆட,
கரிய குழல் கத்தூரி நாமத்து ஆட,
அருகு இருக்கும் தேவியர்கள் அது கொண்டாட,
அணி அரங்கத்து எம்பெருமான், ஆடிர் ஊசல். 6

வையம் ஒரு பொன் தகட்டுத் தகளி ஆக,
வார் கடலே நெய் ஆக, அதனுள் தேக்கி,
வெய்ய கதிர் விளக்கு ஆகச் செஞ்சொல் மாலை
மெல் அடிக்கே சூட்டினன் மேன்மை பாட—
துய்ய மதி மண்டலத்தின் மறுவே ஒப்பச்
சோதி விடு கத்தூரி துலங்கு நாமச்
செய்ய திரு முகத்து அரங்கர், ஆடிர் ஊசல்;
சீரங்க நாயகியோடு, ஆடிர் ஊசல். 7

அன்பு என்னும் நன் பொருள் ஓர் தகளி ஆக,
ஆர்வமே நெய் ஆக, அதனுள் தேக்கி,
இன்பு உருகு சிந்தை இடு திரியா, ஞானத்து
இலகு விளக்கு ஏற்றினன் இசையைப் பாட—
பொன் புரையும் புகழ் உறையூர் வல்லியாரும்,
புதுவை நகர் ஆண்டாளும், புடைசேர்ந்து ஆட;
முன்பிலும் பின்பு அழகிய நம்பெருமாள், தொல்லை
மூவுலகுக்கும் பெருமாள், ஆடிர் ஊசல். 8

திருக் கண்டேன்; பொன் மேனி கண்டேன்—என்ற,
திகழ் அருக்கன் அணி நிறமும்: திகிரி, சங்கும்,
இருள் கொண்ட கருங் கங்குலிடையே, கோவல்
இடைகழியில் கண்ட பிரான் ஏற்றம் பாட—
மருக் கொண்ட கொன்றையசன், மலரின் மேலான்,
வானவர்கோன், முதலானோர் மகுட கோடி
நெருக்குண்ட தாள் அரங்கர், ஆடிர் ஊசல்;
நீளைக்கு மணவாளர், ஆடிர் ஊசல். 9

'நான்முகனை நாரணனே படைத்தான்; அந்த
நான்முகனும் நக்கபிரானைப் படைத்தான்;
யான் முகமாய் அந்தாதி அறிவித்தேன்' என்று
யார்க்கும் வெளியிட்ட பிரான் இயல்பைப் பாட—
பால் முகம் ஆர் வளை, நேமி, படைகள் காட்ட;
பாசடைகள் திருமேனிப் படிவம் காட்ட;
தேன் முக மா முளரி அவயவங்கள் காட்ட;
செழுந் தடம் போல், அரங்கேசர், ஆடிர் ஊசல். 10

மருள் இரிய, மறம் இரிய, அனைத்து உயிர்க்கும்
மயல் இரிய, வினை இரிய, மறையின் பாடல்
'இருள் இரிய' என்று எடுத்துத் தொண்டர்தங்கள்
இடர் இரிய உரைத்த பிரான் இட்டம் பாட—
அருள் இரிய, அறம் இரிய, உலகை ஆண்ட
ஆடகத்தோன் 'அகம் பரன்' என்று அபிமானித்த
பொருள் இரிய, சொல் இரிய, மார்வம் கீண்ட
பொன்னி சூழ் திரு அரங்கர், ஆடிர் ஊசல். 11

அரன் என்றும், அயன் என்றும், புத்தன் என்றும்,
அலற்றுவார் முன், 'திருநாரணனே ஆதி
பரன்' என்று மறை உரைத்து, கிழி அறுத்த
பட்டர் பிரான் பாடிய பல்லாண்டு பாட—
கரன் என்ற, மாரீசன், கவந்தன் என்ற,
கண்டகர் ஆர் உயிர் மடியக் கண்டு, இலங்கா-
புரம் வென்ற சிலை அரங்கர், ஆடிர் ஊசல்;
புகழ் உறையூர் வல்லியோடு, ஆடிர் ஊசல். 12

மரு மாலைப் பசுந் துளவத் தொடைகளோடு
வைகறையில் வந்து, திருத் துயில் உணர்த்தி,
'திருமாலை' திருவடிக்கே சூட்டி நிற்கும்
திருமண்டங்குடிப் பெருமான் சீர்மை பாட—
பெரு மாலை அடைந்து உலகும் மதிமயங்க,
பேணுதார் பட, கதிரோன் காணுது ஏக,
ஒரு மாலை பகலில் அழைத்து ஒளித்த நேமி
ஒளி உள்ளார் அரங்கேசர், ஆடிர் ஊசல். 13

கார் அங்கத் திரு உருவம், செய்ய பாத-
கமலம் முதல் முடி அளவும், கண்டு போற்ற,
சாரங்க முனியை ஊர்ந்து, 'அமலன் ஆதி-
தனை' உரைத்த பாண்பெருமாள் தகைமை பாட—
ஆரம் கொள் பாற்கடல் விட்டு, அயன் ஊர் ஏறி,
அயோத்தி நகர் இழிந்து, பொன்னி ஆற்றில் சேர்ந்த
சீரங்க மணவாளர், ஆடிர் ஊசல்;
சீரங்க நாயகியோடு, ஆடிர் ஊசல். 14

விழி பறித்து வெள்ளியை, மாவலியை மண்ணும்
விண்ணுலகும் பறித்த குறள் வேடத்து உம்மை
வழி பறித்து, மந்திரம் கொண்டு, அன்பர் தங்கள்
வல் வினையைப் பறித்த பிரான் வண்மை பாட—
சுழி பறித்த கங்கை முடி அடியில் தோயத்
தொழுது இரக்கும் முக்கணன் நான்முகனைச் செய்த
பழி பறித்துப் பலி ஒழித்தார், ஆடிர் ஊசல்;
பள்ளிகொண்ட திரு அரங்கர், ஆடிர் ஊசல். 15

போதனுர் நெட்டெழுத்தும், நமனுர் இட்ட
குற்றெழுத்தும், புனல் எழுத்தாய்ப் போக, மாறன்
வேதம் ஆயிரம் தமிழும் எழுதி, அந்நாள்,
மேன்மை பெறு மதுரகவி வியப்பைப் பாட—
ஓதம் ஆர் மீன் வடிவுஆய், ஆமை, ஏனத்து
உருவு ஆகி, அரி, குறள், மூஇராமர் ஆகி,
கோது இலாக் கண்ணன்ஆய், கற்கி ஆகும்
கோயில் வாழ் அரங்கேசர், ஆடிர் ஊசல். 16

ஆர் அமுதின் இன்பம் மிகு சடகோபன் சொல்
ஆயிரமும் தெரிந்து எடுத்தே அடியார்க்கு ஓதி,
நாரதனும் மனம் உருக இசைகள் பாடும்
நாதமுனி திருநாம நலங்கள் பாட—
பார்-அதனில் பாரதப் போர் முடிய மூட்டி,
பகை வேந்தர் குலம் தொலைய, பார்த்தன் தெய்வத்
தேர்-அதனில் வரும் அரங்கர், ஆடிர் ஊசல்;
சீரங்க நாயகியோடு, ஆடிர் ஊசல். 17

வம்பு அமரும் சிகை முந்நூல் தரித்த ஞானி,
வாதியரை வெல் ஆளவந்தார்க்கு அன்பு ஆம்
எம்பெருமானுர்க்கு, எட்டும் இரண்டும் பேசி,
இதம் உரைத்த பெரிய நம்பி இரக்கம் பாட—
தும்புரு நாரதர் நாத கீதம் பாட,
தொண்டர் குழாம் இயல் பாட, சுருதி பாட—
நம்பெருமாள் திரு அரங்கர், ஆடிர் ஊசல்;
நான்முகனுர் தாதையார், ஆடிர் ஊசல். 18

ஐங் கோலும் ஒரு கோலும் நீர்க்கோலம் போல்
அழிய முனிந்து, அறு சமயம் அகற்றி, எங்கள்
செங்கோலே உலகு அனைத்தும் செல்ல, முக்கோல்
திருக்கையில் கொள் எதிராசன் செயத்தைப் பாட—
சங்கு, ஓலம் இடும் பொன்னித் துறையின் நின்றே
தவழ்ந்து ஏறி, மறுகுதொறும் தரளம் ஈனும்
நம் கோயில் நம்பெருமாள், ஆடிர் ஊசல்;
நக்கன் மூதாதையார், ஆடிர் ஊசல். 19

அவத்தப் புன் சமயச் சொல்-பொய்யை மெய் என்று
அணி மிடறு புழுத்தான்தன் அவையின் மேவி,
'சிவத்துக்குமேல் பதக்கு உண்டு' என்று தீட்டும்
திருக்கூர வேதியர் கோன் செவ்வி பாட—
பவத் துக்கம் பிணி நீங்க, நரகம் தூர,
பரமபதம் குடி மலிய, பள்ளிகொள்ளும்
நவத் துப்புச் செங் கனிவாய்க் கரிய மேனி
நம்பெருமாள், அரங்கேசர், ஆடிர் ஊசல். 20

சந்து ஆடும் பொழில் பூதூர் முக்கோற் செல்வன்-
தன் மருகன் ஆகி, இரு தாளும் ஆன
கந்தாடைக் குலதீபன் முதலியாண்டான்
கடல் ஞாலம் திருத்தியருள் கருணை பாட—
கொந்து ஆரும் துளவு ஆட, சிறை வண்டு ஆட,
குழல் ஆட, விழி ஆட, குழைக் காது ஆட,
நந்து ஆட, கதை ஆட, திகிரி ஆட,
நல் மாடத் திரு அரங்கர், ஆடிர் ஊசல். 21

திருக்கலியன் அணுக்கர், திருப்பணி செய் அன்பர்,
சீரங்க நான்மறையோர், உள்ளூர்ச் செல்வர்,
தருக்கும் இசைப்பிரான்மார், பார் அளந்தார் பாதம்
தாங்குவோர், திருக் கரகம் தரித்து நிற்போர்,
இருக்கு முதல் விண்ணப்பம் செய்வோர், வீரர்க்கு
இறையவர்கள், சீபுண்டரீகர், மற்றும்
பெருக்கம் உள்ள பரிகரங்கள் தொழுது ஆட்செய்ய,
பிரமம்ஆம் திரு அரங்கர், ஆடிர் ஊசல். 22

உடுத் திரளோ, வானவர்கள் சொரிந்த பூவோ,
உதித்து எழுந்த கலை மதியோ, உம்பர் மாதர்
எடுத்திடு கர்ப்பூர ஆரத்திதானோ,
யாம் தெளியோம்; இன்று, நீள் திருக் கண் சாத்திப்
படுத்த திருப்பாற்கடலுள் நின்று போந்து,
பாமாலை பூமாலை பாடிச் சூடிக்
கொடுத்த திருக் கோதையுடன் ஆடிர் ஊசல்;
கோயில் மணவாளரே, ஆடிர் ஊசல். 23

வென்றி வேல் கரு நெடுங் கண் அசோதை முன்னம்,
வேர்வு ஆட விளையாடும் வெண்ணெய் ஆட்டும்;
குன்று போல் நால் தடந் தோள் வீசி ஆடும்
குரவைதனைப் பிணைந்து ஆடும் கோள் அறு ஆட்டும்;
மன்றினூடு உவந்து ஆடும் மரக்கால் ஆட்டும்;
வலி அரவில் பாய்ந்து ஆடும் வடு இல் ஆட்டும்;
அன்று காணு இழந்த அடியோம் காண,
அணி அரங்கராசரே, ஆடிர் ஊசல். 24

ஆரணங்கள் ஒரு நான்கும்; அன்பர் நெஞ்சும்,
அணி சிலம்பும், அடி விடாது ஊசல் ஆட;
வார் அணங்கு முலை மடவார் கண்ணும், வண்டும்,
வண் துளவும், புயம் விடாது ஊசல் ஆட;
காரணங்கள்ஆய், அண்டர் அண்டம் எல்லாம்
கமலநாபியில் படைத்துக் காத்து அழிக்கும்
சீர் அணங்கு மணவாளர், ஆடிர் ஊசல்;
சீரங்க நாயகனுர், ஆடிர் ஊசல். 25

அடித்தலத்தில் பரிபுரமும் சிலம்பும் ஆட,
அணி மார்பில் கௌத்துவமும் திருவும் ஆட,
தொடித்தலத்தில் மணிவடமும் துளவும் ஆட,
துணைக் கரத்தில் சக்கரமும் சங்கும் ஆட,
முடித்தலத்தில் கருங் குழலும் சுரும்பும் ஆட,
முகமதியில் குறு வேர்வும் குழையும் ஆட,
கடித்தலத்தில் அரைநாணும் கலையும் ஆட—
காவிரி சூழ் அரங்கேசர் ஆடிர் ஊசல். 26

பரந்து அலைக்கும் பாற்கடலுள் பசுஞ் சூற் கொண்டல்
படிந்ததென, கிடந்தபடி படிமேல் காட்டி,
வரம் தழைக்க இரண்டு ஆற்றின் நடுவே தோன்றி,
மண் உலகை வாழவைத்த வளத்தைப் பாட—
புரந்தரற்கும் பெருமாளே, ஆடிர், ஊசல்;
போதனுக்கும் பெருமாளே, ஆடிர் ஊசல்;
அரன்தனக்கும் பெருமாளே, ஆடிர் ஊசல்;
அணி அரங்கப் பெருமாளே, ஆடிர் ஊசல். 27

உடு மாய, கதிர் உதிர, சண்ட வாயு
உலகு அலைப்ப, வடவை சுட, உததி ஏழும்
கெடுமாறு திரிதருகால், உயிர்கள் எல்லாம்
கெடாது வயிற்றுள் இருத்தும் கீர்த்தி,பாட—
நெடு மாயப் பிறவி எல்லாம் பிறந்து, இறந்து,
நிலத்தோடும், விசும்போடும், நிரயத்தோடும்,
தடுமாறித் திரிவேனை அருள்செய்து ஆண்ட
தண் அரங்க நாயகனுர், ஆடிர் ஊசல். 28

முருகன் உறை குறிஞ்சித் தேன் முல்லை பாய;
முல்லை நிலத் தயிர், பால், நெய், மருதத்து ஓட;
மருதநிலக் கொழும் பாகு நெய்தல்-தேங்க;
வரு புனல் காவிரி சூழ்ந்த வளத்தைப் பாட—
'கரு மணியே, மரகதமே, முத்தே, பொன்னே,
கண்மணியே, ஆர் உயிரே, கனியே, தேனே,
அருள்புரிவாய்' என்றவர்தம் அகத்துள் வைகும்
அணி அரங்க மாளிகையார், ஆடிர் ஊசல். 29

புண்டரிகத்தவன் தவம் செய்து, இறைஞ்சும் கோயில்;
புரி சடையோன் புராணம் செய்து, ஏத்தும் கோயில்;
பண்டு, இரவி குலத்து அரசர் பணிந்த கோயில்;
பரிந்து இலங்கைக்கோன் கொணர்ந்து, பதித்த கோயில்;
மண்டபமும், கோபுரமும், மதிலும், செம் பொன்
மாளிகையும், தண்டலையும், மலிந்த கோயில்;
அண்டர் தொழும் திரு அரங்கம் பெரிய கோயில்;
அமர்ந்து உறையும் பெருமானுர், ஆடிர் ஊசல். 30

அரு வரங்கள் தரு பராங்குசனே ஆதி
ஆழ்வார்கள் தம்பிரான், ஆடிர் ஊசல்;
இருவர் அங்க ஒளிக்கு அகலா இருள் அகற்றும்
எதிராசன் தம்பிரான், ஆடிர் ஊசல்;
தரு வரங்கள் நீள் பொழில் கூரத்து வேதா-
சாரியனுர் தம்பிரான், ஆடிர் ஊசல்;
திரு அரங்கத்து அணி அரங்கன் திருமுற்றத்துத்
தெய்வங்கள் தம்பிரான், ஆடிர் ஊசல். 31

உணராத மதலை இளங் குதலைச் சொல்லை,
உளம் உருகி, தந்தை தாய் உவக்குமாபோல்,
தணவாமல் கற்பிப்பார்தம் சொல் கேட்டு,
தத்தை உரைத்தத்தை ஆதரிக்குமாபோல்,
பண வாள் அரா முடிமேல் படி ஏழ் போற்றும்
பட்டர் திருத் தாட்கு அடிமைப்பட்ட காதல்-
மணவாளதாசன்தன் புன் சொல் கொண்ட
மதில் அரங்க மணவாளர், ஆடிர் ஊசல். 32

சீரங்க நாயகர் ஊசல் முற்றும்

5. திருவேங்கட மாலை

பொன்னும் மணியும் பொலிந்து ஓங்கி, பார்மகட்கு
மின்னும் மணி முடி ஆம் வேங்கடமே—மன்னும்
பரமபத நாட்டினன், பை அரவின் சூட்டில்
சிரம பதம் நாட்டினன், சேர்வு. 1

சோதி மதி வந்து தவழ் சோலைமலையோடு இரண்டு ஆய்,
மேதினியாள் கொங்கை நிகர் வேங்கடமே—போதில்
இருப்பாற்கு; அடல் ஆன், இபம், ஊர்ந்தாற்கு; எட்டாத்
திருப்பாற்கடலான் சிலம்பு. 2

மாலைக் கோலித் திரியும் வையகத்தோர்தம் பிறவி-
வேலைக்கு ஓர் வங்கம்ஆம் வேங்கடமே—சோலைத்
தரு மா தரை நட்டான், தண் முல்லை ஆயர்
தரும் மாதரை நட்டான், சார்பு. 3

நாலு திசைமுகமும் நண்ணுதலால், ஒண் கமலம்
மேல் உறலால், வேதா ஆம் வேங்கடமே—சால் உறையும்
மண் மயக் கம் தேற்று வித்தால் மாற்றுதல்போல், ஆரியனுல்
உள் மயக்கம் தேற்றுவித்தான் ஊர். 4

பாணி, பிறை, கொன்றை, பணி, சூடி; மான் ஏந்தி;
வேணி அரனைப் பொருவும் வேங்கடமே—ஆணி நிறப்
பீதாம்பரனுர், பிரமர் வாழ் அண்டங்கள்
மீது ஆம் பரனுர், விருப்பு. 5

மால்ஆய், சசி தழுவி, வச்சிரம் ஏந்தி, புகர் மா
மேல்ஆய், புரந்தரன்ஆம் வேங்கடமே—நாலாய்க்
கிளர் வாகு மந்தரத்தான், கேட்டு அமரர் வேட்டுத்
தளர்வு ஆகும் அந்தரத்தான், சார்பு. 6

வள்ளி புணர்ந்து, ஆறு முகம் மன்னி, மயில் மேற்கொளலால்,
வெள் இலை வேல் வேள் போலும் வேங்கடமே—உள்ளினரைத்
தங்க மலப் பார் வையான், தன் அடியார்மேல் வைக்கும்
செங்கமலப் பார்வையான், சேர்வு. 7

புள் அரவம், நீர் அரவம், போர் மா அரவம், அரு
வெள் அரவ வெற்பு ஆகும் வேங்கடமே—ஒள் அரிஆய்,
மா கன கம்பத்தினுர்; வாய், கண், கை, உந்தி, பதம்,
கோகனகம் பத்தினுர்; குன்று. 8

துய்ய செம்பொன் கோயில் சுடர் எறிப்ப, கண் முகிழ்த்து,
வெய்யவன் தேர் மா இடறும் வேங்கடமே—ஐ-இரு நூறு
ஆன முகப் பாம்பு-அணையார், ஆனிரைப்பின் ஊதிவரும்
கானம் உகப்புஆம் பணையார், காப்பு. 9

மாண்டு பிறக்கும் துயர் போய், வைகுந்தம் புக்கவரும்
மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடமே—பாண்டு மகன்
ஏறு இரதப் பாகனுர், ஏத்தும் அடியார் நாவில்
ஊறு இரதப் பாகு அனுர், ஊர். 10

கோலி, ஒரு நான்கு குலமறையும், நால்-திசையும்,
வேலி என, நின்று ஏத்தும் வேங்கடமே—வாலிதனை
நண்பா வையாது அரித்தான், ஞான முதலாழ்வார்கள்
வெண்பாவை ஆதரித்தான், வெற்பு. 11

தெள்ளியது ஓர் வீடு அருளும் சீர் கேட்டு, பொன்மலையும்
வெள்ளிமலையும் பணியும் வேங்கடமே—புள்ளின்
கொடி, வாகனத்தான்; குளிர்ந்து இருண்ட காரின்
வடிவு ஆகன்; நத்தான்; வரை. 12

எப் பூதலமும் இறைஞ்சி, திசை நோக்கி,
மெய்ப் பூசனை புரியும் வேங்கடமே—கொப்பூழ்
இலகும் முண்டகம் தர, தான் ஈன்று அளிக்கும் ஈர்-ஏழ்
உலகும் உண்ட கந்தரத்தான் ஊர். 13

நோவினையும், நோயினையும், நோய் செய் வினையினையும்,
வீவினையும் தீர்த்தருளும் வேங்கடமே—மூவினை செய்
மூவடிவுஆய்ப் பச்சென்றுன், முன்னுள்; அகலிகைக்குச்
சேவடி வாய்ப்பச் சென்றுன்; சேர்பு. 14

பித்து, மலடு, ஊமை, முடம், பேய், குருடு, கூன், செவிடு,
மெய்த் துயர் நோய் தீர்த்தருளும் வேங்கடமே—பத்தருக்கு
வந்த துக்கம் காப்பான்; மலர் உந்தியின் உலகம்
தந்து, அதுக்கு அங்காப்பான்; தலம். 15

வாடப் பசித்த வரி உழுவை வால் ஆட்டி,
மேடத்தைப் பார்த்து உறுக்கும் வேங்கடமே—கூடத்துக்
கம்ப வள மா வென்றுன், காசினிக்கும் வெண்ணெய்க்கும்
செம் பவளம் ஆவென்றுன், சேர்வு. 16

தாவி வரும் வானரங்கள் தண் குவட்டில் கற்கடகம்
மேவிவரக் கண்டு ஓடும் வேங்கடமே—காவிரி சூழ்
பொன்-திரு அரங்கத்தான்; போதன், சிவன் என்னும்
மற்று இருவர் அங்கத்தான்; வாழ்வு. 17

ஒண் சிந்துரத்தை வெறுத்து ஊடும் பிடிவேழம்
விண் சிங்கம் கண்டு, அணைக்கும் வேங்கடமே—எண்சிந்தைக்கு
ஓரா இருந்தான், ஒரு நாள் விதுரனுக்கு
வாரா விருந்தான், வரை. 18

மாது மடக் கன்னி கழை வந்து அணுக, கம்பத்தின்-
மீது நடிப்பாள் ஒக்கும் வேங்கடமே—ஊது குழற்
பாலன், பால் ஆக் குவித்தான், பஞ்சவர்க்கா நூற்றுவரைக்
காலன்பால் ஆக்குவித்தான், காப்பு. 19

மன்னு குடிக் குறவர் வான் ஊர் துலாத்திடையே
மின்னு மணி நிறுக்கும் வேங்கடமே—என் உள்
அரவிந்தப் போது அகத்தான், அன்பால் அழைத்த
கர விந்தப் போதகத்தான், காப்பு. 20

கொல்லைக் குறவர் குளிர் மதி மானைக் ககன
வில்லைக் குனித்து எய்யும் வேங்கடமே—கல்லை
அரிவை வடிவு ஆக்கினன், அன்னம்ஆய், வேத
விரிவை வடி வாக்கினன், வெற்பு. 21

தேன் ஏறி, தேன் வைக்கும் திண் கழைமேல் விண் மகர-
மீன் ஏறி, வேள் கொடிஆம் வேங்கடமே—வான், ஏறித்
தீ முக நாகத்து, இருப்பார்; சேவடிக்கு ஆள் ஆனவனைக்
காமுகனகத் திருப்பார்; காப்பு. 22

ஒண் கொம்பின் தேன்-இறால் ஊர் பிறைக் கோட்டால் உடைந்து,
விண் கும்ப வாய் நிறைக்கும் வேங்கடமே—வண் கும்ப
கம்பத்து ஆனைக்கு அடுத்தார், கார் அரக்கர் போர் மாளக்
கம் பத்தானைக் கடுத்தார், காப்பு. 23

கூனல் இள வெண் குருகு கோனேரியில் விசும்பு ஊர்
மீன நிழலைக் கொத்தும் வேங்கடமே—கானகத்துப்
பொன் ஆர் உழை எய்தார், 'பூங் கழலே தஞ்சம்' என
உன்னுருமை எய்தார், ஊர். 24

'மண் மூலம் தா' என்று மந்தி கடுவற்கு உரைப்ப,
விண்-மூலம் கேட்டு, ஏங்கும் வேங்கடமே—ஒண் மூல
வேதத்து இருக்கு-உழையார், வெய்யோன் இரண்டு அனைய
சீதத் திருக் குழையார், சேர்வு. 25

நால விட்ட பொன்-ஊசல் நன்னுதலார் உந்துதொறும்,
மேல் அவிட்டம் தொட்டு இழியும் வேங்கடமே—ஆலம் இட்ட
பொற்புக் களம் கறுத்தார் போர் சரிய, வாணன் தோள்-
வெற்புக்கள் அங்கு அறுத்தார் வீடு. 26

பால் நிறம் கொள் தெங்கின் இளம் பாளை விரிய, சுனையில்
மீன் இனம் கொக்கு என்று ஒளிக்கும் வேங்கடமே—வான் நிமிர்ந்த
வெள்ளத்துக் கப்பு ஆலான், மெய்ப் பரம யோகியர்தம்
உள்ளத்துக்கு அப்பாலான், ஊர். 27

கொம்பு அணியும் தே மாங் குயில் கருடன்போல் கூவ,
வெம் பணிகள் புற்று அடையுமீ வேங்கடமே—வம்பு அணியும்
விண்ணின் ஐந்து காப் பார்மிசை வைத்தார், பத்தரைத் தம்
உள் நினைந்து காப்பார், உவப்பு. 28

தெங்கு இளநீர் வீழச் சிதறும் மணியைக் கரிகள்
வெங் கனல் என்று அஞ்சிப் போம் வேங்கடமே—பைங் கழையின்
மாண் தாரைப் பண் தழைத்தார், மா மறையோன்பால் தோன்றி
மாண்டாரைப் பண்டு அழைத்தார், வாழ்வு. 29

அங்கு அயலில் மேகம் அதிர, பெரும் பாந்தள்
வெங் கயம் என்று அங்காக்கும் வேங்கடமே—பங்கயனேடு
அம் புவனங்கள் தந்தார், அம்புயத்து மங்கையொடு
வெம்பு வனம் கடந்தார், வெற்பு. 30

திங்கள் இருமாந்து உலவ, தீம் பாற்கவளம் என்று,
வெங் களிறு கை நீட்டும் வேங்கடமே—பொங்கு அமரில்
ஆர்த்த வலம்புரியார், ஆட்பட்டார் செய்த பிழை
பார்த்து அவலம் புரியார், பற்று. 31

அம்புலியில் வாழ் மான், அதிரும் குரற் பகுவாய்
வெம் புலியைக் கண்டு, ஏங்கும் வேங்கடமே—நம்பும் எனை
வீங்கு ஊத்தைக்கண் திருப்பார்; விண்ணோர், நரர் பிறந்து
சாம் கூத்தைக் கண்டு, இருப்பார்; சார்பு. 32

கண்ணால் வெடித்த கழைமுத்தம் கார் துளைத்து,
விண் ஆலியோடு உதிரும் வேங்கடமே—எண்ணார்
கலங்க வரும் அஞ்சனையார்-கான்முளையை ஊர்ந்தார்,
சலம் கவரும் மஞ்சு அனையார், சார்பு. 33

செல்லுக்கு மேல் செல்லும் திண்ணிய வேய், வாசவனார்
வில்லுக்கு வாளிஆம் வேங்கடமே—எல்லுக்குள்
அந்தகாரம் படைத்தார், ஆர் அழல் வாய் அம்பினால்
வெந்த கார் அம்பு அடைத்தார், வெற்பு. 34

பொன் கமழும் கற்பகத்தின் பூங் காவணத்துக்கு
மென் கமுகு அம் கால் ஆகும் வேங்கடமே—நன்கு அமரும்
ஊர் அத்திகிரியார், ஊதும் திகிரியார்,
வீரத் திகிரியார், வெற்பு. 35

தண் இலைக் கண் மூங்கில்-தலை தொடுத்த தேன் இறால்
விண் நிலைக்கண்ணாடிஆம் வேங்கடமே—உள் நிலைக்கும்
சோதி, வணம் கரியார், தூய சனகாதியரும்
ஓதி வணங்கரியார், ஊர். 36

தண் கமுகின் பாளை தடங் கதிரின் செல்வனுக்கு
வெண் கவரி போல் அசையும் வேங்கடமே—ஒண் கடல் சூழ்
வண் துவரை நாட்டினன், மத்தாக வாரிதியுள்
பண்டு வரை நாட்டினன், பற்று. 37

அங்கு அதிரும் கான் யாற்று அடர் திவலையால் நனைந்து,
வெங் கதிரும் தண் கதிர்ஆம் வேங்கடமே—செங் கதிர் வேற்
சேந்தன் ,அத்தம் ஐந்தான், திருத் தாதை விற்கு இளையாள்
பூந் தனத்து அமைந்தான் பொருப்பு. 38

சேண் உலவு திங்கள் எனும் சித்தசவேள் வெண்குடைக்கு
வேணு ஒரு காம்பு ஆகும் வேங்கடமே—கோணும் மனத்து
என்னை ஆளாக, தான் இன் அருள் செய்தான், கமல-
மின்னை ஆள் ஆகத்தான், வெற்பு. 39

தேவர்உடை ஐந் தருவின் செந் தேன்-இறால் கிழிய,
மீ வருடை பாய்கின்ற வேங்கடமே—மூவடி மண்
போய் இரந்தார், அத்தர், புனையும் ஒருபதினாறு-
ஆயிரம் தாரத்தர், அகம். 40

வன் குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென் குறிஞ்சித் தேன் மாறும் வேங்கடமே—நன்கு உறிஞ்சி,
பேய்த் தநம் சுவைத்தார்; பிறர்க்கு அமுது ஈந்து, ஈசனுக்கு
வாய்த்த நஞ்சு வைத்தார்; வரை. 41

வாவு கவின் மந்தி நுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவு கவி கைநீட்டும் வேங்கடமே—தாவு கடல்
வேவ, இலங்கைக்கு ஒண் தார் வீடணனை வைத்து, ஒழிந்தார்
சாவ வில் அங்கைக் கொண்டார் சார்பு. 42

வெள்ளிய கல்மீதே விடர் முளைத்த செங்காந்தள்
வெள்ளி அகல்-விளக்குஆம் வேங்கடமே—வெள்ளி எனும்
வேதியன் நாட்டம் கெடுத்தார், மேதினியைப் பாதலம் என்று
ஓது இயல் நாடு அங்கு எடுத்தார், ஊர். 43

அல்லி-மலர்க் காந்தளின்மேல் ஆடும் சுரும்பினங்கள்
மெல்லியலார் கைக் கழங்குஆம் வேங்கடமே—மல்லினரைப்
பண்டு அறைந்த வன் புடையார், பார்த்தனுக்குத் தத்துவநூல்
விண்டு அறைந்த அன்பு உடையார், வெற்பு. 44

காந்தள், இரவலர் போல், கை ஏற்ப, கொன்றை கொடை-
வேந்தன் எனப் பொன் சொரியும் வேங்கடமே—பூந் துளவின்
கான் மடங்கா மார்வத்தார், காண விரும்பினர்மேல்
நான் மடங்குஆம் ஆர்வத்தார் நாடு. 45

நாகத்தின்மேல் குறவர் நன்கு ஏறிந்த மாணிக்கம்
மேகத்தின் மின் புரையும் வேங்கடமே—மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார், வாய் உண்டு, உமிழ்ந்து, அளந்து,
காத்து, ஆண்ட மண்-தலத்தார், காப்பு. 46

செம் பதுமராகச் சிலை சூழ் பெரும் பாந்தள்
வெம் பரிதி ஊர்கோள்ஆம் வேங்கடமே—உம்பர் உலகு
ஓதத்தின் அப்பு உற, தான் ஓர் ஆலிலைத் துயின்றான்;
வேதத்தின் அப்புறத்தான்; வெற்பு. 47

கோல மணிப் பாறையில் பாய் கோடரங்கள் செங்கதிரோன்-
மேல் அனுமன் பாய்ந்தனைய வேங்கடமே—நாலு மறை
ஆய்ந்த பர தத்துவம் தான் ஆனான், குடம் ஆடல்
வாய்ந்த பரதத்து உவந்தான், வாழ்வு. 48

கொம்பின் இறால் வாங்க நிமிர் குஞ்சரக் கை அம்புலிமேல்
வெம்பி எழும் கோள் அரவுஆம் வேங்கடமே—தும்பி பல
போர் காதும் ஈர்ந் தார் புனை அரக்கி மூக்கினொடு
வார் காதும் ஈர்ந்தார் வரை. 49

வண்மை திகழ் வெண் பளிங்கு வட்டத்தில் கண்துயில் மான்
விண் மதியில் மான் ஏய்க்கும் வேங்கடமே—ஒண் மதியால்
நூலைத் தாம் ஓது அரனார் நோக்க அரியார், துளவ
மாலைத் தாமோதரனார், வாழ்வு. 50

சிலேடைகள்

காதல் இற்றுச் சார் தவர்க்கும், காமியத்தைச் சார்ந்தவர்க்கும்,
வேதனைக் கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே—போதகத்தை
மோதி மருப்பு ஒசித்தார், முன் பதினாறாயிரவர்
ஓதி மருப் பொசித்தார், ஊர். 51

கேள்வித் துறவோரும், கேடு அற இல் வாழ்வோரும்,
வேள்விக்கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து,
முன்பா, ரத முடித் தார் மொய் வேந்தர் வந்து அவிய,
வன் பாரதம் முடித்தார் வாழ்வு. 52

பொய்ஆம் வினையேனைப் போல்வாரும், அன்பரும், செய்
மெய்ஆம் வழுத்தேயும் வேங்கடமே—செய்யாள்
தனத்து வசப் பொற்பு உள்ளார், தானவரை மோதும்
சினத் துவசப் பொற்புள்ளார், சேர்வு. 53

கோடல் இலா உள்ளத்துக் கோது இல் அடியவரும்,
வேடரும், அங்கைவரை வெல் வேங்கடமே—மூடர்
மனம்ஆம் மனைக்கு ஒன்ருர், வன் கஞ்சன் என்னும்
சின மாமனைக் கொன்ருர், சேர்பு. 54

மொய் வதன மங்கையர்கள் முன்கையும், யோகியர்தம்
மெய் வயதும், அஞ்சுகம் ஆர் வேங்கடமே—பெய் வளையார்-
பால் திருப்பாது அஞ்சி வந்தார் பற்றினர் புன் பிறப்பை
மாற்று இருப் பாதம் சிவந்தார் வாழ்வு. 55

இல்லக் குறத்தியரும், யாக்கை நிலை வேட்டவரும்,
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப் பூவை வண்ணத்தான், போர் முகத்துச் செவ் வாய்
மதுப் பூ வை வள் நத்தான், வாழ்வு. 56

தேன் இயலும் கூந்தலார் செங் கரமும், மாதவத்தோர்
மேனியும், ஐயம்பொழியும் வேங்கடமே—ஞானியர்கள்
தாம் குறி எட்டு அக்கரத்தார், தாள் உரல்மேல் வைத்து வெண்ணெய்
தாங்கு உறி எட்டு அக் கரத்தார், சார்பு. 57

காண் ஐயிலார் சொற்கேட்ட கந்தருவரும், தவரும்,
வீணை இராகத்தை விடும் வேங்கடமே—கோணை
இருங் குண்டை ஒட்டினன் ஏற்பு ஒழித்தான், கூனி
மருங்கு உண்டை ஒட்டினன், வாழ்வு. 58

முந்நூல் மறையவர் நா, மூது அரம்பைமாரின் நடு,
மெய்ந் நூல் நலங்கவரும் வேங்கடமே—பொய்ந் நூலால்
அச் சமயக் கத்தினர் ஆதரிக்கத் தெய்வங்கள்
வைச்ச மயக்கத்தினர் வாழ்வு. 59

ஓதும் மறையோர் புறமும், உள்ளும், கலையின் அரு
மேதை அகலா இருக்கும் வேங்கடமே—கோதை குழல்
சுற்ருத தார் அணியார், தூய திருத் தாள் ஊன்றப்
பற்ருத தாரணியார், பற்று. 60

நன் முலை போல் வெண்-நகையார் நாயகர்மேல் வைத்த நெஞ்சும்,
மென் முலையும், கற்புரம் சேர் வேங்கடமே—முன் மலைந்து
தோற்ற மாரீசனர் தோற்றி, மாயம் புரிய,
சீற்றம் ஆர் ஈசனர் சேர்வு. 61

கூறும் கிளிமொழியார் கொங்கை என்றும் , கண் என்றும்,
வீறு மருப்பிணேசேர் வேங்கடமே—நாறும்
துளவ மலர்க் கண்ணியார், தொண்டாய்த் தமக்கு அன்பு
உள அமலர்க்கு அண்ணியார், ஊர். 62

மாதர் அம் பொன் மேனி வடிவும், அவர் குறங்கும்,
மீது அரம்பையைப் பழிக்கும் வேங்கடமே—பூதம் ஐந்தின்
பம்பர மா காயத்தார், பாடினுல் வீடு அருளும்
நம் பரமாகாயத்தார், நாடு. 63

கோள் கரவு கற்ற விழிக் கோதையர்கள் பொற்ருளும்,
வேள் கரமும், அம்பஞ்சு ஆர் வேங்கடமே—நீள் கரனர்,
தூடணனர், முத்தலேயார், துஞ்ச எய்து, துஞ்சாரைக்
கூடு அணனர்; முத்து அலேயார்; குன்று. 64

கோங்கைக் கோடு ஏறிக் குலுக்கும் அரியும் , கரியும்,
வேங்கைக் கோடாதரிக்கும் வேங்கடமே—பூங் கைக்குள்
மெய்த் தவளச் சங்கு எடுத்தார், மேகலே விட்டு அங்கை தலே
வைத்தவள் அச்சம் கெடுத்தார், வாழ்வு. 65

மாவில் குயிலும், மயிலும், ஒளிசெய்ய
மேவிப் புயல் தவழும் வேங்கடமே—ஆவிக்குள்
ஆன அருள் தந்து அடுத்தார், ஆன் நிரைக்காக் குன்று ஏந்தி
வான வருடம் தடுத்தார், வாழ்வு. 66

கானேடு அருவி கனகமும் முத்தும் தள்ளி,
மீனேவெனக்கொழிக்கும் வேங்கடமே—வானேர்கள்,
மேகன், அயன், அம் கொண்டு ஆர் வேணி அரன், காண்பு-அரியார்;
காக நயனம் கொண்டார்; காப்பு. 67

கண்டு அடைந்த வானவரும், காந்தள்-குல மலரும்,
விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே—தொண்டருக்கு
வை குந்தம் நாட்டான்; மருவு உருவம் ஈந்து, வைக்கும்
வைகுந்த நாட்டான்; வரை. 68

வாழ் அம்புலியினெடு வான் ஊர் தினகரனும்,
வேழங்களும், வலம் செய் வேங்கடமே—ஊழின்கண்
சற்று ஆயினும் இனி யான் சாராவகை அருளும்
நல் தாயினும் இனியான் நாடு. 69

தாட் கமலப் பூஞ் சுனேக்கும், சாயகங்கள் கொய்து திரி
வேட்கும், வடிவு இல்லா வேங்கடமே—வாட் கலியன்
நா வியப்புஆம் பாட்டினர், நச்சு மடுவைக் கலக்கித்
தாவி அப் பாம்பு ஆட்டினர், சார்பு. 70

ஆயும் துறவறத்தை அண்டினமுத் தண்டினரும்,
வேயும், கிளி விட்ட வேங்கடமே—தோயும்
தயிர்க்காத் தாம் கட்டுண்டார்; தாரணியில் தந்த
உயிர்க் காத்து, ஆங்கு அட்டு உண்டார்; ஊர். 71

தொண்டொடு மெய்யன்பு உடையார் தூய் மனமும், சந்தனமும்,
விண்டொடு பொற்பாம்பணைசேர் வேங்கடமே—தண்டொடு வாள்,
கோல் அமரும் கார்முகத்தார்; கோடு, ஆழியார்; குழையின்
கோலம் மருங்கு ஆர் முகத்தார்; குன்று. 72

கிட்டும் நெறி யோகியரும், கிள்ளைகளும், தம் கூடு
விட்டு மறுகூடு அடையும் வேங்கடமே—எட்டு மத
மா வென்று வந்தான் வர, 'நாளை வா; இன்று
போ' என்று உவந்தான் பொருப்பு. 73

மட்டு வளர் சாரலினும், மாதவத்தோர் சிந்தையினும்,
விட்டுமதி விளங்கும் வேங்கடமே—கட்டு சடை
நீர்க் கங்கை ஏற்றான் இரப்பு ஒழித்தான், நீள் குறள்ஆய்ப்
பார்க்கு அங்கை ஏற்றான், பதி. 74

புக்க அரு மாதவரும், பூ மது உண் வண்டினமும்,
மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே—உய்க்க எனை
அன்பதினால் ஆண்டார், அரிவையொடும் கான் உறைந்த
வன் பதினால் ஆண்டார், வரை. 75

தக்க மறையோர் நாவும், தண் சாரலின் புடையும்
மிக்க மனுவளையும் வேங்கடமே—அக்கு அரவம்
பூண்டார்க்கு மால் துடைத்தார்; பொங்கு ஓத நீர் அடைத்து,
மீண்டு ஆர்க்குமாறு உடைத்தார்; வெற்பு. 76

நீடு கொடுமுடியும், நீதி நெறி வேதியர்கள்
வீடும், மகம் மருவும் வேங்கடமே—கோடும்
கருத்துள் அவ மாலையார் காணமல் நின்ற
மருத் துளவ மாலையார் வாழ்வு. 77

சீதம் கொள் சாரலினும், சீர் மறையோர் இல்லிடத்தும்,
வேதங்களால் வளரும் வேங்கடமே—போதன்,
சிரித்துப் புரம் துடைத்தான், தேவரொடும் அண்டம்
விரித்து, புரந்து, உடைத்தான் வெற்பு. 78

நன் கோடு போலும் முலை நாரியரும், சண்பகத்தின்
மென் கோடும், கற்பகம் சேர் வேங்கடமே—வன் கோடு
கூர் இரு வராகனார்; கோகனகை, பூமி என்னும்
ஓர் இருவர் ஆகனார்; ஊர். 79

கோடு அஞ்சும் கோதையர்கள் கொங்கையினும், குஞ்சரத்தும்,
வேடன் சரம் துரக்கும் வேங்கடமே—சேடன் எனும்
ஓர் பன்னகத்திடம் தான் உற்ருன், இரணியனைக்
கூர் பல் நகத்து இடந்தான், குன்று. 80

நாரியர்தம் கூந்தலினும், நாலும் அருவியினும்,
வேரினறும் சாந்து ஒழுகும் வேங்கடமே—பாரினுளார்,
அற்ப சுவர்க்கத்தார், அறிவு-அரியார்; முன் மேய்த்த
நல் பசு வர்க்கத்தார்; நாடு. 81

மாதரார் கண்ணும், மலைச் சாரலும், காமர்
வேதமாற்கம் செறியும் வேங்கடமே—பாதம்ஆம்
போதைப் படத்து வைத்தார், போர் வளைய மாற்றரசர்
வாதைப்படத் துவைத்தார், வாழ்வு. 82

எத்திக்கும் காம்பும், எயினரும், ஆரத்தினையே
வித்திக் கதிர் விளைக்கும் வேங்கடமே—தித்திக்கும்
காரிமாறன் பாவார், காதலித்தார்தம் பிறவி-
வாரி மாறு அன்பு ஆவார், வாழ்வு. 83

பார் ஒடு கான்யாறும், பல் களிறும், நந்தவனம்
வேரோடலைத்தீர்க்கும் வேங்கடமே—கார் ஓதம்
சுட்ட கரு வில்-படையார், தொண்டரை மீண்டு ஏழு வகைப்
பட்ட கருவில் படையார், பற்று. 84

நன் காமர் வண்டினமும், நால் வாய் மத கரியும்,
மென் காமரமுழக்கும் வேங்கடமே—புன் காமம்
ஏவார், கழலார் எனது உளத்தில், என் தலை வை
பூ ஆர் கழலார், பொருப்பு. 85

பாம்பும், குளிர் சந்தின் பக்கத்தில் நிற்கின்ற
வேம்பும், மருத்துவக்கும் வேங்கடமே—காம்பு கரம்
ஆன வரை நன் குடையார், ஆளாய்த் தொழுது ஏத்தும்
மானவரை நன்கு உடையார், வாழ்வு. 86

சாரும் அருவி தவழ் சாரலும், செஞ் சந்தனத்தின்
வேரும், அரவம் அரு வேங்கடமே—நேரும்
மது கையிடவர்க் கறுத்தார், மா மலரோன் சாபம்
மதுகை இடவர்க்கு அறுத்தார், வாழ்வு. 87

மண்மட்டுத் தாழ் சுனையும், வட்டச் சிலாதலமும்,
விண்மட்டுத் தாமரை சேர் வேங்கடமே—'எண் மட்டுப்
பாதம் உன்னி நைந்தார் பரமபதம் சேர்க' என்று
போத முன் நினைந்தார் பொருப்பு. 88

போதா இரு சுடரும் போதுதற்கும், ஓதுதற்கும்,
வேதாவினுல் முடியா வேங்கடமே—மாதாவின்
வீங்கு தனத்துக்கு இனி யான் விம்மி அழாது ஆட்கொண்டான்,
தாங்கு தன் நத்துக்கு இனியான், சார்பு. 89

பேய்க்கும் ஒரு பேய் போன்று பித்து ஆய்த் திரிவோர்க்கும்,
வேய்க்கும், அணிமுத்திவரும் வேங்கடமே—வாய்க்கு அமுது ஊர்
வண்மைப் பேர் ஆயிரம் தான் மன்னினுன், மாவலிபால்
தண்மைப் பேராய் இரந்தான், சார்பு. 90

வாழ்க்கை மனே நீத்தவரும், வாளரியும், மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே—தோள்-கை விழ
மா கவந்தனேக் கழித்தார், வாழ் இலங்கைப் பாதகரை
லோக வந்தனேக்கு அழித்தார், ஊர். 91

கூட்டு தவத்தவரும், கோளரிகளின் தொகையும்,
வேட்டுவரம்பொழியும் வேங்கடமே—மோட்டு மதத்
தந்திக்கு அமலத்தார்தாம் பெறுஉம் வீடு அளித்தார்,
உந்திக் கமலத்தார், ஊர். 92

வஞ்சம் மடித்திருப்பார் வாக்கும், கலேக் கோடும்,
விஞ்ச மடித்திருக்கு ஆர் வேங்கடமே—கஞ்சப்
பிரமா நந்த, தான் பிரபஞ்சம் மாய்த்த
பரமாநந்தத்தான் பதி. 93

சேல் அஞ்சும் கண் மடவார் தேம் குழலும், கோங்கினமும்,
மேலஞ்சுவர்க்கம் ஆர் வேங்கடமே—கோலம் சேர்
மாரில் அலங்கு ஆரத்தார், மற்றும் பல் பூண் அ்ணிந்த
காரில் அலங்காரத்தார், காப்பு. 94

கொய்யும் மலர்ச் சோலேக் கொக்கும், பிணியாளர்
மெய்யும், வடுத்தவிரும் வேங்கடமே—நையும்
சனனுந்தகனுர், தலேயிலி தோள் சாய்த்த
சின நாந்தகனுர், சிலம்பு. 95

நேர்க் கவலே நோயினரும், நீடு சிலே வேடுவரும்,
வேர்க்கவலே மூலம்கல் வேங்கடமே—கார்க் கடல்மேல்-
தாண்டும் காலத்து இறப்பார்தம்மை விழுங்கி, கனிவாய்
மீண்டும் காலத் திறப்பார் வெற்பு. 96

தண் தாமரைச் சுனேயில் சாதகமும், வேடுவரும்,
விண்டாரை நாடுகின்ற வேங்கடமே—தொண்டு ஆக்கி
ஏவத் தனக்கு உடையார் என்னே, முன்நாள் எடுத்த
கோவத்தனக் குடையார், குன்று. 97

வாழ் அரியும், சந்தனம் தோய் மாருதமும், தாக்குதலால்
வேழமருப்புகுதும் வேங்கடமே—நீழல் அமர்
பஞ்சவடி காட்டினன், பார் அளப்பான் போல் எவர்க்கும்
கஞ்ச அடி காட்டினன், காப்பு. 98

எவ்விடமும் ஆறு தோய்ந்து எல்லோரும், பல் பாம்பும்,
வெவ்விடரின் நீங்கி எழும் வேங்கடமே—தெவ் விடை ஏழ்
அட்டவன், நாகத்து அணையான், ஆதி மறைநூல் மார்க்கம்
விட்டவன் ஆகத்து அணையான், வெற்பு. 99

பாடும் மதுகரமும், பச்சைத்தழைக் குடிலின்
வேடும், மணம் மருவும் வேங்கடமே—நீடு
மகராலயம் கடந்தார், வாழ் வசுதேவர்க்கு
மகர், ஆலயங்கள் தந்தார், வாழ்வு. 100

திருவேங்கட மாலை முற்றும்

6. திருவேங்கடத்து அந்தாதி

திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன; சிற்றன்னையால்
தரு வேம் கடத்துத் தரைமேல் நடந்தன; தாழ் பிறப்பின்
உருவேங்கள் தத்துக்கு உளத்தே இருந்தன; உற்று அழைக்க,
'வருவேம், கடத் தும்பி! அஞ்சல்' என்று ஓடின—மால் கழலே. 1

மாலை மதிக் குஞ்சி ஈசனும், போதனும், வாசவனும்,
நூலை மதிக்கும் முனிவரும், தேவரும், நோக்கி; அந்தி,
காலை, மதிக்குள் வைத்து ஏத்தும் திருமலை—கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான் உறை திருவேங்கடமே. 2

வேங்கட மாலை அவியா மதிவிளக்கு ஏற்றி, அங்கம்
ஆம் கடம் ஆலயம் ஆக்கி வைத்தோம்; அவன் சேவடிக்கே,
தீங்கு அட, மாலைக் கவி புனைந்தோம்—இதின் சீரியதே,
யாம் கட மால் ஐயிராவதம் ஏறி இருக்குமதே ? 3

இருக்கு ஆரணம் சொல்லும் எப் பொருள் இன்பமும், எப்பொருட்கும்
கருக் காரணமும், நல்-தாயும் நல்-தந்தையும், கஞ்சச் செல்வப்
பெருக்கு ஆர் அணங்கின் தலைவனும், ஆதிப் பெருந் தெய்வமும்—
மருக் கார் அணவும் பொழில் வட வேங்கட மாயவனே. 4

மாயவன், கண்ணன், மணிவண்ணன், கேசவன், மண்ணும் விண்ணும்
தாயவன், கண் நன் கமலம் ஒப்பான், சரத்தால் இலங்கைத்
தீய வன்கண்ணன் சிரம் அறுத்தான், திருவேங்கடத்துத்
தூயவன்கண் அன்புடையார்க்கு வைகுந்தம் தூரம் அன்றே. 5

தூர இரும் புண் தரிக்கும் இக் காயத்தைச் சூழ் பிணிகாள்!—
நேர் அவிரும் புண்டரர்க்கு அருள்வான், நெடு வேங்கடத்தான்,
ஈர இரும் புண்டரீகப் பொற்பாதங்கள் என் உயிரைத்
தீர இரும்பு உண்ட நீர் ஆக்குமாறு உள்ளம் சேர்ந்தனவே. 6

சேர்ந்து, கவிக்கும் முடி கவித்தாய்! சிறியேன் இதயம்
சார்ந்து உகவிக்கும் வரம் அளித்தாய்! கொண்டல் தண்டலைமேல்
ஊர்ந்து கவிக்கும் வடமலையாய்! பஞ்சு ஒழுக்கிய பால்
வார்ந்து உக விக்கும் பொழுதில், 'அஞ்சேல்' என்று வந்தருளே. 7

'வந்திக்க, வந்தனை கொள்' என்று கந்தனும் மாதவரும்
சிந்திக்க வந்தனை; வேங்கட நாத! பல் சீவன் தின்னும்
உந்திக் கவந்தனைச் செற்றாய்! உனக்கு உரித்தாய பின்னும்,
புந்திக்கு அவம்தனைச் செய்து ஐவர் வேட்கை பொரும், என்னையே! 8

பொரு தரங்கத்தும், வடத்தும், அனந்தபுரத்தும், அன்பர்
கருது அரங்கத்தும், துயில் வேங்கடவ! கண்பார்த்தருள்வாய்—
நிருதர் அங்கத்து நிறம் போல் வரும் அந்தி நேரத்து, அன்றில்
ஒரு தரம் கத்தும் பொழுதும் பொருள், என் ஒரு வல்லியே! 9

ஒரு மாது அவனி, ஒரு மாது செல்வி, உடன் உறைய;
வரும் ஆதவனின் மகுடம் வில் வீச; வடமலைமேல்
கரு மாதவன், கண்ணன், நின்பால் திரு நெடுங் கண்வளர்கைக்கு
அரு மா தவம் என்ன செய்தாய், பணி எனக்கு, அம்புதியே? 10

அம்பரம் தாமரை பூத்து அலர்ந்தன்ன அவயவரை,
அம் பரந்தாமரை, அஞ்சன வெற்பரை, ஆடகம்ஆம்
அம்பரம் தாம் அரை சூழ்ந்தாரை—வாழ்த்திலர், ஐம்புலன்ஆம்
அம்பரம் தாம் மரை போல் திரிவாரை அகல் நெஞ்சமே! 11

நெஞ்சு உகந்தத்தை உமக்கு உரைத்தேன்; இற்றை நீடு இரவு ஒன்று
அஞ்சு உகம் தத்தை விளக்கும்; என் ஆசை அது ஆம்; இதழ், சொல்,
கிஞ்சுகம் தத்தை அனையீர்! இங்கு என்னைக் கெடாது, விடும்—
விஞ்சு கந்தத்தை விளக்கும் துழாய் அண்ணல் வேங்கடத்தே. 12

வேங்கடத்து ஆரையும் ஈடேற்ற நின்றருள் வித்தகரைத்
தீங்கு அடத் தாரைப் புனைந்து ஏத்திலீர்—சிறியீர்!—பிறவி
தாம் கடத்தாரை, 'கடத்தும்' என்று ஏத்துதிர்: தாழ் சுயத்துள்
ஆம் கடத் தாரை விலங்கும் அன்றோ சொல்லிற்று, ஐயம் அற்றே? 13

ஐயா! துவந்தனை நாயேனை, அஞ்சன வெற்ப! என்றும்
கையாது உவந்தனை; நின்னை அல்லால், கண்ணுதல் முதலோர்
பொய்யாது வந்து அனையார் முகம் காட்டினும், போற்றி உரை
செய்யாது, வந்தனைபண்ணுது, வாக்கும் என் சென்னியுமே. 14

சென்னியில் அங்கை குவிக்கும்; உயிர்க்கும்; திகைக்கும்; நின்னை
உன்னி இலங்கு ஐயில்-கண் உறங்காள்—உயர் வீடணனை,
'மன்னி இலங்கையில் வாழ்க' என்ற வேங்கடவாண!—மற்று ஓர்
கன்னி இலம்; கைக்கில், நின் பேர் கருணைக்கடல் அல்லவே. 15

கட மா மலையின் மருப்பு ஒசித்தாற்கு, கவி நடத்தத்
தடம்ஆம் அலை வற்ற வாளி தொட்டாற்கு, என் தனி நெஞ்சமே,
வட மாமலையும், திருப்பாற்கடலும், வைகுந்தமும் போல்
இடம் ஆம்—அலைவு அற்று நின்றும், கிடந்தும், இருப்பதற்கே. 16

இருப்பது, அனந்தனில், எண்ணல் இல் வைகுந்தத்து, என்பர்; வெள்ளிப்
பருப்பதன், அம் தண் மலரோன், அறிகிலர்—பார் அளந்த
திருப் பதன், நந்தன் மதலை நிற்கும் திருவேங்கடம் என்
பொருப்பு-அது, அனந்தல் தவிர்ந்து, உயிர்காள்! தொழப் போதுமினே. 17

போதார் அவிந்த வரையும் புகா அண்ட புற்புதத்தின்
மீது ஆர, இந்த வினை தீர்க்க வேண்டும்—மண் விண்ணுக்கு எல்லாம்
ஆதார! இந்தளம் தேன் பாடும் வேங்கடத்து அப்ப! நின் பொற்
பாதாரவிந்தம் அல்லால், அடியேற்கு ஒரு பற்று இலையே. 18

பற்றி இராமல் கலைபோய் வெளுத்து, உடல் பாதி இரா
வற்றி, இராப் பகல் நின் கண் பனி மல்கி, மாசு அடைந்து,
நிற்றி, இராக மொழிச்சியைப்போல் : நெடு வேங்கடத்துள்
வெற்றி இராமனை வேட்டாய்கொல், நீயும்? சொல்—வெண்மதியே! 19

மதி ஆதவன் கதிர் மின்மினிபோல் ஒளிர் வைகுந்தம் தா-
மதியாது அவன் தர வாழ்ந்திருப்பீர்—வட வேங்கடவன்,
மதியாத வன் கடத்துள் தயிர் வாய் வைத்த மாயப் பிரான்,
மதியாதவன் உரம் கீண்டான், கழல் சென்னி வைத்திருமே. 20

இருபது மந்தரத் தோளும், இலங்கைக்கு இறைவன் சென்னி
ஒருபதும், அந்தரத்தே அறுத்தோன், அப்பன், உந்தி முன்நாள்
தரு பதுமம் தர வந்தன—நான்முகன்தான் முதலா
வரு பதுமம் தரம் ஒத்த பல் சீவனும், வையமுமே. 21

வையம் அடங்கலும் ஓர் துகள்; வாரி ஒரு திவலை;
செய்ய மடங்கல் சிறு பொறி; மாருதம் சிற்றுயிர்ப்பு;
துய்ய மடங்கல் இல் ஆகாயம்தான் விரல் தோன்றும் வெளி—
வெய்ய மடங்கல் வடிவு ஆன வேங்கட வேதியற்கே. 22

வேதா, வடம் அலை வெங் காலன், கையில் விடுவித்து; என்னை
மாதா வடம் அலை கொங்கை உண்ணாது அருள்—மண் அளந்த
பாதா! வடம் அலைமேல் துயின்றாய்! கடற் பார்மகட்கு
நாதா! வடமலையாய்! அலர்மேல்மங்கை நாயகனே! 23

நாயகராத் திரியும் சில தேவர்க்கு நாண் இலைகொல்—
தூய கராத்திரி, 'மூலம்' எனாமுனம், துத்திப் பணிப்
பாயக ராத்திரி மேனி அம்மான், பைம் பொன் வேங்கடவன்,
தீய கராத் திரி சக்கரத்தால் கொன்ற சீர் கண்டுமே? 24

கண்டவன், அந்தரம், கால், எரி, நீர், வையம்; காத்து, அவை மீண்டு
உண்டவன்; அம் தரங்கத்து உறைவான்; உயர் தந்தை, தமர்,
விண்டவன்; அந்தர மேலவன்; வேங்கட மால் அடிமை
கொண்ட அனந்தரத்து, உம் பேர் நினைக்கவும் கூற்று அஞ்சுமே. 25

அஞ்சு அக்கர வட மூலத்தன், போதன், அறிவு-அரிய
செஞ் சக்கர வட வேங்கட நாதனை—தேசத்துள்ளீர்!—
நெஞ்சக் கரவடம் நீக்கி இன்றே தொழும்: நீள் மறலி
துஞ்சக் கர வடம் வீசும் அக்காலம் தொழற்கு அரிதே. 26

தொழும்பால் அமரர் தொழும் வேங்கடவன், சுடர் நயனக்
கொழும் பாலனை ஒரு கூறு உடையான், நந்தகோபன் இல்லத்து
அழும் பாலன் ஆகிய காலத்து, பேய்ச்சி அருத்து நஞ்சைச்
செழும் பால்-அமுது என்று உவந்தாற்கு என் பாடல் சிறக்கும் அன்றே? 27

சிறக்கும் பதம் தருவார், திருவேங்கடச் செல்வர்; செய்ய
நிறக்கும் பதம் தொழுது உய்ய எண்ணீர்—நெறியில் பிழைத்து,
மறக் கும்ப தந்தியும், சேலும், அசுணமும், வண்டினமும்,
பறக்கும் பதங்கமும் போல், ஐவரால் கெடும் பாதகரே! 28

பாதம் அரா உறை பாதளத்தூடு, பகிரண்டத்துப்
போது அமர் ஆயிரம் பொன்முடி, ஓங்கப் பொலிந்து நின்ற
நீ தமர் ஆனவர்க்கு, எவ்வாறு—வேங்கடம் நின்றருளும்
நாத! மராமரம் எய்தாய்!—முன் கோவல் நடந்ததுவே? 29

'நடைக்கு—அலங்கார மடவார்—விழிக்கு, நகைக்கு, செவ்வாய்க்கு,
இடைக்கு, அலங்கு ஆர முலைக்கு, இச்சையான இவன்' என்று, என்னை,
படைக்கலம் காணத் துரந்தே, நமன் தமர், பற்றும் அன்றைக்கு
அடைக்கலம்காண்—அப்பனே! அலர்மேல்மங்கை அங்கத்தனே! 30

அங்கம் அலைக்கும் வினையால் அலமரவோ, உனக்கும்
அம் கமலைக்கும் அடிமைப்பட்டேன்?—அரவு ஆன பரி-
அங்க, மலைக்குடையாய், அக் கராவுடன் அன்று அமர்செய்
அங்க மலைக்கு முன் நின்றருள் வேங்கடத்து அற்புதனே! 31

அற்ப ரதத்து மடவார் கலவியும், ஆங்கு-அவர்கள்
நல் பரதத்து நடித்தலும், பாடலும், நச்சி நிற்பார்
நிற்ப; ரதத்துக் கதிர் தோயும் வேங்கடம் நின்றருளும்
சித் பரதத்துவன் தாள் அடைந்தேன், முத்தி சித்திக்கவே. 32

'சித்திக்கு வித்து அதுவோ, இதுவோ?' என்று தேடி, பொய்ந்நூல்
கத்திக் குவித்த பல் புத்தகத்தீர்! கட்டுரைக்க வம்மின்—
'அத்திக் கு இத்தனையும் உண்ட வேங்கடத்து அச்சுதனே
முத்திக்கு வித்தகன்' என்றே சுருதி முறையிடுமே. 33

முறையிடத் தேவர் இலங்கை செற்றான், முது வேங்கடத்துள்
இறை, இடத்தே சங்கு உடையான், இனி, என்னை ஆண்டிலனேல்,
தறையிடத்தே உழல் எல்லாப் பிறவிதமக்கும் அளவு
உறையிடத் தேய்ந்திடும், இவ் அந்திவானத்து உடுக் குலமே. 34

உடுக்கும் உடைக்கும், உணவுக்குமே உழல்வீர்! இனி நீர்
எடுக்கும் முடைக் குரம்பைக்கு என் செய்வீர்? இழி மும் மதமும்
மிடுக்கும் உடைக் குஞ்சரம் தொட்ட வேங்கட வெற்பர் அண்ட
அடுக்கும் உடைக்கும் அவர்க்கு ஆட்படுமின், அனைவருமே. 35

வரும் மஞ்சு அனவன் ஒருவனையே உன்னி வாழ்த்தும்—தொண்டீர்!
கருமம் சனனம் களைந்து உய்யவேண்டில்: கருதிற்று எல்லாம்
தரும் அஞ்சன வெற்பன் தாள்-தாமரையைச் சதுமுகத்தோன்
திருமஞ்சனம் செய் புனல் காணும், ஈசன் சிரம் வைத்ததே. 36

'சிரம் தடிவான் இவனோ?' என்று அயன் வெய்ய தீய சொல்ல,
கரம் தடி வான் தலை கவ்வ, பித்து ஏறலின், கண்ணுதலோன்
இரந்து அடி வீழ, துயர்தீர்த்த வேங்கடத்து எந்தைகண்டீர்—
புரந்து அடியேனைத் தன் பொன்-அடிக்கீழ் வைக்கும் புண்ணியனே. 37

புண்ணியம், காமம், பொருள், வீடு, பூதலத்தோர்க்கு அளிப்பான்
எண்ணி, அம் காமன் திருத் தாதை நிற்கும் இடம் என்பரால்—
நண்ணி அங்கு ஆம் அன்பரைக் கலங்காத் திருநாட்டு இருத்தி,
மண் இயங்காமல் பிறப்பு அறுத்து, ஆளும் வடமலையே. 38

வடம், அலை அப் பன்னகம், சேர்ந்தவன்; இடைமங்கை கொங்கை
வடம் அலையப் பன்-அரும் போகம் துய்த்தவன்; மாயன்; கண்ணன்;
வடமலை அப்பன்—அடி போற்றி ஐவர் மயக்கு கர-
வடம் அலையப் பன்னிரு நாமம் நாவின் மலக்குவனே. 39

மலங்கத் தனத்தை உழன்று ஈட்டி, மங்கையர் மார்பில் வடம்
அலங்கத் தனத்தை அணைய நிற்பீர்! அப்பன், வேங்கடத்துள்
இலங்கு அத்தன், அத்தை மகன் தேரில் நின்று, எதிர் ஏற்ற மன்னர்
கலங்க, தன் நத்தைக் குறித்தானைப் போற்றக் கருதுமினே. 40

கருத்து ஆதரிக்கும் அடியேனைத் தள்ளக் கருதிக்கொலோ,
திருத்தாது அரிக்கும் ஐவர்க்கு இரை ஆக்கினை?—செண்பகத்தின்
மருத் தாது அரிக்கும் அருவி அரு வட வேங்கடத்துள்
ஒருத்தா!—தரிக்கும்படி எங்ஙனே, இனி உன்னை விட்டே? 41

உன்னை, கரிய மிடற்றன், அயன் முதல் உம்பர் எல்லாம்
பொன்னைக் கரி ஒத்த போதும், ஒவ்வார்—புகழ்க் கோசலைஆம்
அன்னைக்கு அரிய முத்தே! அப்பனே!—உன்னை அன்றி, பின்னை,
முன்னைக் கரி அளித்தாய்க்கு, உவமான மொழி இல்லையே. 42

இல்லைக் கண்டீர் இன்பம்; துன்பம் கண்டீர்—கண்ட ஏந்திழையார்
சொல்லை, கண்டு, ஈர் அமுது, என்னும் தொண்டீர்!—தொல் அசுரன் நிறம்
கல் ஐக் கண்டீரவத்தை, திருவேங்கடக் காவலனை,
மல்லைக் கண் தீர்தரத் தேய்த்தானை, வாழ்த்துமின், வாழுகைக்கே. 43

கைத் தனு மோடு இசை வெற்பு எனக் காண, வெவ் வாணன் என்னும்
மத்தன் நுமோடு இகல் செய்வன் என்றே வந்து, வை உறு வேல்
அத்தனும், மோடியும், அங்கியும், ஓட; என் அப்பனுக்குப்
பித்தனும் ஓடினன்—அங்கத்துத் தான் என்றும் பெண்ணன் என்றே. 44

பெண் ஆக்குவிக்கச் சிலைமேல் ஒரு துகள் பெய்த பொற்றாள்
அண்ணாக்கு விக்கல் எழும்போது எனக்கு அருள்வாய்—பழிப்பு
நண்ணாக் குவிக் கச்சு இள முலைப் பூமகள் நாயகனே!
எண் ஆக் குவிக்கக் குழல் ஊதும் வேங்கடத்து என் கண்ணனே! 45

கண் நனையேன்; நெஞ்சு உருகேன்; நவை கொண்டு என் கண்ணும் நெஞ்சும்
புண் அனையேன், கல் அனையேன்; என்றாலும், பொற் பூங்கமலத்
தண் அனையே நல்ல சார்வாக வேங்கடம் சார்ந்து, மணி
வண்ணனையே அடைந்தேற்கு இல்லையோ, தொல்லை வைகுந்தமே?

வை குந்தம் ஆய விழி மாதர் வேட்கையை மாற்றி, என்னை
வைகும் தம் ஆய வினை நீக்கிய முத்தர்மாட்டு இருத்தி-
வை—குந்தம் மாய ஒசித்தாய், வட திருவேங்கடவா,
வைகுந்த மாயவனே, மாசு இலாத என் மாமணியே! 47

மணி ஆழி வண்ணன் உகந்தாரைத் தன் வடிவு ஆக்கும் என்றே
துணி ஆழிய மறை சொல்லும்; தொண்டீர்! அது தோன்றக் கண்டோம்:
பணி யாழின் மென்மொழி மாலாகி, பள்ளி கொள்ளாமல், சங்கோடு
அணி ஆழி நீங்கி நின்றாள், வேங்கடேசனை ஆதரித்தே. 48

ஆதரிக்க, பட்ட வாள் நுதல் மங்கையர்; அங்கைமலர்-
மீ தரிக்கப்பட்ட நின் அடியே—வெள் அருவி செம் பொன்
போது அரிக்கப் பட்டம் சூழ் வேங்கட வெற்ப!—போர் அரக்கர்
தீது அரிக்க, பட்ட கானகத்தூடு, அன்று, சென்றதுவே! 49

சென்ற வனத்து, அத்தை மைந்தரை வாழ்வித்து, தீய மன்னர்
பொன்ற அனத்தத்தைச் செய்த பிரான்; புகழ் வேங்கடத்துள்
நின்றவன்; அத்தத்து ஐஆயுதன்; பாதத்து என் நேசம் எல்லாம்
ஒன்ற—வனத் தத்தைகாள்!—உரையீர்: அறம் உண்டு உமக்கே. 50

உண்ட மருந்து கைக்கும்—அன்னைமீர்!—மதன் ஓர் ஐந்து அம்பும்
கொண்டு அமர் உந்துகைக்கும் குறுகாமுனம், கொவ்வைச் செவ் வாய்
அண்டம் அருந்துகைக்கும் திறந்தான் அப்பன்போல், பரியும்
எண் தமரும் துகைக்கும் பொடி காப்பு இடும், இன்று, எனக்கே. 51

எனக்குப் பணியப் பணி ஒருகால்; இரு காலும் நல்க
உனக்குப் பணி; இங்கு இருவேம் பணியில், என் ஓர் பணியும்
நினக்குப் பணிவித்துக்கொண்டு, உன் பணி நீ பணித்திலை, என்-
தனக்கு—பணிவெற்பின்மீது ஓங்கி நின்ற தனிச்சுடரே! 52

தனித் தொண்டை மா நிலத்தே புரிவார்க்கு அருள்தாள் உடையாய்!
தொனித் தொண்டை மான் நெடு வாய் பிளந்தாய்! துங்க வேங்கடவா!
முனித் தொண்டைமான் கையில் சங்கு, ஆழி, நல்கி; என் மூரல் செவ் வாய்க்
கனித் தொண்டை மான் கையில் சங்கு, ஆழி, கோடல் கருமம் அன்றே.

கரு மாதவா! இருந்து, ஆவன செய்து, என் கருத்து, இருளைப்
பொரும் ஆதவா! விருந்தாவனத்தாய்! பொற் சவரி என்னும்
ஒரு மாது அவா விருந்தா! வனக் கா உயர்வேங்கடத்து எம்
பெருமா! தவா இரும் தாவு அனல் ஏயும், பிறைக்கொழுந்தே. 54

'பிறை மாலையால் ஒரு பேதை நைந்தாள்; அந்தப் பேதைக்கு நின்
நறை மாலை தா!' என்று மானிடம் பாடிய நாவலர்காள்!
நிறை மாலை அற்று, கவி மாலையால் நினையீர்—திருவெள்-
ளறை மாலை, வேங்கடத்தே உறை மாலை, அரங்கனையே. 55

அரங்கம், குடந்தை, குருகூர், குறுங்குடி, அட்டபுய -
கரம், கண்ணமங்கை, நறையூர், கடல் மல்லை, கச்சி, கண்ண-
புரம், கண்டியூர், தஞ்சை, மாலிருஞ்சோலை, புல்லாணி, மெய்யம்,
தரங்கம், பரமபதம்—வேங்கடேசற்குத் தானங்களே. 56

தான அல் நாக மருப்பு ஒசித்தானுக்கு, தான் உகந்தது-
ஆன வல் நாக முடியில் நின்றானுக்கு, தாள் வணங்காத்
தானவன் ஆகம் இடந்தானுக்கு, ஆள் என்று தன்னை எண்ண,
தான் அவனாக நினைந்திருப்பாற்கு என்றும் தான் அவனே. 57

தானவர் ஆகம் தடிவார் வடமலைத் தண் அம் துழாய்
ஞான வராகர் தரும் அண்டம் யாவையும், நண்ணி, அவர்
கால் நவ ராக விரல்தோறும், அத்திக் கனியின், வைகும்;
வானவர் ஆக இருப்பார் அவற்றுள் மசகங்களே. 58

மசகம் தரம் என்னல்ஆய், நிலையா உடல் வாழ் உயிரை
அச கம் தர வல்லதோ?—அன்னைமீர்!—அண்டம் உண்டு உமிழ் வா-
ரிச கந்தர வண்ணர், வேங்கட வாணர், இலங்கையர் கோன்
தெச கந்தரம் அறுத்தார், திருப்பேர் சொல்லும், தீங்கு அறவே. 59

தீங்கு அட மால் அத்திமுன் நின்று, காலிப்பின் சென்ற கொண்டல்
வேங்கட மால், கழலே விரும்பார்; விலைமாதர் முலை-
ஆம் கடம் மால் செய, மாலாய், அவர் எச்சில் ஆகம் நச்சி,
தாங்கள் தமால் அழிவார்: இருந்தாலும், சவப் பண்டமே. 60

பண்டை இருக்கும் அறியாப் பரமபதத்து, அடியார்-
அண்டை இருக்கும்படி வைக்கும் அப்பனை; அண்டத்துக்கும்
தண்டையிருக்கும் மலர்ந்த செவ் வாயனை; தாள் வணங்கா
மண்டையிருக்கும் விடுமோ, சனன மரணமுமே? 61

மரணம் கடக் குஞ்சரம் நீங்க வாழ்வித்து, வல் அரக்கர்
முரண் அங்கு அடக்கும் சர! வேங்கடவ! கண் மூடி அந்தக்-
கரணம் கடக்கும் சரமத்து, நீ தருகைக்கு, எனக்கு உன்
சரணம் கடக்கும் சரண் வேறு இலை; தந்து, தாங்கிக்கொள்ளே. 62

தாங்கு அடல் ஆழி, வளை, தண்டு, வாள், வில்லில், தானவரை
ஈங்கு அட, வீசி, குறித்து, அடித்து, துணித்து, எய்து, வெல்லும்
பூங்கடல் வண்ணன் நிலை, கிடை, வந்தது, போக்கு, இருப்பு—
வேங்கடம், வேலை, அயோத்தி, வெங் கானகம், விண்ணுலகே. 63

உலகம் தர உந்தி பூத்திலையேல், சுடர் ஓர் இரண்டும்,
இலகு அந்தரமும், புவியும், எங்கே? அயன், ஈசன், எங்கே?
பல கந்தரமும் உணவும் எங்கே? பல் உயிர்கள் எங்கே?—
திலகம் தரணிக்கு என நின்ற வேங்கடச் சீதரனே! 64

சீ வார் கழலை இரண்டையும் செப்பு என்று, தீங்கு உளவி-
னுவார், கழலைப் பயில் செங் கையார் நலம் பேணும் ஐவர்
ஆவார் கழல் ஐ-இரண்டாம் அவத்தையின், அன்று, எனக்கு உன்
பூ ஆர் கழலை அருள்—அப்பனே! அண்ட பூரணனே! 65

பூரணன், ஆரணன், பொன்னுலகு ஆளி, புராரி, கொடி
வாரணன், ஆர் அணன், வாழ்த்தும் பிரான்; வட வேங்கடத்துக்
காரணன்; ஆர் அணங்கு ஆனு இறைவி கணவன்; மண் ஏழ்
பாரணன்; நாரணன்; என்பார்க்கு நீங்கும் பழுது, அவமே. 66

பழுத்தெட்டி போன்ற நடுச் செல்வர்பின் சென்று, பல் செருக்கால்,
கொழுத்து, எள், தினை, அளவு எண்ணம் அற்றீர்! குவடு ஏறி மந்தி
கழுத்து எட்டி அண்டர் பதி நோக்கும் வேங்கடக் காவலனை
எழுத்து எட்டினுல் எண்ணி ஏத்தீர், பரகதி ஏறுதற்கே. 67

ஏறு கடாவுவர்; அன்னம் கடாவுவர்; ஈர்-இரு கோட்டு
ஊறு கடா மழை ஓங்கல் கடாவுவர்—ஓடு அருவி
ஆறு கடாத அமுது எனப் பாய, அரி கமுகம்
தாறுகள் தாவும் வட வேங்கடவரைத் தாழ்ந்தவரே. 68

தாழ்ந்த அருக்கம் தரு ஒக்குமோ? பல தாரகையும்
சூழ்ந்த அருக்கன் சுடர் ஒக்குமோ? தொல் அரக்கர் என்று
வாழ்ந்த வருக்கம் களைந்தான், வடமலை மால், அடிக்கீழ்
வீழ்ந்தவருக்கு அன்பருக்கு ஒப்பரோ, அண்டர், மெய்த் தவரே? 69

மெய்த் தவம் போர் உக, வெஞ் சொல் இராமன் வில் வாங்கி வளைத்து
உய்த்த அம்போர், உகம் நாலும் செய்தோர், உயர் வேங்கடத்து
வைத்த அம்போருகப் பூ ஆர் கழலை, மறை மனு நூல்
பொய்த்த வம்பேரர் உகவார்; காமம் வேட்டுப் புரளுவரே. 70

புரண்டு உதிக்கும் உடற்கே இதம் செய் பொருள் ஆக்கையின் நால்-
இரண்டு திக்கும் தடுமாறும் நெஞ்சே! இனி எய்துவம், வா—
திரண்டு உதிக்கும் அரன், வேள், அயனுர் முதல் தேவர் எல்லாம்
சரண் துதிக்கும்படி மேல் நின்ற வேங்கடத் தாமத்தையே. 71

தாம் மத்து அளை வெண்ணெய் உண்ட அந் நாள், இடைத்தாயர் பிணி
தாமத் தளை உவந்தார், வேங்கடாதிபர், தாமரைப் பூந்
தாமத்தளை அணியும் மணி மார்பில் நல் தண் அம் துழாய்த்
தாமத்து அளைவது என்றோ, மடவீர்! என் தட முலையே? 72

தட விகடத் தலை வேழ முன் நின்றன; சாடு உதைத்துப்
புடவிகள் தத்து அலை ஈர் ஏழ் அளந்தன; பூந் திருவோடு
அடவி கடத்தலை வேட்டன—வேங்கடத்து அப்பன், புள்ளைக்
கடவி கடத்தலை நெய் உண்ட மாதவன், கால்மலரே. 73

கானகம் உண்டு; அதில் போம், என்னின் நீங்கிக் கடும் பிணிகாள்!—
தேன் அக முண்டகத் தாள் வேங்கடேசனை, சென்று இரக்கும்
போனக முண்ட வெண் நீற்றோன் அயனொடும் பூமியொடும்
வானகம் உண்ட பெருமானை, இன்று என் மனம் உண்டதே. 74

மனம், தலை, வாக்கு, உற எண்ணி; வணங்கி; வழுத்தும் தொண்டர்
இனம் தலைப்பெய்தனன்: ஈது அன்றியே—இமையோரும், 'எங்கள்
தனம்! தலைவா!' எனும் வேங்கட வாண! தடங் கடலுள்
நனந் தலை நாகணையாய்!—அறியேன், அன்பும் ஞானமுமே. 75

'ஞானக் கண் தா; கனவு ஒக்கும் பவம் துடை; நஞ்சு இருக்கும்
தானக் கண்டா! கனற்சோதி!' என்று ஏத்தும் வன் தாலமுடன்,
'வானக்கண் தா, கன வண்ணா!' என்று ஓது ஒலி வந்து அடையா
ஈனக் கண்டாகனற்கு ஈந்தான் பரகதி, என் அப்பனே. 76

என் அப்பன், ஆகத்துப் பொன்-நூலன், வேங்கடத்து எந்தை, துயில்
மன் அப்பன், நாகத்துக்கு அஞ்சல் என்றோன், பல் மணி சிதறி
மின்னப் பல் நாகத்துப் பாய்ந்தான், கதை அன்றி, வெவ் வினைகள்
துன்னப் பல் நா கத்துப் பொய்ந்நூல் புகா, என் துளைச் செவிக்கே.

செவித்தலை வன்னியின் சூடு உண்ட வேய் இசை தீப்பதும், யான்
தவித்து அலை வன் மயலும், தமர் காப்பும், தமிழ்க் கலியன்
கவித் தலைவன் திருவேங்கடத்தான் முன் கழறுமின்—பொன்
குவித்து, அலை வந்து உந்து, கோனேரி வாழும் குருகினமே! 78

குருகூரர் அங்க மறைத் தமிழ்மாலை குலாவும் தெய்வ
முருகு ஊர் அரங்கர், வட வேங்கடவர், முந்நீர் இலங்கை
வரு கூரர் அங்கம் துணித்தார், சரணங்கள், வல் வினைகட்கு
இரு கூர் அரங்கள்கண்டீர்—உயிர்காள்!—சென்று இரவுமினே. 79

இரணிய நாட்டன், இரணியன், ஈர்-ஐந்தலையன், கஞ்சன்;
முரணிய கோட்டின், நகத்தின், சரத்தின், முன்தாளின்; துஞ்சத்
தரணியில் குத்தி, இடந்து, எய்து, உதைத்தவன்—சர்ப்ப வெற்பன்
அரணிய கேழல், அரி, ராகவன், கண்ணன், ஆகி வந்தே. 80

வந்தித்து, இருக்குமறை போற்றும் வேங்கட வாண! மலர்
உந்தித் திருக் குங்குமம் அணி மார்ப! உள் வஞ்சனையும்,
புந்தித் திருக்கும், வெகுளியும், காமமும், பொய்யும், விட்டுச்
சிந்தித்திருக்குமது எக்காலம், யான் உன் திருவடியே? 81

திருவடி வைக்கப் புடவி பற்ருது; அண்டம் சென்னி முட்டும்;
கரு வடிவைக் கலந்து ஆற்ரு, எண் திக்கும்; கடல் மண் கொள்வான்—
பொரு வடி வைக் கனல் ஆழிப்பிரான், புனல் ஆழிகட்டப்
பெரு வடிவைக் கண்ட அப்பன்—எவ்வாறு அடி பேர்ப்பதுவே? 82

பேர் ஆனைக் கோட்டினைப் பேர்த்தானை; வேங்கடம் பேணும் துழாய்த்
தாரானை; போதனைத் தந்தானை; எந்தையை; சாடு இறப் பாய்ந்து,
ஊர் ஆனை மேய்த்து, புள் ஊர்ந்தானை; பஞ்சவர்க்கு உய்த்துநின்ற
தேரானை; நான்மறை தேர்ந்தானை—தேரும், நும் தீது அறுமே. 83

அறுகு ஊடு கங்கைதரித்தான், அயன், அழைத்தாலும் இச்சை
அறு; கூடு, மால் அடியார் அடிக்கே; அப்பன் வேங்கடவன்,
மறுகு ஊடு மாதர் எறி பூண் எறிக்கும் மதில் அரங்கன்,
மறு கூடு நம்மை மருவாமல் வாழ்விப்பன்—மா மனமே! 84

மாமன் அங்காந்த வல் வாய்ப் புள்ளை ஏவ மடித்து, பித்தன்
நா, மனம், காந்த அன்று ஓட எய்தோன், நறும் பூங்கொடிக்குத்
தாமன், அம் காந்தன், திருவேங்கடத்து எந்தை, தாள்களில் என்
தீ மனம் காந்தம் கவர் ஊசிபோல், என்று சேர்வதுவே? 85

சேரும் மறுக்கமும், நோயும், மரணமும், தீவினையின்
வேரும், அறுக்க விரும்பி நிற்பீர்! வட வேங்கடத்தே
வாரும்; மறுக்க அறியான், எவரையும்; வாழ அருள்
கூரும்—மறுக் கமலை அணி மார்பன், கைக் கோதண்டனே. 86

கோதண்டத்தான்; நத்தன்; வாள், கதை, நேமியன்; கோல வட
வேதண்டத்தான்; அத்தன்; இன் இசையான்; மண்ணும் விண்ணும் உய்ய
மூதண்டத் தானத்து அவதரித்தான்; எனில், முத்தி: வினைத்
தீது அண்டத் தான் அத் தனு எடுத்தான் எனில், தீ நரகே. 87

நரகம் அடங்கலும் சென்று எய்த்த பாவிக்கு, நாரியர்மேல்
விரகம் அடங்க, மெய்ஞ்ஞானம் வெளிசெய, வீடு பெற,
உரகம் மடங்க நடித்த பொற்ருள் இன்று என் உச்சி வைப்பாய்—
வர கமடம், கயல், ஆனுய்! வடமலை மாதவனே! 88

'மா திரம், காதல் மனை வாழ்க்கை' என்று எண்ணி, வான்பொருட்கு
மாதிரம், காதம் பல உழல்வீர்! இன்னும் மைந்தன் என்று ஓர்
மாது இரங்காதபடி வணங்கீர்—அரிமாவொடு கைம்-
மா திரங்காது அமர் செய்கின்ற சேடமலையினையே. 89

'மலையின் அரக்கர் உடன்று எழுந்தார்' என்று மா மறை நூல்
கலையினர், அக்கருடன், இந்திராதியர் காட்ட, செய்யும்
கொலையினர்; அக் கருடன் ஏறும் வேங்கடக்குன்றர்; என்றால்,
உலையின் அரக்கு—அருள் தந்திலரேனும், என் உள் அவர்க்கே. 90

உள்ளம் அஞ்சாய்; வலியாய்; வலியார்க்கும் உபாயம் வல்லாய்;
கள்ளம், அஞ்சு ஆயுதம், கைவரும்; ஆயினும், கங்குலினில்
வெள்ள மஞ்சு ஆர் பொழில் வேங்கடக் குன்றினில் வீழ் அருவிப்
பள்ளம் அம் சாரல் வழிவரில், வாடும், இப் பாவையுமே. 91

பாவை இரங்கும் அசோதைக்கு முத்து; பதுமச் செல்விக்கு
ஏவை இரண்டு அன்ன கண்மணி நீலம்; இரு சரணப்
பூவை இரந்தவர்க்கு இன்பவளம்; புல் அசுரர்க்கு என்றும்
மா வையிரம்—திருவேங்கடத்து ஓங்கும் மரகதமே. 92

மரகதத்தைக் கடைந்து ஒப்பித்தது ஒத்தன; வாழ்த்தினர் தம்
நரக தத்தைத் தள்ளி வைகுந்தம் நல்கின; நப்பின்னை ஆம்
விரக தத்தைக்கு விடை ஏழ் தழுவின—வேங்கடவன்,
குரகதத்தைப் பிளந்தான், தோள்கள் ஆகிய குன்றங்களே. 93

குன்றுகள் அத்தனையும் கடல் தூரக் குவித்து, இலங்கை
சென்று, களத்து அனைவோரையும் மாய்த்து, திருச் சரத்தால்,
அன்று, களத்தனை அட்டானை, அப்பனை, ஆய்மகள் தோள்
துன்று களத்தனை, ஏத்த வல்லார்க்கு இல்லை, துன்பங்களே. 94

துன்பம் களையும்; சனனம் களையும்; தொலைவு அறு பேர்
இன்பங்களையும் கதிகளையும் தரும்—எங்கள் அப்பன்
தன் பங்கு அளையும்படி மூவரை வைத்து, தாரணியும்,
பின்பு அங்கு அளையும் இழுதும் உண்டானுடைப் பேர் பலவே. 95

பல குவளைக்குள் சில கஞ்சம் போலும் படிவ அப்பன்,
நல குஅளைக்கு முன் உண்டான், நின் மாட்டும் நணுகிலனோ—
உலகு வளைக்கும் கடலே! நின் கண் முத்து உகுத்து, இரங்கி,
இலகு வளைக்குலம் சிந்தி, துஞ்சாய், இன்று இரா முற்றுமே? 96

முற்றிலை, பந்தை, கழங்கை, கொண்டு ஓடினை முன்னும்; பின்னும்,
அற்றிலை தீமை; அவை பொறுத்தோம்—தொல்லை ஆலின் இளங்
கற்றிலைமேல் துயில் வேங்கடவா!—இன்று உன் கால்மலரால்
சிற்றிலைத் தீர்த்ததற்குப் பெரு வீட்டினைச் செய்தருளே. 97

அரும் பாதகன், பொய்யன், காமுகன், கள்வன், அருள் சிறிதும்
அரும்பாத கல் நெஞ்சன், ஆறாச் சினத்தன், அவாவில் நின்றும்
திரும்பாத கன்மத்தன், ஆனேற்கு, சேடச்சிலம்பு அமர்ந்து, அ-
திரும் பாதகஞ்சம் தரில், அதுகாண், உன் திருவருளே. 98

திருமந்திரம் இல்லை; சங்கு, ஆழி, இல்லை; திருமண் இல்லை;
தருமம் திரம் ஒன்றும் செய்து அறியீர்; செம்பொன்-தானவனை
மருமம் திரங்கப் பிளந்தான் வடமலை வாரம் செல்லீர்;
கருமம் திரண்டதை எத்தால் களையக் கருதுதிரே? 99

கரு மலையும் மருந்தும், கண்ணும், ஆவியும், காப்பும், அவன்
தரும் அலை உந்திய பேரின்ப வெள்ளமும், தாய் தந்தையும்—
வரு மலையும், திருப் பாலாழியும், திரு வைகுந்தமும்,
திருமலையும், உடையான் எனக்கு ஈந்த திருவடியே. 100

திருவேங்கடத்து அந்தாதி முற்றும்

7. அழகர் அந்தாதி

நீர்-ஆழி வண்ணனை, பாலாழி நாதனை, நின்மலனை,
சீர் ஆழி அம் கைத் திருமகள் கேள்வனை, தெய்வப் புள் ஊர்
கூர் ஆழி மாயனை, மால் அலங்காரனை, கொற்ற வெய்யோன்
ஓர் ஆழித் தேர் மறைத்தானை—எஞ்ஞான்றும் உரை நெஞ்சமே! 1

உரை மாற்றம் உண்டு: என் பொறி ஐந்தும் உன்னிடத்து அன்றி உண்ணும்
இரை மாற்றவேண்டும்; இதுவே என் விண்ணப்பம்—என் அப்பனே!
உரை மாற்று அளவு அற்ற பொன் உடுத்தாய்! அம்பு அடைத்து,இலங்கை-
வரை மாற்றலரைச் செற்றாய்! அழகா! கருமாணிக்கமே! 2

மாணிக்க நகம் புரை மேனி மாலுக்கு,வார் சடையோன்
பாணிக் கன கம் பலி ஒழித்தானுக்கு, பச்சைத் துழாய்
ஆணிக் கனக முடி அலங்காரனுக்கு, அண்டம் எல்லாம்
பேணிக்கு, அனகனுக்கு—பித்தர் ஆனவர் பித்தர் அன்றே. 3

பித்து அரும்பா நின்ற நெஞ்சனை, வஞ்சனை, பேர் உலகோர்
கைத்து அரும் பாவி எனும் கடையேனை, கடைக்கணியாய்—
முத்தரும் பாரும் தொழும் அழகா! வண்டு மூசும் துழாய்ப்
புத்தரும்பு ஆர் முடியாய்! அடியாரைப் புரப்பவனே! 4

புரந்தரன்ஆம் எனப் பூபதி ஆகி, புகர் முக மாத்
துரந்து அரசு ஆளில் என், நல்குரவு ஆகில் என்—தொல் புவிக்கு
வரம் தர மாலிருஞ்சோலை நின்றார்க்கு, என் மனத்தினுள்ளே
நிரந்தரமாய் அலங்காரர்க்கு, இங்கு ஆட்பட்டு நின்றபின்னே? 5

நின்ற பிராணன் கழலும் முன்னே, நெஞ்சமே! நினையாய்;
சென்ற பிராயம் வம்பே சென்றதால்—திருமங்கை கொங்கை
துன்று அபிராமனை, சுந்தரத் தோளனை, தோளின் மல்லைக்
கொன்ற பிரானை, அடைந்து அடியாரொடும் கூடுகைக்கே. 6

கூடு கைக்கும் சரமத்து, அடியேற்குக் கொடிய வஞ்சச்
சாடு உகைக்கும் சரணம் தரவேண்டும்—தடத்து அழுந்தி
வாடு கைக் குஞ்சரம் காத்தீர்! விண் வாழ்கைக்கும் வாள்அரக்கர்
வீடுகைக்கும் சரம் கோத்தீர்! விடைவெற்பின் வித்தகரே! 7

வித்தகர்; உம்பர் அரசு ஆனவனும், விதியும், கங்கை
மத்தகரும், பரவும் அலங்காரர்; மழை கொண்ட கார்
ஒத்த கரும் பரஞ்சோதியர்; நாமம் உரைத்து—அன்னைமீர்!—
இத் தகரும், பரதெய்வமும், கூத்தும், விட்டு, ஏத்துமினே. 8

ஏத்துமின், பத்தியினால் எட்டு எழுத்தும்; இணைஅடிக்கே
சாத்துமின், பத்திரத் தண் அம் துழாய்—மதி தாங்கி, கஞ்சம்
பூத்து, மின் பத்தி செயும் பச்சை மா முகில்போல் அழகர்
காத்தும், இன்பத்தில் இருத்தியும் வைப்பர், கருணைசெய்தே. 9

செய் தவர் ஆக வருந்தியும், தீர்த்தத் துறை படிந்தும்,
கைதவர் ஆகமம் கற்றும், என் ஆம்? கடற் பார் மருப்பில்
பெய்த வராகனை, மால் அலங்காரனை, 'பேர் இலங்கை
எய்தவ! ராகவ!' என்று ஏத்த நீங்கும், இரு வினையே. 10

வினைக்கும், மருந்து அரிக்கும் பிணி மூப்புக்கும், வேகின்ற வே-
தனைக்கும், மருந்து அன்ன தாள் அழகா! செய்ய தாமரை அங்-
கனைக்கும் அருந்து அமுதே! அருளாய்—நின்னைக் காதலித்து
நினைக்கும் அருந்ததிதன் உயிர்வாழ்க்கை நிலைபெறவே. 11

நிலையாமை ஆன உடலும், உயிரும், நினைவும், தம்மில்
கலையா, மையானம் கலக்குமுன்னே—கங்கை வைத்த சடைத்
தலைஆம் ஐஆனனன், தாமரையான், தொழும் தாள் அழகன்;
அலை ஆமை ஆனவன்; மாலிருஞ்சோலை—அடை நெஞ்சமே! 12

நெஞ்சம் உருக்கும்; உயிர் உருக்கும்; தொல்லை நீள் வினையின்
வஞ்சம் முருக்கும்; பவம் முருக்கும்—திருமால் அழகர்,
கஞ்ச முருக்கு மலர்வாய்த் திரு நண்பர், கஞ்சனுக்கு
நஞ்சம், உருக் குவளை ஆழி அன்னவர், நாமங்களே. 13

நாமங்கள் ஆவி நழுவுந்தனையும் நவின்று, அவரைத்
தாம் அங்கு அளாவி, மனத்துள் வைப்பார்—தண்டலையின் அகில்
தூமங்கள் ஆவி மணம் நாறும் மாலிருஞ்சோலை அன்பர்
சேமம், களாவின் கனி அனையார், பதம் சேருவரே. 14

சேரா, தகாத நரகு; ஏழ் தலைமுறை சேர்ந்தவர்க்கும்
வாராது அகாதம் வசை, பிணி, பாவம்—மறிகடல் முன்
தூராத காதங்கள் தூர்த்தானை, மாலிருஞ்சோலையில் போய்
ஆராத காதலுடன் பணிவீர், என் அழகனையே. 15

அழக் கன்றிய கருங் கண்ணிக்குக் கண்ணி அளித்திலரேல்,
வழக்கு அன்றி முன் கொண்ட வால் வளை கேளும்; மறுத்தது உண்டேல்,
குழக் கன்றின் பின் குழல் ஊது அலங்காரர்க்கு—கோதை நல்லீர்!—
சழக்கு அன்றில் வாய் பிளந்தால் உய்யலாம் என்று சாற்றுமினே.

சாற்றுக் கரும்பனைக் கூற்று என்னும்; ஆசை தமிழ் மலையக்
காற்றுக்கு அரும்ப நையும்; கண்படாள்; அலங்காரற்கு, அண்டர்
ஏற்றுக்கு, அரும்பு அனையக் கொங்கையாள் கொண்ட இன்னலுக்கு
மாற்றுக் கரும் பனை அல்லாது, வேறு மருந்து இல்லையே. 17

மருந்து உவந்தார் தொழும் மாலிருஞ்சோலைமலை அழகர்,
‘அருந்துவம் தாரணி’ என்று அயின்றார், அடல் ஆயிர வாய்
பொருந்து வந்து ஆர் பணிப் பாயார், விதுரன் புது மனையில்
விருந்து உவந்தார்—அடியார்க்கு இல்லை, நோயும் வெறுமையுமே. 18

வெறுத்தவரை, கஞ்சனை, செற்றுளார்; விடைவெற்பர்; வெங் கண்
கறுத்த வரைக்கு அஞ்சல் என்று வந்தார்; கனகாம்பரத்தைப்
பொறுத்த அரைக்கு, அஞ்சன மேனிக்கு, ஆவி புலர்ந்து உருகிச்
சிறுத்த வரைக் கஞ்சம் கூப்பும் என் பேதைக்கு என் செப்புவதே? 19

‘செப்போ, தனம்? செழுந் துப்போ, செவ் வாய்?’ என்று சேயிழையார்க்கு
ஒப்பு ஓத நஞ்சு உருகித் திரிவீர்! கனல், ஊதை, மண், விண்,
அப்பு, ஓதனம் என்று அமுதுசெய்தார், அலங்காரர், பொற்றாள்,
எப்போது, அனந்தல் தவிர்ந்து, ஏத்த நீங்கள் இருக்கின்றதே? 20

இருக்கு அந்தரத்து அனைவோர்களும் ஓதி, இடபகிரி
நெருக்கம் தரத் தனை ஏத்த நின்றானை, நிறத்த துப்பின்
உருக் கந்தர் அத்தனைத் துன்பு ஒழித்தானை, உலகம் உண்ட
திருக் கந்தரத்தனை, அல்லாது எண்ணேன் ஒரு தெய்வத்தையே. 21

தெய்வம் பல, அவர் நூலும் பல, அவை தேர் பொழுதில்,
‘பொய் வம்பு அல’ என்று தோன்றும், புல்லோர்கட்கு; போத நல்லோர்
‘உய்வம், பலனும் அவனே’ என்று ஓதி உணர்வர்—நெஞ்சே!—
கொய் வம்பு அலர் சொரியும் சோலை மாமலைக் கொண்டலையே. 22

கொண்டு அலையாநிற்கும் ஐம்புலக்கோள் மகரங்களின் ஈர்ப்பு-
உண்டு அலை ஆர் பிறவிக் கடல் மூழ்குவர்; உத்தமனை,
தண்டலை ஆர் திருமாலிருஞ்சோலைத் தனிச்சுடரை,
புண் தலையால் வணங்கார், ‘அணங்கு ஆர் வினை போக்’ என்றே. 23

என்று உதரம் கலந்தேன் அற்றை நான்றுதொட்டு இற்றைவரை
நின்று தரங்கிக்கின்றேற்கு அருள்வாய்—நெடுங் கான் கடந்து
சென்று, தரங்கக் கடல் தூர்த்து, இலங்கையில் தீயவரைக்
கொன்று, தரம் குவித்தாய்! சோலை மாமலைக் கோவலனே! 24

‘கோவலன், பார்ப்புடன் கேகயம் சூழ் குளிர் சோலைமலைக்
காவலன், பாற்கடல் கண்துயில் மால் அலங்காரன்’ என்றே
பாவல் அன்பால் பணிவார் அணி வானவர் ஆகி, மறை-
நாவலன், பார்ப்பதி-நாதன், நண்ணாப் பதம் நண்ணுவரே. 25

நண் இன நாக முடிமேல் நடித்து, என்னை நாசம் அறப்
பண்ணினன; நாகமும் பாரும் அளந்தன; பண்டு தம்பி
மண்ணினன் ஆக வனம் போயின—வளர் சோலைமலைக்-
கண் இனன், ஆகம் கரியான், சிவந்த கழல் இணையே. 26

கழலப் புகுந்த வளை அறியார்; என் கருத்து அறியார்;
அழலப் புகன்று ஒறுப்பார் அன்னைமார்; அறு காற் சுரும்பு
சுழலப் புனைந்த துழாய் மார்பர் மாலிருஞ்சோலை என்னார்;
தழல் அப்புவர், என் தனங்களிலே, சந்தனங்கள் என்றே. 27

தனத்துக்கு, அராவிய வேல் விழிக்கு, ஏக்கற்று; தையலரால்
தினம் துக்கர் ஆகித் திரிவார் பலர்: சிலர், செங்கமல
வனத்துக் கராசலம் காத்தாற்கு, சோலைமலையில் நின்ற
கனத்துக்கு, அராவணையாற்கு, எம்பிராற்கு, உள்ளம் காதலரே. 28

காதலைப் பத்தினிமேல் வைத்த நீசக் கரு நிருதன்
மா தலைப் பத்தியை மண்ணில் இட்டாய்! நின்னை வாழ்த்தும் தொண்டர்க்கு
ஈதலைப் பத்தியைச் செய்வோர்கள் வாழும் இடபவெற்பா!
தீது அலைப்பத் தியங்கித் திரிவேற்கு அருள் செய்தருளே. 29

அருள், தருமம், கைவிடாது ஏத்தும் அன்பருக்கு அன்பர்;எல்லில்
இருள் தரும் அம் கை எறி ஆழியார்; இசைக் கின்னரரும்
கெருடரும், மங்கையரும், வாழ் இடபகிரியில் கல்லா
முருடரும் அங்கு அயல் எய்தில், அன்றே, அவர் முத்தர் அன்றே. 30

முத்தர் அன்றே, நின் கழல் ஒருகால் கை முகிழ்க்கப் பெற்றோர்;
பித்தர் அன்றே, நினக்கே பித்தர் ஆகில்—பிரமன் கம் கை
வைத்து அரன் தேய் துயர் தீர்த்தாய்!—நின் சோலைமலை மருவும்
பத்தர் அன்றே, பரிவால் என்னை ஆளும் பரமர்களே. 31

பரந்தாமரை; திருமாலிருஞ்சோலைப் பரமரை; கால்,
கரம், தாமரை அன்ன கார் நிறத்தாரை; கடல் கடக்கும்
சரம், தாம் மரை திரி கான் போய், இலங்கைத் தலைவன் பத்துச்
சிரம் தாம் அரைக் கணத்து எய்தாரை; எய்தற்குத் தேர், மனமே!

தேராய், இரவு பகல் இரை தேடுவை; தீமை நன்மை
பாராய்; இரங்குவை பாவையரால்; பண்டு, மாவலிபால்
சோராய் இரந்தவனை, திருமாலிருஞ்சோலை நின்ற
பேர் ஆயிரம் உடையானை—நெஞ்சே!—என்று பேணுவையே? 33

பேணிக் கவித்த வரைக் குடையாய்! பெரியோர் பதின்மர்
ஆணிக் கவித் தமிழ்மாலை கொண்டாய்! அழகா! கரிய
மாணிக்க வித்தக மா மலையே! வண் துளவுக்கு அல்லால்,
பாணிக்கு அவித்தும் அடங்காது, வெங் காமப் படர் கனலே. 34

படர் ஆ குவால் குவியக் குழல் ஊதிய பாலர்; ஐயம்
அடர் ஆகுவாகனன் தாதைக்கு இட்டார்; அலங்காரர்; துழாய்க்கு
இடர் ஆகுவார் பலர் காண்; தமியேனை எரிப்பது என், நீ—
விட ராகு வாய்க்கொண்டு உடல் சுட்டுக் கான்றிட்ட வெண் திங்களே? 35

திங்கள் அப்பா நின்ற செந் தீக் கொழுந்தின் செழுஞ் சங்கு போ-
லும் களப் பாவை உருகுவது ஓர்கிலர்—உம்பர் எல்லாம்,
'எங்கள் அப்பா! எமைக் காவாய்' என, உலகு ஈர் அடியால்
அங்கு அளப்பான் வளர்ந்தார், சோலை மாமலை ஆதிபரே. 36

ஆதி அராவில் துயில் அலங்காரர், அழகர் அன்புஆம்
வேதியர் ஆவுதி வீற்றிருப்பார், அண்டம்மீது இருக்கும்
சோதியர், ஆவின் பின் போந்தாரை அன்றித் தொழேன்—உடலைச்
சாதி அராவினும், பொன் மா மகுடம் கவிக்கினுமே. 37

கவித் தானை மன்னற்கு நட்புஆய் முடி கவித்தானை, அன்று,
புவித் தானை வற்றப் பொழி சரத்தானை, பொருது இலங்கை
அவித்தானை, மாலிருஞ்சோலை நின்றானை, அழகனை, முன்,
தவித்து ஆனை, 'வா' என வந்தானை—பற்றினென், தஞ்சம் என்றே. 38

தஞ்சம் தனம் என்று தேடி, புல்லோர், தையலார் கடைக்கண்
வஞ்சம், தனம், கொள்ள வாளா இழப்பர்—மதி உடையோர்,
செஞ் சந்தனப் பொழில் மாலிருஞ்சோலைத் திருநெடுமால்
நெஞ்சம்தனக்கு உவப்பாக நல்காநிற்பர், நேர்படினே. 39

நேர் ஆய ஏதனை நெஞ்சு இடந்தாய்! நெடுஞ் சோலைமலைக்
கார் ஆய! வேதனை முன் படைத்தாய்! நின் கழற்குத் தொண்டு என்று
ஆராயவே, தனைப் புன் பிறப்பு ஓயும்; அவா-வழியின்
பேர் ஆய வேதனை இல் உழைப்போரும் பிழைப்பர்களே. 40

பிழைத்தலை யான் எண்ணிப் பேசுகின்றேன்; இப் பிணி மற்றென்றால்,
மழைத் தலை வார் குழலீர்! தணியாது; வருணனை முன்
அழைத்து, அலை அங்கு அடைத்தார் அலங்காரர் அலங்கல் நல்கீர்—
முழைத்தலை நின்று மலயாநிலம் வந்து மோதும் முன்னே. 41

மோது ஆகவந்தனை மூட்டு இலங்கேசன் முடிந்து, விண்ணின்-
மீது ஆக, வந்தனை, வில் எடுத்தே! விடைவெற்பில் நின்ற
நாதா! கவந்தனைச் செற்றாய்! உனை அன்றி, நான் மறந்தும்
தீது ஆக வந்தனை செய்யேன், புறம் சில தேவரையே. 42

தேவரையாதல், மனிதரையாதல், செழுங் கவிதை,
நா வரையாமல் நவிலுகிற்பீர்! நம்மை ஆளும் செம்பொன்
மேவு அரையானை; இருஞ்சோலை, வேங்கடம், மெய்யம், என்னும்
மா வரையானை; ஒருவனையே சொல்லி, வாழுமினோ. 43

வாழும் மின் பங்கயச் சுந்தரவல்லி மணாளன் வெற்பைச்
சூழுமின், பந்தித்த தொல் வினை தீர்ந்து உய்ய—தொங்கல் சுற்றும்
தாழும் இன் பஞ்சணைமேல் மடவார் தட மா முலைக்கே
வீழும் இன்பம் கருதி, துன்ப யோனியில் வீழ்பவரே! 44

வீழ மராமரம் எய்தார் மதி தவழ் வெற்பை, நெஞ்சே!
தாழ்; அமர் ஆடச் சமன் குறுகான்; இச் சரீரம் என்னும்
பாழ் அமராமல் பரகதி ஏற்றுவர்; பார்க்கில், விண்ணோர்
வாழ் அமராவதியும் நரகாம், அந்த மா நகர்க்கே. 45

நகரமும் நாடும் புரந்தவர் நண்ணலரால் வனமும்
சிகரமும் நாடும் சிறுமை கண்டோம்: மஞ்ஞை தேன் இசைகள்
பகர, முன் ஆடும் பனிச் சோலைவெற்பில் நிற்பார்க்கு; கஞ்சன்
தகர, முன்னாள், துகைத்தார்க்கு; அறிந்தீர்கள்! சரண்புகுமே. 46

சரணியன் ஆகத் தனை நினைந்தாரைத் தன்போல வைக்கும்
அரணியன், நாகத்து அணையான், அரங்கன், அழகன், எம் கோன்,
இரணியன் ஆகம் இடந்தான், கதை அன்றி, ஈனர் தங்கள்
முரண் இயல் நா கத்தும் புன் குரல் ஓரி முதுக் குரலே. 47

முது விருந்தாவனத்து, ஆனிரை மேய்த்தவர்; முன், விதுரன்
புது விருந்து ஆனவர்; மால் அலங்காரர்—பொலங்கழல்ஆம்
மது இருந் தாமரைக்கு ஆளாய் இரார்க்கு, மதி நுட்ப நூல்
எது இருந்தாலும், அதனால் விடா, இங்கு, இரு வினையே. 48

வினையாட்டியேன், கொண்ட வெங் காமநோய் வெறியாட்டினும், இச்-
சினை ஆட்டினும், தணியாது—அன்னைமீர்!—செய்ய பூங் கமல
மனையாட்டி நாயகன் மாலிருஞ்சோலைமலைச் சிலம்பாற்று
எனை ஆட்டி வாரும்; சொன்னேன், எந்த நோயும் எனக்கு இல்லையே. 49

எனக்கு ஆவி அங்கும் உடல் இங்கும் ஆகி இருப்பதை, சந்-
தனக் கா இயங்கும் தமர வண்டீர்! சொல்லும்—தத்துவ நூல்,
தனக் காவியம், கவி, வல்லோர் புகழ் அலங்காரனுக்கு;
வனக் காவி அம் கண்ணி மா மலராள் மணவாளனுக்கே. 50

மணவாளர், ஆவி நிகர் திருமாதுக்கு; மால் அழகர்;
பண வாள் அராவில் கண்பள்ளிகொள்வார்; திருப் பாதம் எண்ணக்
குணவாளர் ஆவிர், இன்றே—உயிர்காள்!—உம்மைக் கூற்றுவனார்
நிண வாள் அராவி அறுக்கும் அப்போது நினைப்பு அரிதே. 51

நினைப்பு அரியாய், எளியாய்; உம்பர் யார்க்கும், நின் அன்பருக்கும்!
வினைப் பரி ஆனவன் வாய் பிளந்தாய்! வியன் சோலைமலை-
தனைப் பரியாநின்ற தாள் அழகா! முன் சனனத்துள்ளும்
உனைப் பரியாமல் அன்றோ, பரித்தேன், இவ் உடலத்தையே! 52

உடலம் புயங்கத்து உரிபோல் விடும் அன்று, உவணப் புள்ளின்
அடல் அம் புயமிசை நீ வரவேண்டும்—ஐஆனனற்கும்,
மடல் அம்புயற்கும், வரம் தரும் சோலைமலைக்கு அரசே!
கடல் அம்பு உயர் வரையால் அடைத்தாய்!—என்னைக் காப்பதற்கே. 53

காப்பவன்; அந்த மலரோனையும் கறைக்கண்டனையும்,
பூப்ப, அனந்தரம் போக்க, வைப்பான்; புனல், பார், விசும்பு,
தீ, பவனம், தரும் தெய்வசிகாமணி—சேவடியை
நாப் பவம் நந்தப் புகழ்வார்க்கு ஒப்பு இல்லை, நவ கண்டத்தே. 54

கண்டாகனன், கண்ணன் அல்லால் கதி இன்மை கண்டு, அடைந்தது
உண்டாக, நம்ப ஒட்டாது உங்கள் ஊழ்வினை; உண்மை அறிந்து,
'அண்டா! தனவண்ணனே! அருளாய்' என்று, அழகனுக்கே
தொண்டு ஆக, நல் நெஞ்சினால் உரைப்பீர், பிறர் தொண்டர்களே. 55

தொண்டுபடார், திருமாலிருஞ்சோலையில் சோதிக்கு, அன்பு
கொண்டு; படாமலர் இட்டு இறைஞ்சார்; மடக் கோதையரைக்
கண்டு, படா முலை தோய் அனுராகம் கருதி, இரா
உண்டு படாநிற்கும்போதும், நைவார்; எங்ஙன் உய்வதுவே? 56

'உய்வம் தொழும்பு செய்து' என்று இருப்போமை, 'உய்யாமல்,' ஐவர்,
'பெய்வம் தொழு வினைக்கே' என்பரால், பெருந் தேன் சிகரம்
தைவந்து ஒழுகும் மலை அலங்கார! சதுமுகத்துத்
தெய்வம் தொழும் தெய்வமே! என்கொலோ, உன் திருவுளமே? 57

'திரு விளையாடு திண் தோட் செங்கண்மால், பலதேவருடன்
மருவு இளையான், திருமாலிருஞ்சோலைமலை' என ஓர்
உரு விளையாமல் பிறப்பார் பலர்; புகழ் ஓதி, சிலர்,
கரு இளையாநிற்க வித்தாவர் முத்தியில், காமம் அற்றே. 58

காமத்தனை; பொய், அழுக்காறு, கோபம், களவு, கொலை,
ஆம் அத்தனையும் உடையேனை; ஆளும்கொல்—ஆன்பொருப்புஆம்
தாமத்து அனைவரும் போற்ற நின்றான், பண்டு தாமரையோன்
பூ மத்தனைச் செய்த நோய் துடைத்தான், அடிப்போதுகளே? 59

போது அகத்தானும், வெண் போதகத்தானும், புராந்தகனும்,
தீது அகத்து ஆனது தீர்தரும்காலை, 'திரு அரை சேர்
பீதகத்தாய்! அழகா! அருளாய்' என்பர்; பின்னை, என்ன
பாதகத்தால் மறந்தோ தனிநாயகம் பாவிப்பரே! 60

பாவிக்கு, அமல விரிஞ்சற்கு, இறையவர்; பத்தர்தங்கள்
ஆவிக் கமலத்து வீற்றிருப்பார்; அளிப்பாடல் கொண்ட
வாவிக் கமல மணம் நாறும் சோலைமலையைக் கண்ணால்
சேவிக்க, மலம் அறும்—மனமே!—எழு, செல்லுதற்கே. 61

'செல்லுக் குவளை, குழல் நாட்டம்' என்று, தெரிவையர்பால்,
பல் உக்கு வளை முதுகு ஆம்தனையும், புன்பாட்டு உரைப்பீர்!
அல்லுக்கு வளை உழும் பாண்டிநாட்டை அடைந்து, நுங்கள்
சொல்லு, கு, அளை உண்டார்க்கு, அலங்காரர்க்கு, சூட்டுமினே. 62

சூட்டு ஓதிமம் சென்று, சொல்லாது என் காதலை; தும்பி இசைப்
பாட்டு ஓதி மங்கையரும் பணியார்; பண்டு கல்மழைக்காக்
கோட்டு ஓதிமம் எடுத்தார், சோலை மாமலைக் கோவலனார்-
மாட்டு ஓதி—மஞ்சினங்காள்!—உரைப்பீர், மறு வாசகமே. 63

வாசம் பரந்த துழாயும், என் பாடலும், மாலை; ஒளி
வீசு அம்பரம், பசும் பொன்னும் என் வேட்கையும்; வீற்றிருக்கும்
தேசம், பரமபதமும் என் சிந்தையும்—தீ, வளி, ஆ-
காசம், பரவை, மண், கண்டு உண்ட மால் அலங்காரனுக்கே. 64

அலங்காரன், சுந்தரத் தோளன், அழகன், அணி முடியில்
இலங்கு ஆரன், ஏறு திரு உடையான்—எட்டெழுத்தும் கற்றார்
கலங்கார் அனங்கன் கணையால்; எச் செல்வமும் காதலியார்;
மலங்கார் அருந் துயர் மேவினும்; ஆகுவர், வானவரே. 65

வால் நவ தார் அணி சுந்தரத்தோளன்; முன் மாவலியை,
'தானவ! தாரணி தா' என்ற மாயன்; தராதலத்து
மீன் அவதாரம் முதலானவை வினை இன்றி, இச்சை
ஆன அது ஆர் அறிவார் அவரே முத்தராமவரே. 66

ஆமவரைப் பணித்து ஆள்வார் அழகர், அயன், உமையாள்
வாம அரைப் பணியான், பணி பாதத்தை வாழ்த்தும்; கொங்கை
ஏம வரைப் பணி பூணுள்; சந்து, ஏந்திழையாள் உரைத்தால்,
வேம்; அவரைப் பணியாதே எனும்—எங்கள் மெல்லியலே. 67

மெல்லியலைப் பரி அங்கனையாரும் வெறுத்து வசை
சொல்லி அலைப்பர்; இயங்க ஒட்டார்—சுடர் மா மலையைப்
புல்லி, அலைப் பரியங்கத்தில் ஏறும் புயல், பதின்மர்
நல் இயலைப் பரி அம் கழல்-தாமம் நயந்தபின்னே. 68

பின் இறப்பும், பிறப்பும், நரை மூப்பும், பிணியும், மனை-
முன் இறப்பும், பிரித்தான்; இருந் தானவர் மூது இலங்கை
மன் இறப் புங்கக் கணை தொட்ட சோலைமலை அழகன்;
பொன் நிறப் புண்டரிகத் திருத் தாள் அன்றி, போற்றிலமே. 69

'போற்றி, இராம!' என்னார்; சோலை மாமலை போதவிடார்;
மாற்றி இராவைப் பகல் ஆக்கிலார்; வண் துழாய் குழல்மேல்
ஏற்றி, இராசதமாக வையார்; என் இடரை எல்லாம்
ஆற்றியிரார்—அன்னைமார்—என்னை வாய் வம்பு அளக்கின்றதே! 70

அளப்பதும், அங்கையில் நீர் ஏற்பதும், தந்து அளிப்பதும், பின்
பிளப்பதும், அங்கு ஐயில் வெண் கோட்டில் கொள்வதும், பேர் உணவாக்
கிளப்பதும், மங்கை எனத் தோள் புணர்வதும்; கேட்கில் வையம்—
வளப் பதுமம் கையம் சேர் சோலை மாமலை மாதவரே. 71

மாதவரால் உம்பரால் அறியார், மதுரைப் பிறந்த
யாதவர், ஆலிலைமேல் துயின்றார்—இருந் தாழ் சுனையில்
போத வரால் உகள்—மாலிருஞ்சோலையில் போம்: பிறவித்
தீது அவரால் அன்றி, எத் தேவராலும் தெறல் அரிதே. 72

அரிய வரம் தந்து, அயன் முதலோர்க்கு, அருள்செய்து; அவரைப்
பெரியவர், அந்தம் இல் வாழ்வினர், ஆக்கி; தம் பேர் அருளால்—
கரியவர், அந்தணர் கைதொழும் மால் அலங்காரர்—வையத்து,
உரியவர் அந்தரங்கத் துயர் தீர்க்க உலாவுவரே. 73

உலகு உதிக்கும்படி சிந்தித்துத் தந்து, இவ் உலகில் உறும்
நல குதிக்கும்படி நின்ற பிரான் இடம்—நானிலமும்,
இலகு திக்கும், விசும்பும், தொழ ஓங்கி; இருள், வருடை
பல குதிக்குந்தொறும், தேன் பாயும் சோலைப் பருப்பதமே. 74

பருப்பதம், தாம் மன்னி நிற்பது; பாற்கடல், பள்ளிகொள்வது;
இருப்பது, அம் தாமம்; பண்டு: இப்போது எலாம், இள ஞாயிறு அன்ன
உருப் பதம் தாமதர்க்கு ஈயாமல் அன்பர்க்கு உதவு அழகர்,
திருப் பதம் தாமரை போல்வார், உகப்பது, என் சிந்தனையே. 75

சிந்திக் கல் ஆரம் கொழிக்கும் திருச் சிலம்பாற்று அருகும்,
பந்திக் கலாப மயில் ஆடும் சாரலும், பங்கயனோடு
அந்திக் கலா மதியாற்கு அரியார் உறை ஆன்பொருப்பும்,
வந்திக்கலாம் எனில், சந்திக்கலாம், உயர் வைகுந்தமே. 76

வைதாரையும் முன் மலைந்தாரையும் மலர்த்தாளில் வைத்தாய்;
மொய் தாரை அத்தனைத் தீங்கு இழைத்தேனையும்—மூது உலகில்
பெய் தாரை வானின் புரப்பான், இடபப் பெருங் கிரியாய்!—
கொய் தாரை வேய்ந்த திருவடிக்கீழ்த் தொண்டு கொண்டருளே. 77

கொண்ட மருந்தும் கடைவாய்வழி உக, கோழைவந்து
கண்டம் அருந் துயர்ஆம் போது, உன் பாதம் கருதறியேன்—
வண்டு அமரும் துளவோனே! தென் சோலைமலைக்கு அரசே!
அண்டம் அருந்தும் பிரானே!—இன்றே உன் அடைக்கலமே. 78

அடைக்கலம், தானை இரந்தாள், புகல; அவள் பொருட்டால்
படைக்கலம் தானைத் தருமன் கெடாமல், வெம் பாரதப்போர்-
இடைக் கலந்தானை, அலங்காரனை, சரண் என்று அடைந்தேன்;
முடைக்கலம்தான் நையும் அப்போது அயர்ப்பினும், முத்தி உண்டே. 79

உண்டு இறக்கும் புவனங்களை மீள உமிழ்ந்திலையேல்,
பண்டு இறக்கும் பதுமத்தோன், புரந்தரன், பைந்தழல்போல்
கண் திறக்கும் சங்கரன் முதலோர்களைக் கண்டவர் ஆர்?—
திண் திறக் குஞ்சரம் சேர் சோலை மாமலைச் சீதரனே! 80

சீர் அரி, தாழ் பொழில் மாலிருஞ்சோலையில் செல்வர், செங்கட்-
போர் அரி, தாள் புனை தார் அரிது ஆகில், தண் பூந் துளவின்
தார் அரி தாவும் தழை அரிது ஆகில், தழை தொடுத்த
நார் அரிது ஆகில், பிழைப்பு அரிதாம்—எங்கள் நன்னுதற்கே. 81

நன்னுதலைப் பணி பூண் மார்பில் வைத்து விண்-நாட்டு இருப்பார்,
மின்னு தலைப் பணிமேல் துயிலீவார், விடைவெற்பில் நிற்பார்,
மன்னு தலைப்பணி அன்பரை வைக்கும் மலர்-அடிக்கீழ்த்
துன்னு தலைப் பணி செய்வது எஞ்ஞான்று, என் துயர் தொலைந்தே? 82

தொலைந்து ஆனை ஓதும் தொலையானை, அன்னை சொல்லால் மகுடம்
கலைந்தானை, ஞானக் கலையானை, ஆய்ச்சி கலைத்தொட்டிலோடு
அலைந்தானை, பாலின் அலையானை, வாணன் கை அற்று விழ
மலைந்தானை, சோலைமலையானை—வாழ்த்து, என் மட நெஞ்சமே! 83

நெஞ்சில் அம்பு ஆற்றமுடியாது வேள் எய்து நீள் இரவும்
துஞ்சிலம்; பால்-துளியும் நஞ்சம் ஆம்; சொரி கல்மழையை
அம் சிலம்பால் தடுத்தார், அலங்காரர், அடி விளக்கும்
செஞ் சிலம்பாற்று அருகே கிடத்தீர்—உயிர் தேற்றுதற்கே. 84

தேற்று வித்தால் புனல் தேற்றுநர் போல், திரு எட்டெழுத்தால்
மாற்றுவித்தான், என் மயக்கம் எல்லாம்—மண்ணும் விண்ணும் உய்யப்
போற்று வித்தாரப் புயல் அலங்காரன், பொன் மேருவைப்போல்
தோற்று வித் தார் அணியும் சுந்தரத் திருத் தோள் அண்ணலே. 85

அண்ணலை, வான்மதி தோய் சோலை மாமலை அச்சுதனை,
தண் அலை வானவனை, தெய்வநாதனை, தாள் அடைவான்
எண்ணலை; வான் பகைஆம் ஐவரோடு இசைந்து, இன்னம் உடல்-
புண் அலைவான், எண்ணினுய்—மனமே!—உன் புலமை நன்றே! 86

புலமையிலே நிமிர்ந்து, அற்பரைப் போற்றி, பொதுமகளை,
'குல மையிலே! குயிலே! கொடியே!' என்றும், 'கூர்விழி ஆம்
பல ஐயிலே' என்றும், பாடாமல் பாடுமின், பாவலர்காள்!—
நல் அமையில் ஏய் முத்தம் ஆர் சோலை மாமலை நம்பனையே. 87

நம்பி நின்றேன், நின் சரணாரவிந்தத்தை; நல் நெஞ்சு என்னும்
செம்பின் இன்றே பொறித்தேன், உனக்கு ஆள் என்று; தெய்வக் குழாம்
பம்பி நின் தேசு எறிக்கும் பதம் காணப் பதறுகின்றேன்—
கொம்பின் இன் தேன் சொரியும் சோலை மாமலைக் கொற்றவனே! 88

கொற்ற இராவணன் பொன்முடி வீழ, கொடுங் கண் துஞ்சல்
உற்ற இரா வணன் மாள எய்தோன், ஒண் பரதனுக்குச்
சொல் தவிரா அணன், மாலிருஞ்சோலை தொழுது, வினை
முற்ற இராவ்ணம் நல் தமிழ்மாலை மொழிந்தனனே. 89

மொழித் தத்தை கொஞ்சும் மலே அலங்காரன்; முன் நூற்றுவரை
அழித்து, அத்தை மைந்தர்க்கு அரசு அளித்தோன்; அடிநாள் தொடர்ந்து என்-
உழித் தத்தைச் செய்து அன்றிப் போகா வினேயை ஒரு நொடியில்
கழித்தத்தை என் சொல்லுகேன், தனக்கு ஆட்பட்ட காலத்திலே? 90

கால் அம் அலேக்கும் புவனங்களேக் கரந்தாய்! உதிரம்
கால மலேக் குமைத்தாய்! அழகா! கமலத்துப் பஞ்சு ஆர்
கால் அமலேக்கும் புவிக்கும் அன்பா! உயிர் காயம் விடும்
காலம், மலேக்கும் கடுங் கூற்றைக் காய்ந்து, என்னேக் காத்தருளே. 91

அருள, கொடி இடைப் பூமாதும் நீயும் வந்து, ஆளினும் ஆம்;
இருள் அக் கொடிய நமன் வரும் காலத்து, இகழினும் ஆம்—
கருளக் கொடி அழகா! அலங்கார! வன் கஞ்சன் நெஞ்சத்து
உருள் அக்கு ஒடிய உதைத்தாய்!—எனது உயிர் உன் உயிரே. 92

உயிர்க்கும், படிக்கும் உன் ஆயிரம் பேர், என்று ஒறுத்து அன்னேமார்,
செயிர்க்கும்படிக்கு நின்றேன்; என் செய்கேன்?—செழுந் தேவர்களும்
அயிர்க்கும்படிக் குறள்ஆம் அழகா! அலங்கார! நெய்க்கும்
தயிர்க்கும் படிக்கும் செவ் வாய் மலர்ந்தாய்!—நின்னேத் தாள் பணிந்தே. 93

பணிபதி வாட நின்று ஆடின; நூற்றுவர்பால் சென்றன;
பணி பதினு௶ புவனமும் தாயின; பாப் பதின்மர்
பணிபதி எங்கும் உவந்தன—பங்கயப் பாவையுடன்
பணி பதி மார்பன், அலங்காரன், பொன்-திருப்பாதங்களே. 94

பாதகர் அத்தனேபேரும் கனகனும் பல் நகத்தா-
லே தகரத் தனேயற்கு அருள் ஆளியை, எட்டெழுத்துள்
ஓது அகரத்தனே, சுந்தரத் தோள் உடையானே, நவ
நீத கரத்தனே—சேர்ந்தார்க்குத் தேவரும் நேர் அல்லரே. 95

அல்லல் அங்கு ஆரையும் சேர்விக்கும் ஐம்புல ஆசை, என்றும்,
பல் அலங்கா நைந்து கோல் ஊன்றியும் பற்று அருது கண்டாய்;
மல்லல் அம் காரிகையார் மருள் தீர்ந்து வணங்கு—நெஞ்சே!—
தொல் அலங்காரனேத் தென் திருமாலிருஞ்சோலேயிலே. 96

சோலே இல்லா மையில் சேர் திருமாலிருஞ்சோலே நின்ருன்,
வேலேயில் ஆமையில் வேடம் கொண்டான், புயம் மேவப் பெருச்
சேல் ஐயில் ஆம் மை இலங்கு கண்ணுள் அவன் தெய்வத் துழாய்-
மாலே இலாமையில் மாலே உற்ருள், அந்தி மாலேயிலே. 97

மாலேக்கு அரும்பு சிறுகால் துகைக்க, வருந்தும் எங்கள்
ஆலேக் கரும்புதன் ஆசை எல்லாம் சொல்லில், ஆயிரம் தோட்டு
ஓலேக்கு அரும் புண்—தொட முடம்ஆம் மதி ஊர்குடுமிச்
சோலேக் கரும் புயலே!—அருளாய், உன் துளவினேயே. 98

துளவு இலை ஆர் பொன்-அடி முடி சூட்டி, தொண்டு ஆக்கி, என்னை
வள விலையாக் கொண்ட நீ கைவிடேல்—மங்கல குணங்கள்
அளவு இல் ஐயா! அலங்கார! சமயிகள் ஆய்ந்தவண்ணம்
உள இலைஆய், உருஆய், அருவுஆய ஒரு முதலே! 99

ஒருபால் அமரர், ஒருபால் முனிவர், உடன் இருந்து, என்
இரு பார்வையும் கொண்டு உவப்பது என்றோ—இடபக் கிரிக்கும்,
பொரு பாற்கடற்கும், அயோத்திக்கும், பொன்-துவராபதிக்கும்
நிருபா!—வைகுந்தமும் நீ வீற்றிருக்கின்ற நீர்மையுமே? 100

அழகர் அந்தாதி முற்றும்

8. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

சோழநாட்டுத் திருப்பதிகள்

சீர் வந்த உந்தித் திசைமுகனுல் அல்லாது என்
சோர்வந்த சொல்லில் சுருங்குமோ—ஆர்வம்
ஒருவர் அங்குஅங்கு ஒயில், உகந்து அவரை ஆள்வான்
திரு அரங்கம் கோயில் சிறப்பு? 1

சிறப்பு உடைய செல்வம் திருப்பதிகள் போல,
மறப்பு உடைய நாயேன் மனத்துள் உறப் போந்து,
அறம் தையாநின்ற அரங்கா! திரு வாழ்
உறந்தையாய்! இங்கு உறைந்தது ஓது. 2

ஓதக் கேள், நெஞ்சே! உனக்கும் இது நன்று; எனக்கும்
மேதக்க நன்மை இதின் வேறு இல்லை; போதப்
பெருந் தஞ்சை மா மணியைப் பேணி, வடிவம்
பொருந்து அஞ்சை, மா, மணியை, போற்று. 3

போற்றி செய, ஓர் குடைக் கீழ், பொன்னுடும், இந் நாடும்,
நால் திசையும் ஆண்டாலும், நன்கு இல்லை—தோற்றம் இலா
எந்தை, அன்பில் ஆதி, இணைத் தாமரை அடிக்கே
சிந்தை அன்பிலாதார் சிலர். 4

சில மாதவம் செய்தும், தீ வேள்வி வேட்டும்,
பல மா நதியில் படிந்தும், உலகில்
பரம்ப நூல் கற்றும், பயன் இல்லை—நெஞ்சே!—
கரம்பனூர் உத்தமன் பேர் கல். 5

'கல் இருந்தான் தந்தை கமலத்தோன், அக் கமலத்-
தில் இருந்தான் தந்தை அரங்கேசன்' என்றே தொல்லை மறை-
உள் அறையாநின்றமையால், உள்ளமே! கள்ளம் இன்றி
வெள்ளறையான் தாளே விரும்பு. 6

விரும்பினவை எய்தும்; வினை அனைத்தும் தீரும்;
அரும் பரம வீடும் அடைவீர்—பெரும் பொறிகள்
கள்ளம் பூதம் குடிகொள் காயமுடையீர்! அடிகள்
புள்ளம்பூதங்குடியில் போம். 7

போம் மானை எய்து, பொரும் ஆனைக் கொம்பு பறித்து,
ஆம் ஆனை மேய்த்து உவந்த அம்மானை, தாமச்
செழுந் திருப்பேரானை, சிறுகாலே சிந்தித்து
எழுந்திருப்பேற்கு உண்டோ இடர்? 8

இடர் ஆன ஆக்கை இருக்க முயலார்;
மடவார் மயக்கின் மயங்கார்; கடவுளர்க்கு
நாதன் ஊர் ஆதரியார்; நான் எனது என்னுர்—அமலன்,
ஆதனூர் எந்தை, அடியார். 9

அடியாராய் வாழ்மின்—அறிவு இலாப் பேய்காள்!—
செடி ஆர் வினை அனைத்தும் தீரும்; முடிவில்
செழுந் தூரத்தன் எனினும், செங்கண் மால், எங்கள்
அழுந்தூர் அத்தன், அணியன் ஆம். 10

ஆ மருவி மேய்த்த அரங்கர் எதிர் ஆர் நிற்பார்—
தாம் மருவி வாணனைத் தோள் சாய்த்த நாள், சேமம்
உறு புலி ஊர் வன் தோல் உடையான் உடைந்தான்,
சிறுபுலியூர் எந்தைமேல் சென்று? 11

சென்றுசென்று செல்வம் செருக்குவார் வாயில்தொறும்
நின்றுநின்று தூங்கும் மட நெஞ்சமே! இன் தமிழைக்
கூறைக்கும் சோற்றுக்கும் கூருதே, பேறு ஆகச்
சேறைக்கு நாயகன் பேர் செப்பு. 12

செப்புங்கால், ஆதவனும், திங்களும், வானும், தரையும்,
அப்பும், காலும், கனலும், ஆய் நின்ருன்—கைப்பால்
அலைச் சங்கம் ஏந்தும் அணி அரங்கத்து அம்மான்,
தலைச்சங்கநாண்மதியத்தான். 13

தானே படைத்து, உலகைத் தானே அளித்து, நீ
தானே அழிக்கும் தளர்ச்சியோ?—வானில்
திரு மகுடம் தைக்கச் சிறு குறளாய் நீண்ட
பெரும! குடந்தைக் கிடந்தாய்! பேசு. 14

பேசவரின் தென் அரங்கன் பேர் எல்லாம் பேசுக, வாய்;
கேசவனைக் காண்க, விழி; கேட்க, செவி; ஈசனுர்
உண்டி ஊர்தோறும் உழன்று இரவாமல் தவிர்த்தான்
கண்டியூர் கூப்புக என் கை. 15

கையும் உரையும் கருத்தும் உனக்கே அடிமை
செய்யும்படி நீ திருத்தினுய்—ஐயா!
திருவிண்ணகராளா!—சிந்தையிலும் எண்ணேன்,
பெரு விண் நகர் ஆளும் பேறு. 16

பேறு தரினும்; பிறப்பு, இறப்பு, நோய், மூப்பு,
வேறு தரினும்; விடேன் கண்டாய்—ஏறு நீர்
வண்ண புரத்தாய்! என் மனம் புகுந்தாய்! வைகுந்தா!
கண்ணபுரத்தாய்! உன் கழல். 17

கழன்று போம் வாயுவினைக் கட்டாமல், தீர்த்தம்
உழன்று போய் ஆடாமல், உய்ந்தேன்—அழன்று
பொரு வாலி காலன், பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து. 18

சேர்ந்து உனக்குக் குற்றேவல் செய்திலன்; என் சிந்தையில் நீ
ஆர்ந்ததற்கு ஓர் கைம்மாறு அறிகிலேன்—பூந்துவரை
மன்னா! கை ஆழி வலவா! வலம்புரியாய்!
தென் நாகையாய்!—அருளிச் செய். 19

செய்ய சடையோன், திசைமுகத்தோன், வானவர்கோன்,
ஐயம் அறுத்து இன்னம் அறியாரே—துய்ய
மரு நறை ஊர் வண் துழாய் மாயோன், செவ் வாயோன்,
திருநறையூர் நின்றான் செயல். 20

செயற்கு அரிய செய்வோமைச் செய்யாமை—நெஞ்சே!—
மயக்குவார் ஐவர் வலியால்; 'நயக் கலவி
சிந்தி; புர, விண்ணகரம்' என்பர்: திருச் செங்கண்மால்
நந்திபுரவிண்ணகரம் நாடு. 21

நாடுதும் வா, நெஞ்சமே! நாராயணன் பதிகள்;
கூடுதும் வா, மெய்யடியார் கூட்டங்கள்; சூடுதும் வா;
வீதி இந்தளத்து அகிலின் வீசு புகை வாசம் எழும்
ஆதி இந்தளூரான் அடி. 22

அடியால் உலகு எல்லாம் அன்று அளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியேல், நெஞ்சே! கொடிதுஆய
குத்திரகூடு அங்கி கொளுந்தாமுன், கோவிந்தன்
சித்திரகூடம் கருதிச் செல். 23

செல்லும்தொறும் உயிர்ப்பின் செல்லும் இருவினையை
வெல்லும் உபாயம் விரும்புவீர்! தொல் அரங்கர்
சீராம விண்ணகரம் சேர்மின்; பின் மீளாத
ஊர்ஆம் அ விண்ணகரம் உண்டு. 24

உண்டு, கேட்டு, உற்று, மோந்து, பார்க்கும் ஐவர்க்கே
தொண்டுபடலாமோ உன் தொண்டனேன்?—விண்டு இலங்கும்
ஆடல் ஊர் நேமிமுதல் ஐம்படையாய்! அன்பு உடையாய்!
கூடலூராய்!—இதனைக் கூறு. 25

கூறு புகழ்த் தன் அடிக்கே கூட்டுவனோ? இன்னம் எனை
வேறுபடு பல் பிறப்பில் வீழ்த்துவனோ? தேறுகிலேன்—
எண்ணம் குடியாய் இருந்தான், நின்றான், கிடந்தான்,
கண்ணங்குடியான் கருத்து. 26

கருத்தினுல், வாக்கினுல், நான்மறையும் காணு
ஒருத்தனை, நீ நெஞ்சே! உணரில்—பெருத்த முகில்,
வண்ணம்; அம் கை, கண், கால், வனசம்; திரு அரங்கம்,
கண்ணமங்கை, ஊர்—என்று காண். 27

காணியும், இல்லமும், கைப்பொருளும், ஈன்ருேரும்,
பேணிய வாழ்க்கையும், பேர் உறவும், சேணில்
புவித் தலத்தில் இன்பமும்—பொங்கு அரவம் ஏறிக்
கவித்தலத்தில் கண் துயில்வோன் கால். 28

கால் அளவும் போதாக் கடல் ஞாலத்தோர் கற்ற
நூல் அளவே அன்றி நுவல்வார் ஆர்—கோலப்
பரு வெள்ளிஅம் குடியான் பாதக ஊண் மாய்த்த
திருவெள்ளியங்குடியான் சீர்? 29

சீரே தரும் கதியில் சேருகைக்கு நான் உன்னை
நேரே வணங்கினேன், நெஞ்சே! நீ பாரில்
அணி மாடக் கோயில் அரங்கனுர் நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கு. 30

வணங்கேன், பிற தெய்வம்; மால் அடியார் அல்லாக்
குணங் கேடர் தங்களுடன் கூடேன், இணங்கிநின்று
வைகுந்தவிண்ணகரம் வாழ்த்துவேன்; ஈது அன்ருே,
வைகுந்த விண்ணகர வாழ்வு. 31

வாழும் அடியார், மட நெஞ்சே! நம் அளவோ?
தாழும் சடையோன், சதுமுகத்தோன், பாழிக்
கரி மேய விண்ணகரக் காவலோன், கண்டாய்—
அரிமேயவிண்ணகரத்தார்க்கு. 32

ஆர்க்கும் வலம்புரியால், அண்டமும், எண் திசையும்,
கார்க் கடலும், வெற்பும் கலங்கினவால்—சீர்க்கும்
திருத்தேவனுர்தொகை மால் செவ் வாய் வைத்து ஊதத்
தருத் தேவனுர் தொகையும் சாய்ந்து. 33

சாய்ந்த திரு அரங்கம், தண் வேங்கடம், குடந்தை,
ஏய்ந்த திருமாலிருஞ்சோலை பூந் துவரை,
வண்புருடோத்தமம் ஆம்—வானவர்க்கும் வானவன் ஆம்
ஒண் புருடோத்தமன்தன் ஊர். 34

ஊர்வேன் மடலை; ஒழிவேன் மடம் நாணம்;
சேர்வேன் கரிய திருமாலை—பார் அறிய
அம் பொன் செய்கோயில் அரங்கன் அணி நாங்கூர்ச்
செம்பொன்செய்கோயிலினில் சென்று. 35

சென்றது காலம்; திரை, நரை, மூப்பு, ஆன; இனி,
என்றுகொல் சாவு? அறியேன்—என் நெஞ்சே!—கன்றால்
உருத்து எற்றி அம் பலத்தை ஓர் விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றியம்பலத்தைச் சேர். 36

சேராது முன் செய்த தீவினை; பின் செய்வதுவும்
வாராது, இனி; நீ—மட நெஞ்சே!—நேராக்
குரு மணிக் கூடத்து ஆனைக் கொம்பு பறித்தானை,
திருமணிக்கூடத்தானை, செப்பு. 37

செப்பேன் மனிதருக்கு என் செஞ்சொல்-தமிழ்மாலை;
கைப்பேன் பிற தெய்வம் காண்பாரை; எப்போதும்
காவளம்பாடித் திருமால் கால்-தாமரை தொழுது
நா வளம் பாடித் திரிவேன், நான். 38

நான் அடிமைசெய்ய, விடாய் நான் ஆனேன்; எம்பெருமான்
தான் அடிமைகொள்ள விடாய்தான் ஆனான்; ஆனதற்பின்,
வெள்ளக் குளத்தே விடாய் இருவரும் தணிந்தோம்,
உள்ளம் குளம், தேனை, ஒத்து. 39

ஒத்து அமரர் ஏத்தும் ஒளி விசும்பும், பாற்கடலும்,
இத் தலத்தில் காண்பு அரிய என் நெஞ்சே! சித்து உணர்ந்த
தீர்த்தன் பள்ளிக்கு இருந்து செப்ப வெளிநின்றானைப்
பார்த்தன்பள்ளிக்குள் பணி. 40

பாண்டியநாட்டுத் திருப்பதிகள்

பணிந்தேன் திருமாலை; பாமாலை தாளில்
அணிந்தேன்; அருள் தஞ்சமாகத் துணிந்தேன்;
திருமாலிருஞ்சோலை சேர்ந்தேன்; எனக்கு
வருமால், இருஞ் சோதி வான். 41

வான் பார்க்கும் பைங்கூழ்போல், வாளா உனது அருளே
யான் பார்க்க, நீ பார்த்து இரங்கினாய், தேன் பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டியூரானே! இன்னமும் என்
ஆசைத் திருக்கு ஓட்டி ஆள். 42

ஆள்ஆய் உனக்கு, அன்புஆய், ஆசைஆய், நாணிலிஆய்
வாளா மனைவி என்று வாழ்வேனைக் கேளாய்—
திருமெய்ய மாயா!—சிலை கால் வளைத்து
வரும் எய்ய, மாயா மதன். 43

மத யானைக் கோள்விடுத்து, மா முதலை கொன்ற
கதையால் இதயம் கரையும்—முதல்ஆய
புல்லாணி மாலே!—புறத்தோர் புகழ் இருப்பு
வல் ஆணி; என் செவிக்கு மாறு. 44

மாறுபட வாடை எனும் வன் கால் வன முலை மேல்
ஊறுபட ஊர்ந்த உளைவு எல்லாம் மாற,
திருத்தண்காலூரான் திருத் தண் துழாயின்
மருத் தண் கால் ஊராதோ, வாய்ந்து? 45

வாயால் மலர் கோதி வாவிதொறும் மேயுமோ?
மேயாமல் அப்பால் விரையுமோ? மாயன்
திருமோகூர்வாய் இன்று சேருமோ? நாளை
வருமோ?—கூர் வாய் அன்னம், வாழ்ந்து. 46

வாழ்விப்பான் எண்ணமோ? வல் வினையில் இன்னம் எனை
ஆழ்விப்பான் எண்ணமோ? அஃது உரையாய்—தாழ்வு இலாப்
பாடல் அழகு ஆர் புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடல் அழகா!—நின் குறிப்பு. 47

குறித்து ஒருவர் கொண்டாடும் கொள்கைத்தோ—கோதை
நிறத்த ஊர், விண்டுசித்தர் நீடு ஊர், பிறப்பு இலி, ஊர்,
'தாழ்வு இல்; இ புத்தூர்' என்று ஐவர்க்குத் தான் இரந்தான்,
வாழ் வில்லிபுத்தூர் வளம்? 48

வளம் தழைக்க உண்டால் என்? வாசம் மணத்தால் என்?
தெளிந்த கலை கற்றால் என்? சீசீ!—'குளிர்ந்த பொழில்
தண் குருகு ஊர் வாவிச் சடகோபன் ஊர் எங்கள்
வண் குருகூர்' என்னாத வாய். 49

வாயும் மனைவியர், பூமங்கையர்கள்—எம்பிராற்கு—
ஆயுதங்கள், ஆழிமுதல் ஐம்படைகள்; தூய
தொலைவில்லிமங்கலம் ஊர்: தோள், புருவம், மேனி;
மலை, வில், இமம் கலந்த வான். 50

வானோர் முதலா மரம் அளவா எப் பிறப்பும்
ஆனோற்கு அவதியிடல் ஆகாதோ?—தேன் ஏயும்
பூ வர மங்கை, புவிமங்கை, நாயகனே!
சீவரமங்கை அரைசே! 51

அரைசு ஆகி வையம் முழுது ஆண்டாலும், இன்பக்
கரை சாரமாட்டார்கள்கண்டீர்—முரைசு ஆரும்
தென் திருப்பேரைப் பதியான் சீர் கேட்டு, நாவில் அவன்-
தன் திருப் பேரைப் பதியாதார். 52

தார் உடுத்துத் தூசு தலைக்கு அணியும் பேதை இவள்
நேர் உடுத்த சிந்தைநிலை அறியேன்—போர் உடுத்த
பாவை குந்தம் பண்டு ஒசித்தான் பச்சைத் துழாய் நாடும்;
சீவைகுந்தம் பாடும், தெளிந்து. 53

தெளியும் பசும் பொற் சிறைக் காற்று வீச
விளியும் துயர் போய்விடுமே—எளியேற்கு
அருளப் புளிங்குடி வாழ் அச்சுதனைக் கொண்டு,
கருளப்புள் இங்கு வந்தக்கால். 54

காலமும் நோயும் கருதாத அன்னைமீர்!
வேலன் வெறியை விலக்குமின்கள்—மால்ஆம்
வரகுணமங்கையன் தாள் வண் துழாய்மேல் ஆ-
தர குணம் மங்கைதனக்கு. 55

தனக்கு உடலம் வேறான தன்மை உணரார்;
மனக்கவலை தீர்ந்து உய்யமாட்டார்—நினைக்கில்,
திருக்குளந்தையார் உரைத்த சீர்க் கீதை பார் மாந்-
தருக்கு உளம் தையாமல் இருந்தால். 56

தாலத்து இழி குலத்துச் சண்டாளர்ஆனாலும்,
மேல் அத் தவத்தோரின் மேன்மைத்தே—கோலக்
குறுங்குடி வாழ் மாயன் குரை கழற்கு ஆள் ஆகப்
பெறும் குடியாய் வாழ்வார் பிறப்பு. 57

பிறப்பு அற்று, மூப்புப் பிணி அற்று, நாளும்
இறப்பு அற்று, வாழ இருப்பீர்! புறப்பற்றுத்
தள்ளுங்கோள்; ஊர் அரவில் தாமோதரன் பள்ளி
கொள்ளும் கோளூர் மருவுங்கோள். 58

மலைநாட்டுத் திருப்பதிகள்

கோள் ஆர் பொறி ஐந்தும் குன்றி, உடலம் பழுத்து,
மாளாமுன், நெஞ்சே! வணங்குதியால்—கேளார்
சினந்த புரம் சுட்டான், திசைமுகத்தான், போற்றும்
அனந்தபுரம் சேர்ந்தான் அடி. 59

அடியும் குளிர்ந்தாள், அறிவும் குலைந்தாள்,
முடிகின்றாள்; மூச்சு அடங்குமுன்னே, கடிது ஓடி,
பெண் பரிசு, ஆர், அங்குப் பிறப்பித்து மீளுவார்—
வண்பரிசாரம் சிறந்த மாற்கு? 60

மாற்கமும், தாம்தாம் வழிபடும் தெய்வமும்,
ஏற்க உரைப்பார் சொல் எண்ணுதே, தோல்-குரம்பை
நாள் கரையா முன்னமே—நல் நெஞ்சே!—நாரணன் ஆம்
காட்கரையாற்கு ஆள் ஆகாய் காண். 61

காண்கின்ற ஐம் பூதங்கட்கும், இரு சுடர்க்கும்,
சேண் கலந்த இந்திரற்கும், தேவர்க்கும், மாண் கரிய
பாழிக் களத்தாற்கும், பங்கயத்து நான்முகற்கும்—
மூழிக்களத்தான் முதல். 62

முதல் வண்ணம் ஆமே மூலே வண்ணம்; முன்னே
விதிவண்ணம் நீங்கிவிடுமே—சதுரத்
திருப்புலியூர் நின்முன் திருத் தண் துழாயின்
மருப் புலி ஊர் தென்றல் வரின். 63

வரவேண்டும் கண்டாய், மதி கலங்கி விக்குள்
பொரவே உயிர் மாயும் போழ்து—பரமேட்டி!
செங்குன்றூர் மாலே! சிறைப் பறவைமேல் கனகப்
பைங் குன்று ஊர் கார்போல் பறந்து. 64

பறந்து திரிதரினும் பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிது அறியமாட்டா; சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனே அல்லால், என்
ஒரு நா வாய் வாழ்த்தாது உகந்து. 65

உகந்தார்க்கு எஞ்ஞான்றும் உளன்ஆய், உகவாது
இகந்தார்க்கு எஞ்ஞான்றும் இலன்ஆய், திகழ்ந்திட்டு,
அரு அல்ல, வாழ் உருவம் அல்ல, என நின்முன்—
திருவல்லவாழ் உறையும் தே. 66

தேவும், உலகும், உயிரும், திரிந்து நிற்கும்
யாவும், படைத்த இறைகண்டீர்—பூவில்
திருவண்வண்டூர் உறையும் தேவாதி தேவன்
மரு வண் வண்டு ஊர் துளவ மால். 67

மாலே முடி நீத்து, மலர்ப் பொன் அடி நோவப்
பாலேவனம் புகுந்தாய் பண்டு என்று, சாலவும் நான்
கேட்டால் துயிலேன்காண்—கேசவனே!—பாம்பு-அணைமேல்
வாட்டாற்றுக் கண்துயில்கொள்வாய். 68

வாய்த்த கருமம் இனி மற்று இல்லே; நெஞ்சமே!
தோய்த்த தயிர், வெண்ணெய், தொட்டு உண்ட கூத்தன்
திருவிற்றுவக்கோடு சேர்ந்தால், பிறவிக்
கருவின் துவக்கு ஓடும்காண். 69

காண விரும்பும், என் கண்; கையும் தொழ விரும்பும்;
பூண விரும்பும், என்தன் புன் தலைதான்—வாணன்
திருக்கு அடித்தான், நத்தான், திகிரியான், தண்டான்,
திருக்கடித்தானத்தானைச் சென்று. 70

சென்று புனல் மூழ்கிச் செய் தவங்கள் செய்தாலும்,
வென்று புலன் அடக்கிவிட்டாலும், இன் தமிழால்
மாறன் விளைத்த மறை ஓதார்க்கு இல்லையே—
ஆறன்விளைத் திருமால் அன்பு. 71

நடுநாட்டுத் திருப்பதிகள்

அன்பு அணிந்த சிந்தையராய், ஆய்ந்த மலர் தூவி,
முன் பணிந்து, 'நீர் எமக்கு மூர்த்தியரே' என்பர்—
எம் ஐயிந்திரபுரத்தார்க்கு இன்தொண்டர் ஆனார்-
தமை இந்திரபுரத்தார்தாம். 72

தாமரையான் ஆதியாய்த் தாவரங்கள் ஈறு ஆன
சேம உயிரும், செகம் அனைத்தும்—பூமடந்தைக்கு
ஆம் கோ, அலாயுதன் பின்னை அவதரித்த
பூங்கோவல் ஆயன் பொருள். 73

தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

பொருள் ஆசை, மண் ஆசை, பூங்குழலார் போகத்து
இருள் ஆசை, சிந்தித்து இராதே, அருளாளன்,
கச்சித் திருப்பதிஆம் அத்தியூர்க் கண்ணன், தாள்
இச்சித்திருப்பது யாம் என்று? 74

என்றும் துயர் உழக்கும் ஏழைகாள்! நீங்கள் இளங்
கன்று போல் துள்ளிக் களித்து இரீர்—அன்று நடம்
இட்ட புயங்கத்து இரு சரணமே சரண் என்று
அட்டபுயங்கத்தாற்கு ஆள் ஆய். 75

ஆட்பட்டேன்; ஐம்பொறியால் ஆசைப்பட்டேன்; அறிவும்
கோட்பட்டு நாணும் குறைபட்டேன்—சேண்பட்ட
வண் காவை வண் துவரை வைத்த விளக்கொளிக்கு,
தண்காவைச் சேர்ந்தான்தனக்கு. 76

தனக்கு உரியனாய் அமைந்த தானவர்கோன் கெட்டான்;
உனக்கு உரியன் ஆய மைந்தன் உய்ந்தான்: நினைக்குங்கால்—
வேளுக்கை ஆள் அரியே!—வேறு உதவி உண்டோ, உன்
தாளுக்கு ஆள் ஆகாதவர்க்கு? 77

தவம் புரிந்த சேதநரை, சந்திரன், ஆதித்தன்,
சிவன், பிரமன், இந்திரனுச் செய்கை—உவந்து,
திருப்பாடகம் மருவும் செங் கண் மால்—தன் மார்பு
இருப்பாள் தகவு உரையாலே. 78

ஆலத்து இலை சேர்ந்து, அழி உலகை, உட்புகுந்த
காலத்தில், எவ்வகை நீ காட்டினய்—ஞாலத்துள்
நீரகத்தாய்! நின் அடியேன் நெஞ்சகத்தாய்! நீள் மறையின்
வேரகத்தாய்!—வேதியற்கு மீண்டு? 79

மீண்டும் தெளியார்கள் மேதினியோர்—நின் அடிப் பூப்
பாண்டரங்கமாடி படர்சடைமேல் தீண்டி,
கலாத் திங்கள் துண்டத்தின்மீது இருப்பக் கண்டும்;
நிலாத்திங்கள்துண்டத்தானே! 80

நேசத்தால் அன்று உலகை, நீர் வார்க்க, வைத்து அளந்த
வாசத் தாள் என் தலைமேல் வைத்திலையேல், நாசத்தால்
பாரகத்துள் அன்றி, யான் பாழ் நரகில் வீழ்ந்து என்கொல்?—
ஊரகத்துள் நின்ருய்!—உரை. 81

உரை கலந்த நூல் எல்லாம் ஓதி உணர்ந்தாலும்,
பிரை கலந்த பால்போல் பிறிதாம்—தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீர் உறவு ஆம் தங்கள்
உரு வெஃகா உள்ளத்தினேர்க்கு. 82

ஓராதார், 'கல்வி உடையேம், குலம் உடையேம்,
ஆராதனம் உடையேம், யாம்' என்று, சீர் ஆயன்
பூங் காரகம் காணப் போதுவார் தாள் தலைமேல்
தாங்கார், அகங்காரத்தால். 83

'தாலேலோ' என்று ஆய்ச்சி தாலாட்டி, தன் முலைப்பா-
லாலே எவ்வாறு பசி ஆற்றினள்?—மாலே! பூங்
கார்வானத்து உள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார், வானம், உண்டாய் நீ, பண்டு. 84

பண்டே உன் தொண்டு ஆம் பழ உயிரை என்னது என்று
கொண்டேனைக் கள்வன் என்று கூருதே, மண்-தலத்தோர்—
புள் வாய் பிளந்த புயலே!—உனை, 'கச்சிக்
கள்வா!' என்று ஓதுவது, என் கண்டு? 85

கண்டு அறிந்தும், கேட்டு அறிந்தும், தொட்டு அறிந்தும், காதலால்,
உண்டு அறிந்தும், மோந்து அறிந்தும், உய்யேனே—பண்டைத்
தவளவண்ணு! கார்வண்ணு! சாமவண்ணு! கச்சிப்
பவளவண்ணு! நின் பொற்பதம். 86

பதத் தமிழால் தன்னையே பாடுவித்து, என்னைத் தன்
பதத்து அடியார்க்கே ஆட்படுத்தான்—இதத்த
பரமேச்சுரவிண்ணகரான், பல ஆன்
வர, மேச்சு, உரல் அணைந்த மால். 87

மால் வேழமும், அரவும், மாயையும், வெற்பும், கடலும்,
மேல் வீழ் படையும், விடமும், போய், பாலன்,
நெருப்பு உள் குழி குளிர நின்றதும் கேட்டு, ஓதார்—
திருப்புட்குழி அமலன் சீர். 88

சீர் அறிந்து, தோழிமீர்! சென்று கொணர்ந்து எனக்குப்
போர முலைமுகட்டில் பூட்டுமினோ—நேர் அவுணர்
பொன்ற ஊர் புட் கழுத்தில் பொன்னை, மாணிக்கத்தை,
நின்றவூர் நித்திலத்தை, நீர். 89

நீர்மை கெட வைதாரும், நின்னோடு எதிர்ந்தாரும்,
சீர்மை பெற நின் அடிக்கீழ்ச் சேர்க்கையினால், நேர்மை இலா
வெவ் உளத்தனேன் செய் மிகையைப் பொறுத்தருளி—
எவ்வுள் அத்தனே!—நீ இரங்கு. 90

இரங்கும் உயிர் அனைத்தும் இன் அருளால் காப்பான்
அரங்கன் ஒருவனுமே ஆதல், கரங்களால்
போர் மலைவான் வந்த புகழ் வாணன் காட்டினான்—
நீர்மலை வாழ் எந்தை எதிர் நின்று. 91

நின்று திரியும் பிறவி எல்லாம் நேர்வித்து,
கொன்று திரியும் கொடு வினையார் இன்று
வெருவிட, எந்தைக்கே விழுமிய தொண்டு ஆனேன்—
திருவிடவெந்தைக்கே செறிந்து. 92

'செறிந்த பணை பறித்து, திண் களிற்றைச் சாடி,
முறிந்து விழப் பாகனையும் மோதி எறிந்து,
தருக்கு அடல் மல்லைக் குமைத்தான் தஞ்சம்' என்று—நெஞ்சே!—
திருக்கடல் மல்லைக்குள் திரி. 93

திரிந்து உழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்தி,
புரிந்து புகன்மின்—புகன்றால், மருந்துஆம்,
கருவல்லிக்கு; ஏணி ஆம், மாக் கதிக்கு—கண்ணன்
திருவல்லிக்கேணியான் சீர். 94

சீர் அருளால் நம்மைத் திருத்தி, நாம் முன் அறியாக்
கூர் அறிவும் தந்து, அடிமை கொண்டதற்கே, நேரே
ஒரு கடிகையும், மனமே! உள்ளுகிலாய்—முத்தி
தரு கடிகை மாயவனைத் தான். 95

தானே சரணமும்ஆய், தானே பலமும்ஆய்,
தானே குறை முடிக்கும் தன்மையான் தேன் ஏய்
திருவேங்கடம் தொழுதேம்; தீய விபூதிக்குள்
மருவேம்; கடந்தனெம் இவ் வாழ்வு. 96

வாழ் குமரன்மேல், கனக வஞ்சகன்மேல், ஓர் முகத்தே
சூழ் கருணையும், முனிவும், தோன்றினவால்—கேழ் கிளரும்
அங்க வேள் குன்ற அழல் சரபத்தைப் பிளந்த
சிங்கவேள் குன்றத்தினார்க்கு. 97

ஆர்க்கும் இது நன்று; தீது ஆனாலும்—நெஞ்சே!—நீ
பார்க்கும் பல கலையும் பண்ணாதே, சீர்க்கும்
திரு ஐயோத்திப் புயலை, சீரிய மெய்ஞ்ஞானத்து
உருவை, ஓத்தின் பொருளை, ஓர். 98

ஓர் அறிவும் இல்லாத என்போல்வார்க்கு உய்யலாம்;
பேர் அறிவு உண்டேனும், பிறர்க்கு அரிது—பார் அறிய
நைம்மிசாரண்ணியத்து நாதர் அடியாரோடும்
இம்மி சார்வு உண்டாயினால். 99

உண்டாம் முறைமை உணர்ந்து, அடிமைப் பேர் பூண்டேன்—
பண்டுஆம் குடி குலத்தால், பல் மதத்தால், கொண்டாட்டால்,
ஆள் அக் கிராமத்தால், அல்லற் பேர் பூணாமல்,
சாளக் கிராமத்தார் தாட்கு. 100

தாட்கு அடிமை என்று தமை உணரார்க்கு, எட்டு எழுத்தும்
கேட்க வெளியிட்டருளும் கேசவனை, வேட்கையொடு
போவது அரிது ஆனாலும், போய்த் தொழுவோம்—நெஞ்சமே!—
மா வதரியாச்சிரமத்து. 101

மத்தால் கடல் கடைந்து, வானோர்க்கு அமுது அளித்த
அத்தா!—எனக்கு உன் அடிப்போதின் புத்தமுதை—
கங்கைக் கரை சேரும் கண்டத்தாய்! புண்டரிக
மங்கைக்கு அரசே!—வழங்கு. 102

வழங்கும் உயிர் அனைத்தும் வாரி வாய்ப்பெய்து
விழுங்கும் கவந்தன் விறல்-தோட்கிழங்கை,
பொருப்பு இரு திக்கும் கிடந்தால்போல், துணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக்கு—என் நெஞ்சே!—செல். 103

செல்வம், உயிர், உடம்பு, சேர உரித்தாக்கி,
வல்வினையை நீக்குமினோ, மாந்தர்காள்!—'தொல்லை
வடமதுரையான், கழலே வாய்த்த தஞ்சம்' என்று
திடமது உரைசெய்தான் திறத்து. 104

திறம்திறமாத் தாம் துய்க்கும் தீம் சுவையை நாடி,
அறம் திறம்பி, பாதகர் ஓர் ஐவர்—நறுந் துளவ
மா துவரையோனே!—மனம் துணையாக்கொண்டு என்னைக்
காதுவர், ஐயோ, மெய் கலந்து! 105

கலந்து அமரரோடும், கரைகண்டாரோடும்
பொலிந்து திருநாட்டு இருக்கப் போவீர்—மலிந்த புகழ்,
அண்டர் ஆய்ப்பாடி, அமலர் அடியார் அடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும். 106

தொழும்பு ஆய நான் நல்ல சூது அறிந்துகொண்டேன்—
செழும் பாய் அலை முத்தம் சிந்தி முழங்கும்
திருப்பாற்கடலான் தாள் சேர்ந்தார் அடிசேர்ந்து
இருப்பாற்கு அடல் ஆம் இடர். 107

திருநாட்டுத் திருப்பதி

இடர் உடையேன் சொல்ல எளிதோ? பிரமன்,
அடரும் விடையோற்கும் அரிதே—தொடரும்
கரு வைகும் தம் பிறவிக் கட்டு அறுத்து, மீளாத்
திருவைகுந்தம் பெறுவார் சீர். 108

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி முற்றும்

அஷ்டப்பிரபந்தக் கதைக் குறிப்புக்கள்

அவதாரக் கதைகள்

ஹம்ஸாவதாரம்

மண்ணும் விண்ணும் இருள் மூடிய நாள், திருமால், தேவர்கள் தொழுது ஏத்த, அன்னம் ஆய் அரிய வேதங்களை அயனுக்கு விரிவாக உபதேசித்தான்; அறநூல் உரைத்தான்.

மச்சாவதாரம்

ஒரு கற்பத்தின் முடிவில், உலகம் எல்லாம் கடலில் மூழ்க, இமையோர்கள் புகலிடம் இன்றிச் சரண் புக, திருமால் ஓர் மீன் ஆனான்; வேதங்களைக் கவர்ந்து கொண்டு கடலுள் புகுந்த சோமுகாசுரனைக் கொன்று, பின்னர், பிரமனுக்கு அவ் வேதங்களை அருளினான்.

கூர்மாவதாரம்

அமுதம் பெறும் பொருட்டு, மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகியைக் கடை கயிறாகக் கொண்டு, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது தேவர்கள் வேண்ட, திருமால் கரிய ஆமை ஆகி, அமுதம் எழும் அளவும் அம் மலையைத் தாங்கிக் கிடந்தான். தேவர்களது பக்கத்திலும் அசுரர்களது பக்கத்திலும் தானே இரண்டு உருவாய் நின்று, இரு திறத்தார்க்கும் உதவியாகக் கடல் கடைந்தான். பின்னர், தன்வந்தரி என்னும் தேவ-ரூபம் தாங்கி, அமுதத்தைக் கொண்டு மேலே எழுந்தான். அதனை அசுரர்கள் கவர, தான் பெண்ணுரு ஆகி, தேவர்கள் அமுதத்தை உண்ணவும், அசுரர்கள் அதனை இழக்கவும், செய்தான். அங்குத் தோன்றிய திருவைத் தன் மார்பில் தரித்துக்கொண்டான்.

வராகாவதாரம்

இரணியாட்சன் என்னும் அசுரன் பூமியைக் கவர்ந்து கொண்டு கடலுள் மூழ்கிச் சென்றான். அக் காலத்தில், சிலம்பு முதலிய கலன்களை அணிந்து செந்நிற மேரு விளங்கினால் போல், திருமால் வராகம் ஆனான். வராகமூர்த்தி தன் கோட்டினால் இரணியாட்சனைக் கொன்று, நீருள் அமிழ்ந்து கிடந்த நிலத்தை இடந்து எடுத்தான்.

நரசிங்காவதாரம்

இரணியன் பெரு வரங்கள் பல பெற்று, 'நானே பர தெய்வம்' என்னும் செருக்குக் கொண்டவனாய், தேவர் முதலிய எல்லோருக்கும் மிகவும் கொடுமை செய்து வந்தான். பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் இறைவனது திருநாமத்தை ஓத, அது பொறாது, பெரிதும் வெகுண்டான். தன் புரோகிதர்களுடன் ஆலோசித்து, ஏவலர்களைக் கொண்டு பாலனுக்குப் பல துன்பங்களைச் செய்தான். யானைகளை ஏவித் தந்தங்களால் தாக்கச் செய்தும், பல்வேறு ஆயுதங்களால் தாக்கியும், பெரும்பாம்புகளால் கடிக்கச் செய்தும், கல்லோடு பிணைத்துக் கடலில் இட்டும், பலவாறு துன்புறுத்தினான். இறைவன் திருநாமத்தைப் பாலன் இடைவிடாது பயின்றதனால், அவனுக்கு ஊறு ஒன்றும் நேரவில்லை. இறுதியில், இரணியன் மிகவும் கோபம் கொண்டவனாய், அருகில் இருந்த தூணைப் புடைத்தான். எம்பெருமான் தனது பக்தனுக்காக நரமும் சிங்கமும் கலந்த உருவோடு, அந்தத் தூணில் தோன்றி, அந்தியம்போதில், அந்த இரணியனது மார்பைத் தன் கூர் உகிர் வாளினால் பிளந்து அழித்தான்.

வாமனுவதாரம்—திரிவிக்கிரமாவதாரம்

தேவர்களின் வேண்டுகோளால், மாவலியின் பெருவேள்வியிலே, கண்டார் இரங்க, கழியக்குறள் உருஆய், முப்புரிநூலும், மான்தோலும் கொண்ட மார்பினே உடைய மாணியாய்ச் சென்று, 'மூவடி மண் தா' என்று இரந்தான். மாவலி தானம் செய்து கொடுத்த நீரைத் தன் உள்ளங்கையில் ஏற்ருன்.

நீர் ஏற்றதும், நிமிர்ந்து, பார் அகலம் திருவடியாக, வாயுமண்டலம் மெய்யாக, திசைகள் எட்டும் தோளாக, அண்டமுகடு திருமுடியாக, பெரிய வடிவு கொண்டு அளக்க முற்பட்டான். ஓர் அடியால் நிலவுலகையும், மற்றோர் அடியால் விசும்பையும், அளந்தான். எஞ்சிய அடிக்கு நிலம் தாராததனுல், அதை அவன் தலைமீது வைத்து, அவனைப் பாதாளத்தில் அழுத்திச் சிறையில் வைத்தான்.

பரசுராமாவதாரம்

உலகில் அரச வம்சங்கள் முறை தவறி நடக்க, அவ் வம்சங்களை நாசம் செய்யும் பொருட்டாக, ஜமதக்கினி முனிவரது பத்தினியாகிய ரேணுகையின் வயிற்றில் திருமால் உதித்தான். பரசு என்னும் மழுப்படையைக் கையில் கொண்டு விளங்கியமையால் பரசுராமன் என்னும் பெயர் பிரசித்தமாயிற்று. தன் தந்தையின் ஆசிரமத்திலுள்ள காமதேனுவைக் கவர்ந்த கார்த்தவீரியார்ச்சுனனுடன் போர் செய்தான். மன்னர்கள் பலரையும், இருபது கைகளை உடைய இராவணனையும் வென்ற ஆயிரம் கை படைத்த அந்தக் கார்த்தவீரியனுடைய கைகளையும் சிரத்தையும் மழுவினுல் துணித்து அழித்தான். அது முதலாக இருபத்தொரு தலைமுறை அளவும் அரசரின் குலங்களை மழுவினுல் துணித்து வந்தான்.

இராமாவதாரம்

1. அவதாரம்: தேவர்கள் வேண்டி இரக்க, தசரதனுக்கும் கௌசலைக்கும் மகனுக, அயோத்தியில் வெங்கதிரோன் குலத்திற்கு ஒரு விளக்காய்த் தோன்றினுன்.

2. கூனியின் முதுகில் உண்டை தெறித்தல்: ஒருகால், தனது இளம் பருவத்தில் இராமன் மந்தரை என்னும் கூனியின் முதுகில் வில்லுண்டைகளைத் தெறித்து, அவளது கூன் சிதையச் செய்தான்.

3. மாமுனி வேள்வி காத்தல்: விசுவாமித்திர மாமுனி தனது வேள்வியைக் காக்கும் பொருட்டு, இராமலட்சுமணர்களைக் கங்கைக் கரை வழி அழைத்துக் கொண்டு சென்ருன். எதிர்த்து வந்த தாடகையின் மார்பில் இராமன் அம்பு எய்து அவளைக் கொன்ருன். முனிவன் வேள்விக்கு இடையூறு விளைத்த அரக்கர்களை மாள்வித்தான்; விசுவாமித்திரன் தொடங்கிய அவ்வேள்வியை முடித்து, அவனை அவபிரதம் ஆட்டினுன்.

4. அகலிகையின் சாப நீக்கம்: வேள்வி முடிந்தபின், இராமலட்சுமணர் விசுவாமித்திர முனிவரோடு மிதிலை நகருக்குச் செல்லும்போது, வழியில் கல்லாய்ச் சாபம் பெற்றுக் கிடந்தவளாயும், கௌதம முனிவரின் பத்தினியாயும், உள்ள அகலிகை, இராமனது பாத தூளி பட்ட மாத்திரத்தில், கல் வடிவம் நீங்கி, முன்னைய பெண்மை உருவம் பெற்ருள்.

5. வில் முறித்துச் சீதையை மணத்தல்: மிதிலை மன்னனுகிய ஜனகனது பெருஞ் சபைக்குச் சென்று, சீதையை மணக்கும் பொருட்டாக, சிவபெருமானது வில்லை வளைத்து அவளைத் திருமணம் செய்தான்.

6. பரசுராமனது தவத்தை வாங்குதல்: இராமன் சீதையுடனும் சுற்றத்தாருடனும் பரிவாரங்களுடனும் மிதிலையிலிருந்து அயோத்திக்குத் திரும்பும் வழியில், மன்னர்களை இருபத்தொருகால் மழுவினுல் துணித்த பரசுராமன், 'என் வில்லின் வலி கண்டு போ' என்று இராமனின் எதிரே வர, இராமன் அவனது வில்லை வளைத்து,

அம்புக்கு இலக்காக அவனது தவத்தை முற்றும் வாங்கி, அவனைக் கொல்லாது, செல்ல விடுத்தனன்.

7. இராமன் வனத்திற்கு ஏகுதல்: கூனியின் சொல்லைக் கேட்டு, இராமனது சிற்றன்னையாகிய கைகேயி தசரதனிடம் வரம் வேண்டி, 'பதினான்கு வருடம் வன வாசம் செய்' என்றாள். பெற்ற தாயும் நகரத்தாரும் புலம்புமாறு, இராமன் கரியும் பரியும் தேரும் இராச்சியமும் பரதனுக்கு அருளி, வனத்திற்குப் புறப்பட்டான். அவனோடு சீதையும், இளங்கோவாகிய இலட்சுமணனும், போயினர்.

8. குகனோடு தோழமை கொள்ளுதல்: கங்கைக் கரையிலே குகனைக் கண்டு, அவனை ஏழை, ஏதலன், கிழ்மகன், என்று பாராது, இரங்கி, அவனுக்கு அருள் புரிந்தான். 'சீதை உனக்குத் தோழி' என்றும், 'எனது தம்பியாகிய லட்சுமணன் உனது தம்பி' என்றும், உகந்து கூறி, அவனுடன் தோழமை கொண்டான்.

9. பரதனுக்குக் கூறிய உறுதி மொழி: சித்திரகூடத்தில் இராமன் இருந்த காலத்தில், பரதன் சுற்றம் புடை சூழ வந்து, இராமபிரானைப் பணிந்து, 'அயோத்திக்கு மீண்டு வந்து முடிசூடி, அடியேனுக்கு அருள் புரிக' என்று வேண்டினான். தந்தையின் கட்டளைப்படி பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும், மீண்டு வந்து அரசை ஏற்றுக் கொள்வதாக, இராமன் அவனுக்கு ஆறுதல் கூறி, அவனுடைய வேண்டுகோளின்படி, தனது மரவடியையும் ஈந்தான். பின்னர், இராவண வதம் முடிந்ததும் விரைந்து வந்து, தம்பி மகிழும் வண்ணம் தான் அளித்த வாக்கைக் காப்பாற்றினான்.

10. காகத்தின் கண்ணைப் போக்குதல்: சித்திரகூடத்தில் இருக்கும் காலத்தில், இந்திரன் மகனாகிய ஜயந்தன், பிராட்டியின் மேனியைத் தீண்டும் ஆசையால், காகத்தின் உருக்கொண்டு வந்து, அவளது மார்பினைத் தீண்ட, இராமன் ஒரு புல்லை அஸ்திரமாகக் கொண்டு எறிய, இதற்கு அது ஆற்றாது, அனைத்து உலகும் திரிந்து ஓடிப் புகலிடம் பெறாது, மீண்டு வந்து, 'வித்தகனே! இராமா! நின் அபயம்' என்று அழைப்ப, அஸ்திரத்தால் அதன் ஒரு கண்ணை மட்டும் போக்கி, உயிருடன் செல்ல விடுத்தான்.

11. பஞ்சவடி வாசம்: இராமன் சித்திரகூடம் விட்டு நீங்கியபின், அகத்திய முனிவர் சொற்படி, கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடியில் பர்ணசாலை அமைத்து வசித்திருந்தான்.

12. சூர்ப்பணகையின் செவியும் மூக்கும் அரிதல்: இராமன் சீதையுடனும் இலட்சுமணனுடனும் பஞ்சவடியில் வசித்த காலத்தில், ஒரு சமயம், இராவணன் தங்கை ஆகிய சூர்ப்பணகை, 'சீதைக்கு நிகராக நான் ஆவேன்' என்று கூறிக்கொண்டு இராமனிடம் வந்தாள். பின், அவள் பிலம் போன்ற வாயைத் திறந்து, எதிர்ந்தும் வந்தாள். இராமன் இலக்குமணனை ஏவி, அவளது செவியும் மூக்கும் வாளினால் அரிவித்தான்.

13. கரன், தூடணன், திரிசிரன், முதலாயினாரை அழித்தல்: அங்கபங்கம் உற்ற சூர்ப்பணகை முறையிட, அவளுக்குக் காவலாய் அமைந்த கரன், தூடணன், திரிசிரன், முதலிய அரக்கர்கள் சேனையுடன் வந்து, தண்டகாரணியத்தில் தன்னை எதிர்க்க, இராமன் அவர்களை அம்பு எய்து அழித்தான்.

14. மாய மானின் மாயையும், இராமன் பிராட்டியைப் பிரிதலும்: சீதையின் மேல் ஆசை வைத்த இராவணனது ஏவலால், சீதையைப் பிரிப்பதற்காக, மாரீசன் என்னும் அரக்கன் பொன்னிற மானாக வடிவெடுத்து, தண்டகாரணியம் வந்தான். அந்த மாயமான் இலைமலி பள்ளி அருகே துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. சீதையிடம் கொண்ட காதல் காரணமாக, அந்த மானைப் பிடித்து வர இராமன் நெடுந்தூரம் சென்று, மாய மான் மாயும்படி அம்பு எய்தான். அதன் பின், இலக்குமணனும் சீதையின் காவலை விட்டுப் பிரிய நேர்ந்தது. இந் நிலையில் இராவணன் ஒரு முனிவனின் வடிவம் கொண்டு வந்து, சீதையை வலியக் கவர்ந்து, தேரின்மேல் கொண்டு சென்று, இலங்கையிலுள்ள அசோக வனத்திலே காவலில் வைத்தான்.

15. கவந்தனது தோள்களைத் துணித்தல்: கவந்தம் போலும் தோற்றமுடைய இவனுடைய தோள்கள் யோசனை அளவாக நீண்டிருந்தன. காட்டில் உலவும் உயிர்களைத் தன் கரங்களால் திரட்டியெடுத்து வாய்க்குள் பெய்துகொள்வது இவனது இயல்பு. பிராட்டியைத் தேடிச் சென்ற இராம இலக்குமணர்களை இவன் எதிர்க்க முற்படவே அவர்கள் இவனுடைய இரு தோள்களையும் வெட்டி வீழ்த்தினர்.

16. சடாயுவுக்கு வைகுந்தம் அருளல்: வைதேகியைப் பிரிந்த பின், இராமன் சடாயுவைச் சந்தித்து, அவன் வாய்மொழியால் நிகழ்ந்த செய்தியை அறிந்தான்; அவனை வைகுந்தத்துக்கு ஏற்றினான்.

17. சவரியின் கனி விருந்து: ரிசியமூக மலையில் உள்ள மதங்காசிரமத்தில் வசித்து வந்த தவமுதுமகளாகிய சவரி தன் ஆசிரமத்துக்கு இராமஇலக்குமணர் எழுந்தருளும் செய்தியை முன்னமே தெரிந்து, அவர்களுக்காக வனத்திலுள்ள நல்ல கனிகளைச் சேர்த்து வைத்திருந்தாள். அவர்கள் இருவரும் ஆசிரமத்திற்கு வந்த போது, அப் பழங்களை இராமபிரானுக்குச் சமர்ப்பித்தாள். இராமன் அவளுடைய கனி விருந்தை ஏற்று, அவளுக்கு அருள்புரிந்தான்.

18. சுக்கிரீவனோடு தோழமை: கிஷ்கிந்தையில் இராமன் சுக்கிரீவனோடு தோழமை பூண்டு, அவனது ஐயத்தை அகற்றும் பொருட்டு, மராமரம் ஏழின் அடி உருவ அம்பு எய்தான். சுக்கிரீவனது வேண்டுகோளின்படி, அவனது அண்ணனாகிய வாலியை இராமன் கொன்றான்; சுக்கிரீவனைக் கிஷ்கிந்தைக்கு அரசனாகச் செய்து, அவனுக்கு முடி கவித்தான்.

19. சீதையை வானரவீரர் தேட விட்டமை: இராமன் கிஷ்கிந்தையில் இருந்துகொண்டு, சுக்கிரீவனுடைய படை வீரர்களாகிய அனுமன், நீலன், சுசேடணன், முதலியோரது தலைமையில், நான்கு திசைகளுக்கும் வானர வீரர்களை அனுப்பி, சீதாதேவியைத் தேடி வருமாறு பணித்தான். தென் திசையில் சென்ற அனுமன் இலங்கையில் உள்ள உத்யானத்தில் சீதையைக் கண்டான்; இராமன் சொல்லிய அடையாளங்களைச் சீதைக்குத் தெரிவித்து, இராமனுடைய கை மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்தான். சீதையும் அம் மோதிரத்தை உச்சிமேல் வைத்து உகந்தாள். பின், அனுமன் இலங்கையை எரியூட்டி, அதனை அழித்து மீண்டான்.

20. கடலை நோக்கித் தவம் செய்தலும், அம்பு எய்து கடலைச் சுடுதலும்: வானர சைனியங்களுடன் கடற்கரை சேர்ந்த இராமன் கடல் கடத்தற்காகத் தர்ப்பாசனத்தில் ஒரு தவசியைப் போல் அமர்ந்து, வருணனைத் தொழுது வேண்டினான். அவனது வேண்டுதலுக்குச் சமுத்திரராஜன் அலட்சியமாய் இருக்கவே, பரந்த கடலில் இராமன் அழல்-அம்பு தொடுத்து, அக் கடல் வழிவிடுமாறு செய்தான்.

21. அணை கட்டுதல்: கடலை அடைத்து, வழி செய்ய, குரங்குகள் மலைகளையும் மரங்களையும் பேர்த்து, கடலின் திவலை ஆகாயத்தில் எழுமாறு இட, சேது கட்டி, படையோடு இலங்கை சென்றான்.

22. இராம இராவண யுத்தம்: கடலால் சூழப் பெற்றதும், காவல் மதிலால் அரண் செய்யப் பெற்றதும், பகலவன் தன்மீது இயங்காத பெருமை பெற்றதுமான இலங்கை, இராவணன் சீதையைக் கவர்ந்து சிறைவைத்தமையால், அழிய நேர்ந்தது. இராமன் வானர வீரனாகிய அங்கதன் மூலம் தூது அனுப்பியதையும், விபீஷணன், 'சீதையை இங்கு வைத்திருப்பது நம் குடிக்கு நஞ்சு' என்று எடுத்துக் கூறியதையும், இராவணன் புறக்கணித்து, இராமனுடன் போர் செய்ய முற்பட்டான். சீதை சிறையிருந்து பத்துத் திங்கள் சென்ற பின், இராம இராவண யுத்தம் தொடங்கியது.

காட்டில் திரியும் கரடியையும், குரங்கையும், முசுவையும், துணைப் படையாகக் கொண்டு, இராமன் இராவணனை எதிர்த்தான். இராவணன், யானை, புரவி, தேர், காலாள் படைகளோடு வந்து, பொருதான். முதல் நாள் போரில் இராவணன்

படை இழந்து, தன்னந்தனியனுய், வெறுங் கையனுய் நிற்க,இராமன் அவனை நோக்கி, 'இன்று போய், நாளை வா' என்று கூறி அருள் செய்தான். இராவணனும் படை முதலிய யாவற்றையும் களத்தே போட்டு, வெறுங் கையோடு, இலங்கையில் புகுந்தான்.

பின்னரும் தொடர்ந்து யுத்தம் நீடித்தது. யுத்தத்தில் கும்பன், நிகும்பன், இந்திரசித்து, கும்பகர்ணன், முதலிய எண்ணற்ற அரக்கர்கள் மாண்டனர். அரக்கர் சேனை காற்றில் அகப்பட்ட பஞ்சுபோலச் சிதறுண்டது. இராவணனது சேனை, 'எங்கும் இராமன்! எங்கும் குரங்கு!' என்று ஏங்கி இரிந்தோடுமாறு இராமன் போர் செய்தான். இலங்கை மன்னனுகிய இராவணனது இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் அம்பினுல் பனங்கனி போல உதிரச் செய்தான் இராமன். இராவணனின் தேவியாகிய மண்டோதரி முதலிய அரக்கியர்கள் தம் தலைவர்களை இழந்து துன்புற்ருர்கள்.

23. அனுமன் மருத்துமலையைக் கொணர்ந்தது: இலங்கையில் நிகழ்ந்த பெரும் போரில் இந்திரசித்து பிரமாஸ்திரத்தால் இலக்குமணனையும் சுக்கிரீவனையும் வானர வீரர்களையும் கட்டி, மரணமடைந்தவர் போலக் கிடக்கச் செய்தான். இராமனும் அது கண்டு சோகமுற்றுக் கிடந்தான். அப்பொழுது ஜாம்பவான் சொற்படி, அனுமன் மருந்து கொணரப் போய், இமய மலையின் அப்பாலுள்ள மருத்து மலையையே பெயர்த்து எடுத்து வந்தான். அதன் காற்றுப்பட்ட மாத்திரத்தில் யாவரும் மயக்கம் தீர்ந்து எழுந்தனர். பின்பு ஒரு முறை இலக்குமணன் தனது மார்பில் வேலை ஏற்று மயங்கிய காலத்து அனுமன் மருத்துமலையைக் கொண்டு வந்தான்.

24. வீடணனுக்கு முடிசூட்டுதல்: இராவணன் முடிந்தபின் அவன் தம்பியாகிய வீடணனுக்கு இராமன், 'என் நாமம் இலங்கும் அளவும் இலங்கையை நீயே ஆள்வாய்' என்று, அவனை அரசனுக்கினுன்.

25. அயோத்தியில் வாழ்ந்த உயிர்களை வைகுந்தத்து ஏற்றுதல்: இராமன் அயோத்திக்கு மீண்டு வந்து அரசு புரிந்தான். இறுதியில், அயோத்தியில் வாழ்ந்த சராசரங்களை எல்லாம் வைகுந்தத்து ஏறச் செய்தான்: தானும் விண்ணுளார் எதிர்கொள்ள வைகுந்தம் சேர்ந்தான்.

பலராமாவதாரம்

1. அவதாரம்: இராமாவதாரத்தின்பின் திருமால் ரோகிணியின் வயிற்றில் தங்கி, ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் ஒருபால் தோன்றக் கண்ணனுக்கு மூத்தோனுய்ப் பிறந்தான்.

2. பலராமன் யமுனு நதியை அடக்கியது: ஒரு சமயம் பலராமன் தனது கட்டளைக்குப் படியாது சென்ற யமுனு நதியைத் தன் கலப்பை ஆயுதத்தின் நுனியால் இழுக்கவே, அந் நதி படாத பாடு பட்டு, அவனைத் தொழுது வேண்ட, அந் நதியை மீண்டும் அதன் போக்கிலேயே செல்ல விட்டான்.

3. அஸ்தினபுரத்தைப் பலராமன் சாய்த்தது: துரியோதனன் மகள் இலக்கணையைத் தூக்கிச் சென்ற கண்ணன் குமாரன் ஸாம்பனைத் துரியோதனுதியர் பிடித்துக் காவலில் வைத்தனர். அவனை மீட்டுக் கொண்டுவரச் சென்ற பலராமன், அவனை விட வேண்டும் என்று சொன்ன போது, அதற்குக் கௌரவர் மறுத்து உரைத்தனர். அதனுல் கடுங்கோபம் கொண்ட பலராமன் தனது கலப்பையை அஸ்தினபுர மதிலின் நாஞ்சிலில் மாட்டி இழுக்க, அந் நகர் அசைந்து சாயத் தொடங்கியது. அது கண்டு கௌரவர் நடுங்கி, ஸாம்பனை விடுவித்து, இலக்கணையோடும் பல சிறப்புக் களோடும் வந்து வணங்க, பலராமன் சினம் தணிந்து, நகரை அசைக்காது அவ்வளவில் விட்டான்.

கிருஷ்ணுவதாரம்

1. அவதாரம்: விண்ணேர்கள் நன்னீராட்டி, தூய நன்மாலைகள் ஏந்தி, தூபம் காட்டி நிற்க, திருமால் ஓர் மாயையினல் மறைந்து, வானவர்தம் துயர் தீரவும், மனிதர் உய்யவும், மண்ணுலகில் வந்து அவதரித்தான். வட மதுரையில் வசுதேவர் தேவகி மைந்தனுய், திருவோணத் திருநாளில், பிறந்தான்.

2. ஆய்ப்பாடியில் வளர்தல்: பிறந்த அன்றே பெற்ற தாயின் உள்ளம் வருந்த, கண்ணன் ஆயர்பாடியில் உள்ள யசோதையின் இல்லம் போய்ச் சேர்ந்தான். ஒருத்தி மகனுய்ப் பிறந்து, ஓர் இரவில் ஒருத்தி மகனுய், ஆயர்குடி தழைக்க, நந்த கோபன்-யசோதை இவர்க்குப் புதல்வனுனன். கண்ணனைப் பாராட்டிச் சீராட்டி, யசோதை வளர்க்க, அவன் ஆயர்பாடியில் வளர்ந்து வரலானுன். தாயான யசோதை பாலும் நெய்யும் அவனுக்கு ஊட்டினுள். பாலடையினல் நெய் ஊட்டுங்காலத்து, வாய்திறந்து கண்ணன் அழுதான். வண்ணச் சிறுதொட்டிலில் கிடத்தி, அவனுக்கு அமைந்த தெய்விக நலங்களைப் பாட்டில் இசைத்து, யசோதை தாலாட்டினுள்.

3. கண்ணன் வாயினுள் யசோதை உலகத்தைக் காணுதல்: குழந்தை கண்ணனைக் கையும் காலும் நிமிர்த்து, கடாரத்திலுள்ள மணமுள்ள நீரால், யசோதை குளிப்பாட்டினுள். அப்பொழுது மஞ்சளால் நாக்கை வழிக்க, திறந்த அவனது வாயிலே, பாரும், திசையும், கடலும், மலைகளும், எல்லாம் தெரியக் கண்டு யசோதை அதிசயித்தாள்.

4. பூதனையை மடியச் செய்தல்: தீய மனத்துக் கஞ்சனது வஞ்சனையால், பேய்ச்சியாகிய பூதனை, கண்ணனைக் கொல்லச் சமயம் பார்த்துத் திரிந்து கொண்டிருந்தாள். இவள், பெற்ற தாயின் வடிவைக் கொண்டு, பிள்ளைகளைத் துன்புறுத்தும் சந்திக் காக்கையைப் போன்ற தன்மைகளை உடையவளாய் வந்தாள். கண்ணனை வாரி எடுத்து, மடியில் வைத்து, நஞ்சு தோய்ந்த தன் முலையை 'உண்' என்று ஊட்டவே, உண்கின்ற பாவனையில் கண்ணன் அவளுடைய உயிரையே உண்டு விட்டான்.

5. சகடாசுரனை உதைத்தல்: கண்ணன் பிறந்த சில மாதங்களிலே, யசோதை அவனைத் தொட்டிலில் தூங்கச் செய்து, யமுனையில் நீராடச் சென்றுள். இச் சமயம் கஞ்சனது கட்டளையால் மலைபோல உருண்டு ஓடிவந்த மாயச் சகடத்தைக் கண்ணன் தன் சிறு கால்களை நீட்டி உதைத்த அளவில், அச் சகடம் அழிந்தது.

6. வெண்ணெய்க்கு ஆடிய பிள்ளைக்கூத்து: கண்ணன் தனது இளமையில், தனது தாயான யசோதையின் முன்னம், வேர்வை அரும்ப, வெண்ணெய்க்காகக் கூத்து ஆடி, அவளை மகிழ்வித்தான்.

7. வெண்ணெய் முதலியன களவு கண்டு உண்ணுதல்: கண்ணன் மெள்ள நடந்து ஆய்ச்சியர் மனைகளில், உறிகளில் வைத்திருந்த பால், தயிர், நெய், ஆகியவற்றைக் களவு கண்டு உண்டு திரிந்தான். எட்டாத உறிமேல் இருக்கிற வெண்ணெய் முதலியவற்றைக் கவரும்பொருட்டு, உரலைக் கவிழ்த்து, அதன்மேல் ஏறி நின்று, தன் விளையாட்டுத் தோழர்களோடு உண்டு மகிழ்ந்தான். கும்மாயத்தையும், வெள்ளி மலைபோல் இருந்த வெண்ணெயையும், குடம் குடமாக உள்ள தயிரையும், நெய்யையும், உண்ணுகின்ற செயலைக் கண்டவர்கள், 'இப் பிள்ளையின் வயிறு ஏழு உலகங்களையும் கொள்ளும் போலும்!' என்று அதிசயித்தனர். கண்ணன் உண்டுவிட்டு, வெறுங் கலங்களை வீசி எறிந்து ஓசைப்படுத்தி விளையாடினுன்.

8. கயிற்றுல் கட்டுப்படுதல் முதலியவை: ஒரு சமயம் யசோதைப் பிராட்டி கண்ணன் செய்யும் தீம்புகள் பொறுக்காமல், அவனைத் தாம்புகொண்டு கட்டிவைக்க எண்ணினுள். அவள் கொணர்ந்த கயிறு அவனைக் கட்டப் போதியதாக இல்லை. மேலும் மேலும் பல கயிறுகளை முடிந்து, அவனைக் கட்ட முயன்றும், கயிறு போதாமல், முடிவில் அவள் இளைத்து வருந்தினுள்; அது கண்ட கண்ணன் அவளது கயிற்றின்

அளவாகத் தனது மேனியைச் சுருக்கி, யசோதை கட்டுதற்கு இசைந்திருந்தான். அதிலிருந்து விலக முடியாதவன் போல் ஏங்கி அழுதான்.

கண்ணன் களவு கண்டு உண்ணும்போது, ஓர் இடைச்சி அவனைப் பிடித்து உரலோடு கட்டி வைத்து விட்டு, தன் பிள்ளையை ஒக்கலையில் எடுத்துக்கொண்டு, யசோதைக்கு அச் செய்தியைத் தெரிவிக்கச் சென்றாள். அவள் யசோதையிடம் முறையிடும் காலத்து, தனது இடுப்பில் இருந்த பிள்ளை கண்ணனாக இருக்கக் கண்டு, நாணம் கொண்டு சென்றனள்.

மற்றொரு சமயம் ஆய்ச்சி ஒருத்தி கண்ணனைப் பிடித்து அடித்தாள். அப்பொழுது பதினான்கு உலகில் உள்ள சராசரப் பொருள்கள் எல்லாம் அடியுண்டன; அடித்த அந்த ஆய்ச்சியும் அடிபட்டு அதிசயித்தாள்.

9. கட்டுண்டு மருதம் சாய்த்தல்: கண்ணனது விரலிலும் வாயிலும் தோய்ந்த வெண்ணெயைக் கண்டு, ஒரு நாள் யசோதை கடைகயிற்றால் உரலோடு பிணித்தாள். ஏதிலார் நகை செய்யவும், ஊரவர் காணவும், கண்ணன் கட்டுண்டு, குரல் ஒழியாது ஏங்கி அழுதான். அழுத கண்ணன் அதனோடு ஓடி, இணைமருது இற்று வீழ இடையே தவழ்ந்தான். அப்பொழுது முன்னர் நாரதனது சாபத்தால் இரட்டை மருதமரமாக இருந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் கண்ணனது பரிசத்தால் சாபம் தீர்ந்து சென்றனர்.

10. ததிபாண்டனுக்கும் அவன் தாழிக்கும் முத்தி கொடுத்தல்: ஆயர்பாடியில் ததிபாண்டன் கண்ணனைச் சந்தித்த காலத்து, அவனது விருப்பத்திற்கு இணங்க, அவனுக்கும், அவனைச் சார்ந்த இருபத்தெட்டு மனையில் உள்ளார்க்கும், அவனது தயிர்த் தாழிக்கும் முத்தி அளித்தான்.

11. விருந்தாவனத்தில் கண்ணன் ஆநிரை மேய்த்தல்: யசோதை விடியற்காலையிலே உணவு ஊட்டி, கண்ணனை ஆநிரை மேய்க்க விடுவாள். கண்ணன் வேலிகளில் நிற்கிற மூங்கிற்கோலை வெட்டி, வில்லாகக் கட்டி, கையிற்கொண்டு, குடையும் செருப்பும் இல்லாதே ஆநிரையின்பின் போவான். சதங்கை மணி ஒலிக்க, கன்றினங்களை மறித்துத் திரிவான். காட்டிலுள்ள கார்க்கோடல் மலர்களைப் பறித்துச் சூடிக்கொள்வான்; தனக்கு இஷ்டமான பசுக்களை இனிது மறித்து, நீர்த்துறையில் அவற்றை நீர் அருந்தச் செய்து, விருந்தாவனத்தில் விளையாடிக்கொண்டிருப்பான்.

12. கண்ணன் குழல் ஊதுதல்: ஆனின்பின் போகின்ற காலத்தில், இடக் கன்னத்தை இடத்தோளோடு சாய்த்து, இரு கைகூட, புருவம் நெரிந்து ஏற, குடவயிறு படும்படியாக, கோவிந்தன் குழல் கொண்டு ஊதுவான். அவனது குழலிசையைக் கேட்டுப் பறவையின் கணங்கள் கூடு துறந்து, படுகாடு கிடந்தன. கறவைக் கணங்கள் கால் பரப்பி, செவி ஆட்டாது நின்றன. மான் கணங்கள் மருண்டு மேய்கை மறந்தன; மேய்ந்த புல்லும் கடைவாயில் சோர, அவைகள் எல்லாம் எழுது சித்திரங்கள் போல் ஆயின; உலர்ந்த காடுகள் தழைத்தன; மலைகள் உருகின; மரங்கள் மதுத் தாரைகள் சிந்தின; மலர்களை உதிர்த்தன; வளர்கின்ற கிளைகளைத் தாழ்த்தின. இவை அனைத்தும் கண்ணன் நின்ற நின்ற திசை நோக்கித் திரும்பின. வானுலகோர் மயங்கினர்; மண்ணுலகோர் அதிசயித்தனர்.

13. கண்ணன் கன்று பாலர் ஆனமை: பிரமதேவன் பெருமானது திருவிளையாடலைக் காணும் பொருட்டு, கன்றுகளையும் சிறுவர்களையும் வானுலகில் மறைத்து வைத்தான். அதுகண்ட கண்ணன் வடிவமும், வண்ணமும், வனப்பும், தோற்றமும், தொழிலும், குணமும், பூணும், தாரும், சிறிதும் வேற்றுமையின்றி, தானே சிறுவரும் கன்றுகளும் ஆகி, அவ்வம் மனைகளுக்குப் போய் வந்து கொண்டிருந்தான். இங்ஙனம் ஓர் ஆண்டு செல்ல, பிரமன் நாணம் உற்று, சிறுவர்களையும் கன்றுகளையும் கண்ணனிடம் கொணர்ந்து ஒப்புவித்து, தனது பிழையைப் பொறுக்கும்படி அவனை வேண்டி, வாழ்த்திச் சென்றான்.

14. காட்டுத் தீயை விழுங்குதல்: விருந்தாவனத்தில் தெய்விகமாகத் தோன்றிய காட்டுத் தீயில் அகப்பட்டு, கோக்களும் கோபாலர்களும் வருந்தி முறையிட, கண்ணன் அவர்களுடைய கண்களை மூடச் சொல்லி, அவர்கள் கண் திறக்கும் முன்னதாக, அந்த அக்கினியைச் சுவாலையோடும் விழுங்கி, அவர்களைக் காத்தான்.

15. கன்று கொண்டு விளவு எறிதல்: மேய் புலத்தில் கன்றின் உருவாக வஞ்சனையோடு வந்த வத்ஸாசுரனைப் பற்றி, தீய எண்ணத்துடன் விளவின் உருவாய் நின்ற கபித்தாசுரன்மேல் எறிந்து, இருவரையும் மாய்த்தான்.

16. குருந்தம் ஒசித்தல்: கஞ்சனால் ஏவப்பட்ட அசுரருள் ஒருவன் கண்ணன் மலர் கொய்ய விரும்பி ஏறும் குருந்தமரத்தில் ஆவேசித்து, கண்ணன் ஏறும் போது, முறிந்து விழுந்து அவனைக் கொல்லக் கருதியிருந்தான். அந்த வஞ்சத்தை உணர்ந்த கண்ணன் அக் குருந்த மரத்தை முறித்துத் தள்ளி, அந்த அசுரனையும் ஒழித்திட்டான்.

17. காளிய நடனம்: யமுனையில் உள்ள ஒரு பெரிய தாமரை மடுவில், நஞ்சு உமிழ் காளியன் என்னும் ஐந்தலை நாகம் அடங்காது தொல்லை கொடுத்து வந்தது. அம் மடுக்கரையில் நின்ற கடம்ப மரத்தில் கண்ணன் எறி, காளியனது வாலைப் பற்றி இழுத்து, அவனுடைய படங்கள் இறும்படியாக, அவனது உச்சியில் சாடி, இரத்தினங்கள் சிதறும்படியாக நடனமாடி, அவனது வலிமையை ஒழித்து, கர்வத்தை அடக்கினான்.

18. தேனுகன், அரிஷ்டன், கேசி, பகாசுரன், வக்கிரன், ஆகியோர்களை அழித்தல்: தேனுகன் கழுதை வடிவம் பெற்று வந்த ஓர் அசுரன். இவன் தீ மனத்துக் கஞ்சனது வஞ்சனையால் கண்ணனைக் கொல்லும் நோக்கத்தோடு திரிந்து கொண்டிருந்தான். பழங்கள் தாங்கிய பனை வடிவாய் நின்ற மற்றோர் அசுரன்மேல் தேனுகனைச் சுழற்றி வீசி எறிந்து, இருவரையும் முடித்தான். எருது வடிவாக வந்து ஆக்களையும் ஆயர்பாடியையும் துன்பப்படுத்திய அரிஷ்டாசுரனை அழித்தான். கேசி என்பவன் குதிரை வடிவாக வந்த ஓர் அசுரன். பறவை வடிவாக வந்த ஓர் அசுரன் பகாசுரன். இவ்விருவரது வாயையும் கிழித்து அழித்தான். இதுபோன்று வக்கிரனது வாயையும் கீண்டான்.

19. குடக்கூத்து ஆடுதல்: ஆயர்பாடியில் மூத்த அவையோர் காண, மணற் குன்றிலே ஏறி, குடங்களைத் தலைமேல் கொண்டு, குழலால் இசை பாடிக்கொண்டு, கூத்தாடுவான். எல்லோரும் காணுமாறு, தெரு வீதிகளிலே பறை கறங்க, இரண்டு குடங்களையும் ஆகாசத்தே இட்டு, கைகளிலே மாறிமாறி ஏந்தி, ஆடுவான்.

20. மரக்கால் கூத்து ஆடுதல்: மன்றத்தில் பறை கறங்க, பார்த்தோர் மகிழ, கண்ணன் மரக்கால் கூத்து ஆடுவான். இதனைப் பொய்க்கால் கூத்து என்றும் கூறுவர்.

21. குரவைக் கூத்து: ஆயர்பாடி மன்றங்களிலே கண்ணன் ஆயர் மடவாரோடு கைகோத்து நின்று, வட்டமாக ஆடி அசைந்து, அம் மடவார்கள் களிக்கும் வண்ணம் அவர்களின் இடையிடையே கலந்து, குரவைக் கூத்து ஆடுவான்.

22. கோபியர் துகில் கவர்தல்: ஆற்றிலிருந்து விளையாடுகின்ற மகளிர்மேல் கண்ணன் சேற்றை அள்ளி எறிந்து, அவர்களது வளையும் துகிலும் கைக்கொண்டு, ஓடி ஒளிவான். நீராடும் மங்கையரது பூந்துகிலை எடுத்து, அருகிலிருந்த குருந்த மரத்திலும், புன்னை மரத்திலுமாக வைத்திருந்து, 'எமது துகிலைத் தா' என்று இரக்கின்ற பெண்களிடம், 'இங்கே வந்து உங்கள் துகிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று சொன்னான்.

23. எருது ஏழு அடர்த்தல்: ஆயர் மடமகளாகிய நப்பின்னைப் பிராட்டியை வதுவை செய்யும் பொருட்டாக, பாயும் தன்மை வாய்ந்த இளமையான ஏழு எருதுகளைக் கண்ணன் தழுவி, அவைகளின் கொம்பு ஒடியும்படியாக, அவற்றின் வலிமையை அழித்தான்.

24. இந்திரவிழாவில் உணவு உண்ணுதல்: ஆயர்கள் தேவேந்திரனுக்கு விழாக் கொண்டாடினார்கள். அதன்பொருட்டு அவனுக்குச் சோறு, கறி, தயிர், முதலிய வற்றை எல்லாம் வண்டி வண்டியாகக் கொண்டு சென்று, படைக்கத் தொடங்கினார்கள். கண்ணன் அதனை விலக்கி, அவற்றைக் கோவர்த்தன மலைக்குப் படைக்கச் செய்து, இமயப் பெருமலைபோல் விளங்கிய சோற்றுப் படையலை எல்லாம், பூத வடிவு கொண்டு, உண்டு தீர்த்துவிட்டான்.

25. கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்டமை: ஆயர்கள் தனக்குச் செய்யும் பூஜையைப் பெறாத இந்திரன் வெகுண்டு, ஆயர்பாடியில் ஆயர்களும் ஆநிரைகளும் வருந்தக் கல்மழை பெய்வித்தான். இம் மழை பெய்துகொண்டிருக்கவே, இதனால் வருந்திய ஆயரும் ஆய்ச்சியரும், 'ஆநிரையையும் எங்களையும் காத்தல் வேண்டும்' என்று கண்ணனை வேண்டினர். கண்ணன் கோவர்த்தன மலையை வேரோடு பறித்து எடுத்து, தனது தோளே காம்பாக, விரல் ஐந்தினையும் மலரவைத்துக் குடைபோலத் தாங்கி, ஏழு நாள் விடாது பெய்த மழையைத் தடுத்து, அவர்களைக் காத்தான்.

26. ஆயரைப் பரமபதம் சென்று கண்டு மீளச் செய்தல்: யமுனை நதியில் ஒரு சமயம் நந்தகோபர் நீராடுங்காலத்தில் ஓர் அசுரன் அவரைக் கொண்டு போய், வருண லோகத்தில் ஒளித்து வைத்தான். கண்ணன் அங்குச் சென்று, அவரை மீட்டு வந்தான். அப்பொழுது தம்மைப் பூசித்து நற்கதி அடைய விரும்பிய ஆயர்களுக்கு ஞானக்கண் தந்து, பரமபதமாகிய புண்ணிய லோகத்தைக் கண்டு மீண்டுவர அருள் புரிந்தான்.

27. அக்ரூரர் கண்ட அற்புதம்: அக்ரூரர் ஒரு யாதவ பக்தர். கஞ்சன் ஏவலால், ஆய்ப்பாடியிலிருந்த கண்ணனையும், பலராமனையும் வடமதுரையில் நடக்கும் வில் விழாவுக்கு அழைத்து வரச் சென்றார். இருவரையும் தேரில் அழைத்துக்கொண்டு வருகிற வழியில், மாத்தியான்னக் கடனை முடித்தற் பொருட்டு, தேரை நிறுத்திவிட்டு, வழிமருங்கிலுள்ள மடுவுக்கு நீராடச் சென்றார். நீராடுகையில் நீரினுள்ளே கிருஷ்ண பலராமர்களைக் கண்டு, எப்படி இங்கு வந்தனர் என்று கரையில் ஏறிப் பார்த்தார். தேரிலும் இவர்கள் இருக்கக் கண்டு அதிசயித்தனர். இவ்வாறே தேரிலும் நீரிலும் மீண்டும் மீண்டும் கண்டு, எம்பெருமானை வாயார வாழ்த்தினர்.

28. கூனியிடம் சாந்து பெறுதல்: கஞ்சன் நிகழ்த்திய வில் விழாவிற்காக வடமதுரை சென்ற கண்ணன், அங்கே வீதியில் கஞ்சனுக்குச் சாந்து கொண்டு செல்லும் கூனி ஒருத்தியிடம், 'எமக்குக் கொஞ்சம் நறுஞ் சாந்து தா' என்று கேட்டான். அவளும் தெளிந்து, அச் சாந்தை இவனுடைய மேனியில் பூச, கண்ணன் அவளது கூனை நிமிர்த்தியருளினான்.

29. யானையின் கொம்பு கொண்டது: கஞ்சன் வில் விழா நடத்த எண்ணி, கண்ணனை அழைத்தான். கண்ணன் அங்குச் செல்லும்போது, வாயிலில் கஞ்சனால் நிறுத்தி வைக்கப்பட்டதும், வெஞ் சினமும் வலிமையும் மதமும் கொலை கெழு செம் முகமும் கொண்டதும், ஆகிய குவலயாபீடம் என்னும் யானை இவனைத் தாக்கியது. இவன் அந்த யானையின் திண்ணிய மருப்பினைப் பறித்து, அதனைச் சாடிக் கொன்று, பாகனையும் வீழ்த்தினான்.

30. மல்லரை மாய்த்தல்: கஞ்சனது தூண்டுதலால் வில் விழாவில் மலைபோல் தன்னை எதிர்ந்துவந்த மற்போரில் தேர்ச்சியுடைய சாணூரன் முதலிய மல்லர்களை உரு மாயும்படி மல்யுத்தத்தில் அழித்தான். வில் விழாவுக்காக நியமித்த வில்லையும் முறித்து எறிந்தான்.

31. கஞ்சன் வதம்: வட மதுரையில் கஞ்சன் வலிமையுடையவனாயும் யமனைப் போன்ற இயல்புடையவனாயும், குடிமக்களிடம் இறைப்பணத்தைத் துன்புறுத்தி வாங்கியவனாயும் இருந்தான். அவன் சாது ஜனங்களை நலிந்ததோடு, கண்ணனை

மாய்ப்பதற்கும், அசுரர் பலரை ஏவி, வஞ்சனைகள் பல புரிந்தான். அவனை அவன் இருந்த மாடத்திலே, வீற்றிருந்த மஞ்சத்திலேயே, தன் திருவடிகளால் உதைத்து முடித்தான் கண்ணன்.

32. தேவ சபையில் ஆயர்களை இருக்கச் செய்தமை: கஞ்சன் இறந்தபின், அவனால் சிறையிடப்பெற்ற அவனது தந்தையும் தனது தாய்வழிப் பாட்டனுமாகிய உக்கிரசேன மகாராஜனைத் தளையினின்றும் விடுவித்து, வடமதுரையில் கண்ணன் பட்டாபிஷேகம் செய்வித்தான். அவ் விழாவில் சூதர்மை என்னும் இந்திரனது தேவசபையினை உக்கிரசேனனுக்காகப் பூவுலகில் கொண்டுவரப் பணித்து, அதில் ஆயர்கள் எல்லாம் இனிது அமருமாறு அருள் புரிந்தான்.

33. மாதவத்தோன் புத்திரனைத் தட்சிணையாகக் கொடுத்தல்: தனக்கு வித்தை கற்பித்த மாதவத்தோனாகிய சாந்தீபினியின் புத்திரன் கடலில் மாண்டு போயிருந்தான். மாய்ந்த அப் புத்திரனைக் குரு விரும்பியபடி, உருமாறாவண்ணம் அப்படியே கொண்டு வந்து கொடுத்தான்.

34. துவாரகைப் பதியை நிர்மாணித்து யாதவரை அங்குக் கொண்டு செல்லுதல்: காலயவனன் என்பவன் மிலேச்சப் படைகளுடன் வடமதுரையைத் தாக்க வந்தபோது, கண்ணன் மேலைக்கடலில் துவாரகைப் பதியை நிர்மாணித்து, ஒருவரும் அறியாதபடி, வடமதுரையிலுள்ள எல்லாப் பிரஜைகளையும் துவாரகைக்குக் கொண்டு சென்றான்.

35. கற்பகம் கொணர்தல்: துவாரகையில் கண்ணன் பட்டத்துத் தேவிமார் எண்மர் மனங்களைக் கவர்ந்து இன்பமுடன் வாழ்ந்தான். ஒரு சமயம் தன் தேவிமாருள் ஒருத்தியாகிய சத்தியபாமையின் விருப்பப்படி வானுலகு சென்று, அங்குள்ள கற்பகத் தருவைக் கொண்டு வந்து, துவாரகையில் நட்டான். அப்பொழுது அங்கே கண்ணனை எதிர்த்த இந்திரனும், முப்பத்து முக்கோடி தேவரும், இவனது சங்கநாதம் கேட்ட அளவிலேயே மயங்கி வீழ்ந்தனர்.

36. கண்டாகர்ணனுக்கு முத்தி அளித்தல்: சிவ பக்தியோடு, விஷ்ணுத் துவேஷமும் கொண்டு, விஷ்ணுவின் நாமமும் தன் செவிப்படுதலாகாது என்று இவன் தன் காதில் எப்பொழுதும் மணி கட்டி ஓயாது அசைத்து ஓசைப்படுத்திக் கொண்டு திரிந்தான். இறுதியில் முத்திப் பேற்றை நல்குதற்கு உரியவன் திருமால் என்றும், அவன் கண்ணனாகத் துவாரகையில் உள்ளான் என்றும், குபேரனால் தெரிந்து, தனது பிழை உணர்ந்து, தன் செவியில் கட்டிய மணியை அறுத்தெறிந்து, கண்ணனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். அவனுடைய தீவிர நிலைக்கு இரங்கி, அவனுக்கும் கண்ணன் முத்தி அளித்தான்.

37. காமன் தாதை ஆனமை: கண்ணனது மனைவியாகிய திருமகளின் திருவவதாரமான ருக்மிணிப் பிராட்டியிடம் பிரத்யும்நன் என்னும் குமாரனாக மன்மதன் தோன்றினான் ஆதலில், கண்ணன் காமன்-தாதை என்று புகழப்பெற்றான்.

38. ஒன்னார் அறுபுரம் செற்றமை: சிவபிரான் எரித்த திரிபுரத்திலிருந்து தப்பிய அறுபதினாயிரம் அசுரர்கள் பிரமனைக் குறித்துத் தவம் செய்து, பூமியில் அழிதற்கு அரிய ஆறு பட்டணங்களைப் பெற்று வாழ்ந்தனர். வசுதேவரது நண்பரின் சிஷ்யராகிய பிரமதத்த முனிவர் அறுபுரத்தை அடைந்து, அங்குள்ள ஆவர்த்தை என்னும் நதிக்கரையில் அசுவமேத யாகம் செய்தனர். அந்த யாகத்திற்கு அறுபுரத்து அசுரர்கள் இடையூறு விளைக்கவே, கண்ணன், வசுதேவரின் வேண்டுகோளின்படி, அறுபுர அசுரர்களை அழித்து, யாகத்தை இடையூறின்றி நிறைவேறச் செய்தான்.

39. வாணனின் தோள் துணித்தல்: கண்ணனுடைய மகனது காதல்-மகனாகிய அநிருத்தனை மாவலியின் மகன் வாணன் சிறை செய்து, தன் மகளது கன்னிமாடத்தில் வைத்தான். கண்ணன் வாணபுரம் புகுந்து, அக் கன்னிமாடத்தின் காவலை அழிக்க முற்பட்டான். அப்பொழுது ஆயிரம் தோள் படைத்த வாணன் இவனை எதிர்க்க

லானுன். வாணனுக்கு உதவியாக வள்ளி கொழுநன் முதலாய மக்களோடு, முக்கணுனும், அக்கினியும், மோடியும், படைகளோடு வந்தனர். சிவன் முதலியோர் உடைந்து ஓட, வாணனது தோள்களைச் சக்கராயுதத்தால் துணித்து, அவனுக்கு அருள்செய்து அவனை இரண்டு தோள்களுடன் வாழவிட்டான்.

40. நரகாசுரன், முரன் வதம்: மகளிரைக் கவர்ந்து, சிறைசெய்து நரகன் துன்புறுத்தி வந்தான். கண்ணன் அவனை அழித்து, எல்லோரையும் காத்தான். அவனுக்குத் துணையான முரனது வாழ்வையும் தொலைத்தான்.

41. பதினாறுயிரம் மங்கையரை மணந்தது: மந்தரகிரியின் சிகரமான இரத்தின கிரியில், நரகனுல் பல திசைகளிலிருந்தும் கொணர்ந்து சிறை வைக்கப்பட்ட பதினாறுயிரம் கன்னியர்களைத் தான் பதினாறுயிரம் திருவுருவுடன் மணந்து, அவரவர் மாளிகையில் அவர்களை மகிழ்வித்தான். அப்பொழுது நாரத முனிவர் பெருமானது திருமணக்கோலத்தைத் தரிசிக்க வந்து, இவன் ஒவ்வோர் அகத்திலும் வெவ்வேறு மங்களத் திருவுடன் இருத்தலைக் கண்டு, மிகவும் ஆச்சரியமுற்று, இவனைத் துதித்து மகிழ்ந்தார்.

42. நாரத முனிவர் குடும்பத்து இடும்பை எய்துதல்: ஒரு சமயம் நாரத முனிவர் திருமாலைத் தரிசித்தபோது, தாம் தத்துவ ஞானம் கைவந்த தேவ இருடி என்று செருக்குடன் சில வார்த்தைகள் கூறினர். தனது மாயை எவராலும் கடத்தற்கு அரியது என்பதை எம்பெருமான் காட்டுதற்குத் திருவுளம் கொண்டு, நாரதனை அருகில் உள்ள ஒரு தடாகத்தில் நீராடுமாறு கட்டளையிட்டான். முனிவர் தமது யாழைக் கரையில் வைத்துவிட்டு நீருள் மூழ்கவே, அவர் நாரதி என்னும் பெண்ணாக மாறினர்; திருமாலும் யாழைக் கைக்கொண்டு மறைந்திட்டார். நாரதியைக் கண்ட ஓர் அரசன் அவளை மணந்து, அவளிடம் பல புதல்வர்களைப் பெறவே, அவள் குடும்பக் கவலையால் நைந்தாள். நாரதரை மீட்கத் திருவுளங் கொண்ட பெருமான் கிழ வடிவத்துடன் நாரதியிடம் சென்று, அவளை ஒரு பொய்கையில் மூழ்கிவர நியமித்தான். அவள் நீருள் மூழ்கவே, முன்னைய முனிவன் உருவம் வந்துற்றது. திருமாலும் முன் கொண்டு சென்ற யாழை அவர் கையில் கொடுத்து, அவரது மனத்தைத் தெளிவித்து அருளினுன்.

43. சிசுபால வதம்: கேட்பாரது செவி சுடும் கீழ்மையான வசைகளையே வையும் பழம் பகைவனுகிய சிசுபாலனைக் கண்ணன் அழித்து, தன் திருவடிக் கீழ்ச் சேர்த்தான்.

44. காண்டவ தகனம்: அமரர்க்கு அரசனுகிய தேவேந்திரனுக்கு உரிய காவற் காடாகிய காண்டவ வனத்தை அக்கினியின் வேண்டுகோளின்படி, தேவேந்திரன் கண்டு நிற்க, கண்ணன் அதனை எரியால் உண்பித்தான்.

45. திரௌபதிக்குத் துகில் ஈதல்: துரியோதனுதியர்களுடன் ஆடிய பொய்ச் சூதில் பாண்டவர்கள் தோல்வியுற்றுர்கள். துரியோதனன் தம்பி துச்சாதனன் திரௌபதியை நெருங்கி, 'எனக்கு உரிமை செய்' எனத் துன்புறுத்தினுன். அவன் அவளது துகிலைப் பற்றி இழுத்தபோது, அவள் தன் கணவன்மார் முன்னே அழுது, கண்ணனை நினைந்து, இவன் பெயரை உறுதியாகச் சொல்ல, அந்த ஓர் ஆடைதானே கோடி கோடியாகக் குவிந்தது. பாஞ்சாலி தனது கூந்தலை விரித்து, மன்னரது பெருஞ் சபையிலே கௌரவர் குலத்தை வேரறுக்கும் பெரியதொரு சபதம் செய்தாள்.

46. கண்ணன் தூது: கண்ணன் துரியோதனன்பால் பஞ்சபாண்டவர்க்குத் தூதனுய்ச் சென்றுன். துரியோதனன் தனது அவையில் பொய்யறையிலே மல்லரை வைத்து, அதன்மேல் கண்ணனுக்கு ஓர் ஆசனத்தை இட்டு வைத்தான். கண்ணன் ஆசனத்தில் வீற்றிருந்தபோது, அவ்வுண்மை வெளிப்பட, பெரிய வடிவு எடுத்து, பொய்யறையில் இருந்த மல்லரை அழித்தான். பின், துரியோதனனிடம் பொய்யுறவு கொண்டாடி, பாண்டவர்க்காக, 'ஊர் ஒன்று வேண்டும்', என்று உரையாடினுன். துரியோதனன் மறுத்துரைக்கவே, பாரதப் போருக்கு வேண்டுவன செய்து வந்தான்.

47. விதுரன் மனையில் விருந்து உண்ணல்: கண்ணன் பாண்டவர்க்காக அத்தினுபுரிக்குத் தூது சென்ற காலத்தில், பக்தி ஞானங்களில் சிறந்த விதுரனது மனையில் தங்கி, அவன் அளித்த அடிசிலே அன்புடன் உண்டான்.

48. அர்ச்சுனனுக்குத் தேர் ஓட்டுதல்: பாரதப் போரில் வெள்ளைக் குதிரைகள் பூட்டியதும், குரங்குக் கொடி கட்டியதுமான அர்ச்சுனனுடைய தேரில் பாகனுய், கோல் கைக்கொண்டு நின்றுன். மலையை ஒத்த தோள்களை உடைய மன்னர்களும், மாரத வீரர்களும், மற்றும் பலரும், துரியோதனன் முதலிய நூற்றுவரும், அழியும் படியாகத் தேர் ஊர்ந்தான். பகைவர்கள் நடுங்கும்படியாகவும், பாண்டவர்களுக்கு வெற்றி மிகும்படியாகவும், சங்கம் வாய்வைத்து ஊதினுன்.

49. பார்த்தனுக்குக் கீதை உபதேசித்தல்: பாரத யுத்தத்தின் முதல் நாளில் போர்த் தொடக்கத்திலே, எதிர் நின்ற வீரர்கள் எல்லாம் தன் உறவினராய் இருக்கக் கண்டு, மனம் சோர்ந்து, அர்ச்சுனன் வில் நெகிழத் தேர்த்தட்டில் நின்றுன். சாரதியாய் அமைந்த கண்ணன் அவனுக்குத் தத்துவ நூலாகிய கீதையை விவரித்து உரைத்து, அவனது மயக்கத்தைப் போக்கி, அவனை ஆண்மையுடன் தன் கடமையை ஆற்றுமாறு செய்தான்.

50. கதிரவனை மறைத்தல்: பாரத யுத்தத்தில் ஒரு சமயம், சூரியனது ஒளி கெடுமாறு அதைக் கண்ணன் தனது சக்கராயுதத்தால் மறைத்து, சிந்துக் கோனுகிய ஜயத்திரதனது தலையை அர்ச்சுனனைக்கொண்டு அறுக்கச் செய்தான்.

51. வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்தல்: வேதம் வல்ல அந்தணன் ஒருவன் கண்ணனும் பார்த்தனும் இருக்கின்ற இடத்துக்கு வந்து, 'என் மனைவி குழந்தைகளைப் பெற்றதும், அக் குழந்தைகள் மாயமாய் மறைந்து விடுகின்றன. ஏதோ ஒரு கொடிய தெய்வம் கொண்டோடி விடுகிறது. எனக்கு என் மக்களை அளிக்க வேண்டும்' என்று வேண்டினுன். கண்ணன் வைதிகனையும் பார்த்தனையும் தேரில் ஏற்றிக் கொண்டு சென்று, தன்னுடைச் சோதியில் இருந்த வைதிகன் பிள்ளைகளை அவரது வடிவம் மாருது கொண்டு வந்து கொடுத்தான்.

52. அபிமன்யுவின் மகனை உயிர் மீட்டல்: அசுவத்தாமன் ஏவிய அம்பினுல் கருங் கட்டையாய்ப் போன தன் மருமகன் சந்ததியாகிய உத்தரை சிறுவனைக் (பரீட்சித்தைக்) கண்ணன் உயிர்மீட்டுக் கொடுத்தான்.

53. கண்ணன் பெருமை தெளிதல்: அர்ச்சுனன் கண்ணனது உலகு அளந்த சேவடிமேல் தான் சூட்டிய பூந்தாமம் சிவனது முடிமேல் இருக்கக் கண்டு, கண்ணனது பெருமையை உணர்ந்தான்.

வேதவியாஸாவதாரம்

பாரத யுத்தத்தில் மடிந்த மன்னர்களைத் திருதராஷ்டிரனுக்குக் காட்டுதல்: சிதறுண்டு கிடந்த வேதங்களை ஆராய்ந்து தொகுக்கும்வண்ணம் பராசர முனிவனுக்கு மகனுகத் தோன்றிய திருமால் புத்திர சோகத்துடன் ஆசிரமத்தில் வசித்து வந்த திருதராஷ்டிரனிடத்திற்கு வந்தான். அப்பொழுது திருதராஷ்டிரனது வேண்டுகோளின்படி, அவனும் அவன் பத்தினி காந்தாரியும், யுத்தத்தில் உறவினரை இழந்த பிறரும், காணுமாறு, அன்று சூரியன் மறைந்தபின், இறந்த வீரர்கள் அனைவரையும் அவரவர் சேனைகளுடன் கங்கை நதியிலிருந்து எழுந்து வரக் காட்டியருளினுன். அன்றிரவு முழுதும் அவர்கள் தம் பந்துமித்திரர்களுடன் அளவளாவியிருந்து, நதியில் மூழ்கி மறைந்து போயினர்.

கற்கியவதாரம்

உலகில் தருமம் தவிர்ந்து, பொறுமை அழிந்து, உண்மை ஒழிந்து, அருள் நிலை கலங்கி, தனது பூசனையும் சிதைந்து, பாவமே வெல்லுகின்ற கலியுகத்தினது முடிவு காலத்தில் வையம் காக்க, கடும் பரிமேல் அருமந்த கற்கியாய்த் திருமால் அவதரித்து, தருமம் முதலியவற்றை நிலைபெறச் செய்வன்.

பிற கதைகள்

1. உலகத்தை உண்டு, ஆலின் இலையில் துயிலுதல்: பிரளய கால வெள்ளத்திலே ஏழு உலகங்களையும் வயிற்றில் அடக்கி, ஓர் ஆலின் இளந் தளிரின்மேலே, ஒரு குழவி ஆய், மெள்ளத் துயின்றான்; பிறகு, உமிழ்ந்து அண்டமும் உயிரும் மீண்டும் தோன்றச் செய்தான்.

2. மார்க்கண்டேயனுக்குப் பிரளயத்தில் உலகம் காட்டியது: நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேய முனிவனுக்குப் பிரளயக் காட்சியைக் காணுமாறு அனுக்கிரகித்து, பின்னர், பிரளய வெள்ளத்தில் ஆலின் இலையில் அறிதுயில் அமர்ந்த பெருமான் முன்பே அழிந்துபோன உலகங்களையும் சராசரங்களையும் தன் திருவயிற்றினுள்ளே அம் முனிவனுக்குக் காட்டியருளினன்.

3. உந்திமேல் நான்முகனைப் படைத்து, உலகமும் உயிர்களும் தருதல்: உலகத்தைப் படைப்பதற்காக, தன் உந்தித் தாமரையின் மேலே நான்முகனைத் தோற்றுவித்து, வேதங்களையும் அவனுக்குக் கொடுத்தான். அந் நான்முகன் சங்கரனையும், பிற தேவதைகளையும், உலகங்களையும், உயிர்களையும், படைத்தான்.

4. கடல் கடைதல்: தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்தபோது இரு திறத்தார்க்கும் ஒப்ப உதவியாய் நின்று, கடல் சுழன்று கதறி நுரை சிந்த, மந்தர மலையைச் சுற்றிய பாம்பின் உடல் தேயக் கடைந்தான். அச் சமயம் கூர்மம் ஆகி, மலை தாழாது தாங்கியும் நின்றான். கடலிலிருந்து அமுதம் எழுந்ததோடு, நஞ்சு, திருமகள், சந்திரன், கற்பகம், முதலிய வேறு பல பொருள்களும் தோன்றின. திருமால் பெண்மை வடிவு கொண்டு, அமுதத்தைக் கவர்ந்த அசுரரிடமிருந்து மீட்டு, தேவர்கள் அமுதத்தை உண்ண உதவிசெய்தான். நஞ்சைச் சிவபெருமான் அமுது செய்தான். திருமகளைத் திருமால் மார்பில் கொண்டான். கற்பக விருட்சம் முதலியவற்றைத் தேவர்கள் அடைந்தனர்.

5. தேவாசுர யுத்தம்: தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நிகழ்ந்த பெரும் போரில், திருமால் தேவர்களுக்காகப் புள் ஊர்ந்து, ஆழி ஏந்தி, அசுரர்கள் அலமந்து வீயப் பொருதான்.

6. திருமால் உபேந்திரன் ஆனமை: ஒரு சமயம் திருமால் காசியப முனிவனது மனைவியாகிய அதிதி வயிற்றில் இந்திரனுக்குத் தம்பியாய்ப் பிறந்து, உபேந்திரன் எனப் பெயர் கொண்டு, தேவலோகத்தில் இந்திரனது அருகில் இருந்து, அவனது துயரைத் தீர்த்து, எல்லா உயிர்களையும் பாதுகாத்தனன்.

7. மது-கைடபர் மாண்டது: வலிமையால் எழுந்த மது-கைடபர்களால் துன்புற்று, விண்ணோர் பரவ, அவர்களைக் கோபித்து அழித்தான்.

8. வெள்ளி நாட்டம் கெடுத்தது: திருமால் குறள் வடிவத்தில் சென்று, மாவலியிடம் மூவடி மண் வேண்டியபோது, மாவலியினது அருகில் இருந்த சுக்கிராசாரியர், 'இவனுக்குத் தானம் கொடுத்தலாகாது; அழிவு வரும்' என்று தடுத்தார். அவரது பேச்சை மறுத்து, மாவலி தானம் வழங்கி, நீர் வார்த்தபோது, மாவலியின் கமண்டல நீர் விழாதபடி சிறிய வடிவுடன் சென்று சுக்கிராசாரியர் தடுத்தார். வாமன வடிவம் கொண்ட பெருமான் கைத் தருப்பையால் கமண்டலத்தின் துவாரத்தைக் குடைய, சுக்கிரனது ஒரு கண் சிதைவுற்றது.

9. கஜேந்திரனுக்கு முத்தி அளித்தல்: பொய்கையில் இறங்கி, நாள்மலர் பறித்து, தினந்தோறும் தொழுகின்ற யானையை ஒரு நாள் அங்கு வாழ்ந்த கொடிய முதலை பற்றியது. அதற்கு வருந்தி, 'உன் சரண் அன்றி, வேறு புகலிடம் எதுவும் இல்லை' என்று கதறி, 'ஆதி மூலமே!' என்று அழைக்க, திருமால் தனது ஆழிப்படையால் முதலையைக் கொன்று, யானையை விடுவித்தான்.

10. துருவன் பேறு பெறுதல்: உத்தானபாதன் என்னும் அரசனுக்குச் சுநீதி என்னும் மனைவியினிடத்தில் பிறந்தவன் துருவன். சிங்காதனத்தில் மாற்றாந்தாயின் மகனான உத்தமன் தன் தகப்பன் மடியிலே இருந்ததைப்போல் தானும் இருக்க விரும்பிய போது சுருசி, 'வேறொருத்தியின் வயிற்றில் பிறந்த நீ அதற்கு உரியன் அல்லை' என்று தடுத்துவிட்டாள். துருவன் மிகவும் வருந்தி, தன் தாயிடம் அனுமதி பெற்று, அருகில் உள்ள ஒரு வனத்தில் சென்று, ஸப்த ரிஷிகளின் வாயிலாக, துவாதசாட்சர மகாமந்திர உபதேசம் பெற்று, தவம் செய்தான். அம் மந்திரத்தின் மகிமையால் திருமாலின் திருவருளைப் பெற்று, எல்லா நட்சத்திரங்களுக்கும், இருடிகளுக்கும் மேலான பதவியைப் பெற்றான்.

11. சரபம் பிளந்தது: சிவபிரானது அவதாரமாகிய சரபம் என்னும் விலங்கை நரசிங்கப் பெருமான் பிளந்து அழித்தார். சரபத்தைப் பிளந்த பின்புதான் பெருமானது பெருஞ் சினம் அடங்கியது.

12. சிவனது இரத்தலை ஒழித்தது: பிரமனது தலையில் ஒன்றைக் கிள்ளியதனால், அக் கபாலம் சிவபிரானது கையை விடாது பற்றிக் கொண்டது. அதிலிருந்து விடுதலை பெற வேண்டி, சிவன் அதில் இரந்து உண்டு திரிந்தான். இறுதியில் திருமாலிடம் பிச்சை பெற்றபோது, சாபம் நீங்கப் பெற்றான்; கபாலமும் கையை விட்டு அகன்றது.

13. சிவபெருமான் கறைக்கண்டன் ஆனது: பாற்கடல் கடைந்தபொழுது எழுந்த விஷத்தைக் கண்டு, தேவர் முதலிய எல்லோரும் அஞ்சி ஓட, சிவபெருமான் அதனை உண்டு, எல்லோரையும் காத்தான். அவன் உண்ட விஷம் கழுத்தில் தங்கி, அவனது கழுத்தைக் கருமை ஆக்கியமையால், கறைக்கண்டன் ஆனான்.

14. சிவன் பிறை சூடியது: தக்கன் சாபத்தால் கலைகள் தேயப்பெற்ற சந்திரன் ஒரு கலையோடு சிவபிரானைச் சரணம் அடைய, அப் பெருமான் அருள் புரிந்து, அந்த ஒற்றைக் கலையைத் தலையில் அணிந்து, மீண்டும் கலைகள் வளர்ந்து வரும்படி அருள் புரிந்தான். திருப்பாற்கடல் கடைகையில் தோன்றிய சந்திரனைத் தலையில் சூடினான் என்றும் கூறுவர்.

15. சிவன் கங்கை தரித்தது: கபில முனிவனின் சாபத்தால் சாம்பலான தம் மூதாதைகளை நற்கதியில் சேர்க்கும் பொருட்டு, பகிரதச் சக்கரவர்த்தி தவம் புரிந்து, ஆகாய கங்கையைப் பூவுலகிற்குக் கொணர்ந்தான். மேலிருந்து இறங்கும் அதன் வேகத்தைத் தாங்கும் வல்லமை பூமிக்கு இல்லாமை பற்றிச் சிவபிரானைப் பிரார்த்திக்க, அவனது வேண்டுகோளின்படி, சிவபெருமான் கங்கையைத் தன் முடியில் ஏற்று, சிறிது சிறிதாகப் பூமிக்கு வரவிட்டான்.

16. சிவன் அரவம் பூண்டது: தாருகாவனத்து இருடிகள், ஒரு சமயம், சிவபிரானைக் கொல்லவேண்டி, அபிசார யாகம் இயற்றி, அத் தீயிலிருந்து தோன்றிய பாம்புகள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்தலை, முதலியவற்றைச் சிவபிரான் மீது ஏவினர். அவன் நாகங்களை ஆபரணமாகவும், பூதங்களைத் தன் கணங்களாகவும் கொண்டு, மான், புலி, ஆகியவற்றை உரித்து அவற்றின் தோலைப் போர்த்து, முயலகனையும் அடக்கி ஒடுக்கினான்.

17. சிவபெருமான் திரிபுரம் எரித்தது: பொன், வெள்ளி, இரும்புகளால் ஆகிய மூன்று அரண்களை உடைய மூன்று அசுரர்கள் அந்த அரண்களோடே பறந்து, பல இடங்களையும் பாழாக்கி, தேவர் முதலிய யாவர்க்கும் பெருந் துன்பம் இழைத்து வந்தனர். தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி, சிவபெருமான் பூமியைத் தேராகவும், அத் தேவர்களையே படைக்கலம் முதலியனவாகவும் கொண்டு, போருக்குப் புறப்பட்டனன். தேவர்கள் தங்கள் தங்கள் வல்லமையை நினைந்து அகங்கரிக்க, அவர்கள் உதவியை ஏற்காமல், சிவபிரான் தனது சிரிப்பினாலேயே முப்புரங்களை எரித்தான்.

18. சிவன் பாண்டரங்கம் ஆடியது: திரிபுரம் எரித்த காலத்தில் தனது தேரில் நின்ற பிரமன் காணுமாறு பைரவ வடிவமாகிய சிவபெருமான் வெண்ணீற்றை அணிந்து, பாண்டரங்கக் கூத்து ஆடினுன்.

19. இராவணன் வெள்ளிமலே பறித்தது: இராவணன் அளகாபுரி சென்று, குபேரனே வென்று, மீளுங்காலத்து, அவன் ஏறிவந்த புஷ்பக விமானம் சிவபிரான் வீற்றிருக்கும் கைலாயத்தில் தடைப்பட்டது. உடனே இராவணன் வெகுண்டு, அம் மலேயையே பறித்து எறிய முற்பட்டான். அப்பொழுது சிவபெருமான் தன் காலால் அழுத்த, அம் மலேயின் கிழ் அவன் அகப்பட்டு, மீள வழி அறியாது, சாமகானம் பாடி, சிவபிரானது அன்புக்குப் பாத்திரனுகி, விடுதலே பெற்றுன்.

20. இராவணனேக் கார்த்தவீரியன் வென்றது: இராவணன் திக்கு விசயம் செய்த காலத்து, கார்த்தவீரியனது மாகிஷ்மதி நகரத்திற்கும் சென்று, போர் செய்ய முயன்றுன். கார்த்தவீரியன் நர்மதைக் கரையில் நீராடுகின்றுன் என்ற செய்தி அறிந்து, அங்கே தன் சேனேகளுடன் சென்று எதிர்த்தான். ஆயிரம் புயமும் பெரு வல்லமையும் படைத்த கார்த்தவீரியார்ச்சுனன் இராவணனேப் பிடித்துத் தன் கைகளால் புடைத்து, தன் நகரில் கொண்டு சென்று, சிறை வைத்தான். பின்னர் இச் செய்தி அறிந்த இராவணனின் பாட்டனுர் ஆகிய புலஸ்தியர் கார்த்தவீரியனிடம் சமாதானம் பேசி, இராவணனே விடுவித்தார்.

21. கோவலில் நடந்தது: முதலாழ்வார்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும், ஒரு சமயம் சூரியாஸ்தமனத்தின் பின், திருக்கோவலூரில் ஓர் இல்லத்தின் இடைகழியில், சந்தித்தார்கள். அப்பொழுது பெருமானும் அங்கு எழுந்தருளி அவர்களிடையில் வர, பெருமானது சோதியைக் கண்டு மூவரும் பாமாலே புனேந்து ஏத்தினர்.

22. பட்டர்பிரான் கிழி அறுத்தது: பாண்டியனது பேரவையில் வித்தியாசுல்கமாகக் கட்டி வைத்த பொற்கிழியை, பெரியாழ்வார், 'நாராயணனே ஆதிபரன்' என்று மறை உரைத்து அறுத்தார்.

23. ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலேயை உவத்தல்: பெரியாழ்வாரின் பெண் கொடியாகிய ஆண்டாள் நாராயணனேயே தன் நாயகனுக வரித்து, அப் பெருமானுக்குச் சாத்தத் தம் தந்தை கட்டி வைத்திருக்கும் மாலேயை, அவருக்குத் தெரியாமல், நாள் தோறும் அணிந்து, கண்ணுடியின் முன்னுல் நின்று, தன் அழகை நோக்கி, பின் கூடையில் கழற்றிவைத்து வந்தாள். ஒரு நாள் கோதை மாலே சூடியிருத்தலேக் கண்ட தந்தை, அம் மாலே கோதை சூடியதனுல் தூய்மை இழந்தது என்று எண்ணி, வேறு மாலே கட்டிப் பெருமானுக்குச் சமர்ப்பித்தார். ஆனுல், பெருமானே பெரியாழ்வாரது கனவில் தோன்றி, 'கோதை சூடிக் கொடுத்த மாலேயே தனக்கு உவப்பாவது' என்று தெரிவித்தான். இதனுல் ஆண்டாள், 'சூடிக்கொடுத்தாள்' என்னும் திருநாமம் பெற்றுள்.

24. தொண்டைமானுக்குச் சங்கு ஆழி கொடுத்தது: தொண்டைமான் சக்கரவர்த்தி அரசபாரம் வகித்தும், பக்தியில் சிறந்து, தவவொழுக்கமுடையவனுய், திருவேங்கடப் பெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தான். அவன் திருமலேயில் இருத்தலே உணர்ந்த பகைவர்கள் அவனது நாட்டைக் கைக்கொள்ள, அவன் அது குறித்துப் பெருமானிடம் முறையிட்டான். அவனுக்காகத் திருவேங்கடமுடையான் தனது சங்கு சக்கரங்களே அவனுக்குக் கொடுத்து, 'இவற்றைக் கொண்டு பகைவரை வென்றிடுக' எனப் பணித்தான். அவ்வாறே தொண்டைமானும் பகைவரை ஓட்டி, தன் அரசை நிலேபெறச் செய்தான்.

25. சோழனது மிடறு புழுத்தல்: சோழன் ஒருவன் சைவாகமத்தை மெய் என்றும், சிவத்துக்கு மேலான பரம்பொருள் இல்லை என்றும், வித்வான்களிடம் நிர்ப்பந்தித்துக் கையெழுத்திடச் செய்து வந்தான். கூரத்தாழ்வானைத் தன் சபைக்கு அழைத்துக் கையெழுத்திடச் சொல்லி வற்புறுத்த, அவர் 'சிவத்துக்கு (குறுணி) மேல் பதக்கு' என்பது உண்டு என்னும் பொருள்படும் வாக்கியத்தை எழுதிக் கையெழுத்திட்டார். இவனது கொடுமை தாங்கமாட்டாது இராமானுசர் மனம் நொந்து சபிக்க, இவன் தன் மிடறு புழுத்து வருந்தி, கிருமிகண்ட சோழன் என்னும் பெயரைப் பெற்றான்.

26. பெருமான் அயோத்தியிலிருந்து வந்து, திருவரங்கம் கோயில் கொண்டது: சூரிய குலத்தில் தோன்றிய இக்ஷ்வாகுவின் தவத்திற்கு மகிழ்ந்து, பிரமன் தான் வழிபட்டு வந்த பெருமானை விமானத்துடன் கொடுத்தருளினான். இரவிகுலத்து அரசர் அயோத்தியில் வழிபட்டு வந்த அப் பெருமானை, இராமன் முடிசூடிக்கொண்ட காலத்து, விபீஷணனுக்குக் கொடுத்தருளினான். அவன் இலங்கைக்குக் கொண்டு செல்லும் வழியில், பெருமான் காவிரியின் நடுவே தென்னிலங்கைத் திசை நோக்கிக் கோயில் கொண்டருளினான்.

திருவேங்கட மாலை

சிலேடை விளக்கம்

51. வேதனைக் கூற்றைத் தவிர்க்கும்—(காதல் இற்றுச் சார் தவர்க்கும்) வேதனை, கூற்றைத் தவிர்க்கும்: பிரமனையும் யமனையும் விலக்கும்; பிறப்பு இறப்பைப் போக்கி முத்தி அளிக்கும்.

(காமியத்தைச் சார்ந்தவர்க்கும்) வேதனைக் கூற்றைத் தவிர்க்கும்: துன்பங்களின் வகைகளைப் போக்கும்.

52. வேள்விக்கினமாற்றும்—(கேள்வித் துறவோரும்) வேள் விக்கினம் மாற்றும்: மன்மதனால் வரும் இடையூற்றைத் தவிர்க்கும்.

(கேடு அற இல் வாழ்வோரும்) வேள்விக்கு இனம் ஆற்றும்: யாகத்திற்கு ஈடான நற்செயல்களைச் செய்யும்.

53. மெய்ஆம் வழுத்தேயும்—(பொய் ஆம் வினையேனைப்போல்வாரும் செய்) மெய்ஆம் வழு தேயும்: உடலினால் செய்யப்படும் தீங்குகள் நீங்கும்.

(அன்பரும் செய்) மெய்ஆம் வழுத்து ஏயும்: உண்மையான தோத்திரங்கள் பொருந்தும்.

54. அங்கைவரை வெல் வேங்கடம்—(கோடல் இலா உள்ளத்துக் கோது இல் அடியவரும்) அங்கு ஐவரை வெல் வேங்கடம்: ஐம்பொறிகளையும் வெல்லுதற்கு இடமான வேங்கடம்.

(வேடரும்) அம் கைவரை வெல் வேங்கடம்: அழகிய துதிக்கையையுடைய மலை போன்ற யானையை வெல்லும் வேங்கடம்.

55. அஞ்சுகம் ஆர் வேங்கடம்—(மொய் வதன மங்கையர்கள் முன்கையும்) அம் சுகம் ஆர் வேங்கடம்: அழகிய கிளிகள் தங்கும் வேங்கடம்.

(யோகியர்தம் மெய் வயதும்) அஞ்சு உகம் ஆர் வேங்கடம்: ஐந்து யுகமாகப் பொருந்தப் பெற்ற வேங்கடம்.

56. மெல்லக் கிழங்கெடுக்கும்—(இல்லக் குறத்தியரும்) மெல்லக் கிழங்கு எடுக்கும்: மென்று தின்னும் பொருட்டுக் கிழங்குகளைத் தோண்டி எடுக்கும்.

(யாக்கை நிலை வேட்டவரும்) மெல்லக் கிழம் கெடுக்கும்: மெதுவாக முதுமைப் பருவத்தை ஒழிக்கும்.

57. ஐயம்பொழியும்—(தேன் இயலும் கூந்தலார் செங் கரமும்) ஐயம் பொழியும்: தக்கார்க்கு வேண்டுவன மிகுதியாகக் கொடுக்கும்.

(மாதவத்தோர் மேனியும்) ஐ அம்பு ஒழியும்: மன்மதனது பஞ்சபாணம் பொருந்தாதிருக்கும்.

58. வீணை இராகத்தை விடும்—(கான் ஐயிலார் சொற்கேட்ட கந்தருவரும்) வீணை இராகத்தை விடும்: வீணையில் இசை வாசித்தலை ஒழியும்.

(தவரும்) வீணே இராகத்தை விடும்: வீண் செயல்களையும் ஆசைகளையும் துறக்கும்.

59. மெய்ந் நூல் நலங்கவரும்—(முந்நூல் மறையவர் நா) மெய்ந்நூல் நலம் கவரும்: உண்மை நூல்களின் நற்பொருள்களை ஓதி உட்கொள்ளும்.

(மூது அரம்பையரின் நடு) மெய் நூல் நலங்க வரும்: வடிவின் நுண்மையால் பஞ்சிநூல் கெடும்படி பொருந்தும்.

60. கலையின் அருமேதை அகலா இருக்கும்—(ஓதும் மறையோர் புறமும்) கலையின் அரு மேதை அகலா இருக்கும்: அரிய கலைமானின் தோல் நீங்காதிருக்கும்.

(ஓதும் மறையோர் உள்ளும்) கலையின் அரு மேதை அகலா இருக்கும்: சாஸ்திரங்களின் நுட்பமான அறிவு பரந்திருக்கும்.

61. கற்புரம் சேர் வேங்கடம்—(நன் முலை போல் வெண்-நகையார் நாயகர்மேல் வைத்த நெஞ்சும்) கற்பு உரம் சேர் வேங்கடம்: கற்பு வலிமை பெற்றிருக்கும் வேங்கடம்.

(நன் முலைபோல் வெண்-நகையார் மென் முலையும்) கற்புரம் சேர் வேங்கடம்: கற்பூரம் பூசப்பெற்ற வேங்கடம்.

62. வீறு மருப்பிணைசேர் வேங்கடம்—(கூறும் கிளிமொழியார் கொங்கை என்றும்) வீறு மருப்பு இணை சேர்: பெருமை பெற்ற இரட்டையான யானைத் தந்தங்களை ஒக்கும்.

(கூறும் கிளிமொழியார் கண் என்றும்) வீறு மருப் பிணை சேர்: சிறப்பு வாய்ந்த பெண்மானை ஒக்கும்.

63. மீது அரம்பையைப் பழிக்கும்—(மாதர் அம் பொன் மேனி வடிவும்) மீது அரம்பையைப் பழிக்கும்: மேலுலகில் உள்ள அரம்பை என்னும் தேவமாதை இழிவு படுத்தும்.

(அவர் குறங்கும்) மீது அரம்பையைப் பழிக்கும்: மேன்மையான வாழைத் தண்டை வெல்லும்.

64. அம்பஞ்சு ஆர் வேங்கடம்—(கோள் கரவு கற்ற விழிக் கோதையர்கள் பொற்றாளும்) அம் பஞ்சு ஆர் வேங்கடம்: அழகிய செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற வேங்கடம்.

(வேள் கரமும்) அம்பு அஞ்சு ஆர் வேங்கடம்: பஞ்சபாணங்கள் பொருந்தப் பெற்ற வேங்கடம்.

65. வேங்கைக் கோடாதரிக்கும்—(கோங்கைக் கோடு ஏறிக் குலுக்கும் அரியும்) வேங்கைக் கோடு ஆதரிக்கும்: வேங்கை மரத்தின் கிளையை விரும்பித் தாவிப் பிடிக்கும்.

(கரியும்) வேங்கைக்கு ஓடாது அரிக்கும்: புலிகளுக்கு அஞ்சி ஓடாமல் அவற்றை அழிக்கும்.

66. ஒளிசெய்ய மேவிப் புயல் தவழும்—(மாவில் குயிலும்) ஒளிசெய்ய மேவிப் புயல் தவழும்: மாமரத்தில் குயில்கள் ஒளித்துக்கொள்ளும்படி மேகம் சஞ்சரிக்கும்.

(மயிலும்) ஒளிசெய்ய மேவிப் புயல் தவழும்: பிரகாசமடையும்படி மேகம் பொருந்திச் சஞ்சரிக்கும்.

67. மீனோவெனக்கொழிக்கும்—(கானோடு அருவி கனகமும் முத்தும் தள்ளி) மீனோ எனக் கொழிக்கும்: நட்சத்திரங்களோ என்று சொல்லும்படி பக்கத்தில் ஒதுக்கும்.

(கானோடு அருவி கனகமும் முத்தும் தள்ளி) மீ நோவு எனக்கு ஒழிக்கும்: மிகுதியான துன்பத்தை எனக்குப் போக்கும்.

68. விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடம்—(கண்டு அடைந்த வானவரும்) விண் தவிர்ந்து நிற்கின்ற வேங்கடம்: தேவலோகத்தை நீங்கி நிற்றற்கு இடமான வேங்கடம்.

(காந்தள்-குலமலரும்) விண்டு அவிர்ந்து நிற்கின்ற வேங்கடம்: இதழ்கள் விரிந்து மலர்ந்து நிற்கின்ற வேங்கடம்.

69. வலம்செய் வேங்கடம்—(வாழ் அம்புலியினெடு வான் ஊர் தினகரனும்) வலம்செய் வேங்கடம்: வலமாகச் சுற்றி வரும் வேங்கடம்.

(வேழங்களும்) வலம் செய் வேங்கடம்: வலிமை கொள்ளப் பெற்ற வேங்கடம்.

70. வடிவு இல்லா வேங்கடம்—(தாட் கமலப் பூஞ்சுனைக்கும்) வடிவு இல்லா வேங்கடம்: நீர் வற்றுதல் இல்லாத வேங்கடம்.

(சாயகங்கள் கொய்து திரி வேட்கும்) வடிவு இல்லா வேங்கடம்: உருவம் இல்லாத வேங்கடம்.

71. கிளை விட்ட வேங்கடம்—(ஆயும் துறவறத்தை அண்டின முத்தண்டினரும்) கிளை விட்ட: சுற்றத்தாரைப் பற்றறத் துறந்த.

(வேயும்) கிளைவிட்ட: கிளைகளை விட்ட.

72. விண்டொடு பொற்பாம்பணை சேர் வேங்கடம்—(தொண்டொடு மெய்யன்பு உடையார் தூய் மனமும்) விண்டொடு பொற்பாம்பு-அணை சேர்: திருமாலுடனே சேஷசயனத்தைத் தியானிக்கும்.

(சந்தனமும்) விண்தொடு பொற்பு ஆம் பணை சேர்: ஆகாயத்தை அளாவிய அழகிய கிளைகள் சேர்ந்த.

73. தம் கூடுவிட்டு மறுகூடு அடையும்—(கிட்டும் நெறி யோகியரும்) தம் கூடு விட்டு மறு கூடு அடையும்: தமது உடம்பை விட்டு வேறு உடம்பில் புகும்.

(கிள்ளைகளும்) தம் கூடு விட்டு மறுகு ஊடு அடையும்: தமது கூட்டை விட்டு நீங்கித் தெருக்களில் சென்று சேரும்.

74. விட்டுமதி விளங்கும்—(மட்டு வளர் சாரலினும்) விட்டு மதி விளங்கும்: சந்திரன் ஒளி வீசி விளங்கும்.

(மாதவத்தோர் சிந்தையிலும்) விட்டுமதி விளங்கும்: திருமாலைப்பற்றிய ஞானம் விளங்கும்.

75. மெய்க்கவசம் பூண்டிருக்கும்—(புக்க அரு மாதவரும்) மெய்க் கவசம் பூண்டிருக்கும்: உண்மையாகிய கவசத்தைத் தரித்திருக்கும்.

(பூ மது உண் வண்டினமும்) மெய்க்கு அவசம் பூண்டிருக்கும்: உடம்பில் தம் வசம் இழந்து, பரவசமாம் தன்மையை மேற்கொண்டிருக்கும்.

76. மிக்கமனுவளையும்—(தக்க மறையோர் நாவும்) மிக்க மனு அளையும்: சிறந்த மந்திரம் பொருந்தும்.

(தண் சாரலின் புடையும்) மிக்க மனு வளையும்: மிகுதியான மனிதர்கள் வலம் செய்து சுற்றி வரும்.

77. மகம் மருவும்—(நீடு கொடுமுடியும்) மகம் மருவும்: மக நட்சத்திரம் பொருந்தும்.

(நீதி நெறி வேதியர்கள் வீடும்) மகம் மருவும்: யாகங்கள் செய்யும்.

78. வேதங்கணுல் வளரும்—(சீதம் கொள் சாரலினும்) வே தம் கணுல் வளரும்: மூங்கில்கள் தமது கணுக்களோடு வளரும்.

(சீர் மறையோர் இல்லிடத்தும்) வேதங்கள் நால் வளரும்: நான்கு வேதங்களும் ஓதப்பட்டு வளரும்.

79. கற்பகம் சேர் வேங்கடம்—(நன்கோடு போலும் முலை நாரியரும்) கற்பு அகம் சேர்: கற்புத் தன்மை உளத்தே பொருந்தப்பெற்ற.

(சண்பகத்தின் மென் கோடும்) கற்பகம் சேர்: தமது உயர்ச்சியால் தேவருலகத்துக் கற்பகத்தை அளாவப் பெற்ற.

80. வேடன் சரம் துரக்கும்—(கோடு அஞ்சும் கோதையர்கள் கொங்கையினும்) வேள் தன் சரம் துரக்கும்: மன்மதன் தனது அம்புகளைச் செலுத்தும்.

(குஞ்சரத்தும்) வேடன் சரம் துரக்கும்: வேட்டுவன் அம்புகளைச் செலுத்தும்.

81. வேரினறும் சாந்து ஒழுகும்—(நாரியர்தம் கூந்தலினும்) வேரி நறும் சாந்து ஒழுகும்: வாசனையுடைய நல்ல மயிர்ச்சாந்து பூசப்பெறும்.

(நாலும் அருவியினும்) வேரின் அறும் சாந்து ஒழுகும்: அடிவேருடன் பெயர்ந்த சந்தன மரங்கள் ஓடிவரப்பெறும்.

82. காமர் வேதமாற்கம் செறியும்—(மாதரார் கண்ணும்) காமர்-வேதமாற்கம் செறியும்: காமநூல் வழியைப் பொருந்தும்.

(மலைச் சாரலும்) காமர் வே தமால் கம் செறியும்: அழகிய மூங்கில்கள் தம் உருவத்தால் வானத்தை நெருங்கும்.

83. ஆரத்தினையே வித்திக் கதிர் விளைக்கும்—(எத்திக்கும் காம்பும்) ஆரத்தினை வித்திக் கதிர் விளைக்கும்: முத்துக்களை உண்டாக்கி ஒளியை வீசும்.

(எயினரும்) ஆரத் தினையே வித்திக் கதிர் விளைக்கும்: உண்ணுதற்குத் தினையையே விதைத்துக் கதிர்களை விளையச் செய்யும்.

84. நந்தவனம் வேரோடலைத் தீர்க்கும்—(பார் ஓடு கான்யாறும்) நம் தவனம் வேர் ஓடலைத் தீர்க்கும்: நமது தாகம் நிலைத்திருத்தலை நீக்கும்.

(பல் களிறும்) நந்தவனம் வேரோடு அலைத்து ஈர்க்கும்: பூந்தோட்டத்திலுள்ள மரங்களை வேரோடு அசைத்து இழுக்கும்.

85. மென் காமரமுழக்கும்—(நன் காமர் வண்டினமும்) மென் காமரம் முழக்கும்: இனிமையான சீகாமரம் என்னும் இசையைப் பாடும்.

(நால்வாய் மத கரியும்) மென் கா மரம் உழக்கும்: அழகிய சோலையில் உள்ள மரங்களை அசைத்துப் பெயர்க்கும்.

86. மருத்துவக்கும்—(பாம்பும்) மருத்து உவக்கும்: காற்றை விரும்பும்.

(குளிர் சந்தின் பக்கத்தில் நிற்கின்ற வேம்பும்) மருத் துவக்கும்: நறுமணம் வீசத் தொடங்கும்.

87. அரவம் அறா—(சாரும் அருவி தவழ் சாரலும்) அரவம் அறா: ஓசை நீங்கா.

(சந்தனத்தின் வேரும்) அரவம் அறா: பாம்புகள் நீங்கா.

88. விண்மட்டுத் தாமரை சேர் வேங்கடம்—(மண்மட்டுத் தாழ் சுனையும்) விள் மட்டுத் தாமரை சேர் வேங்கடம்: மலர்ந்த தேனையுடைய தாமரை மலர் பொருந்தப் பெற்ற வேங்கடம்.

(வட்டச் சிலாதலமும்) விண்மட்டுத் தாம் மரை சேர் வேங்கடம்: ஆகாயம் அளவும் தாவுகின்ற மான் சேர்ந்திருக்கப்பெற்ற வேங்கடம்.

89. வேதாவினுல் முடியா—(போதா இரு சுடரும் போதுதற்கும்) வே தாவினுல் முடியா: மூங்கில் நெருங்கி வளர்வதால் இயலாத.

(ஓதுதற்கும்) வேதாவினுல் முடியா: பிரமனுலும் சொல்லி முற்றுப்பெருத.

90. அணி முத்தீவரும் வேங்கடமே—(பேய்க்கும் ஒரு பேய் போன்று பித்து ஆய்த் திரிவோர்க்கும்) அணி முத்தி வரும்: அழகிய மோட்சம் சித்திக்கும்.

(வேய்க்கும்) அணி முத்து இவரும்: அழகிய முத்துக்கள் தோன்றும்.

91. மாதங்க வேட்கை மறந்திகழும்—(வாழ்க்கை மனை நீத்தவரும்) மாது அங்க வேட்கை மறந்து இகழும்: பெண்ணின் உடம்பிடத்துக் காதலை முற்றும் மறந்து இகழும்.

(வாளரியும்) மாதங்க வேட்கை மறம் திகழும்: யானையைக் கொல்ல வேண்டும் என்னும் விருப்பத்தால் மறம் மிகுகின்ற.

92. வேட்டுவரம்பொழியும்—(கூட்டு தவத்தவரும்) வேட்டு வரம் பொழியும்: விரும்பி வேண்ட வேண்டும் வரங்களைக் கொடுக்கும்.

(கோளரிகளின் தொகையும்) வேட்டுவர் அம்பு ஒழியும்: வேடர்கள் எய்கின்ற அம்புகளிலிருந்து விலகிப் போகும்.

93. விஞ்ச மடித்திருக்கு ஆர் வேங்கடம்—(வஞ்சம் மடித்திருப்பார் வாக்கும்) விஞ்ச மடித்த இருக்கு ஆர் வேங்கடம்: மிகுதியாக மடித்துமடித்துச் சொல்லப் படும் வேதம் நிரம்பப்பெற்ற வேங்கடம்.

(கலைக் கோடும்) விஞ்ச மடித் திருக்கு ஆர் வேங்கடம்: மிகவும் வளைவோடு கூடிய முறுக்கு பொருந்தப்பெற்ற வேங்கடம்.

94. மேலஞ்சுவர்க்கம் ஆர் வேங்கடம்—(சேல் அஞ்சு கண் மடவார் தேம் குழலும்) மேல் அஞ்சு வர்க்கம் ஆர் வேங்கடம்: மேன்மையான ஐந்து வகை பொருந்தப் பெற்ற வேங்கடம்.

(கோங்கினமும்) மேல் அம் சுவர்க்கம் ஆர் வேங்கடம்: மேலேயுள்ள அழகிய சுவர்க்கத்தைப் பொருந்தப் பெற்ற வேங்கடம்.

95. வடுத்தவிரும்—(கொய்யும் மலர்ச் சோலைக் கொக்கும்) வடுத்து அவிரும்: பிஞ்சு உடையதாய் விளங்கும்.

(பிணியாளர் மெய்யும்) வடுத் தவிரும்: உடலின் குற்றமாகிய நோய் நீங்கும்.

96. வேர்க்கவலை மூலம் கல் வேங்கடம்: (நேர்க் கவலை நோயினரும்) வேர்க்க அலை மூலம் கல் வேங்கடம்: பக்திப் பரவசத்தால் உடல் வேர்க்கத் திருப்பாற்கடலில் கண்வளரும் மூலப்பொருளைத் துதிக்கப்பெற்ற வேங்கடம்.

(வேடுவரும்) வேர்க் கவலை மூலம் கல் வேங்கடம்: வேரோடு கூடிய கவலைக் கிழங்கைத் தோண்டும் வேங்கடம்.

97. விண்டாரை நாடுகின்ற—(தன் தாமரைச் சுனையில் சாதகமும்) விண் தாரை நாடுகின்ற: விண்ணின் மழைத்தாரையை விரும்புகின்ற.

(வேடுவரும்) விண்டாரை நாடுகின்ற—பகைவரைத் தேடுகின்ற.

98. தாக்குதலால் வேழமருப்புகுதும்—(வாழ்அரியும்) தாக்குதலால் வேழ மருப்பு உகுதும்: எதிரிட்டு மோதுதலினல் யானைகளின் கொம்புகளைச் சிந்தச் செய்யும்.

(சந்தனம் தோய் மாருதமும்) தாக்குதலால் வேழம் மருப் புகுதும்: வீசுதலால் மூங்கில்கள் நறுமணம் பொருந்தும்.

99. வெவ் விடரின் நீங்கி எழும்—(எவ்விடமும் ஆறு தோய்ந்து எல்லோரும்) வெவ் இடரின் நீங்கி எழும்: கொடிய துன்பத்திலிருந்து நீங்கி மேற்படும்.

(பல் பாம்பும்) வெவ் விடரின் நீங்கி எழும்: வெம்மையான வெடிப்புக்களிலிருந்து மேலெழும்.

100. மணம் மருவும்—(பாடும் மதுகரமும்) மணம் மருவும்: மலர்களின் நறு மணங்களைச் சேரும்.

(பச்சைத் தழைக் குடிலின் வேடும்) மணம் மருவும்; திருமணம் செய்யும்.

சொல்-தொடர் விளக்கம்

அ

அக்கு - எலும்பு
அகடு - உடல், நடு இடம்
அகண்டம் - எல்லாம், முழுமை; கூறுபடாதது
அகம் - உள்ளம், மனம்
அகம்பரன் - நான்தான் பரம்பொருள், நானே தெய்வம்
அகலிடம் - பூமி
அகலுதல் - நீங்குதல், பரத்தல்
அகாதம் - ஆழம்
அகில் - ஒருவகை வாசனைப்பொருள்
அங்கனையார் - பெண்கள்
அங்காக்கை(அங்காத்தல்)-வாய் திறத்தல்
அங்கி - அக்கினி
அசம் - ஆடு
அசரம் - ஓரிடத்தில் நிலையாயிருக்கும் பொருள்
அசனி - இடி
அசுணம் - இசை அறியும் ஒருவகை விலங்கு: இன்னிசையைக் கேட்டால் மகிழுவதும், பறை ஓசை கேட்டால் இறந்து படுவதும் இதன் இயல்பு
அஞ்சம் - ஹம்ஸம், அன்னம்
அஞ்சலித்தல் - கை கூப்பி வணங்குதல்
அஞ்சன சிலம்பு - திருவேங்கட மலை
அஞ்சு - ஐந்து வடிவங்கள், பஞ்சாயுதங்கள்
அடங்கல் - எல்லாம், முழுதும்
அடந்தை - திருவரங்கத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் வைத்து வளர்த்த துழாய்வனம்
அடர்தல் - அழித்தல், நெருக்குதல், நெருங்குதல்
அடல் - வலிமை
அடவி - காடு
அடி - ஆதி, ஆதிநாள்
அடியெங்கள் - அடியேங்கள்
அடை - இலை
அடைய - முழுதும்
அண்டம் - உலகம்
அண்டர் - இடையர், தேவர்
அண்ணல் - பெருமையில் சிறந்தோன்
அண்ணியார் - சமீபத்தில் இருப்பவர்
அணங்கு - தெய்வமகள், இலட்சுமி
அணவும் - அளாவும், நெருங்கும், பொருந்தும்
அணுர் - அண்ணுர், தமையன்
அணியன் - சமீபத்தில் இருப்பவன்
அணை-சயனம், படுக்கை
அத்தம் - ஹஸ்தம், கை
அத்தன் - இறைவன், தலைவன், தந்தை
அத்தனை - அவ்வளவு
அத்தி - (அப்தி) கடல், (அர்த்தி) ஆசை (அஸ்தி) எலும்பு, (ஹஸ்தி) யானை
அத்திசெய்து - ஆசை வைத்து, விரும்பி
அத்திரம் - அம்பு, நிலையற்றது
அதர் - வழி
அதரம் - கீழ் உதடு
அதலம் - பாதாளம், கீழ்உலகம்
அதிராசன் - பேரரசன், தலைவன்
அந்தகன் - யமன்
அந்தகாரம் - இருள்
அந்தரத்தான் - பரமபதத்தை உடையவன்
அந்தரம் - மேலிடம், சுவர்க்கம்
அந்தன் - குருடன்
அந்திக்காப்பு - அந்திப்பொழுதில் செய்யும் ரக்ஷை, திருஷ்டி தோஷம் நீக்க ஆரதி எடுத்தல் முதலியன
அப்பாலான் - அப்பாற்பட்டவன், கடந்தவன்
அப்பு - நீர், கடல்
அபயம் - அடைக்கலம்
அபிமானம் - பற்று
அபிராமன் - அழகன்
அம் - அழகு, நீர்
அம்பரம் - ஆடை, கடல், வெளியிடம், ஆகாயம்
அம்பு - கடல், நீர், அஸ்திரம்
அம்புதி - கடல்
அம்புயம் - தாமரை
அம்புலி - சந்திரன்
அம்போருகம் - தாமரை
அம்மானை - மகளிர் விளையாட்டுள் ஒன்று; கலம்பக உறுப்பு: மூன்று மங்கையர் அம்மானையாடும்போது தலைவனது புகழைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைத்துப் பாடப்பெறுவது.
அமராவதி - சுவர்க்கலோகம், இந்திரனது நகர்
அமலம் - குற்றம் இன்மை
அமலன் - குற்றம் அற்றவன், சார்ந்தவர் களையும் குற்றமற்றவராகச் செய்பவன்
அமலை - குற்றம் அற்றவள்
அமளி - சயனம், படுக்கை
அமுதாறு - விரஜா நதி
அமுது - இனிமை
அமுதுசெய்தல் - உண்ணுதல்
அமை - மூங்கில்
அமைத்தல் - படைத்தல்
அயர்த்தல் - மறத்தல்
அயன் - பிரமன்
அயிர்த்தல் - சந்தேகித்தல்
அயிராபதம் - ஐராவதம்

அயில்தல் - உண்ணுதல்
அயின்றவர் - உண்டவர்
அரக்கு - மெழுகு
அரங்கம் - இடம், ஆற்றிடைக்குறை, திருவரங்க நகரம்
அரங்க மாளிகை - திருவரங்கத்துப் பெரிய கோயில்
அரங்க விமானம் - திருவரங்கக் கோயி லின் மேலுள்ள விமானம்
அரங்கு - இடம், நடனசாலே
அரசு - அரசன், அரசமரம்
அரணம் - மதில்
அரந்தை - துன்பம்
அரம் - இரும்பை அராவும் கருவி, முனே, கூர்மை, (ஆரம் என்பதன் விகாரம்), வாள்
அரம்பை - வாழை, அரம்பை என்னும் தேவமாது
அரவம் - ஓசை, பாம்பு
அரவணே - சேஷ சயனம்
அரன் - சிவன்
அரி-இந்திரன், திருமால், குரங்கு, சிங்கம், ரேகை, வரி, செவ்வரி
அரித்தல் - கொல்லுதல்
அரிவை - பெண்
அரு - உருவம் இல்லாதது
அருக்கம் - எருக்கஞ்செடி
அருக்கன் - சூரியன்
அருகு - பக்கம்
அருணம் - சிவப்பு
அருந்துதல் - பருகுதல், உட்கொள்ளுதல்
அருமந்த - அருமருந்தன்ன, தேவாமிருதத்தை ஒத்த
அரை - பாதி, இடை, இடுப்பு
அரைக்கல் - அரைத்தல்
அரைக்கலே வேலே-அரைக்கணப்பொழுது
அல் - அந்தகாரம், இருள், இரவு
அல்லி - அகவிதழ்
அலங்கல் - மாலே
அலங்குதல் - அசைதல்
அலம் - கலப்பை
அலமந்து - மனம் சுழன்று
அலர்தல் - மலர்தல், பரத்தல், வீசுதல்
அலாயுதன் - பலராமன்
அலேக்கும் - வருத்தும்
அலேத்தல் - அலேயச்செய்தல், வருத்துதல்
அலேப்ப - அசைய, அசைக்க
அவங்கள் - வீணுனவை, வீண் முயற்சிகள்
அவசம் - பரவசம் ஆம் தன்மை
அவசரம் - சமயம்
அவத்தை - துன்பம்
அவதி - எல்லே
அவம் செய்தல் - பழுது படுத்துதல்
அவலம் - துன்பம்
அவனி - பூமி
அவித்தான் - அழித்தவன்
அவை - சபை
அழன்று - கோபங்கொண்டு
அழுக்காறு - பொருமை
அளகம் - கூந்தல்
அளறு - சேறு
அளி - வண்டு
அளித்தல் - காத்தல்
அளே - வெண்ணெய்
அளேதல் - பொருந்துதல், கலத்தல்
அற்பம் - இழிவு, எளிமை
அற்ப ரதம் - சிற்றின்பம்
அற்றை - அந்நாள், அப்பொழுது
அற - முற்றிலும்
அறிதுயில் - யோக நித்திரை
அறுகு - அறுகம்புல்
அறுப்பான் - நீக்கும் பொருட்டு
அறைதல் - சொல்லுதல், ஓதுதல்
அன்பு - பக்தி
அன்றில் - ஒரு பறவை: ஆணும் பெண் ணும் இணேபிரியாதிருக்கும் இயல் புடையது
அனங்கன் - மன்மதன்
அனத்தம் - கேடு, துன்பம்
அனத்தர் - துன்புறுவோர், பயனற்றவர்
அனந்த சயனம் - ஆதிசேஷனுகிய படுக்கை
அனந்தரம் - பின், பின்னர்
அனந்தல் - தூக்கம், சோம்பல்
அனந்தன் - ஆதிசேஷன், அழிவற்றவன்
அனம் - அன்னம், அன்னப் பறவை, சோறு
அனல் - தீ
அனுராகம் - ஒத்த ஆசை
அனே - அன்னே, தாய்

ஆ

ஆ - பசு
ஆக்கை - உடம்பு
ஆகண்டலன் - இந்திரன்
ஆகம் - உடம்பு, மார்பு
ஆகமம் - ஆகம நூல்
ஆகவம் - போர்
ஆகுலம் - பசுக் கூட்டம்
ஆசலம் - துன்பம்
ஆசனே - ஆசனத்தை உடையவள்
ஆசு - குற்றம்
ஆசுகம் - அம்பு
ஆடகம் - பொன், (ஆடு அகம்) நடிக்கும் இடம்
ஆணி - சிறப்பு, மேன்மை, உயர்வு
ஆணிப்பொன் - சிறந்த பொன், மாற்று உயர்ந்த பொன்
ஆணே - கட்டளே
ஆதரம் - அன்பு, ஆசை
ஆதவன் - சூரியன்
ஆதனம் - ஆசனம், இருக்கை
ஆதி - முதன்மை
ஆதி அரா - பழமையான பாம்பு; ஆதிசேஷன்
ஆதித்தன் - சூரியன்

ஆதிபன் - அதிபன் (விகாரம்)
ஆய் - தாய்
ஆய்தல் - ஆராய்தல்
ஆயம் - தொகுதி
ஆர் - யார், அருமை, அருமையான
ஆர்கலி - கடல்
ஆர்த்தல் - ஆரவாரித்தல், பேர் ஒலி செய்தல்
ஆர்தல் - நிறைதல்
ஆர்ந்தது - நிறைந்தது
ஆர - நிறைய
ஆரணம் - வேதம்
ஆரம் - முத்து, மாலை
ஆரா அமுது - தெவிட்டாத அமுதம்
ஆராதனம் - பூசை
ஆரியன் - ஆசாரியன்
ஆலம் - விஷம்
ஆலயம் - கோயில்
ஆவரணம் - மதில்
ஆவாகனத்தர் - வீற்றிருப்பவர், நிலை நிறுத்துபவர்
ஆவாகனம் - எழுந்தருளுவித்தல்
ஆவி - உயிர்
ஆவுதி - ஆகுதி, யாகத்தீயில் இடும் பொருள்கள்
ஆவும் - யாவும், எல்லாம்
ஆழி - மோதிரம், சக்கராயுதம், கடல், தேர்ச்சக்கரம்
ஆள் - அடிமை, ஆண்மையுள்ளவன்
ஆள்அரி - நரசிங்கம்
ஆறுதல் - தணிதல்
ஆன் - எருது
ஆன்பொருப்பு-திருமாலிருஞ்சோலைமலை
ஆனந்தம் - மகிழ்ச்சி
ஆனந்த வாரி - ஆனந்தக் கடல், இன்பக் கடல்
ஆனிரை - பசுக் கூட்டம்

இ

இக்கு - கரும்பு
இகலுதல் - மாறுபடுதல்
இச்சித்தல் - விரும்புதல்
இச்சை - விருப்பம்
இசை - புகழ், கீர்த்தி
இசைதல் - பொருந்துதல்
இடங்கர் - முதலை
இடத்தல் - குத்தி எடுத்தல்
இடந்தனை - பேர்த்து எடுத்தாய்
இடபகிரி - திருமாலிருஞ்சோலைமலை
இடர் - துன்பம்
இடவமலை - திருமாலிருஞ்சோலைமலை
இடவர் - இடபவாகனத்தையுடைய சிவன்
இடையூறு - துன்பம்
இணர் - கொத்து
இணை - ஒப்பு
இதம் - நன்மை
இதயம் - இருதயம், மனம்
இந்தளம் - தூபமுட்டி, ஒரு பண்
இந்திரவில் - வானவில்
இந்திரை - இலட்சுமி
இந்துவின் பொய்கை - சந்திர புஷ்கரிணி
இநன் (இனன்) - சூரியன்
இபம் - யானை
இம்மி - மிகச் சிறிய அளவு
இமம் - பனி
இமையோர் - தேவர்கள்
இயம்புதல் - சொல்லுதல்
இரவலர் - யாசகர்
இரவி - சூரியன்
இரவு - இரத்தல், இராப்பொழுது
இரா - இரவு
இரிக்குமது - ஒழிப்பது
இரு சுடர் - சூரிய சந்திரர்
இருந்தை - கரி
இரை - உணவு
இல் - இல்லறம்
இலக்கம் - இலட்சம்
இலகுதல் - விளங்குதல்
இலச்சினை - அடையாளம், முத்திரை
இலத்தி - மலம்
இவர்தல் - தோன்றுதல்
இழிந்து - இறங்கி
இழுது - வெண்ணெய்
இளையாள் - இளையவள், பின் தோன்றியவள், தங்கை
இறுமாந்து - செருக்குக்கொண்டு
இறை - தங்கும் இடம்
இறைஞ்சுதல் - வணங்குதல்
இன் - இனிமை, இனிய
இன்னல் - துன்பம்
இன்னா - துன்பம்
இனன் - சூரியன்

ஈ

ஈட்டுதல் - சேர்த்தல்
ஈடும் எடுப்பும் - ஒப்பும் உயர்வும்
ஈதல் - கொடுத்தல்
ஈந்து - கொடுத்து
ஈனம் - இழிவு
ஈனர் - இழிந்தோர், அற்பர், கீழோர்

உ

உக்ரம் - பயங்கரம், கொடுமை
உகங்கள் - யுகங்கள், ஊழிக்காலங்கள்
உகத்தல் - விரும்புதல்
உகம் - யுகம், ஊழிக்காலம்
உகிர் - நகம்
உகுதல் - சிந்துதல், விழுதல்
உகுதும் - சிந்தும்
உடு - நட்சத்திரம்
உடுத்த - சூழ்ந்த
உடுபதி - நட்சத்திரங்களுக்குத் தலைவன்; சந்திரன்

உண்டது - கவர்ந்தது
உண்டை - உட்கொண்டாய், புசித்தாய்
உத்தரீயம் - மேலாடை
உததி - கடல்
உததி மங்கை - திருமகள்
உதரம் - வயிறு
உதித்தல் - தோன்றுதல்
உதிரம் - இரத்தம்
உந்துதல் - தள்ளுதல், செலுத்துதல்
உம்பர் - தேவர்
உயிர்த்தல் - மூச்சு விடுதல்
உரம் - வலிமை, வன்மை
உரி - தோல்
உரிஞ்சி - உராய்ந்து, தேய்ந்து
உரு - உருவம், வடிவம்
உருத்து - கோபித்து
உரும் - இடி
உலோகம் - உலகம்
உவட்டல் - தெவிட்டுதல்
உவணப் புள் - கருடன்
உவந்து - மகிழ்ந்து
உழன்று - திரிந்து
உழுவை - புலி
உழை - மான்
உள்ளம் - மனம்
உள்ளுதல் - நினைத்தல்
உளைவு - வருத்தம்
உற்பவித்தல் - தோன்றுதல்
உறையிடுதல் - பொருள்களைக் கணக்கிடும்போது ஞாபகத்தின் பொருட்டு ஒவ்வொரு பெருந்தொகைக்கும் ஒவ்வொன்றாக இடும் இலக்கக் குறிப்பு
உன்னுதல் - நினைத்தல், தியானித்தல்

ஊ

ஊசல் - ஊஞ்சல், கலம்பகத்தின் ஓர் உறுப்பு
ஊடு - இடை, நடு, உள்
ஊத்தை (ஊற்றை) - அசுத்தம், அழுக்கு
ஊதை - காற்று
ஊமன் - ஊமையன்
ஊரு - தொடை
ஊழி - பிரளய காலம்
ஊன் - உடம்பு

எ

எண் - எண்ணம், நினைவு; எள்
எண்ணில் - ஆராய்ந்தால்
எண்ணுதல் - ஆராய்தல்
எதிர் - ஒப்பு
எதிராசன் - இராமாநுசர்
எந்தை - எமது தந்தை, எமது தெய்வம், எமது தலைவன்
எம்மான் - எம்பெருமான்
எய்தல் - அம்பு விடுதல்
எயிறு - பல்
எல் - பகல்
எல்லி - இரா
எழில் - அழகு
எழுவகைத் தோற்றம் - தேவர் முதலிய ஏழு வகைப் பிறப்பு: தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்
எற்றி - அடித்து
எற்றுதல் - மோதுதல், எறிதல்
எறித்தல் - வீசுதல், பரவுதல்
என்பு - எலும்பு
என்பு ஒழி யாக்கை - எலும்பு இல்லாத உடம்பு, புழு

ஏ

ஏ - அம்பு
ஏக்கற்று - ஏங்கி
ஏசுதல் - இகழுதல்
ஏத்துதல் - துதித்தல்
ஏதால் - எதனால்
ஏமம் - பொன்
ஏயும் - பொருந்தும்
ஏல் - பொருத்தம்
ஏற்றம் - சிறப்பு
ஏற்றன் - காளை வாகனமுடைய சிவன்
ஏனம் - பன்றி

ஐ

ஐ - கோழை, அழகு
ஐங்கரன் - விநாயகன்
ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐந்து வாயில்கள்
ஐயம் - சந்தேகம், நிலையற்றது; பிச்சை, தக்கார்க்கு உரிய காலத்தில் வேண்டுவன மிகுதியாகக் கொடுத்தல்
ஐயில் (அயில்) - வேல்
ஐயோத்தி - அயோத்தி நகரம்
ஐவர் - ஐம்பொறிகள்

ஒ

ஒசித்தல் - ஒடித்தல், முறித்தல்
ஒசித்தான் - வளைத்தவன், ஒடித்தவன்
ஒண் சுடர் - ஒளி மிக்க சோதி
ஒருத்தன் - ஒப்பற்றவன்
ஒளிர்தல் - பிரகாசித்தல்
ஒற்றிவைத்தல் - ஈடாகவைத்தல், அடைமானம் வைத்தல்
ஒறுத்தல் - வருத்துதல், துன்பம் செய்தல்
ஒன்னர் - பகைவர்

ஓ

ஓகை - மகிழ்ச்சி
ஓங்கல் - மலை
ஓடை - முகபடாம், நெற்றிப் பட்டம்

ஓதம் - குளிர்ச்சி, நீர்ப் பெருக்கு, பிரளய வெள்ளம்
ஓதனம் - உணவு
ஓதி - கூந்தல்
ஓதிமம் - அன்னப் பறவை
ஓதுதல் - சொல்லுதல்
ஓதை - ஓசை
ஓயில் - ஒழிந்தால்
ஓரி - நரி
ஓல் - ஒலி, ஆரவாரம்
ஓலம் - ஆரவாரம்
ஓலிடும் - ஒலிக்கும்

ஔ

ஔவியம் - பொறாமை

க

ககனம் - ஆகாயம், வானம்
கங்குல் - இரவு
கஞ்சம் - தாமரை, வெண்கலம்
கட்செவி - பாம்பு
கட்டுரைத்தல் - சொல்லுதல், உறுதியாகச் சொல்லுதல்
கடகம் - கைவளை
கடம் - மதம், காடு
கடாகம் - அண்ட கோளகை, அண்ட கபாலம், அண்டகோளத்தின் ஓடு
கடி - வாசனை, அரை, இடுப்பு
கடிக்கும் - மிகும், கமழும், சேரும்
கடிகை - நாழிகை
கடித்தல் - கமழ்தல், மிகுதல், பற்றுதல்
கடிதல் - அழித்தல், நீக்குதல்
கடுவன் - ஆண் குரங்கு
கடைத்தலை - வாசல், தலைவாசல்
கண் - கணு
கண்டகன் - முள் போன்ற கொடியவன்
கண்டம் - கழுத்து
கண்டல் - தாழை
கண்டீரவம் - சிங்கம்
கண்டு - கற்கண்டு
கண்ணி - மாலை, தலையில் அணியும் மாலை
கண்படாள் - துயில் கொள்ளாள்
கண்மாயம் - ஜாலவித்தை, கண்கட்டுவித்தை
கணம் - கூட்டம், பொழுது
கணை - அம்பு
கதவம் - கதவு
கதி - புகலிடம், நற்கதி, மோட்சம், செல்லுகை, போக்கு
கதிர் - ஒளி, சந்திர சூரியர்
கதிரவன் - சூரியன்
கதிரோன் - சூரியன்
கந்தம் - நறுமணம்
கந்தரம் - கழுத்து, பிடரி
கந்திருவர் - பதினென் தேவகணத்துள் ஒரு வகையார்
கந்துகம் - பந்து
கப்பு - கிளை
கபடன் - வஞ்சகன்
கபாலி - தலையோட்டை உடைய சிவன்
கம் - தலை, நீர், வானம்
கம்பம் - தூண்
கம்புள் - நீர்வாழ் பறவை, சம்பங்கோழி
கமடம் - ஆமை
கமலம் - தாமரை
கமல முனி - தாமரை மலரில் இருக்கும் பிரம தேவன்
கமலன் - தாமரை மலரிலிருக்கும் பிரமன்
கமலை - இலட்சுமி
கயம் - யானை
கயல் - ஒருவகை மீன்
கரணம் - ஐம்பொறிகள்; மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணம்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் உள்ளிட்ட அந்தக்கரணம் என்ற உட்கருவி
கரதலம் - கை
கரந்து - மறைந்து
கரம் - கை
கரவடம் - வஞ்சனை
கரவன் - வஞ்சனையுடையவன், மாயச் செயல்களை உடையவன்
கரவு - மறைப்பு, வஞ்சனை, மாயம், மறைவு, ஒளிப்பு
கரளம் - விஷம்
கரா - முதலை
கரி - யானை, சாட்சி
கரியானவர் - சாட்சியானவர்
கரு - கருப்பம், பிறப்பு
கரு அரங்கு - கருப்பத்தின் இடம்
கருத்தன் - கருத்தில் உறைபவன், உளத் தாமரையில் இருப்பவன், தலைவன்
கருத்து - எண்ணம், மனம்
கருதுதல் - எண்ணுதல், நினைத்தல்
கரும்பன் - கரும்பு வில்லை உடைய மன்மதன்
கரும் பனை - கரிய பனைமரம்
கருமம் - ஊழ்வினை
கருமாயம் - வஞ்சனை, மிக்க வஞ்சனை
கருவல்லி - பிறப்பாகிய விஷக் கொடி
கரு வில் - பெரிய வில், கட்டு அமைந்த வில்
கருளப் புள் - கருடப் பறவை
கல்லல் - கல்லுதல், வேரூன்றினதைப் பெயர்த்தல்
கல்லார் - களைந்தொழியார்
கல்லாரம் - செங்கழுநீர்
கல்லுதல் - களைதல்
கலத்தல் - பொருந்துதல்
கலவி - கலத்தல், சேர்க்கை, மகளிரைச் சேர்தல்
கலா - கலை
கலி - ஒலி, ஆரவாரம், துன்பம், வறுமை
கலியன் - திருமங்கை மன்னன்

கலே - கால நுட்பம்; காலத்தின் சிறிய அளவுகளுள் ஒன்று, கண்ணிமைப் பொழுது பதினெட்டுக் கொண்டது ஒரு காஷ்டை; முப்பது காஷ்டைகள் ஒரு கலே என்பர். ஆடை, மேகலே-அணி, சாஸ்திரம், கலேமான்
கலேத்தொட்டில் - ஏணே
கவந்தம் - தலே அற்ற உடற்குறை
கவரி - வெண் சாமரம்
கவலே மூலம் - கவலேக் கிழங்கு
கவி - குரங்கு
கவிகை - குடை, வெண்கொற்றக் குடை
கவித்தல் - மூடுதல்
கவிர் - முள்முருங்கை
கவின் - அழகு
கழல் - பாதம்
கழை - மூங்கில்
கள்ளம் - வஞ்சனே
களத்தன் - கள்ளத்தன், வஞ்சனே உடையவன்
களம் - கண்டம், கழுத்து
களவு - வஞ்சனே
களா - களா மரம்
களி - கட்குடியர் கள்ளேச் சிறப்பித்து உரைப்பதாகப் பாடப்பெறும் கலம்பக உறுப்பு
களிறு - யானே
களேபரம் - உடம்பு
கற்கடகம் - நண்டு, கர்க்கடக ராசி
கற்பம் - ஊழிக் காலம்
கற்பித்தல் - கட்டளேயிடுதல், விதித்தல்
கற்புரம் - கற்பூரம்
கற்றினம் - கன்றின் கூட்டம்
கற்றை - தொகுதி
கறங்குதல் - முழங்குதல், ஒலித்தல், சுழலுதல்
கறை - கறுப்பு, விஷம்
கறைக் களத்தன் - நஞ்சுண்டு கறுத்த கண்டத்தை உடைய சிவன்
கன்னி - பெண், கன்னிராசி
கன்னிகை - தாமரைக் கொட்டை
கனகம் - பொன்
கனம் - மேகம்
கனல் - தீ
கனி - பழம்

கா

கா - காப்பாற்று, சோலே, கற்பகச் சோலே
காண்டாவனம் - காண்டவ வனம்
காணி - நிலம்
காதல் - விருப்பம், பக்தி
காதுதல் - அராவுதல், மோதுதல், தாக்குதல், வெட்டுதல், பிளத்தல், பிரிவு செய்தல்
காதுவர் - போர் செய்வர்
காந்தன் - கணவன்
காம்பு - மூங்கில்
காமம் - இன்பம்
காமர் - விருப்பம், அழகு
காமர்வேதம் - காம நூல்
காமரம் - இசை
காமரு - அழகிய
காமியம் - உலகியல் வாழ்வு, இம்மை மறுமைகள்
காயம் - உடம்பு
கார் - மேகம்
கார்முகம் - வில்
காரிமாறன் - காரி என்பவருக்குக் குமாராய்த் தோன்றி, மாறன் என்ற திருப்பெயர் பெற்ற சடகோபர்; நம்மாழ்வார்
கால் - கோடி, நுனி, வில்லின் நுனி, காற்று, மரக்கால்
கால்தல் - வெளிப்படுத்துதல்
காலன் - யமன்
காலுதல் - வெளிப்படுத்தல்
காவணம் - பந்தல்
காவதம் - காத தூரம், ஏழரை நாழிகை வழி (சுமார் பத்து மைல்)
காவலன் - அரசன், தலேவன்
காவி - கருங்குவளே
காளம் - கறுப்பு
காளாசலம் - கரிய மலே
காளே - இளமைப் பருவம்
கான் - காடு, மணம், வாசனே
கான்முளே - சந்ததி, புதல்வன்
கான்யாறு - காட்டாறு
கான்றனர் - வெளிப்படுத்தினர்
கானம் - காடு

கி

கிங்கரர் - ஏவல் செய்பவர், ஏவலாளர்
கிஞ்சுகம் - முள்முருக்கு
கிண்கிணி - சதங்கை, அரைச் சதங்கை
கிரி - மலே
கிழம் - மூப்பு, முதுமைப் பருவம், கிழத்தன்மை
கிழி - சீலே, கிழிபட்ட துகில், பொற்கிழி, நிதிப் பொதி
கிளே - சுற்றத்தார், மரக் கிளே
கின்னரர் - இசைபாடுதல் வல்ல தேவ சாதியார்

கீ

கீதம் - பாடல்

கு

கு - பூமி
குசென் - அங்காரகன், செவ்வாய்
குஞ்சரம் - யானே
குஞ்சி - ஆண்தலேமயிர், குடுமி
குடகு - குடகு மலே
குடந்தை - கும்பகோணம்

குடநடம் - குடக் கூத்து
குடர் - குடல்
குண்டிகையான் - கமண்டலத்தை உடையவன், பிரமன்
குணில் - குறுந்தடி
குத்திரம் - இழிவு, வஞ்சனை
குதலை - மழலைச் சொல்
குதி - குதிகால்
குந்தம் - குருந்த மரம், குந்தம் என்னும் ஆயுதம்
குப்பை - குவியல்
கும்பம் - குடம், கும்பராசி
குமுறும் - முழங்கும்
குமைத்தல் - அழித்தல், கொல்லுதல்
குமைத்தான் - அழித்தான்
குயின்ற - பதித்துள்ள
குரம் - குளம்பு
குரம்பை - குடில், குடிசை, சிறு குடிசை
குரவை - மகளிர் தம்முள் கைகோத்து ஆடும் கூத்து வகை, குரவைக் கூத்து
குரு - ஆசிரியன், நிறம், ஒளி
குருகு - நாரை
குருந்து - குருந்த மரம்
குரும்பை - பனைதெங்குகளின் இளங் காய்
குவடு - சிகரம்
குவலயம் - பூமி
குவால் - திரட்சி
குழக் கன்று - இளமையான கன்று
குழல் - புல்லாங்குழல்
குழவி - குழந்தை
குழாம் - கூட்டம்
குழை - குண்டலம்
குளம் - நெற்றி, வெல்லம்
குற்றேவல் - சிறு தொழில்கள்
குறங்கு - தொடை
குறித்தல் - ஊதுதல்
குறிப்பு - கருத்து, எண்ணம்
குறைமதி - பிறைச் சந்திரன்
குனித்தல் - வளைத்தல்

கூ

கூடம் - யானை கட்டும் இடம்
கூடு - உடம்பு, கூண்டு
கூப்புதல் - குவித்தல், கைகுவித்து வணங்குதல்
கூர் - கூர்மை
கூலம் - கரை
கூழை - பின் அணி, பின் அணிப் படை
கூற்று - யமன்
கூறை - ஆடை
கூன் - கூனல், பாத்திரம்
கூனல் - வளைவு

கெ

கெண்டை - கெண்டை மீன்
கெருடர் - கருடர், தேவசாதியார்
கெளிறு - ஒரு வகை மீன்

கே

கேகயம் - மயில்
கேசம் - மயிர்முடி, மயிர்
கேசன் - மயிர்முடி உடையவன், சடை முடி உடையவன்
கேதம் - வருத்தம், துன்பம்
கேதனம் - கொடி
கேழ் - நிறம், ஒளி
கேழல் - பன்றி
கேள்வன் - கணவன்

கை

கை - சேனை, படை
கைத்து - கோபித்து, கசந்து
கைதவம் - வஞ்சனை
கைதவர் - வஞ்சகர்
கைப்பேன் - வெறுப்பேன்
கைம்மா - யானை
கைம்மாறு - பிரதி உபகாரம்
கைவழி மண் போன்றது - (குயவன்) கையால் வழிக்கும் மண்ணைப் போன்றது, உரிமையானது

கொ

கொக்கு - மா மரம்
கொங்கு - வாசனை, தேன்
கொங்கை - முலை
கொச்சை - கீழ்மை, இழிவு
கொடி - காக்கை
கொடுமுடி - மலைச் சிகரம்
கொண்டல் - மேகம்
கொண்மூ - மேகம்
கொந்து - கொத்து
கொப்புள் - கொப்புளம்
கொழித்தல் - தள்ளுதல், ஒதுக்குதல்
கொள்ளை - மிகுதி
கொளுந்துதல் - எரிதல்
கொற்றம் - வெற்றி
கொற்றவன் - அரசன்
கொறி - ஆடு
கொனை - நுனி

கோ

கோகனகம் - செந்தாமரை, தாமரை
கோகனகை - இலட்சுமி
கோசிகை - பட்டு ஆடை
கோடரம் - கிளைகளில் சஞ்சரிப்பது, குரங்கு
கோடல் - கோணுதல்
கோடி - கூட்டம், திரள், வரிசை, நுனி
கோடு - கொம்பு, யானைத் தந்தம்
கோடுதல் - தவறுதல்
கோணை - வலிமை
கோத்தல் - சூழ்தல், பரவுதல், கவிந்து கொள்ளுதல்
கோதண்டம் - வில்

கோதண்டன் - வில்லை உடையவன்
கோது - குற்றம்
கோதையர் - பெண்கள்
கோயில் - திருவரங்கத்துப் பெரிய
  கோயில்
கோலம் - அழகு
கோலி - கொண்டு
கோலுதல் - மேற்கொள்ளுதல்,
  பற்றுதல், வளைத்தல்
கோவல் - திருக்கோவலூர்
கோவலர் - இடையர்
கோள் - வலிமை, வருத்தும் தன்மை,
  இடையூறு, குற்றம், கொள்ளுதல்
கோன் - தலைவன்

ச

சகடம் - வண்டி
சகடு - சகடாசுரன்
சகம் - உலகம்
சங்கம் - கூட்டம்
சங்கரன் - சிவன்
சங்கற்பம் - கருத்து, திருவுள்ளம்
சங்கை - சந்தேகம்
சசி - இந்திராணி
சண்டம் - கொடுமை, கோபம், வலிமை
சதமகன் - இந்திரன்
சது - நான்கு
சதுர்மறை - நால்வகை வேதம்
சதுரம் - சதுர வடிவம், அழகு
சதுரானனன் - நான்கு முகமுடைய
  பிரமன்
சந்திரவாவி - சந்திரபுஷ்கரிணி
சந்நிதி - கோயிலின் முன்னிடம்
சம்பிரதம் - இந்திரஜால வித்தையில்
  வல்லவர் தமது சிறப்பைக் கூறுவதா
  கப் பாடப்பெறும் கலம்பக உறுப்பு
சமணர் - சைன சமயத்தவர்
சமன் - யமன்
சயத் தார் - வெற்றிமாலை
சயனம் - படுக்கை
சயிலம் - மலை
சரணம் - பாதம், அடைக்கலம்
சரணாரவிந்தம் - திருவடித் தாமரை
சரபம் - சிங்கத்தை வெல்ல வல்லதாகக்
  கூறப்படும் எண் கால் பறவை
சரம் - அம்பு, இயங்கு பொருள்
சரம தசை - அந்திம காலம், உயிர்
  உடலை விட்டுச் செல்லும் இறுதிநிலை
சரமம் - இறுதிக் காலம்
சராசரங்கள் - இயங்கு பொருளும்
  நிலைப்பொருளும்
சலம் - நீர்
சவை - சபை
சழக்கு - குற்றம்
சற்பம் - சர்ப்பம், பாம்பு
சன்மம் - பிறப்பு
சனகனது அணங்கு - சீதை

சா

சாகரம் - கடல்
சாகை - கிளை
சாடு - சகடு, வண்டி, சகடாசுரன்
சாடுதல் - மோதுதல்
சாதகநாடு-வழிபாடு செய்வோர் பெறும்
  நாடு, பரமபதம்
சாதகம் - மழைத் தாரையை உண்ணும்
  ஒரு பறவை
சாந்து - சந்தனம், சந்தனக் குழம்பு
சாபம் - வில், சபித்தல்
சாம் - சாகும், இறக்கும்
சாமரம் - வெண் சாமரம்
சாய்தல் - பள்ளி கொள்ளல்
சாயகம் - அம்பு
சார்பு - சார்ந்திருக்கும் இடம்
சால் - வாய் அகன்ற பெரிய பாத்திரம்
சாளரம் - சன்னல்
சாற்றுகை - சொல்லுதல்

சி

சிகரம் - மலைஉச்சி
சிகாமணி - தலைமணி
சிகை - குடுமி
சித் - ஞானம்
சித்தச வேள் - மன்மதன்
சித்தி - வீடுபேறு
சித்து - இரசவாதிகள் தமது திறமையை
  எடுத்துரைப்பதாகப் பாடப்படும் ஒரு
  கலம்பக உறுப்பு
சிந்தன் - குறிய வடிவினன்
சிந்தாகுலம் - மனக் கலக்கம்
சிந்தாமணி - நினைத்தவற்றைக் கொடுக்
  கும் தெய்வத்தன்மையுள்ள மணி
சிந்தி - நினை
சிந்து - கடல்
சிந்துரம் - யானை
சிரம பதம் - ஆட்டப் பயிற்சியை உடைய
  திருவடி
சிரமம் செய்தல் - பயிற்சி செய்தல்
சிலம்பாறு - திருமாலிருஞ்சோலையிலுள்ள
  நூபுர கங்கை என்ற ஒரு தீர்த்தம்
சிலம்பி - சிலந்தி, சிலந்திப் பூச்சி
சிலம்பு - மலை, மகளிர் காலணி
சிலாகித்தல் - புகழுதல்
சிலை - வில், கல்
சிற்றன்னை - சிறிய தாய்
சிற்றில் - சிறு வீடு
சிறுகாலே - அதிகாலையில், உதய காலத்
  தில்
சிறை - சிறகு
சினை - கருப்பம்

சீ

சீ - சீழ்
சீசீ - இகழ்ச்சிக் குறிப்பு
சீதம் - குளிர்ச்சி

சீதளம் - குளிர்ச்சி
சீபராங்குச முனிவன் - சடகோபர்
சீர் - சிறப்பு
சீர்மை - சிறப்பு

சு

சுகம் - கிளி
சுடர் - ஒளி
சுடர் இரண்டு - சூரிய சந்திரர்
சுரத்தோன் - சுரதேவதை
சுரபி - வெண் பசு, காமதேனு
சுரம் - காடு, பாலை நிலம்
சுரர் - தேவர்
சுருதி - வேதம்
சுவணன் - கருடன்
சுறவு - சுறு மீன்

சூ

சூட்டு - உச்சி, சூடுவது, மாலை
சூது - உபாயம்
சூனிய வாதர் - நாஸ்திக வாதிகள்

செ

செடி - தீ நாற்றம்
செந்நீர் - இரத்தம்
செய் - வயல்
செய்ய - வயல்களிலுள்ள, சிவந்த
செய்யவள் - திருமகள்
செயிர்த்தல் - கோபித்தல்
செரித்தல் - ஜீர்ணித்தல்
செருக் கொண்ட - யுத்தத்தை மேற்கொண்ட
செல் - கறையான், மேகம்
செலு - மீன் செதிள்
சென்னி - தலை

சே

சேடமலை - திருவேங்கடமலை
சேடன் - ஆதிசேடன்
சேதனன் - உயிர்
சேதித்தல் - வெட்டுதல், துண்டித்தல்
சேந்தன் - முருகன்
சேமம் - காப்பு, காவல், பாதுகாப்பு
சேய் - குழந்தை, புதல்வன்
சேர்பு - சேரும் இடம்
சேர்வு - சேர்ந்திருக்கும் இடம்
சேரி - ஊர், ஆயர் ஊர்
சேல் - சேல் மீன்கள்
சேவடி - சிவந்த பாதங்கள்
சேவித்தல் - தொழுதல்
சேவை - வழிபாடு
சேனைத் தலைவர் - விஷ்வக்ஸேனர்
சேனையர்கோன் - சேனைமுதலியார், விஷ்வக்ஸேனர்

சொ

சொல்லு - சொல்

சோ

சோதி - ஒளி
சோர் - சோர்வு
சோனைமாரி - விடாது பெய்யும் மழை

ஞா

ஞாயிறு - சூரியன்
ஞாலம் - பூவுலகம், பூமி
ஞாழல் - குங்கும மரம், புலிநகக் கொன்றை
ஞானம் - அறிவு, தத்துவ ஞானம்

ஞெ

ஞெண்டு - நண்டு

த

தகர் - ஆடு
தகளி - அகல்
தகைமை - பெருமை
தசை - சதை, மாமிசம்
தஞ்சம் - பற்றுக்கோடு
தட - பெரிய
தடம் - வழி
தடித்து - மின்னல்
தடிதல் - வெட்டுதல், கொய்தல், அறுத்தல், உலர்தல்
தடிந்த - வெட்டப்பட்ட
தண்கதிர் - சந்திரன்
தண்டலை - சோலை
தண்டா - நீங்குதல் அரிய
தண்டு - கதாயுதம்
தண்டுதல் - நீங்குதல்
தண்ணளி - கருணை
தண்மை - எளிமை
தத்து - துன்பம்
தத்தை - கிளி
ததியர் - ததீயர், அடியவரான பாகவதர்கள்
தந்தம் - யானையின் கொம்பு
தந்தமலை - யானை
தந்தி - யானை
தநு - வில், உடல்
தம்பம் - தூண்
தமர் - உறவினர், சுற்றத்தார், அடியார்
தமரம் - ஓசை, முழக்கம்
தமரன் - முழக்கத்தை உடையவன்
தமியேன் - தனியேன்
தயங்குதல் - விளங்குதல்
தயை - தயவு, அருள், கருணை
தரங்கம் - அலை, கடல்
தரங்கிக்க - நிலைகலங்க, வருந்த
தரங்கித்தல் - அலைதல்
தரணி - பூமி
தரம் - மலை
தரளம் - முத்து
தரா - ஒருவகை உலோகம்
தராதலம் - பூவுலகம்
தரு - கற்பக விருட்சம், மரம்

தலம் - இடம்
தலை - இடம்
தவர் - வில், தவம் செய்பவர்
தவனம் - வெப்பம், தாகம்
தவனம் தர - தவிப்பு அடைய, துன்பமுற
தவாத - கெடாத
தவிசு - ஆசனம், இருக்கை
தள்ளுங்கோள் - விடுமின், நீக்கிவிடுங்கள்
தறி - தூண்
தறித்தல் - வெட்டுதல்
தனஞ்செயன் - அர்ச்சுனன்
தனபாரம் - பருத்த முலைகள்
தனம் - பொருள், முலை
தனிநாயகம் - ஒப்பற்ற தலைமை

தா

தாது - பூவின் இதழ், அக இதழ், இந்திரியம்
தாம் - தாவும், தாவிப் பாயும்
தாமதர் - தாமத குணத்தை உடையவர்
தாமதித்தல் - காலம் தாழ்த்தல், காலம் நீட்டித்தல்
தாமம் - மாலை, இடம்
தாமரை - பதுமம் என்னும் ஒரு பேரெண்
தாயத்தவர் - தாயாதிகள், பங்காளிகள்
தாயவன் - தாவியவன்
தாயன் - தாயானவன், தாயாக உதவுபவன்
தார் - பூமாலை
தார் அணி - படை வகுப்பு
தாரகை - நட்சத்திரம்
தாரணி - பூமி
தாரம் - மனைவி
தாரா கணம் - நட்சத்திர மண்டலம்
தாரை - ஒழுங்கு, பெருக்கு
தாலம் - உலகம்
தாலேலோ - தாலாட்டை ஏற்றுக்கொள்
தாழ்த்தல் - தாமதித்தல்
தாழி - வாய் அகன்ற சட்டி, பானை
தாள் - பாதம்
தாளம் - கைத்தாளம்; கையால் போடும் வெண்கலத்தால் இயன்ற தாளக் கருவி
தாறு - குலை
தானம் - இடம், மதம்
தானவர் - அசுரர்
தானை - துகில், ஆடை; சேனை

தி

திக்கு - திசை
திகிரி - சக்கராயுதம், சக்கரம், மலை, மூங்கில், வேய்ங்குழல்
திங்கள் - சந்திரன்
திசைமுகன் - பிரமன்
தியக்கம் - கலக்கம்
தியங்குதல் - கலங்குதல்
திரங்க - வருந்த
திரங்காது - பின்னடையாது
திரம் - ஸ்திரம், நிலை
திரள் - கூட்டம்
திரு - அழகு, இலட்சுமி
திருஆராதனம் - பூசனை
திருக்கு - மாறுபாடு, அகங்கார மமகாரங்கள்
திரும்பித்து - திரும்பியது, மீண்டது
திருமஞ்சனம் - அபிஷேகம்
திருமாமணி மண்டபம் - வைகுந்தத்தில் முத்தர் கூடும் மண்டபம்
திருமுகம் - அரசர் விடுக்கும் கடிதம்
திருமுற்றம் - கோயில்
திலகம் - நெற்றிப் பொட்டு
திவலை - நீர்த் துளி
திவாக்கதிர் - சூரியன்
திவாகரன் - சூரியன்
திறல் - வலிமை
தினகரன் - சூரியன்

தீ

தீண்டுகை - தொடுதல், மேலே படுதல்
தீரம் - வரம்பு, கரை
தீவிகை - விளக்கு, தீபம்
தீர்க்கம் - உயரம்

து

துக்கர் - துன்புறுபவர்
துகள் - தூசி, பொடி, மகரந்தப் பொடி
துகிர் - பவழம்
துஞ்சுதல் - தங்குதல், உறங்குதல்
துடி - உடுக்கை
துடைத்தல் - அழித்தல், ஒழித்தல்
துத்தி - புள்ளி
துப்பு - பவழம்
தும்பி - வண்டு, யானை
துய்த்தல் - அனுபவித்தல்
துய்ய - தூய்மையான
துரத்தல் - செலுத்துதல், நடத்துதல்
துலாம் - நிறுக்கும் துலாக் கோல், துலா ராசி
துவக்கு - கட்டு, கட்டுதல்
துவக்குதல் - தொடங்குதல்
துவசம் - கொடி
துவந்தனை - தொடர்பு
துவர் - சிவப்பு நிறம், துவர்ப்புச் சுவை
துவரை - துவாரகை
துவளுதல் - அசைதல்
துவைத்தல் - தேய்த்து அழித்தல்
துழாய் - துளசி
துழாய்ப் படலை - திருத்துழாய் மாலை
துளவம் - துளசி, திருத்துழாய்
துற்று - கவளம், ஒரு கைப்பிடி அளவு கொண்ட உணவு
துற்றுதல் - பூசுதல்
துன்றுதல் - நெருங்குதல்

தூ

தூசு - ஆடை, சீலை

தெ

தெங்கு - தென்னை மரம்
தெருமந்து - நிலைகலங்கி, சுழன்று
தெருமரல் - சுழலுதல், கலங்குதல்
தெருள் - தெளிவு
தெவ் - பகை
தெள்ளா வரும் - தெளிவில்லாமல் வரும், தெள்ளி வரும்
தெள்ளுதல் - தெளிவாதல், கொழித்தல்
தெறல் - அழித்தல், நீக்குதல்
தென்மலை - திருமாலிருஞ்சோலைமலை

தே

தே - தெய்வம், கடவுள்
தேசு - ஒளி
தேமிக்க - (தேன் மிக்க) தேன் மிகுந்த; (தேம் மிக்க) வாசனை மிகுந்த
தேவு - தெய்வம்
தேற்றுவித்து - தேற்றாங் கொட்டை
தேன் - வண்டு
தேன் இறால் - தேன்கூடு
தேன் பார்ப்பு - இளைய வண்டு

தை

தைக்க - பொருந்த
தைத்தல் - பதிதல்
தையல் - பெண்
தையாநின்ற - பதியுமாறு செய்கின்ற
தையாமல் - பொருந்தாமல்

தொ

தொங்கல் - மாலை
தொட்டு - தோண்டி
தொடிவலயம் - தொடி என்னும் கைவளை, தோள்வளை
தொண்டர்குழாம் - அடியார்களின் கூட்டம்
தொண்டு - அடிமை
தொண்டை - கொவ்வைக் கனி
தொல் - பழமை
தொல்லை - பழமை
தொலைதல் - வழி முதலியன கழிதல்
தொலையாத - கடத்தற்கு அரிய
தொழும்பன் - அடியான்
தொழும்பு - அடிமை

தோ

தோட்டி - அங்குசம்
தோடு - தோடு என்னும் காதணி

ந

நக்கபிரான் - சிவபெருமான்
நக்கன் - சிவபெருமான்
நகம் - மலை
நகு கதிர் - விளங்குகின்ற ஒளி
நகுதல் - விளங்குதல், விரிதல்
நகை - புன்சிரிப்பு, பல்
நகைத்தல் - ஒளிவிடுதல்
நஞ்சம் - நஞ்சு, விஷம்
நடந்தை - திருவரங்கத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் வைத்து வளர்த்த துழாய் வனம்
நத்து - சங்கு, பாஞ்சசன்னியம்
நதிபதி - கடல்
நந்தவனம் - பூந்தோட்டம்
நந்தனன் - புதல்வன், குழந்தை
நந்தி - சிவன்
நந்து - சங்கம்
நந்துதல் - பெருகுதல், அழிதல்
நம்பு - விருப்பம்
நமன் - யமன்
நமனார் - நமன், யமன்
நயம் - இனிமை, நன்மை, இனிய வார்த்தை, நல்ல வார்த்தை
நயனம் - கண்
நருக்குதல் - துண்டாக்குதல்
நல்குரவு - வறுமை
நலங்குதல் - கெடுதல்
நவகண்டம் - ஒன்பது நிலப் பிரிவுகள்: இந்திரம், கசேரு, தாமிரபருணம், கபஸ்திமான், நாகம், சவுமியம், காந்தருவம், வாருணம், பாரதம் என்பன; கீழ்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபால் விதேகம், தென்பால் விதேகம், வடபால் இரேபதம், தென்பால் இரேபதம், வடபால் பரதம், தென்பால் பரதம், மத்திம கண்டம் எனப் பூமியின் பிரிவாய் அமைந்துள்ள ஒன்பது கண்டங்கள் என்றும் உரைப்பர்.
நவநீதம் - வெண்ணெய்
நவம் - ஒன்பது, புதுமை
நவமணி - ஒன்பது வகை இரத்தினங்கள்
நளினம் - தாமரை
நறவு - தேன்
நறை - வாசனை, தேன்
நனி - மிகுதி

நா

நா - நாக்கு
நாகணை - பாம்புப் படுக்கை, சேஷ சயனம்
நாகப் பாயல் - பாம்புப் படுக்கை, சேஷ சயனம்
நாகம் - மலை, பாம்பு
நாடி - விரும்பி
நாடுதல் - விரும்புதல்
நாண் வாங்குதல் - மங்கல நாணை இழத்தல், கணவனை இழத்தல்
நாப்பண் - நடு
நாபி - உந்தி, கொப்பூழ்
நாமம் - புகழ்
நாயகம் - தலைமை, தலைமைப்பொருள்

நாயிறு - ஞாயிறு, சூரியன்
நார் - அன்பு
நாரியர் - பெண்கள்
நால்வாய் - தொங்குகின்ற வாய்
நாலவிடுதல் - தொங்கவிடுதல்
நாலுதல் - தொங்குதல், இழிதல்
நாவாய் - மரக்கலம்
நாளம் - தண்டு
நானு - பலவகைப்பட்ட

நி

நிகர்த்த - ஒத்த
நிகிலம் - எல்லாம்
நிச்சம் - நித்தம், நாள்தோறும், எந்நாளும்
நிசாமுகம் - இராப்பொழுதின் தொடக்கமாகிய மாலை
நிசிசரர் - இராக்கதர், அரக்கர்
நிணம் - கொழுப்பு
நித்தர் - நித்தியசூரிகள், வைகுந்தத்தில் நிலைபெற்று வாழ்பவர்
நித்தலும் - நாள்தோறும், எந்நாளும், எப்பொழுதும்
நித்திய இன்பம் - அழியாத நிரதிசயப் பேரின்பம்
நித்தியம் - அழிவில்லாதது
நிம்பம் - வேம்பு
நியாமகன் - தலைவன்
நிரந்தரம் - இடைவிடாமல், எப்பொழுதும்
நிரயம் - நரகம், நரகலோகம்
நிருதன் - அரக்கன்
நிருபன் - தலைவன், அரசன்
நிரை - வரிசை, திரள்

நீ

நீதி - நியாயம், முறைமை
நீர் - கடல்
நீழல் - நிழல்
நீளை - நீளாதேவி

நு

நுங்குதல் - விழுங்குதல்
நுதி - கூர்மை

நூ

நூல் - சாஸ்திரம்

நெ

நெக்கன - உருகின
நெகுதல் - உருகுதல்
நெய்த்தல் - பளபளத்தல், வழுவழுத்திருத்தல்

நே

நேசம் - விருப்பம், அன்பு
நேசம் வைத்து - விரும்பி
நேமி - சக்கராயுதம், சக்கரம்
நேமிக் கிரி - சக்கரவாள மலை
நேமிச் சிலம்பு - சக்கரவாள கிரி
நேர்வித்தல் - தோன்றச் செய்தல், உண்டாக்குதல்

நை

நைதல் - மனம் நெகிழ்தல்
நையும் - தளர்ந்து அழியும்
நைவார் - வருந்துவார்

நோ

நோகேன் - வருந்தேன்

ப

பகடு - யானை
பகல் - காலம், நாள்
பகிர்தல் - பிளத்தல்
பகிரண்டம் - வெளியண்டம்
பகிரதி (பகீரதி) - கங்கை நதி
பகுதி - பிரகிருதி
பங்கயத்தோன் - தாமரை மலரில் தோன்றிய பிரமன்
பங்கேருகம் - தாமரை
பட்டமங்கையர் - பட்டத்துத் தேவிமார்
படர்தல் - பரவுதல்
படல் - தட்டி
படலை - மாலை, இலைகள் விரவித் தொடுத்த மாலை
படாம் - ஆடை, துணி
படி - பூமி, நிலவுலகம், உரு, வடிவம், அளவு, தன்மை
படுதல் - பொருந்துதல், அனுபவித்தல்
படைத்தல் - சிருஷ்டித்தல், தோன்றுவித்தல்
பண் - இசை
பண்டு - முன்பு
பணம் - பாம்பின் படம்
பணி - ஆபரணம், பாம்பு, கட்டளை, தொழில்
பணித்தல் - சொல்லுதல், செய்தல், ஏவல் கொள்ளுதல்
பணியலர் - பகைவர்
பணிலம் - சங்கு
பணை - கொம்பு, தந்தம்
பணைத்தல் - பெருத்தல்
பத்தர் - பக்தர், அடியார்
பத்தி - ஒழுங்கு, வரிசை, பக்தி
பத்திரம் - இலை, இதழ்
பத்து - பக்தி
பதக்கம் - ஓர் அணிகலம்
பதங்கம் - விட்டில்
பதம் - பாதம், கால்

பதி - ஊர்
பதுமம் - தாமரை, ஒரு பேரெண், பெருந்தொகை
பந்தம் - பற்று, சம்சார பந்தம்
பந்தி - வரிசை
பயம் - பால்
பரகதி - பரமபதம், மோட்சம்
பரகாலன் - திருமங்கை மன்னன்
பரடு - கால்கரண்டை
பரதத்துவன் - எல்லாப் பொருளுக்கும் மேற்பட்டவன்
பரந்தாமம் - பரமபதம்
பரம்ப - விரிவாக
பரம்புதல் - பரவுதல்
பரமேட்டி - மேலான பொருள்
பரல் - பருக்கைக் கல்
பரவ - துதிக்க
பரவுதல் - துதித்தல், புகழ்தல், வணங்குதல்
பரவை - கடல்
பராக்கு - பராமுகம், அவமதிப்பு
பராமுகம் - உதாசீனம் செய்தல், அலட்சியம் செய்தல்
பரி - குதிரை
பரிகரங்கள் - பரிவாரங்கள், ஏவல் செய்வோர்
பரிசு - தன்மை
பரித்தல் - சுமத்தல், எடுத்தல்
பரிதி - சூரியன்
பரியங்கம் - கட்டில்
பல (பலா) - பலா மரம்
பலவு - பலா மரம்
பலி - பிச்சை, பிச்சை ஏற்றல்
பலித்துவம் - இரத்தல் தொழில், இரத்தலினால் ஆகிய துன்பம்
பவம் - பிறப்பு, பிறவி
பவனம் - காற்று
பவுத்தர் - பௌத்த சமயத்தவர்
பழம்படி - முன்போல
பற்றலர் - சேராதவர், விரும்பாதவர், பகைவர்
பற்று - விரும்பும் இடம்
பன்னகம் - பாம்பு
பனி - குளிர்ச்சி
பனிநீர் - ஒரு வகை வாசனை நீர், பன்னீர்

பா

பா - பரப்பு
பாகு - வெல்லப் பாகு
பாசடை - பசிய இலை
பாசம் - அன்பு, கயிறு
பாடகம் - காலணி வகை
பாடு - பக்கம், வருத்தம்
பாண்டம் - பாத்திரம்
பாண்டரங்கம் - சிவபெருமான் ஆடிய கூத்து
பாணி - நீர், கை
பாதகம் - தீ வினை
பாதவம் - மரம்
பாதுகை - திருவடிநிலை, மரவடி
பாந்தள் - பாம்பு, மலைப்பாம்பு
பாய் - பரப்பு
பாய் இருள் - பரவிய இருட்டு
பாயல் - படுக்கை
பாயிரம் - முகவுரை
பார் - பூமி
பார்ப்பதி - பார்வதி
பாரித்தல் - பரப்புதல், விரும்புதல், வாழ்தல்
பாலடை - குழந்தைகளுக்குப் பாலூட்டும் கருவி, பாலூட்டும் சங்கு
பாலாழி - பாற்கடல்
பாலித்தல் - கொடுத்தல், அருளுதல்
பாலியாது - கொடாது
பாவல் - பரவுதல்
பாவித்தல் - எண்ணுதல், நினைத்தல்
பாழி - வலிமை
பாற்றுதல் - அழித்தல்
பானல் - கருங்குவளை

பி

பிடிவேழம் - பெண் யானை
பிணி - நோய்
பிணை - பெண்மான்
பிதா - தந்தை
பிரசம் - தேன்
பிரபஞ்சம் - உலகம்
பிரான் - பெருமான்
பிரை - பாலைத் தயிராக்க இடப்படும் மோர் முதலியன
பிலம் - பாதாள உலகம்
பிளிறுதல் - (சங்குகள்) ஒலித்தல்
பிறப்பித்து - தோன்றச்செய்து, விளங்கும்படி சொல்லித் தெரிவித்து
பிறை - சந்திரன்
பின்னை - திருமகள்

பீ

பீதகம் - பீதாம்பரம், பொன்னுடை
பீதாம்பரம் - பொன்னாலான ஆடை

பு

புகர் - புள்ளி
புகர்த்தல் - கபில நிறம் பெறுதல்
புகலுதல் - சொல்லுதல்
புகுதும் - புகும்
புடவி - பூமி
புடை - பக்கம், வெளி இடம், அடி
புண்ஆக்கை - மாமிச உடம்பு
புண்டரிகை - இலட்சுமி
புண்டரீகம் - தாமரை
புண்ணியம் - தருமம்

புத்தர் - புத்த சமயத்தவர்
புத்தேளிர் - தேவர்
புதுமை - அற்புதச் செய்கை, புதியது, புதிதாம் தன்மை
புதுவை நகர் - ஸ்ரீவில்லிபுத்தூர்
புந்தி - புத்தி, அறிவு
புயங்க அணை - பாம்புப் படுக்கை, சேஷ சயனம்
புயங்கம் - பாம்பு
புயங்க மலை - திருவேங்கட மலை
புயம் - தோள், கை
புயல் - மேகம், கார் காலம், மழைக் காலம்
புரத்தல் - பாதுகாத்தல்
புரந்தரன் - இந்திரன்
புரம் - உடம்பு
புரவலர் - அரசர்
புரவி - குதிரை
புராதனம் - பழமை
புராந்தகன் - திரிபுரம் எரித்தவன், சிவபிரான்
புராரி - சிவன்
புரிசை - மதில்
புருகூதன் - தேவேந்திரன்
புரையும் - ஒக்கும்
புல் - புன்மை, இழிவு
புல் இதழ் - புற இதழ்
புல்லர் - அற்பர், கீழோர்
புல்லி - சேர்ந்திருப்பவன்
புல்லோர் - அற்பர்
புலமை - அறிவு
புலி (புல்லி) - தழுவி
புலை - இழிவு
புலையர் - சண்டாளர்
புவனம் - உலகம்
புவி - பூமி
புவிமாது - பூமிப் பிராட்டி
புழுகு - கஸ்தூரிப் புழுகு
புள்அரசு - கருடன்
புளினம் - மணல் மேடு, மணல் திட்டை
புற்புதம் - நீர்க் குமிழி
புறம் - இடம்
புன்மை - இழிவு
புன்னாகம் - புன்னை மரம்
புனம் - வனம், கொல்லை

பூ

பூ - பூமி, மலர்
பூசல் - பேரொலி, வீண் வாதம்
பூசனை - பூசை
பூசுரர் - அந்தணர்
பூத்தல் - பொலிவுபெறுதல், மிகுதல்
பூதம் - பஞ்சபூதம்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
பூதர் - மனிதர்
பூதரம் - மலை
பூபதி - அரசன்
பூமகள் - இலக்குமி
பூமடந்தைமார் - திருமகளும் நிலமகளும்
பூரணன் - நிறைந்தவன்
பூரியர் - கீழ் மக்கள்
பூவைமார் - பெண்கள்

பெ

பெம்மான் - பெருமான்

பே

பேடை - பறவையின் பெண்பால், பெட்டை
பேணுதல் - விரும்புதல்
பேதித்தல் - வேறுபடுத்தல், மாற்றுதல்
பேதை - பெண், அறிவு நிரம்பாப் பருவம்
பேழ்வாய் - பிளந்த வாய், பெரிய வாய்
பேறு - செல்வம்

பை

பை - பாம்பின் படம்
பைங்கூழ் - பசிய பயிர்

பொ

பொங்கர் - சோலை
பொசித்தல் - உண்ணுதல்
பொடி - திருநீறு, விபூதி
பொதுவர் - இடையர்
பொய்கை - தடாகம், குளம்
பொருதிய - போர் செய்த, அழித்த, கொன்ற
பொருநை - தாமிரவருணி நதி
பொருப்பு - மலை
பொலம் - பொன்
பொழில் - சோலை
பொறி - புள்ளி, அடையாளம், முத்திரை, திருமகள்
பொறித்தல் - அடையாளம் செய்தல், முத்திரையிடுதல்
பொறுத்தல் - தாங்குதல்
பொறை - பொறுமை
பொன் - அழகு, வியாழன்
பொன்நாடு - தேவ லோகம்
பொன்னி - காவேரி நதி
பொன்னிநாடு - காவிரி பாயும் நாடு, சோழ நாடு

போ

போகம் - உடம்பு, இன்பம், சிற்றின்பம்
போகவதி - பாதாள கங்கை
போத - மிக, மிகவும்
போதகத்தான் - தாமரை மலரை இடமாக உடைய பிரமன்
போதகம் - யானை
போதம் - அறிவு
போதவன் - தாமரை மலரில் தோன்றிய பிரமன்
போதன் - பிரமன்

போதனுர் - தாமரைப் பூவில் வாழும் பிரமன்
போதா - பெருநாரை
போது - மலர்
போது ஆசனன் - தாமரை மலரைத் தங்கும் இடமாக உடைய பிரமன்
போதும் - போவோம்
போதுமேல் - போவோமானுல்
போர - மிக
போற்றுதல் - துதித்தல்
போனகம் - உணவு

ம

மகம் - யாகம், மக நட்சத்திரம்
மகர் - புதல்வர்கள்
மகரக் குழை - மகரமீன் வடிவாக அமைந்த குண்டலம்
மகரம் - மகர மீன், சுருமீன், மகர ராசி
மகராலயம் - கடல்
மகிபன் - அரசன்
மகுட கோடி - கிரீடங்களின் வரிசை
மகுடம் - கிரீடம்
மங்கல நாண் - மாங்கல்ய சூத்திரம்
மசகம் - கொசுகு
மஞ்சு - மேகம்
மஞ்ஞை - மயில்
மட்டு - வாசனை, தேன், அளவு
மடக்கு - செய்யுளில் வந்த சொல்லோ சீரோ மீண்டும் வந்து பொருளில் வேறு பட்டு வருவதாகிய சொல்லணி வகை
மடங்கல் - தீ, வடவைத் தீ
மடங்கலேச் செய்தல் - ஒடுங்கும்படி அழிவு செய்தல்
மடமை - அறியாமை
மடிதல் - இறத்தல்
மடைமாறுதல் - ஒன்றில் செல்லுகின்ற தனை மாற்றி மற்றென்றில் விடுதல்
மண்ட - செறிய, நெருங்க
மண்டலம் - நிலவுலகம்
மண்டுதல் - மிகுதல்
மணம் - வாசனை, திருமணம்
மணி - நவ ரத்தினங்கள்
மதகு - வாய்க்காலின் தலையிடம், ஆறு முதலியவற்றிலிருந்து நீர் பாயும் மடைவகை
மதங்கி - வாள் ஏந்தி ஆடும் மகள், ஆடல் பாடலில் வல்லவிள்
மதங்கு - இரண்டு கையிலும் வாளைப் பற் றிச் சுழற்றிக் கொண்டு ஆடுவாளாகிய ஓர் இளமாதின் அழகை ஒருவன் பாராட்டி உரைப்பதாகப் பாடப் பெறும் கலம்பக உறுப்பு
மதலை - குழந்தை
மதன் - மன்மதன்
மதனன் - மன்மதன்
மதனன் வாளி - மன்மதனது ஐந்து மலர்- அம்புகள்: தாமரைபூ பூ, மாம் பூ, அசோகப் பூ, முல்லைப் பூ, நீலோற் பலப் பூ
மதி - சந்திரன், பூர்ணசந்திரன், அறிவு, உள்ளம், மனம்
மதிக்குளம் - சந்திர புஷ்கரிணி
மதிசூடி - பிறை அணிந்த சிவன்
மதித்தல் - கடைதல், கொண்டாடுதல்
மதியாளர் - அறிவுடையார்
மது - தேன்
மதுகரம் - வண்டு
மீதுகை - வலிமை
மதுரித்து - இனியதாகி
மந்தத் தென்றல் - இளந் தென்றல்- காற்று
மந்தர் - சனி
மந்தரம் - மந்தர மலை
மந்தாகினி - ஆகாய கங்கை
மந்தி - பெண் குரங்கு
மயங்குதல் - கலங்குதல்
மரு - மணம், வாசனை
மருங்கு - பக்கம்
மருத்தின் வெற்பு - மருந்து மலை, சஞ்சீவி பர்வதம்
மருத்து - காற்று
மருது - மருத மரம்
மருந்து - அமிருதம்
மருமம் - மார்பு
மருவுங்கோள் - அடையுங்கள்
மருள் - மயக்கம்
மரை - மான்
மலங்குதல் - கலங்குதல்
மலம் - அசுத்தம்
மலயம் - பொதிய மலை
மலயாநிலம் - (மலய அநிலம்) தென்றல்- காற்று
மலர்ஆசனை - மலரை ஆசனமாக உடைய திருமகள்
மலர்தல் - பரத்தல்
மலர் தலை உலகம் - பரந்த இடத்தை யுடைய நிலவுலகம்
மலரவன் - தாமரை மலரில் தோன்றிய பிரமன்
மலை (மல்லை) - மல்லர்களை
மலைந்தார் - போர் செய்தார்
மவுலி - தலை, மணி முடி
மழுவலான் - மழு ஆயுதத்தை ஏந்திய சிவபிரான்
மழுவாளி - மழு ஆயுதத்தை உடைய சிவபெருமான்
மழுவோன் - மழு ஆயுதத்தை உடைய சிவன்
மழை - மேகம், கார் காலம்
மறம் - மாறுபாடு, மயக்கம்; மறக்குடி மகளிரை விரும்பி மணம் பேசவிட்ட மன்னவனது தூதனை நோக்கி, மறவர் மணம் மறுத்து உரைப்பதாகப் பாடப் படும் கலம்பக உறுப்பு
மறித்தல் - பிறழ்தல்
மறுகு - தெரு
மறுகுறும் - சுழலும்
மறை - வேதம்

மறை நாவலன் - வேதம் வல்ல நாவை உடைய பிரமன்
மன்றல் - வாசனை
மன்று - சபை
மன்னர் - அரசர், கணவர்
மனு - மனிதர், மந்திரம்
மனை - மனைவி, இடம்

மா

மா - குதிரை, பெரிய, திருமகள்
மாகம் - சுவர்க்கம், வானம்
மாசு - குற்றம்
மாசுணம் - பெரும் பாம்பு
மாத்தாண்ட மண்டலம் - சூரிய மண்டலம்
மாதங்கம் - யானை
மாதிரம் - திக்கு
மாது - பெண், உமாதேவி
மாய்வித்தல் - அழியச் செய்தல்
மாயம் - வஞ்சனை
மாயோய் - கரிய நிறமுடையாய், ஆச்சரிய சக்தியுடையாய்
மார்பம் - மார்பு
மார்வம் - மார்பு
மாரன் - மன்மதன்
மாரி - மழை
மாருதம் - காற்று
மால் - அன்பு, ஆசை, பெண் மோகம், காம மயக்கம்
மாலுறும் - மயங்கும்
மாலை - மாலைப்பொழுது, வரிசை
மாற்கம் - வழி
மாற்றம் - சொல்
மாற்ருது - கைம்மாறு கருதாமல்
மாறன் - சடகோபன்
மாறுடுவன் - மாறச் செய்வேன்
மாறு - மாறுபாடு, கோபம், ஒப்பு
மான் - பெண்
மானம் - பெருமை, மதிப்பு, விமானம்
மானிடர் - மனிதர்

மி

மிசை - மேல், ஏழன் உருபு
மிடல் - வலிமை
மிடறு - கண்டம், கழுத்து
மிடித்து - வறுமையுற்று
மிடுக்கு - வலிமை
மிடைதல் - நெருங்குதல்

மீ

மீகாமன் - மாலுமி
மீளாப் பதம் - திரும்ப ஒண்ணுப் பரமபதம், முத்திஉலகு
மீனம் - மீன், மீன ராசி

மு

முகடு - உச்சி
முகம் - முக்கியம், முதன்மை
முகிழ்த்தல் - அரும்புதல்
முடம் - வளைவு
முடை - புலால் நாற்றம்
முடைக் கலம் - தீய நாற்ற முடைய உடம்பு
முத்தர் - முக்தர், முத்தியை அடைந்தவர்
முத்தலையார் - திரிசிரசு
முதுநீர் - கடல்
முதுமை - பழமை, முற்றின தன்மை, வலிமை
முந்தை - பழமை
முந்நீர் - கடல்
முயங்குதல் - தழுவுதல்
முரசம் - முரசு, பேரிகை
முரணிய - வலிய, வலிமை பெற்ற
முரணுதல் - வலிமை பெறுதல்
முரல்தல் - ஒலித்தல், ஆரவாரித்தல்
முருக்கும் - அழிக்கும்
முருகு - வாசனை
முருடர் - முரட்டுத்தன்மை யுடையவர்
முரைசு - முரசு
முழவு - முரசு, பேரிகை
முளரி - தாமரை, செந்தாமரை
முளரியாள் - இலட்சுமி
முற்றம் - முன்னிடம், வெளியிடம்
முற்றில் - சிறு முறம்
முறுவல் - புன்சிரிப்பு
முறைமை - கிரமம், வரிசை
முன்ன - நினைக்க
முன்னுதல் - நினைத்தல்
முன்னை - முன்பு

மூ

மூசுதல் - நெருங்குதல், மொய்த்தல்
மூதண்டம் - பழைய அண்டங்கள், பகிரண்டங்கள், பழமையான அண்டகோளம்
மூதாதையார் - முன்னேர், பாட்டனுர்
மூரல் - புன்சிரிப்பு
மூரி - வலிமை, பெருமை
மூரிப் புனல் - பெருவெள்ளம், யுகாந்த கால வெள்ளம்
மூலம் - கிழங்கு, மூலப் பொருள், மூல நட்சத்திரம்

மெ

மெத்தென்று - மிருதுவாய்
மெய் - உண்மை
மெல்ல - மெதுவாக, மென்று தின்ன

மே

மேகலை - ஆடை
மேகன் - மேக வாகனத்தை உடைய இந்திரன்
மேச்சு - மேய்த்து
மேடம் - ஆடு, மேஷ ராசி
மேதை - அறிவு, தோல்
மேயினை - பொருந்தினய்
மேலை நாள் - முன் நாள், முற் காலம்
மேவலர் - பகைவர்
மேனி - நிறம், வடிவம்
மேனிலம் - மேல் மாடி, நிலா முற்றம்

மை

மை - மேகம்
மைத்து - கறுத்து
மையல் - மயக்கம்

மொ

மொக்குள் - குமிழி
மொத்துதல் - நெருக்குதல்
மொய்த்தல் - நெருங்குதல்

மோ

மோகத் துயில் - பொய்த் தூக்கம், யோக நித்திரை
மோகம் - ஆசை, மயக்கம்
மோட்டு - உயர்ந்த
மோடி - துர்க்கை
மோடு - உயர்ச்சி

யா

யாக்கை - உடம்பு
யாதவர் - யது குலத்தவர்
யான் எனது என்னும் அபிமானம் - அகங் கார மமகாரங்கள்

ர

ரதம் - ரசம், இன்பம்

ரா

ராகம் - சிவப்பு, செந்நிறம், ஆசை, அபிமானம், செருக்கு

வ

வகிர் - பிளவு, துண்டு
வகுத்தல் - படைத்தல்
வகுளச் செல்வன் - மகிழ மலர் மாலை அணிந்த சடகோபர்
வகுளம் - மகிழ மரம்
வங்கம் - கப்பல், மரக்கலம்
வச்சிரம் - வச்சிராயுதம்
வசை - பழி, இகழ்ச்சி
வடம் - ஆலமரம், ஆலிலை, கயிறு, முத்து வடம்
வடமலை - திரு வேங்கட மலை
வடவரை - மந்தர மலை
வடவை - வடவாமுகாக்கினி, பெட்டைக் குதிரையின் முக வடிவம் போன்ற பெரு நெருப்பு
வடிவு - உருவம்
வடு - குற்றம்
வடுத்து - பிஞ்சு விட்டு
வண்ணம் - அழகு
வண்மை - வளம், கொடை
வதனம் - முகம்
வதைத்தல் - கொல்லுதல்
வந்தனை - வணக்கம், வழிபாடு
வந்தித்தல் - வணங்குதல்
வம்பு - தீம்பு வார்த்தை, வீண்பேச்சு, பயனின்மை, நறுமணம், வாசனை, புதுமை
வயிறு - நடு இடம்
வயினதேயன் - கருடன்
வரம்பு - எல்லை
வராகம் - பன்றி
வருடை - மலையாடு
வரை - மலை
வல் - சூதாடு கருவி
வல்லி - கொடி, கொம்பு
வலம்புரி - வலமாகச் சுழிந்த சங்கு
வலர் - வல்லவர்
வழு - குற்றம்
வழுத்து - தோத்திரங்கள், புகழ்ப் பாடல்கள்
வழுத்துதல் - வணங்குதல், புகழுதல்
வழுதி - பாண்டியன்
வழும்பு - நிணம் முதலியவற்றின் மேல் உள்ள வழுவழுப்பான நீர்ப் பண்டம், அழுக்கு
வளர்தல் - கன் துயிலுதல், உறங்குதல்
வளி - காற்று
வளை - சங்கு, வளையல், கைவளை
வளைதல் - சுற்றி வருதல், பிரதட்சிணம் செய்தல்
வன்கண்ணன் - தறுகண்மை உடையவன்; கொடியவன்
வன்பு - வலிமை
வன்னி - நெருப்பு
வனசம் - தாமரை
வனம் - காடு, வனமாலை, அழகு
வனிதையர் - பெண்கள்

வா

வாக்கு - வாய்
வாகினி - சேனை
வாகு - தோள்
வாசகம் - சொல்
வாசவன் - இந்திரன்
வாசிகை - மாலை

வாஞ்சை - விருப்பம், ஆசை
வாதை - துன்பம்
வாநரம் - குரங்கு, அனுமன்
வாம் - வாவும், தாவிச்செல்லும்
வாமம் - இடப் பக்கம்
வார் - கச்சு
வார்தல் - சிந்துதல், ஒழுகுதல்
வாரணம் - யானை
வாரம் - மலைச் சாரல்
வாரல் - வருதலை ஒழி, வாராதே
வாரி - திருப்பாற்கடல், கடல்
வாரிசம் - தாமரை
வால் - வெண்மை
வாலுகம் - வெண் மணல், மணல்
வாவி - குளம், தடாகம்
வாவுதல் - தாவுதல்
வாழ்விப்பான் எண்ணமோ - வாழ்விக்க நோக்கமோ, வாழ்வு பெறும்படி திரு வுள்ளமோ
வாளி - அம்பு
வானம் - மேல் உலகம், பரமபதம்
வானரம் - குரங்கு

வி

வி (வீ) - மலர்
விக்கினம் - இடையூறு
விக்குள் - விக்குதல்
விசித்தல் - கட்டுதல்
விஞ்சுதல் - மிகுதல்
விடத்தேரை - விடத்தேரை என்னும் மரம்
விடம் - விஷம்
விடர் - மலைப் பிளவு
விடை - எருது
விடைவெற்பு - திருமாலிருஞ்சோலைமலை
விண் - ஆகாயம்
விண்சிங்கம் - சிங்க ராசி
விண்டவன் - இல்லாதவன்
விண்டனை - குத்தி எடுத்தாய்
விண்டார் - பகைவர்
விண்டு - ஒளிவிட்டு
விண்டு பேசுதல் - விவரித்துச் சொல்லு தல்
விண்ணகரம் - வைகுந்தம்
விண்நீர் - ஆகாச கங்கை
வித்தகன் - பேரறிஞன், ஞான வடிவினன்
வித்தார அடிசில் - விசேஷ உணவு, பல் சுவை உடைய பல பண்டங்க ளோடு கூடிய உணவு
வித்தாரம் - விரிவு, சிறப்பு
விதானம் - மேற்கட்டி
விதி - பிரமன்
விந்தம் - விந்திய மலை
விபூதி - உலகம்
விம்பம் - பிம்பம், வடிவம், வட்டம், கொவ்வை
வியல் - அகலம்
வியன் - பெருமை
விரகு - சூழ்ச்சி, உபாயம்
விரிஞ்சன் - பிரம தேவன்
வில் - ஒளி
விலங்கு - மிருகம், தளை, கைகால்களில் மாட்டப்படும் தளை
விலோசனம் - கண்
விழி - கண்
விழுமிய - சிறந்த
விள்ளாது - நீங்காது
விளக்கம் - விளக்கு, தீபம்
விளம்புதல் - சொல்லுதல்
விளவு - விளா மரம்
விளித்தல் - அழைத்தல்
விளைவு - விளைகை, வளர்ச்சி
விறல் - வல்லமை, வெற்றி
வினோதித்தல் - விளையாடுதல்
வினோதிப்பர் - விளையாடுவர்

வீ

வீகின்ற - இறக்கின்ற
வீசுதல் - பரவுதல்
வீடு - மோட்சம்
வீடுகை - அழிகை
வீண் - பலன் இன்மை
வீரம் - திறமை
வீவு - மரணம், இறப்பு

வெ

வெஃகுதல் - விரும்புதல்
வெகுளி - கோபம்
வெங்கதிர் - சூரியன்
வெடிபடுதல் - பேரோசை உண்டாதல்
வெப்பு - சுர தேவதை
வெம்புதல் - மிகச் சூடாதல்
வெய்யவன் - சூரியன்
வெருவிட - அஞ்ச
வெருவுதல் - அஞ்சுதல்
வெருள் - அச்சம், மயக்கம், மனக் கலக்கம்
வெள்ளி - சுக்கிராசாரியர்
வெள்ளிப் பருப்பதன் - கைலாசத்தில் இருக்கும் சிவன்
வெள்ளியங் குடியான் - கைலாய மலையி லுள்ள சிவபெருமான்
வெள்ளைமண் - திருமண்
வெளி - பகற்பொழுது
வெளிறுபடுதல் - வெண்ணிறம் அடைதல்
வெற்பு - மலை
வெறி - வாசனை, வெறியாட்டு
வெறுமை - வறுமை, தரித்திரம்

வே

வே - மூங்கில், வேய்ங் குழல்
வேட்டல் - விரும்புதல்
வேடு - வேடர்
வேணி - சடை
வேணு - மூங்கில்
வேதண்டம் - மலை
வேதன் - பிரமன்
வேதனை - துன்பம்
வேதா - பிரமன்
வேதாளத்தன் - பூதகணங்களை உடைய சிவபிரான்
வேது - வெய்யது
வேம் - வெந்து போகும், கரிந்து போகும்
வேய் - மூங்கில்
வேர்வு - வியர்வை, வேர்வை
வேரி - தேன், வாசனை
வேலன் - வெறியாடுவோன்
வேலை - கடல், தொழில், பொழுது
வேழ மருப்பு - யானைக் கொம்பு, தந்தம்
வேள் - மன்மதன்
வேள்வி - யாகம்

வை

வை - கூர்மை
வைகறை - விடியற் காலம்
வைகுதல் - தங்குதல், வீற்றிருந்தல்
வைகுந்தம் - வைகுண்ட லோகம்
வைச்ச - வைத்த
வைப்பு - இடம்
வையம் - நிலவுலகம்
வையிரம் - வைரம், பகை

பாடல் முதற்குறிப்பு அகராதி

(எண்: பக்க எண்)